வரு.76 இல. 22 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

28 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2024 ஜூன் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 09 Sunday, 2024




/ Thinakaran.lk / ThinakaranLK















## 02 கோடி 50 இலட்சம் ரூபா வரை

# சுயதொழில் முயற்சிகளுக்கு சலுகை வட்டியில் கடன்

நாடு முழுவதும் பிரதேச மட்டத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பிரதேச அபிவிருத்தியை உருவாக்கவும் சுயதொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில்களுக்கு சுமார் 02 கோடியே50 இலட்சம் ரூபா வரையில் கடனுதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமென கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இக்கடன் தொகைக்கு 08 வீதம் மிகவும் குறைந்த வட்டி வசூலிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், மலர்கள் வளர்ப்பு, நன்னீர் மீன்பிடித்தொழில் மற்றும் அலங்கார மீன்கள் வளர்ப்பு போன்ற கைத்தொழில்களுக்கு இக்கடன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த கடன்களை SMILE iii (Small & Micro Industries' Leader and Entrepreneur) கடன் திட்டத்தின் கீழ் பெற முடியும். இதற்காக 10 வர்த்தக வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்த 10 வர்த்தக வங்கிகள் மூலம் இந்தக் கடன்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

இதில் 02 இலட்சம் ரூபா வரை தனிப்பட்ட உத்தரவாதம் ஊடாகபெறலாம். இது தொடர்பில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கி, DFCC வங்கி, என்.டி.பி. வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, செலான் வங்கி, ஹற்றன் நேஷனல் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி என்பவற்றினூடாக கடனை பெற விண்ணப்பிக்கலாம்.

சுயதொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் ஆரம்பிப்பது தொடர்பான திட்டங்களை முன்வைக்கக் கூடியவர்கள் மற்றும் அந்த இடங்களை நடத்துவதற்கான தேவைகள் உள்ளவர்கள் இந்தக் கடனுக்கு விண்ணப்பித்து தங்கள் சுயதொழில் அல்லது குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்த முடியும்.

தொழில்துறை உபகரணங்களைப் பெறுவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட SMILE iii (Small & Micro Industries' Leader and Entrepreneur) கடன் திட்டத்தின் மற்றொரு படியாக இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

## துல்ஹஜ் பிறை தென்பட்டது ஹஜ்ஜுப் பெருநாள் 17 இல்

### கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவிப்பு



கொழும்பு தினகரன் நிருபர்

நாட்டின் பல பாகங்களிலும் துல் ஹஜ் மாதத்துக்கான தலைப் பிறை தென்பட்டதால், நேற்றுமுன்தினம் மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து துல் ஹஜ் மாதம் ஆரம்பமாகிறது. இதன் பிரகாரம் எதிர்வரும் திங்கட்கிழமை (17) ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படும் என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு பிரதித் தலைவர் மௌலவி அஷ்ஷெய்க் ஏ.எல்.எம் றிலா உத்தியோக பூர்வமாக அறிவித்தார். துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு (07) கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஷீன்

04

## இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தற்போது வலுவான முன்னேற்றம்

### IMF இடமிருந்து பாராட்டு

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தற்போது குறிப்பிடத்தக்க வலுவான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பருவினப் பொருளியல் முன்னுரிமை கொள்கை சீர்திருத்தங்கள் பலனளிக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவதாகவும்

04

## கொலன்னாவ புதிய நகர்த் திட்டம்

தற்போது தாழ்வான பகுதியில் அமைந்துள்ள கொலன்னாவ நகரை அங்கிருந்து அகற்றி அதே பகுதிக்கு அண்மித்த மேட்டு நிலப் பகுதிக்கு மாற்றியமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

கொலன்னாவ புதிய நகர்த் திட்டத்தின் கீழ், தற்போது நகருக்குள் தாழ்வான பகுதிகளில் உள்ள மருத்துவமனைகள், பாடசாலைகள், வீடுகள், வணிக வளாகங்கள் போன்றவை மேட்டு நிலப் பகுதியில் அமைக்கப்பட உள்ளன.

04

## ஹோமாகமயில் பொசன் வலயம் பொசன் ஒளிக்கூண்டுகள் போட்டி

### ரூ. 40 இலட்சம் வரையில் பணப்பரிசு

தியகம, பிடிபன, தாம்பே, மீகொட, கொடகம, பனாகொட, ஹோமாகம ஆகிய பகுதிகளுக்குட்பட்ட வகையிலான 13 கிலோமீற்றரை உள்ளடக்கிய தர்ம ரஷ்மி ஹோமாகம என்ற பொசன் வலயம் எதிர்வரும் 21, 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறும் வயது வந்தோர் மற்றும் பாடசாலை பௌத்த அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான ஒளிக்கூண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு 40 இலட்சம் ரூபா பணப்பரிசு

04

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சாகல விஜயம்

### நிவாரணத்துக்காக புதிய சுற்றுநிருபத்தை பின்பற்றுமாறும் பணிப்பு



சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னைய சுற்றறிக்கைகளுக்கு அப்பால்சென்று புதிய சுற்று நிருபங்களின் பிரகாரம் செயற்படுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான

04



ஜாஎல - ஏக்கல பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் Cephalosporin ஊசி மற்றும் மெல்டோல் மருந்து உற்பத்தி தொழிற்சாலையை (06) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம். மெல்வா கூட்டு நிறுவனத்தின் தலைவர் பெரியசாமிபிள்ளை ஆனந்தராஜாவினால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்படுவதையும் படத்தில் காண்க.

## ONUR ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்



தேசிய ஒற்றுமை, நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர்களாக (The Office for National Unity and Reconciliation) கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் அஸ்ஸெய்யது ஹஸன் மௌலானா, கலாநிதி வண. பிதா நிஷான் குரே, வண. கலகம தம்மரன்சி தேரர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதி, சிறைச்சாலை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேயதாச ராஜபக்சவினால் இந் நியமனங்கள் வழங்கப்பட்டன.

## இந்திய பிரதமர் மோடியுடன் அமைச்சரவை இன்று பதவியேற்பு

### ஜனாதிபதி ரணில் உட்பட அயலக தலைவர்கள் பங்கேற்பு



இந்திய பொதுத்தேர்தலில் வெற்றியீட்டி 03 ஆவது முறையாகவும் பிரதமராக பதவியேற்கும் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவம் இன்று (09) நடைபெறவுள்ளது. பிரதமரின் பதவியேற்பு நிகழ்வுடன் அமைச்சர்களின்

04

## ஜனாதிபதி ஊடக பிரிவின் விளக்கம்

'சட்ட மாஅதிபரின் சேவைக்காலம் நீடிப்பு, ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கே' என்ற தலைப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) தினகரன் வாரமஞ்சரியில் வெளியான செய்தி தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கம் அளித்துள்ளது. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட

04

## எங்கள் கருத்து

### அரசியலமைப்புக்கு முரணாக கருத்துக் கூறுவது அறிவீனம்!

நாட்டின் அரசியலமைப்பை மதித்து அதன்படி செயற்பட வேண்டியது ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும். அரசியலமைப்புக்கு முரணாகச் செயற்படுவதோ அல்லது கருத்துகள் வெளியிடுவதோ முறையானதல்ல.

எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று இலங்கையின் அரசியலமைப்பு கூறுகிறது. அரசியலமைப்பு இவ்வாறிருக்கையில், அதற்கு முரணான முறையில் சில அரசியல்வாதிகள் நடந்து கொள்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் பிக்குகளுக்கான முதலாவது வைத்திய சாலை கிரிவத்துவாவவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டமை நினைவிருக்கலாம். 'குருதேவ சுவ அரண' என்ற பெயர் கொண்ட இந்நிலையம் கொஹுவளை விகாரையின் விகாராதிபதியாகவும், இலங்கை ரமண்ய நிக்காயாவின் தலைமைப் பதிவாளராவும் இருந்த மறைந்த வண. மாபாலகம சிறி சோமிஸ்ஸர நாயக்க தேரரின் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கை மற்றும் வெளிநாட்டு பிக்குகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மருத்துவ வசதிகளையும் கொண்ட பிக்குகளுக்கென தனியான வைத்தியசாலையொன்று அமைக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

04

## பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியாக ஜெனரல் ஷவேந்திர மீண்டும் நியமனம்

ஸாதிக் ஷிஹான்



பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியாக ஜெனரல் ஷவேந்திர சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் இந்த மீள்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2387/43 என்ற இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

04

## மாணவர்களுக்கான 'சிசு செரிய' சேவைக்கு 500 புதிய பஸ்கள்

### அமைச்சர் பந்துல NTC க்கு பணிப்பு

பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான 'சிசு செரிய' அரச மானிய பஸ் சேவைக்காக 500 புதிய பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இதற்கான உத்தரவை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு விடுத்துள்ளார்.

04

### சவூதி அரசு இலங்கைக்கு சலுகை

## முப்படையிலுள்ள முஸ்லிம்களுக்கு இலவசமாக ஹஜ் பயண வாய்ப்பு

ஸாதிக் ஷிஹான்



வரலாற்றில் முதல் தடவையாக, இந்த ஆண்டு (2024) ஹஜ் கடமைகளை மேற்கொள்ள இலங்கை முப்படையைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர்களுக்கு

04

### பொசன் தின நிகழ்வுக்காக


## அநுராதபுரம் நகருக்கு விசேட பஸ் சேவை

அநுராதபுரம் பொசன் தின நிகழ்வில் கலந்துகொள்ளும் பக்தர்களின் வசதிக்காக விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதற்கமைவாக, விசேட பஸ் சேவையின் அட்டவணை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நோன்மதி தின நிகழ்ச்சி எதிர்வரும் 21ஆம் திகதி அனுராதபுரம் அபயகிரிய மகாவிஹார வளாகத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சுதந்த லியனகே தெரிவித்துள்ளார்.

04

# ரணிலின் குழுவில் சஜித் அணியின் பிரபலங்கள்



ஜனாதிபதி தேர்தல் ஒத்திப்போடும் யோசனை எழுந்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிகொத்தவிற்குச் சென்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிற்கு தேர்தல் தொடர்பான செயற்பாடுகளுக்கான பதவிகள் உட்பட பல பதவிகளை நியமித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டிருந்த ரஞ்சித் மத்தும பண்டாரவின் உறுப்புரிமை அவ்வேளையில் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அதோடு நிற்காமல், அரசியல் அலுவலகமும் திறக்கப்பட்டது, அரசியல் அரங்கு ஒரு வினோதமான ஆட்டமாகும். செயற்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்காக ஜனாதிபதி ரணில் ஞாயிற்றுக்கிழமை காலை கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவிற்கு சென்றார்.

அன்றைய தினம், ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் இடைநிறுத்தப்பட்ட கட்சி உறுப்புரிமையை விடுவிப்பதற்கான முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டதுடன், கட்சியின் அரசியல் ஒத்துழைப்புக்கான பாராளுமன்றக் குழுவிற்கும் அவர் நியமிக்கப்பட்டார்.

கட்சியின் ஏனைய உறுப்பினர்களாக வஜிர அபேவர்தன, ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, வடிவேல் சுரேஷ் மற்றும் ஐந்தாவது உறுப்பினராக ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் நியமிக்கப்படவுள்ளதாக தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற்குழுவிற்கு அறிவித்தார்.

இன்னும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய தேர்தல் அமைப்பாளராக ஹரீன் பெர்னாண்டோவும், தேசிய தேர்தல்கள் பிரதிச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசிய செயலாளராக ரவி கருணாநாயக்கவும் பொருளாளராக பிரோஸ் ஷாப்டீனும் நியமிக்கப்பட்டனர். பொருளாளராக பணியாற்றிய மிஸ்பா சத்தார் கட்சியின் உப தலைவராகவும் நியமிக்கப்பட்டனர். கிரிஷான் தியோடர் கட்சியின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு செயற்குழுவின் அங்கீகாரமும் கிடைத்தது.

அதுமட்டுமல்லாமல், கட்சியின் எஞ்சிய பொறுப்பாளர்களை முன்பு போலவே நியமனம் செய்வதற்கும், கட்சியின் புதிய சபை அமைப்பாளர்களை நியமிக்கவும் நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்தது. கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார ஜனாதிபதி ரணிலின் கைகளால் அனைத்து பிரதேச அமைப்பாளர்களுக்கும் நியமனக் கடிதங்களை வழங்க ஏற்பாடு செய்திருந்தார்.

சீரற்ற காலநிலை தொடர்பில் செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார். ஜனாதிபதி, தலைமைச் செயலக தலைவர் சாகல மற்றும் பிரமித பண்டார ஆகியோரிடம் பேசி, இது குறித்து உடனடியாக ஆராயுமாறு அறிவுறுத்தினார். அதன்படி உடனடியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்குச் சென்று அதிகாரிகளை அழைத்து தேவையான அறிவுரைகளை வழங்கினர். பின்னர், சாகல, மாத்தறை மற்றும் சீதாவாக்கைக்குச் சென்று அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் தகவல்களைக் கேட்டறிந்து தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்தார்.

திங்கட்கிழமை அதிகாலை கொலன்னாலைக்குச் சென்ற சாகல, ஐக்கிய மக்கள் சக்தி எம். பி மரிக்கார் மற்றும் சரத் வீரசேகர ஆகியோருடன் முப்படையினரையும் பொலிஸாரையும் தொடர்பு கொண்டு மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க ஏற்பாடு செய்தார். இதற்கிடையில் இந்த செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி ரணிலுக்கு தெரியப்படுத்தியதுடன், சேதவத்த கிராமத்தில் உள்ள தனது தாய்வழி உறவினரின் நலத்தை அறிய வரவுள்ளதாக ஜனாதிபதி சாகலவிடம் தெரிவித்தார்.

கொலன்னாவைக்கு சென்ற ஜனாதிபதி முதலில் ஆலயத்திற்குச் சென்று அங்கு வெள்ளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது தொடர்பில் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் மற்றும் தாழ்வான நிலப்பரப்புகளை நிரப்புவதை தடுக்க கடுமையான சட்டம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. அதனையடுத்து, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று சந்தித்து அவர்களின் துயரங்களைப் பகிர்ந்து கொண்ட ஜனாதிபதியைப் பார்த்து அப்பகுதி மக்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை அன்றைய தினம் மாலை அமைச்சரவையில் சமர்ப்பித்து அங்கீகாரம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய தினம் காலை ஜனாதிபதி ரணில் தலைமையில் அரசியல் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், குழுவின் பிரதானி சாகல ரத்நாயக்கவின் அலுவலகத்தில் கூடியது. அங்கு ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொகுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலின் போது செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்றைய தினம் அமைச்சர் டிரானின் பிறந்த நாள் என்று தெரிவித்தார். அதன்படி, ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை கூடியபோது, மெழுகுவர்த்தியுடன் கூடிய கேக்கைக் கண்டு டிரானும் ஆச்சரியமடைந்தார்.

அவருக்கு கேக் வெட்டி வாழ்த்து தெரிவித்த பின், அமைச்சரவை கூடியது. அன்று காலையிலும் மாலையிலும் டிரானுக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் கேக் வெட்டப்பட்டது.

மாலை ஜனாதிபதி செயலகத்தில் பாராளுமன்ற குழு கூட்டம் நடைபெற்றது. மோசமான வானிலை குறித்தும் டொப்ளர் இயந்திரம் வாங்குவது குறித்தும் பேசப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையின் இறுதியில் ஜனாதிபதி ரணில், "அந்த இயந்திரங்களைப் பற்றி இப்போது பேசி பயனில்லை. முதலில் மக்களுக்கான நிவாரணப் பணிகளைப் பார்ப்போம். மக்களிடம் சென்று குறைகளை கண்டறிந்து தேவையான தீர்வுகளை வழங்குவோம்" என்றார்.

ஜனாதிபதி ரணில் செவ்வாய்கிழமை காலை ருவன்வெல்ல பகுதிக்கு சென்று உறுமய - உறுதிப்பத்திரங்களை வழங்கினார். அங்கு அவர் தனது உறவினர் வசிக்கும் மிதெனிய வளவுக்குச் சென்று சிறிது நேரம் தங்கியிருந்து திரும்பும் வேளையில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களிடம் நலம் விசாரிப்பதற்காகவும் சென்றார். வான்வழியாக பயணித்து வெள்ள நிலைமையை பார்வையிட்ட ஜனாதிபதி ரணில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொலைபேசியில் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

புதன்கிழமை புதிய தூதர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் குழுவிற்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்ட பின்னர், சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலை சுற்றுச்சூழல் பணியாளர்கள மற்றும் 10 சிறந்த பசுமை ரயில் நிலையங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. ரவீந்திர ரந்தெனியவின் திரையுலக வாழ்க்கையின் அரை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பாராட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திற்கு மாலையில் சென்றார் ஜனாதிபதி. அங்கு 1975 ஆம் ஆண்டு களனி அமைப்பாளராக ரவீந்திர ரந்தெனியவின் குடும்பத்தை சந்தித்ததை ஜனாதிபதி ரணில் நினைவு கூர்ந்தார்.

அதன் பிறகு இந்திய பிரதமர் மோடிக்கு போன் செய்து வாழ்த்து தெரிவித்தார். அங்கு தனது பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணிலுக்கு இந்தியப் பிரதமர் அழைப்பு விடுத்தார்.

கொழும்பு ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் அலுவலகத்தை ஜனாதிபதி ரணில் வியாழன் காலை, சுப நேரத்தில் திறந்து வைத்தார். இந்த அலுவலகத்தை நிறுவுவதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன பெரும் பங்காற்றியிருந்தார். மகாசங்கத்தினர் மற்றும் ஏனைய சமய தலைவர்களின் ஆசிர்வாதத்திற்குப் பின்னர் அவர் குறிப்பேட்டில் எழுதிய முதல் குறிப்பு அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

"ஆரம்பய – The Start" என இரு மொழிகளில் குறிப்பை எழுதி சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டதை அங்கு வந்திருந்தவர்கள் காண முடிந்தது. எந்தச் சூழ் நிலையிலும் தேவையான வார்த்தைகளை சரியான இடத்தில் பதிவு செய்யும் அவரது திறமை அனைவராலும் போற்றப்படும் விஷயமாக இருந்தது. பிரதமர் தினேஷ், அமைச்சர் நிமல் சிறிபால, அமைச்சர் பந்துல, அமைச்சர் ரமேஷ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் லான்சா ஆகியோருடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

அங்கிருந்தவர்கள் எதிர்க்கட்சிகள் எழுப்பும் 75 ஆண்டுகால சாபம் குறித்த உண்மைகளை முன்வைக்க வேண்டும் என கூறியபோது, இரண்டு வருடங்களில் செய்த பணிகளை மக்களுக்குத் தெரிவிக்குமாறு ஜனாதிபதி கூறினார். இக்கட்டான நேரத்தில் அரசாங்கத்தை பொறுப்பேற்று நாட்டை மீட்டெடுத்த பணிகள் குறித்த விடயங்களை அமைச்சர்களுக்கு வழங்குமாறு தெரிவித்தார்.

அரசியல் அலுவலகத்தை திறந்து வைத்த அவர், நிதியமைச்சகத்திற்கு வந்திருந்தார், அங்கு அமைச்சர்கள் குழு ஒன்று கூடியிருந்த நிலையில், ஜனாதிபதியுடன் எதிர்கால பணிகள் குறித்து கலந்துரையாடினார். ஜனாதிபதியின் அரசியல் அலுவலகம் திறப்பு மற்றும் வெள்ள அனர்த்தங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

"ஜனாதிபதி இன்று அரசியல் அலுவலகத்தை ஆரம்பித்தார். ஞாயிற்றுக்கிழமை சிறிகொத்தவுக்குச் சென்று கட்சிப் பணிகளை மாற்றினார். மற்ற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. மறுபுறம், தேர்தலை ஒத்திவைக்கும் யோசனைகள் உள்ளன. மக்களைப் போலவே எங்களுக்கும் இது குறித்து கேள்விகள் உள்ளன." என்று அமைச்சர் மனுஷ பேசும் போது, அனைவரும் தலையசைக்க, ஜனாதிபதி புன்னகை புரிந்தார், ஆனால் எதுவும் பேசவில்லை.

"வெள்ளத்தின் போது ஜனாதிபதியும் மக்கள் மத்தியில் சென்றார். பிரதமரும் சென்றார். ஆளுங்கட்சி எம்.பி.க்களும் சென்றனர். ஆனால் அன்றைய தினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாரும் செல்லவில்லை. தண்ணீர் வற்றிய பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் அங்கு சென்றார். இது ஒரு வரலாற்றுப் பதிவு என்று பேராசிரியர் ஆசு மாரசிங்க கூறினார்.

இன்று நடைபெறவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் கலந்து கொள்வார்.

ஜனாதிபதி தலைமையில் மாத்தறையில் நடைபெறவுள்ள மக்கள் பேரணியை ஏற்பாடு செய்வதற்காக அங்கு சென்றிருந்த சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அண்மையில் உள்ள மண்டபத்தில் அமைச்சர் கஞ்சன மற்றும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களை சந்தித்தார்.

சாகல அங்கு இருப்பதை கேள்விப்பட்ட அமைச்சர் கஞ்சன அங்கு வந்து ஐ.தே.க கட்சி ஆதரவாளர்களிடம் உரையாற்றினார். பின்னர் சாகலவை அழைத்துக் கொண்டு கூட்டத்திற்கு சென்றார். ஜனாதிபதிக்காக கட்சிகள் இரண்டும் ஒரே மேடையில் நின்றது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

வார இறுதி கேள்வி

# ரணிலுடன் இணையத் தயாராகும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள்

நாட்டின் மொத்த வாக்குகளில் 3% வாக்குகளைப் பெற்ற ஜனதா விமுக்தி பெரமுன இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற 50% வாக்குகளைப் பெறுவது எப்படி எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால் அதற்குப் பதிலளிக்கும் விதமாக, 2020 பொதுத் தேர்தலில் 2,48,435 வாக்குகளை மாத்திரம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது கடினமானதாக இருக்குமா என்பது சிலரால் எழுப்பப்படும் கேள்வி. இந்த இரண்டு கேள்விகளுமே இவ்வருட ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்துவதுடன், இவ்வாறானதொரு நிலையில், பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையில் பிரச்சினை ஏதுமில்லாத பிரதான கட்சியாக சமகி ஜன பலவேகய மாத்திரமே இருந்தாலும், அதனாலும் இலகுவாக அதிக வாக்குகளை பெறமுடியுமா என்ற கேள்வி தொடர்பாக அறிவியல் ரீதியில் பகுப்பாய்வு செய்வதன் மூலமே உண்மையான நிலைமையை அடையாளம் காண முடியும்.

ஒவ்வொரு கட்சியும் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையைப் புரிந்து கொள்ளக்கூடிய மிக நெருக்கமான முந்தைய தேர்தல்களாக 2018 இன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், 2019இன் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020 இன் பாராளுமன்றத் தேர்தல்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மாதாந்த அல்லது காலத்துக்கு காலம் கருத்துக்கணிப்பு வடிவில் தகவல்களை முன்வைக்கும் 2 நிறுவனங்கள் இந்நாட்டில் இயங்கி வருவதாகத் தெரிகிறது. இந்த இரண்டு நிறுவனங்களும் ஒவ்வொரு ஆண்டும் முன்வைக்கும் கருத்துக் கணிப்புகளின்படி, ஜனதா விமுக்தி பெரமுன முன்னணியில் உள்ளது, சமகி ஜனபலவேகய இரண்டாவது இடத்தில் உள்ளது. ஒரு நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, இந்த இரு தரப்பினரும் சம நிலையை எட்டியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இன்னும் குறைவாகவே உள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களும் 1000க்கும் குறைவானவர்களிடம் இருந்தே தகவல்களைப் பெறுவதாகத் தெரிகிறது. ஆனால், இன்று பொதுமக்களின் கருத்துகளின்படி, இந்த இரண்டு கணக்கெடுப்பு அமைப்புகளும் வெளியிட்ட ஆய்வு அறிக்கைகள், உலக யதார்த்தத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள ஆய்வுகள் என்று கூறலாம்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் முடிவுகளை ஆராயும் போது, வாக்கெடுப்பு தொடர்பான விசேட நிலை காணப்படுகின்றது. சஜித் பிரேமதாச 2019 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக நின்றார். ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவராக இருந்த போதிலும், அப்போதைய அழுத்தங்கள் காரணமாக சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி வேட்புமனு கிடைத்தது. அந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற கோட்டாபாய ராஜபக்ஷ 69,24,255 வாக்குகளைப் பெற்ற அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாச 55,64,239 வாக்குகளையே பெற்றார். எனினும் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற மொத்த வாக்குகள் இருபத்தி எழு லட்சத்து எழுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு மட்டுமே.

2019இல் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளுக்கும் 2020 இல் ஐக்கிய மக்கள சக்தி கட்சி பெற்ற வாக்குகளுக்கும் இடையிலான வித்தியாசம் இருபத்து ஏழு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பத்தைந்து வாக்குகள். இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் வாக்குகளை நீக்கி ஐக்கிய தேசியக் கட்சி நேரடியாகப் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை பார்க்கும் போது பத்தொன்பது லட்சம் வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு செல்லவில்லை என தெரிகிறது. இந்நிலைமையின்படி ஐக்கிய தேசியக்




கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன பெற்ற வாக்குகள் குறைவாக உள்ள அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற வாக்கு வீதமும் 22 வீதமே எனத் தெரிகிறது. அதன்படி, சமகி ஜனபலவேகயவும் 50% ஐ எட்டுவதற்கு தற்போதைய வாக்குகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்குக்கும் மேல் அதிகரிக்க வேண்டும். இவ்வாறான நிலையில் ஐந்நூறுக்கும் மேற்பட்டோரின் கருத்துக்கள் கேட்கப்பட்டு நாட்டின் கருத்தை அவ்வாறே பிரதிபலிக்கும் நிலையிலிருந்து இந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்களின் நடத்தை வேறுபட்டிருப்பதைக் காணமுடியும். ஆனால் ஆய்வு நிறுவனங்களுக்கு அந்த யதார்த்தம் தெரியாததாலோ அல்லது கண்டு கொள்ளாமலே விடப்பட்டதாலோ சில சமயங்களில் உலக உண்மைக்கு அப்பாற்பட்ட விஷயங்களை சுட்டிக்காட்டி பொதுமக்களை தவறாக வழிநடத்த முயல்வதாக தெரிகிறது. கட்சி பிளவுபட்டு பொதுத்தேர்தலில் உறுதியான தோல்வியினால் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காத பத்தொன்பது லட்சம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் தமது தலைவர் ஏற்கனவே ஜனாதிபதியாக இருக்கும் போது அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று கற்பனை செய்ய முடியுமா?

தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் அண்மையில் வெளியிட்டுள்ள தகவலின்படி, தோட்டத் துறையில் ஆறு இலட்சத்து எழுபதாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அங்கு உழைக்காத மக்களைச் சேர்க்கும் போது தோட்டத் துறையில் மொத்த வாக்குகள் பத்து லட்சத்தையும் தாண்டும் வாய்ப்பு உள்ளது. தற்போது ஜீவன் தொண்டமான் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் எந்தவொரு தலைவரின் கீழும் அமைச்சுப் பதவியைப் பெற விரும்புவதாக மலையகத்தின் மற்றைய தலைவர் திகாம்பரம் கூறுகிறார்.

இதன் மூலம் நாட்டில் ஏற்கனவே கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ள அரசியல் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளன என்பது தெரிகின்றது. ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியின் பொதுக்கூட்டம் ஜூன் 8ஆம் திகதி அம்பலாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் இந்தக் கூட்டணியுடன் இருப்பதாகவும் தெரிகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடன்படிக்கையின் பிரகாரம் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் இக்குழுவினர் போட்டியிட்ட போதிலும், தமக்கு வாக்களிக்க வேண்டாம் என சில பொதுஜன பெரமுன தலைவர்கள் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளமை விசேட அம்சமாகும். ஹம்பாந்தோட்டையில் மஹிந்த அமரவீர, கேகாலையில் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அனுராதபுரத்தில் துமிந்த திஸாநாயக்க, கம்பஹாவில் லசந்த அழகியவன்ன ஆகியோருக்கு வாக்களிக்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் வெற்றி பெற்றனர். 2018 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதினான்கு இலட்சம் வாக்குகளைப் பெற்றது. அந்தத் தொகையிலும் பெரும் பகுதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இது தவிர, கணிசமான எண்ணிக்கையிலான கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்கனவே இணைந்துள்ளன. டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சி, பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான ரீ.எம்.வி.பி கட்சி, கருணா அம்மானால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் கூட்டணி என்பனவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளன. தற்போது பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்துள்ள சுசில் பிரேமஜயந்த், அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் லான்சா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து மற்றுமொரு கூட்டணியை உருவாக்கியுள்ளனர். அருண் சித்தார்த்தன் வடக்கில் பெருமளவிலான மக்களை வழிநடத்துகிறார். மேலும் அவர் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எம்.ஏ சுமந்திரன், விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு, கிழக்கின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தனது சொந்த வேட்பாளரை முன்வைப்பதா அல்லது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா என்பது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அதே பதவிக்கு நியமிக்கப்பட வேண்டுமென ஏற்கனவே அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், பொதுஜன பெரமுனவின் தீர்மானம் அந்த முன்னணியின் அரசியலை தீர்க்கமாக பாதிக்கும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்னணி தீர்மானித்தால் எதிர்காலத்தில் தனிக் கட்சியாகவே இருக்க முடியும். ஆனால் அவர்கள் தங்கள் வேட்பாளரை முன்வைக்கவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காதிருக்க முடிவு செய்தால், கட்சியின் தற்போதைய உறுப்பினர்கள் கூட நிச்சயமாக இரண்டாகப் பிளவுபடுவார்கள். எனவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்யும் என எதிர்பார்க்கலாம். அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையடுத்து அவருடன் இணைந்து கொள்ள கணிசமான சமகி ஜனபலவேகய உறுப்பினர்கள் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையெல்லாம் விட முக்கியமானது, உணவு, எரிபொருள், எரிவாயு, மின்சாரம் இல்லாமல் நரக நிலையிலிருந்து அவர்களையும் நாட்டையும் காப்பாற்றிய ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக நெருக்கடியான காலங்களில் தலைமைத்துவம் பெறாமல் ஓடிய, அனுபவமோ செயல் திறனோ இல்லாதவர்களை ஜனாதிபதி பதவியில் சேர்த்து மீண்டும் நரகமாக்கப் பாடுபடுவார்களா என்பதுதான் கேள்வி.

மேற்கூறிய தகவல்களின்படி 3% வாக்குகளைப் பெற்ற ஜனதா விமுக்தி பெரமுனவும் 22% வாக்குகளைப் பெற்ற சமகி ஜன பலவேகவும் தனிக் கட்சிகளாகவே இன்றும் இருக்கின்றன, ஆனால் அதிக எண்ணிக்கையிலான அரசியல் கட்சிகள் உள்ளன என்பது தெளிவாகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சுற்றியுள்ள கட்சிகளுக்கு ஜூன் 06 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தனது கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து, இந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் நிச்சயம் போட்டியிடுவேன் என்று நிரூபித்துள்ளார். மேலே விவரிக்கப்பட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் முடிவுகளின்படி, நாட்டின் அரசியலின் யதார்த்தம் சில கணக்கெடுப்புகளிலிருந்து வேறுபட்டது என்பதும், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் குறித்து ஏற்கனவே உறுதியான சூழ்நிலை உள்ளது என்பதும் தெளிவாகிறது, இல்லையா?



களனி பல்கலைக்கழக
பொருளியல்துறையின்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
சுனந்த மத்துமபண்டார

# அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை

## ஜனாதிபதியின் கூற்றுக்கு கட்சித் தலைவர்களின் கருத்துகள்

## மக்கள் இறைமை மற்றும் ஒருமைப்பாடு என்ற விடயங்களுக்கு அரசியலமைப்பிலேயே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க**



சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து தெரிவிக்கும் போது "எமது நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர் விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கு உரிமை உள்ளது. அதேபோன்று பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று எமது அரசியலமைப்பில் மற்றொரு பிரிவு உள்ளது. இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்ற போதிலும் இதை அகற்ற வேண்டும் என்ற பெரிய கோரிக்கைகள் எதுவும் இருக்கவில்லை. நிறைவேற்று அதிகாரத்தில் உள்ளவர்கள், சட்டமியற்றுபவர்கள், நீதித்துறையில் இருப்பவர்கள் என அனைவரும் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற நிலைமையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எவராவது அதை மாற்ற வேண்டும் என விரும்பினால், அரசியலமைப்பை மாற்றுவது ஒன்றுதான் வழி. அந்த அரசியலமைப்பில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. ஒன்று மக்கள் இறையாண்மை, பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவது, பிராந்திய ஒருமைப்பாடு. இவற்றில் ஏதாவது ஒன்றை எதிர்த்து நீங்கள் பேசினால் அது அரசியலமைப்பை மீறும் செயலாகும்" எனக் கூறினார். இந்தக் கருத்து தொடர்பில் பல விவாதங்கள் நடந்தன. இது தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு இது.

## நாட்டையும், மக்களையும், அவர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்

**இலங்கை சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண**



பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் அதே வேளையில் ஏனைய அனைத்து மதங்களுக்கும் மரியாதையும் வழங்கப்பட வேண்டும் என சமசமாஜக் கட்சி என்ற வகையில் நாங்கள் தொடர்ந்து கூறி வந்துள்ளோம். ஆங்கிலேயர் ஆட்சியின் போது அவர்கள் பௌத்தத்தை அடக்குவதற்கு முடிந்த வரை முயன்றனர். ஏகாதிபத்தியங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் இதைச் செய்ய முயன்றன. அன்றிலிருந்து இன்று வரை நமது நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க எமது கட்சி நேர்மையுடன் செயற்பட்டது. பிராந்திய ஒருமைப்பாட்டையும் நாங்கள் மதிக்கிறோம். இறையாண்மையையும் மதிக்கிறோம். இலங்கை சமசமாஜக் கட்சி என்ற வகையில் எமது கட்சியினர் இவற்றிற்காக இரத்தம் சிந்தியுள்ளனர். இதற்காகத் தமது உயிரைப் பணயம் வைத்து உழைத்தனர்; இறையாண்மையைப் பாதுகாக்க பாடுபட்டார். நாட்டையும் மக்களையும் மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம்.

## நடைமுறைச் சிக்கல்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்**



அரசியமைப்பில் உள்ளவற்றையே ஜனாதிபதி கூறியிருக்கிறார். மீண்டும் உறுதிப்படுத்தியிருப்பதும் அதையேதான். இவற்றைச் செய்வதற்குத்தானே அவர் கட்டுப்பட்டிருக்கின்றார். அவர் இவற்றைச் சரியாகச் செய்வதற்கே சத்தியப் பிரமாணம் செய்திருக்கின்றார். அவர் அவரது சத்தியப் பிரமாணத்தை மீண்டும் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார். அவ்வளவுதான். சுருக்கமாகச் சொல்வதானால், ஜனாதிபதியாக அவர் இருக்கும் காலத்தில் அரசியலமைப்பின் பிரகாரம் செய்ய வேண்டிய விடயங்களைத்தான் கூறியிருக்கின்றார்.

இந்நாட்டுப் பெரும்பான்மையினர் பின்பற்றும் மதம் பௌத்தமாகும். பௌத்தம் இந்நாட்டில் 2500 வருட நாகரிகத்தைக் கொண்டுள்ளது; அதற்கு முன்னுரிமை கொடுப்பதை நாம் யாரும் எதிர்க்கப் போவதில்லை. எனினும் மதத்தைப் பின்பற்றும் உரிமையை அனைவரும் சமமாகக் நிறைவேற்றுவதற்குப் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. கீழ் மட்டத்தில் மத வழிபாட்டுத் தலங்களை அமைக்கும் போது, அதனைச் சுற்றியிருப்பவர்கள் எதிர்ப்பது முக்கியமானது, முன்பு அமைச்சு மட்டத்தில் தனித் தனி இடங்கள் இருந்தன. பௌத்த மதத்திற்கு முன்னுரிமை என்று அ ரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள போதிலும் அமைச்சரவை, அமைச்சர் பதவிகள் கூட ஏனைய மதத்தினருக்கே வழங்கப்பட்டிருந்தன. இப்போது அது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அது நல்லதல்ல. எல்லா சமயங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். அவர்களில் எவரையாவது தெரிவு செய்து நியமித்தால் நல்லது. அவர்களது மத விடயங்கள் அவர்களுக்குத்தானே தெரியும். ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு தாம் சாராத மதங்களின் பழக்கவழக்கங்கள் தொடர்பில் புரிதல் இருக்காது. முஸ்லிம் அமைச்சர் ஒருவரிடம் அவருக்குரிய சமயம் தொடர்பான அமைச்சை இணைத்தலே நல்லது. அவரிடம் முஸ்லிம் சமய விடயங்களை இணைத்துக் கொடுத்தால்தான் சிறந்தது. அவ்வாறு செய்யாமல் இருப்பது பெரும் இழப்பாகும்.

## பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிப்பது கடமையும் பொறுப்பும் ஆகும்

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சி. பி. ரத்நாயக்கா**



மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதுதான் ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு. இந்தக் கட்சிகளை கட்டியெழுப்ப மக்கள்தான் உதவுகிறார்கள். மக்கள் இறையாண்மை எங்களுக்கு முக்கியம். மேலும் இந்நாட்டில் 70 வீதத்திற்கும் அதிகமான பௌத்த மக்கள் உள்ளனர். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிப்பது நமது கடமையும் பொறுப்பும் ஆகும். இந்தியாவின் மோடி இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் முன்னோக்கி சென்றார். ஆனால் பல இன, பல மதங்கள் வாழும் நாட்டில் இது மிகவும் கவனமாக செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அதேபோன்று அரசாங்கத்திற்கும் பொறுப்பு உள்ளது; வரலாற்றை அழிக்க முடியாது. "மதம் இல்லாத மனிதன் ஒரு மிருகம்" என ஒரு தத்துவவாதி சொல்லியிருக்கிறார். கடைசியில் ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் மதத்தைத் தேடி ஓடுகிறோம். நாம் நமது பௌத்த மதத்தையும் மதிக்கும் அதேநேரம் மற்ற மதங்களையும் மதிக்க வேண்டும். அத்துடன் நிலத்தின் மீது எங்களுக்கு உரிமை இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் துண்டு துண்டாக உடைத்து வேறு வேறு தரப்பினருக்கு கொடுத்தால் எங்கே போய் நிற்போம்?. ஆங்கிலேயர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக அன்றிலிருந்து

போர்வீரர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த நாடு இது. நாமும் முப்பது வருடங்களாக யுத்தத்தை அனுபவித்தவர்கள். இவ்வாறு பிராந்திய ஒருமைப்பாட்டைக் கொண்ட இலங்கையில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள், பறங்கியர் என அனைவரும் இந்த இலங்கைத் தாயின் கீழ் பணியாற்ற வேண்டும். எமது அடையாளத்தை வைத்துக் கொண்டு நாம் முன்னேற வேண்டும்.

## அரசியலமைப்பில் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்**



இந்த அனைத்து விடயங்களும் அரசியலமைப்பில் உள்ளது. மதச் சுதந்திரம் அரசியலமைப்பில் உள்ளது. ஆனால் சிறுபான்மை மதத்தினருக்கு அது கிடைப்பதில்லை. பௌத்தம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு முன்னுரிமையும் வழங்கப்பட்டுள்ளது. எமக்குத் தெரிந்த அரசியலமைப்பில் அனைவரின் சமத்துவம் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அரசியலமைப்பின் மூலம் சமத்துவமே உறுதிப்படுத்தப்பட வேண்டும். அனைவரும் சமமானவர்கள். நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான உரிமைகள் இருக்க வேண்டும். அனைவருக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என பௌத்த மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு கூறும் மதத்திற்கு மாற்றமாக அதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதில் முரண்பாடு உள்ளது. அதைத் திருத்த வேண்டும். அனைத்து மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் அந்த உரிமைகள் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும். அனைவருக்கும் மதச் சுதந்திரம் என்ற விடயம் புத்தகத்தில் வழங்கப்பட்டிருந்தாலும், அது நடைமுறையில் கிடைப்பதில்லை. பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் போது, இந்த நிலைமை மற்ற மதங்களுக்கு ஏற்படுவதுதான். ஒவ்வொரு குடிமகனுக்கும் சமத்துவம் நடைமுறையில் செயல்படுத்தப்பட வேண்டும். அது ஒன்றுபட்ட நாடாக இருக்க வேண்டும். அது பிரச்சினை இல்லை. மக்களின் இறையாண்மையில்தான் குறைபாடு உள்ளது. பெரும்பான்மை மக்களுக்குத்தான் இறையாண்மை உள்ளது.

## இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டுவது ஏற்புடையதாகாது

**ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார**



அரசியலமைப்பில் உள்ள சில விடயங்களையே அவர் கூறியிருக்கிறார். ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில், அரசியலமைப்பில் உள்ள அந்த உரிமைகளை அவ்வாறே நாங்கள் மதிக்கிறோம். அவற்றை எமது கட்சி யாப்பிலும் உள்ளடக்கியுள்ளோம். இது தொடர்பில் நாம் விபரிக்கத் தேவையில்லை. நாட்டின் தலைவர்கள் என்ற வகையில் இவற்றைப் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக, இந்த அரசியலமைப்பில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. மக்களின் இறையாண்மை, பௌத்தத்திற்கு முன்னுரிமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து, அவை மீறப்படாத வகையில் அரசியலமைப்பின் பிரகாரம் செயற்படுவது தலைவர்களின் பொறுப்பாகும், அதேபோன்று மக்களும் அவற்றைப் பாதுகாத்துச் செயற்பட வேண்டும். இந்த நாட்டின் அரசியலமைப்புக்கு முன்னுரிமை கொடுத்து, பிற மதங்களை மதித்து, மத, தேசிய ஒத்துழைப்புடன் நாம் எமது அரசாங்கத்தின் கீழ் செயற்படுவோம். எமது கட்சி, இன, மத பேதமற்ற கட்சியாகும். எமது கட்சி அனைத்து மதத்தவர்களும், இனத்தவர்களும் ஒன்று சேர்ந்திருக்கக் கூடிய கட்சியாகும். சில சில கட்சிகள் இந்த நாட்டில் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக மதங்களையும், இனங்களையும் விற்று செயற்பட்டன. இந்நாட்டில் முப்பது வருட யுத்தம் நிலவியது. அச்சம் நிறைந்த ஒரு காலத்தை நாம் கடந்து வந்திருக்கின்றோம். இனவாதத்தையும், மத வாதத்தையும் தூண்டுவது ஒரு போதும் இடம் பெறக் கூடாது. இந்நாட்டிலுள்ள இனவாத, மதவாதக் கட்சிகள் நாளையும் இதனைச் இதைச் செய்யலாம்; எனினும் நாங்கள் மத அடிப்படைவாத மற்றும் இனவாத கட்சிகள் அல்ல. தேசிய ஒற்றுமையை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலம் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வழிவகுக்கலாம். நாளைய நாட்டை உருவாக்க வேண்டும். அனைத்து இலங்கையர்களும் ஒரே கொடியின் கீழ் ஒன்றாக வாழக்கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

## பொருளாதார ரீதியான சுயாதீனத் தன்மையும் இறையாண்மையும் பேணப்பட வேண்டும்

**இலங்கை கொமினியுஸ்ட் கட்சியின் தலைவர் டபிள்யூ வீரசிங்க**



பொருளாதார ரீதியில் சுயாதீனத் தன்மை மற்றும் இயைாண்மை முற்றாக இல்லாமல் போகும் ஒரு தோல்வியடைந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போது உண்மையிலேயே இவ்வாறு கூறும் கதைகள் எமக்கு முக்கியமான, நேர்மையான மற்றும் உண்மையான கதைககளாக இருக்க முடியாது. இதனை நேர்மையான கூற்றாக எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நாட்டில் பௌத்தர்கள் அதிகமானோர் உள்ளனர். பௌத்தம் முதன்மையானது என்ற நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, ஏனைய அனைத்து மதத்தினரும் தமது சமய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமைகள் இருக்க வேண்டும். ஜனாதிபதி கூற முனைந்ததும் அதையேதான். முக்கிய விடயம் என்னவென்றால், சுதந்திரத்தையும் இறையாண்மையையும் வார்த்தைகளில் கூறுவதில் பலனில்லை. பொருளாதார சுதந்திரத்தையும் பொருளாதார இறையாண்மையையும் இல்லாமல் செய்யும் தோல்வியடைந்த வேலைத்திட்டத்தில் நாம் ஈடுபடும்போது இவற்றைக் கூறுவதில் அர்த்தமில்லை. நாம் இருப்பது ஒரு தீவிலாகும். இந்த நாட்டு மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

## அரசியலமைப்பில் உள்ள விடயங்களை எவரும் மாற்ற முயற்சிப்பதில்லை



இவ்விடயங்கள் புதிதாகக் கூற வேண்டிய விடயங்கள் அல்ல. இப்போது ஜனாதிபதி இவ்வாறு பேசிய போதிலும் இவ்விடயங்கள் அனைத்தும் அரசியமைப்பில் உள்ளன. இவ்வாறு பேசும் ஜனாதிபதிதான் சமாதான உடன்படிக்கையைச் செய்தார். ஏனெனில் அரசியலமைப்பின் விடயங்களான மக்களின் இறைமையையும், பௌத்தத்தின் முதன்மையையும், பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு ஒரு நாட்டின் தலைவர் கட்டுப்பட்டவர். முக்கியமாக இந்த விடயங்கள் அரசியலமைப்பில் உள்ள விடயங்களாகும். அவை அனைவரும் பாதுகாக்க வேண்டிய விடயங்களாகும். இவற்றை மாற்ற வேண்டும் என்று நம் நாட்டில் யாரும் கூறவில்லையே. எனவே இவ்வாறான விடயங்களைக் கூறுவதில் பயனில்லை.

*சுபத்ரா தேசப்பிரிய*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*










# பெருந்தோட்டத்தொழிலாளர்களின் ரூ.1700 சம்பளம் நாளை கிடைக்கும்

## தொழில் அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஆனந்தகுமார் தெரிவிப்பு

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் அதிகரிக்கப்பட்ட 1,700 ரூபா நாளாந்த சம்பளம் நாளை (10) முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சமகால பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் பொருளாதார மற்றும் தொழிற்சங்க ரீதியிலான விடயங்களுக்கு தீர்வு காணும் ஜனாதிபதி குழுவின் உறுப்பினரும்

இரத்தினபுரி மாவட்ட ஜக்கிய தேசியக்கட்சி அமைப்பாளரும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் ஜனாதிபதி குழுவின் உறுப்பினருமான எஸ். ஆனந்தகுமார் இவ்விடயத்தை நேற்று (08) தினகரன் வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.



தொழில் அமைச்சு வெளியிட்ட வர்த்தமானியை இடைநிறுத்தக் கோரிய மனுவை நீதிமன்றம் நிராகரித்ததையடுத்தே

இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்ய மறுத்திருந்தது. எனினும், தோட்டக்க கம்பெனிகள் தாக்கல் செய்த மேற்படி மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டோரை எதிர்வரும் ஜூன் (26) நீதிமன்றில் விடயங்களை முன்வைக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இந்நிலையில், தொழிலாளர்களின் அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைக்கு வருவது சாத்தியமா? என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் 1,700 ரூபா அதிரிப்புக்கு எந்த சட்டத்தடையுமில்லை என்றார்.

உறுதி செய்யப்பட்ட இரண்டாவது வர்த்தமானி அறிவிப்புக்கமைய, தோட்டத்தொழிலாளர்களின் புதிய சம்பளத் திட்டம் கடந்த மே (21) நடைமுறைக்கு வருகிறது.இதனால் நிலுவைத் தொகையுடன் இவர்களுக்கு இச்சம்பளம் வழங்கப்படும் என்றும் ஆனந்தகுமார் தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரமின்றி ஏனைய தோட்டத்தொழிலாளர்களுக்கும் இந்த அதிகரிக்கப்பட்ட சம்பளம் அடுத்த மாதம் முதல் நட்டத்தில் செயல்படும் கம்பெனி தோட்டங்களை தகுதியான கம்பெனிகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## வெள்ளவத்தை தமிழ் புத்தக கண்காட்சியும் ஆய்வரங்கும்

இலங்கை தமிழ்மொழிச் சூழலில், வாசிப்பினை ஊக்கப்படுத்துவதற்காகவும், புத்தகப் பண்பாட்டினை வளர்ப்பதற்காகவும், பாடசாலை மாணவர்களையும் இளம் தலைமுறையையும் முதன்மை பிரிவினராகக் கொண்ட 'வாசிப்பு, எழுத்து, புத்தக பரவலாக்க தொண்டுச் செயற்பாட்டை' தொடங்கி வைக்கும் வகையில், எதிர்வரும் 21, 22, 23ஆம் திகதிகளில் வெள்ளவத்தை சைவ மகளிர் மண்டபத்தில் மூன்று தினங்கள் நிகழ்வு இடம் பெறவுள்ளதாக இந்த செயற்திட்டத்தின் சர்வதேச இணைப்பாளர் எம். பௌசர் தெரிவித்தார்.

இந்த முக்கிய நிகழ்வில், புத்தக கண்காட்சியும், ஆய்வரங்கும் இடம்பெற இருக்கிறது.புத்தக கண்காட்சி, 21ம் திகதி வெள்ளி மாலை தொடங்கி, 23ம் திகதி ஞாயிறு இரவு வரை இடம்பெற உள்ளது. இந்த புத்தக கண்காட்சியில் தமிழகப் பதிப்பகங்களான பாரதி புத்தகாலயம், நியூசெஞ்சரி புக் ஹவ்ஸ், காலச்சுவடு, டிஸ்கவரி, எதிர், நன்னூல், சிக் சென்த் பதிப்பகங்கள் உட்பட, தஞ்சாவூர் பல்கலைக்கழகமும் , லண்டன் சமூகம் இயல் பதிப்பகமும் கலந்து கொள்கின்றன. இலங்கையிலுள்ள முன்னணிப் பதிப்பகங்களும், புத்தக நிலையங்களின் விற்பனைக் கூடங்களும் இடம்பெறவுள்ளதுடன், தமிழ், ஆங்கில சிறுவர் பதிப்பகங்களும் கலந்து கொள்ளவுள்ளன. புத்தக கண்காட்சி அரங்குக்கு மலையக மாணவ சமுதாயத்தினை உருவாக்க பங்களித்த வி.ரி. தர்மலிங்கத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஈழத்து தமிழ்மொழி எழுத்தாளர்களுக்கான தனி அரங்கும் விசேடமாக அமைக்கப்படவுள்ளது. இந்திய நூல்களை குறைந்த நாணைய மாற்று விலையில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். இந்த வாய்ப்பினை இலங்கை மாணவர்கள், எழுத்தாளர்கள், வாசிப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். பாடசாலை, பல்கலைக்கழக நூலகங்கள் தொடக்கம், உள்ளுராட்சி நூலகங்கள் தமக்கான நூல்களை பெற்றுக் கொள்ளவும் இந்த நிகழ்வு ஒரு அரிய வாய்ப்பாகும்.

ஆய்வரங்கு நிகழ்வில், தமிழகத்தில் இருந்து பேச்சாளர், கதைசொல்லி பவா செல்லத்துரை, எழுத்தாளர் பெருமாள் முருகன், கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா, உலகறிந்த தமிழாய்வாளர் முனைவர் இரா வேங்கடாசலபதி, பதிப்பாளர் கண்ணன் சுந்தரம் உட்பட பலர் வருகைதர உள்ளனர். இலங்கை பல்கலைக்கழகக்ங்களைச் சேர்ந்த மூத்த கல்வியலாளர்களுடன், இளம் பல்கலைக்கழக ஆசிரியர்களும், ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும் தமது ஆய்வுகளையும் கருத்துக்களையும் முன்வைக்க உள்ளனர். பங்குபற்றுனர்களுடனான விரிவான கலந்துரையாடலும் இடம்பெற உள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், இளம் தலைமுறையினரிடையேயும் வாசிக்கும் உள ஆர்வச் செயற்பாட்டினை அடித்தளமாகக் கொண்ட இந்த முக்கிய செயற்திட்டத்திற்கு, பாடசாலை ஆசிரியர்களும், பாடசாலை நிர்வாகங்களும், பெற்றோர்களும் எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் அதிகம் பங்களிக்க வேண்டியுள்ளது. இந்த திட்டத்தினை தொடங்கி வைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு பேராசிரியர் சி. மௌனகுரு தலைமை வகிக்க உள்ளார். இதில் மறைந்த ஓவியர் அ. இராசையாவின் அரும்பெரும் நூல் உட்பட, பல நூல்கள் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள நூறுக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப்படவுள்ளது.

## துல்ஹஜ் பிறை...

*தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மாநட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக்கு குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களஅதிகாரிகள், வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதி நிதிகள் எனப்பலர் இதில் கலந்து கொண்டனர்.*

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

## அரசியலமைப்புக்கு முரணாக கருத்துக் கூறுவது அறிவீனம்!

உரையாற்றியிருந்தார். "நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவரவர் விருப்பப்படி ஒரு மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. மேலும் எந்த மதத்திலும் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கான உரிமையும் உள்ளது. எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று நாட்டின் அரசியலமைப்பு கூறுகிறது.

அதனால் ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத் துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத்துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட மூன்று துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம். அதற்கான பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கும் உள்ளது. எம்.பி.க்கள் அனைவரும் அரசியலமைப்பை பின்பற்றுவோம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். இதற்கு ஆதரவளிக்கத் தவறுவது அரசியலமைப்புக்கு எதிரானதாகும்" என்று ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். நாட்டின் அடிப்படை சட்டக் கட்டமைப்பாக அரசியலமைப்பே விளங்குகிறது. அதன்படி பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம். இலங்கையின் அரசியலமைப்பு இவ்வாறிருக்கையில், அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்து இப்போது சிலரால் முன்வைக்கப்படுகிறது. அரசியலமைப்புக்கு முரணான இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

அக்கருத்து பொருத்தமற்றதாகும். அரசியலமைப்பின் அடித்தளமான ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத் துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத் துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட மூன்று துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியதே அவசியமாகின்றது.

ஜனாதிபதி தனது உரையில், 'சட்ட ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கலாம். கோட்பாடுகள் தொடர்பில் விவாதிக்க முடியாது. அரசாங்கம் என்ற வகையில் அதனைப் பின்பற்ற வேண்டும். இதை மாற்ற விரும்புவோர் அரசியலமைப்பைத்தான் மாற்ற வேண்டும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட வேண்டும் என்றால் அந்த அரசியலமைப்பையே முதலில் மாற்ற வேண்டும் என்பதை முரண்பாடான கருத்துக் கொண்டோர் முதலில் புரிந்து கொள்வது அவசியம். அதனை விடுத்து அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பது தவறானதாகும்.

ஜனநாயக நாடான இலங்கையின் அரசியலமைப்புக்கு உயரிய மதிப்பளித்துச் செயற்படுவது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

## ஹோமாகமயில்...

*கள் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஹோமாகம சாசனஆரக்சாசபை, ஜனாதிபதி செயலகம், ஊடகம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, மேல் மாகாண சபை, ஹோமாகம பிரதேச செயலகம், ஹோமாகம பிரதேச சபை, ஹோமாகம பிராந்திய கல்வி அலுவலகம், இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.*

*தர்ம ரஷ்மி பொசொன் வலயத்தில் நடத்தப்படும் ஒளிக்கூண்டு போட்டியில் பெரியவர்கள், பாடசாலை மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்கள் என இரு கட்டங்களாக போட்டி நடைபெறவுள்ளது.*

*பெரியவர்களுக்கான போட்டி வெற்றியாளர்களுக்கு 10 இலட்சம் ரூபாவும், 05 இலட்சம் ரூபா மற்றும் 02 இலட்சம் ரூபாவும், 04 முதல் 14 இடங்களுக்கு தலா 50,000 ரூபா மற்றும் 15 முதல் 25 இடங்களுக்கு தலா 25,000 ரூபா ரொக்கப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.*

*சிறுவர்களுக்காக போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் சிறுவர்களுக்கு முறையே 05 இலட்சம் ரூபா, 02 இலட்சம் ரூபா மற்றும் தலா 01 இலட்சம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது.*

*04 முதல் 14 இடங்களுக்கு தலா 30,000 ரூபாவும் 15 முதல் 25 இடங்களுக்கு தலா 20,000 ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளன.*

*இதேவேளை, அறிவாலய நகரமான பிடிபனையில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. பசுமைப் பல்கலைக்கழக மைதானத்தில் தினமும் இரவு 07 மணி முதல் நடைபெறும் பக்திப் பாடல் நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பு தேசிய தொலைக்காட்சி, சுயாதீன தொலைக்காட்சி மற்றும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஒலிபரப்பில் இடம்பெறவுள்ளன.*

*இதற்கு அனுசரனை வழங்கும் அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடக நிறுவனமான லேக்ஹவுஸின் செய்தித்தாள்களில் வெளியிடப்படும் கூப்பன் மூலம் தர்ம ரஷ்மி போசன் ஒளிக்கூண்டு போட்டியில் பங்கேற்கலாம். மேலதிக தகவல்களுக்கு தர்ஷா – 077 5448485/ ஜெயமஹா – 0777 207371 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இதுதொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.*

## ஜனாதிபதி ஊடக...

குழுவுடன் கலந்துரையாடுவதற்கு திகதி குறிப்பிடவிருந்த போதிலும், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கலந்துரையாடலை இரத்துச் செய்தமைக்கு அரசாங்கம் வருந்துவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

'சட்ட மாஅதிபரின் சேவை நீடிப்பு ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கே' என்ற தலைப்பில் கடந்த 02ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரியில் வெளியான செய்தி தொடர்பில், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள அறிவித்தல் குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க இராமநாயக்க கையொப்பமிட்டு அனுப்பியுள்ள விளக்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரின் சேவையை நீடிக்க தீர்மானிக்கப்பட்டமை, ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் கத்தோலிக்க ஆயர் பேரவையுடன் ஒருங்கிணைப்பு குழுவின் பிரதிகளாக முக்கிய பணிகளை ஜனாதிபதியின் கூற்று தொடர்பில் 02.06.2024 அன்று வாரமஞ்சரி பத்திரிகையில் ' சட்ட மாஅதிபரின் சேவை நீடிப்பு ஈஸ்டர் விசாரணைக்காக' என்ற தலைப்பில் வெளியான செய்தி, எவ்வித ஆதாரமுமின்றி வெளியிடப்பட்ட செய்தி என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தொடர் நிகழ்வுகள் தொடர்பில் விளக்கமளித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனக் டி சில்வா ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் இணைப்புகள் 46,251 பக்கங்களைக் கொண்ட அறிக்கை மற்றும் இணைப்பு என்பவற்றை கத்தோலிக்க பேரவைக்கு ஜனாதிபதி செயலகம் வழங்கியது.இதன்பின்னர் இவ்விடயம் தொடர்பில் இலங்கை கத்தோலிக்க பேரவையுடன் மேலதிக கலந்துரையாடல்களை ஜனாதிபதி மேற்கொள்ள, சட்ட மாஅதிபர் ஜனாதிபதி செயலாளர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. இரு குழுக்களுக்கிடையில் சந்திப்பொன்றை முறையாக ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளர் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவருக்கு 28,05 2024 கடிதம் அனுப்பியுள்ளார்.

இக்கோரிக்கையை ஏற்ற கத்தோலிக்க பேரவையின் தலைவர், மே (30) கண்டி அம்பிட்டியவில் நடைபெற்ற ஆயர் பேரவையின் மாநாட்டில் இக்கூட்டத்தை ஜூன் 05 புதன்கிழமை அல்லது ஜூன் 06 வியாழனன்று நடத்துமாறு கோரும் பரிந்துரை ஆலோசனையுடன் ஜனாதிபதி செயலாளருக்கு மே (30) கடிதம் அனுப்பியிருந்தார்.

## முப்படையிலுள்ள முஸ்லிம்களுக்கு...

வாய்ப்பை சவூதி அரசாங்கம் வழங்கியுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த அறிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, சவூதி அரேபிய தூதுவர் சவூதி அரசாங்கத்திடம் இருந்து அனுசரணை மற்றும் சிறப்பு கோட்டாக்களை பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ததை தொடர்ந்து முதன்முறையாக முஸ்லிம் முப்படை வீரர்கள் ஐவருக்கு இந்த சிறப்பு கோட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தென்னகோன், நேற்று (ஜூன் 07) சவூதி அரேபிய தூதுவர் அல்கஹ்தானியை கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துடன்,

முப்படை முஸ்லிம் உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்காக சவூதி தூதுவருக்கும் விசேடமாக சவூதி அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தமைக்கு நன்றி தெரிவித்த சவூதி அரேபிய தூதுவர், எதிர்வரும் ஆண்டுகளில் பாதுகாப்புப் துறை பணியாளர்களுக்கான ஒதுக்கீட்டை மேலும் அதிகரிப்பதில் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் இலங்கை முஸ்லிம் பாதுகாப்புப் படையினருக்கும் 'உம்ரா' புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும் என்றும் சவூதி தூதுவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் உதவுவதற்கு சவூதி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், இது தொடர்பில் இந்நாட்டு அதிகாரிகளுடன் நெருக்கமாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கை ஹஜ் குழு உறுப்பினர் மில்பர் கபூர் மற்றும் ஹஜ் யாத்திரை மேட்கொள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இராஜாங்க அமைச்சருடன் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

## இந்திய பிரதமர்...

பதவியேற்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்காக, இந்தியாவின் அயல்நாடுகள் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முஹம்மது முயிசு, சீசெல்ஸ் துணை ஜனாதிபதி அஹமத் ஆபிப், பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனா, மொரிசியஸ் பிரதமர் பிரவீந் குமார் ஜக்நாத், நேபாள பிரதமர் புஷ்ப கமால் தஹல் பிரசண்டா மற்றும் பூட்டான் பிரதமர் சேரிங் டொப்கே ஆகியோர் நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழை ஏற்றுக் கொண்டுள்ளனர். பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளும் தலைவர்கள், இன்றைய தினம் மாலை ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி ஸ்ரீமதி திரௌபதி முர்முவினால் வழங்கப்படும் விருந்துபசாரத்திலும் பங்கேற்கவுள்ளனர்.

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் மூன்றாவது பதவிக்காலத்துக்கான பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக தலைவர்கள் வருகை தருகின்றமை, இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாக் கோட்பாடு ஆகியவற்றுக்கு இந்தியாவால் வழங்கப்படும் உயர் முன்னுரிமையின் அடிப்படையில் அமைந்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## இலங்கையின் கடன் மறுசீரமைப்பு...

விரைவான பொருளாதார வளர்ச்சி, வலுவான இருப்பு நிதி உருவாக்கம் மற்றும் நிதி அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதன் மூலம் அடைந்த முடிவுகள் பாராட்டுக்குரியவை என்று சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார்.

விசேட ஊடகவியராளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வர்த்தகக் கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தங்கள் விரைவில் எட்டப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்த அவர், நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு எதிர்வரும் 12ஆம் திகதி கூடி, இரண்டாவது மதிப்பீடு குறித்து முடிவு மேற்கொள்ளப் படவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அதிகாரிகளும் இலங்கையின் விரிவான நிதியளிப்பு வசதியின் இரண்டாவது மீளாய்வு தொடர்பில் ஊழியர்கள் மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளது. இதற்கிடையில், பொருளாதார சீர்திருத்த திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்வதற்காக பொருளாதார வாய்ப்புகள் குறித்த IMF IV பிரிவு 2024 ஐ நிறைவு செய்துள்ளது.

கடன் மறுசீரமைப்பின் அடுத்த கட்டம் வெளிப்புற வணிகக் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்தல் மற்றும் உத்தியோகபூர்வ கடனாளிகளுடன் ஒப்பந்தங்களை செயல்படுத்துவதுடன் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பெரும்பாலும் நிறைவடையும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் மேலம் தெரிவித்தார்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட...

சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடுவெல பிரதேச மக்களின் நலன்களை ஆராய்வதற்காகவும், அந்த மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் நேற்று (08) கண்காணிப்பு விஜயத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாகல ரத்நாயக்க, வெள்ளம் தணிந்ததன் பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை பார்வையிட்டதுடன், மக்களை மீள்குடியேற்றுவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள வீடுகளை பார்வையிட சென்ற சாகல ரத்நாயக்க, வீட்டு உரிமையாளர்களுடன் கலந்துரையாடியதுடன், எதிர்காலத்தில் ஏற்படும் வெள்ள நிலைமையை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

## கொலன்னாவ...

அதே பிரதேசத்தில் பொருத்தமான நிலப் பரப்புகள் காணப்படுவதுடன், கொலன்னாவையின் புதிய நகரத் திட்டத்தின் பிரகாரம், அனுமதியற்ற கட்டட நிர்மாணங்களைத் தடை செய்யும் சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன. இத்திட்டத்தின் பிரகாரம் களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளக் கட்டுப்பாட்டு கட்டமைப்பும் தயாரிக்கப்படவுள்ளது. இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேக்கர மற்றும் பிரேம்நாத் சி.தொலவத்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பாதுகாப்பு படைகளின்...

அதன்படி, 2024ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி முதல் 2024 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இந்த நியமனம் செல்லுபடியாகுமென மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி தொடர்பான சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் ஜெனரல் சில்வாவின் பதவிக் காலத்துக்கான நீட்டிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் 23வது தளபதியாகவும் பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதம அதிகாரியாகவும் கடமையாற்றிவந்த ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத் தளபதி பதவியை நிறைவு செய்ததையடுத்து, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

## மாணவர்களுக்கான...

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 811 பஸ் வண்டிகள் மற்றும் 726 தனியார் பஸ் வண்டிகள் உட்பட 1,537 பஸ் வண்டிகள் மாணவர்களின் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதற்கென, 2024இல்,2,000 மில்லியன் ரூபாவை மானியமாக அரசாங்கம் வழங்குகிறது.

போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்ந்துள்ளதால், மாணவர்களின் பாவனைக்கு இன்னும் அதிக பஸ்வண்டிகள் தேவைப்படுகின்றன. இதற்காகவே இச்சேவையில் புதிதாக 500 பஸ்வண்டிகள் இணைக்கப்படவுள்ளன. மாகாணங்களின் பிராந்திய அபிவிருத்திக் குழு தலைவர்கள் இதற்கான முன்மொழிவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளனர்.மாணவர்களுக்கான இந்த பஸ்வண்டி சேவைகள் 2005 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் நகருக்கு...

சுயாதீன ஊடக வலையமைப்பினால் நடத்தப்படும் நோன்மதி தின நிகழ்ச்சி சித்துல்பாவ ரஜமஹா விகாரையில் அன்றைய தினம் நாள் முழுவதும் இடம்பெறவுள்ளதாக சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சுதர்சன குணவர்தன தெரிவித்தார்.



# கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா–2024

**புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரி இந்த ஆண்டு கம்பன் புகழ் விருது பெறுகிறார்**

கொழும்பு கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக் கம்பன்விழா இம் மாதம் 14, 15, 16, 17ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையில் கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 44 வருடங்கள் பூர்த்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு கம்பன் விழாவின் முதல்நாளான ஜூன் மாதம் 14 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு இராமகிருஷ்ண தோட்டம், இல. 11இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப்படமும், சீதா இராம விக்கிரகங்களும் இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கல இசையுடனும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய, மேலைத்தேய வாத்திய இசையுடனும், மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும், ஊர்வலமாக விழாமண்டபம் நோக்கி எடுத்து வரப்படவுள்ளன. இவ் ஊர்வலத்தில் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதரும் பிரமுகர்களும், இரசிகர்களும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்து வருகை தரவுள்ள அறிஞர்களும் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து மாலை 5.30க்கு அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் அபிராமி கயிலாசபிள்ளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்பு கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ. விஸ்வநாதன் தலைமையுரையையும் கொழும்பு கம்பன்கழகத் தலைவர் ஈ. கணேஷ் தொடக்க உரையையும் ஆற்றவுள்ளனர்.

## நூல் வெளியீடு

இவ்வாண்டுக் கம்பன் விழா திருநாள் மங்கலத்தன்று கம்பராமாயணச் செய்யுட்களின் முழுத்தொகுப்பு நூல் (பைபிள் தாளில் அச்சிடப்பட்டது) இரு பாகங்களாக வெளியிடப்படவுள்ளது. இந்நூலின் முதற் பிரதிகளை இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

## 'கம்பன் புகழ் விருது' பெறும் பிரபல எழுத்தாளர் சிவசங்கரி

அகில இலங்கைக் கம்பன் கழகம் உலகளாவித் தமிழ்ப்பணி செய்த சான்றோர் ஒருவருக்கு "கம்பன் புகழ் விருதினை" ஆண்டுதோறும் கொழும்பு கம்பன் விழாவில் வழங்கி வருகிறது. கடந்த ஆண்டுகளில் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, கவிக்கோ அப்துல் ரகுமான், இசை அறிஞர் ரி.என். சேஷகோபாலன், நாட்டியக்கலைஞர் பத்மா சுப்பிரமணியம், பேராசிரியர் ஔவை நடராஜன், பேராசிரியர் சிலம்பொலி சு. செல்லப்பன், இசையரசி பம்பாய் ஜெயஸ்ரீ, பேராசிரியர் சாலமன் பாப்பையா, புகழ்பெற்ற பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் முதலியோர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். 'வி. ரி. வி. பவுண்டேஷன்' நிறுவியுள்ள வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நினைவு அறக்கட்டளை வழங்கும் இக் 'கம்பன் புகழ் விருது' இவ்வாண்டு, புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்படவுள்ளது. விருதுக் கேடயம், பொன்னாடை, பொற்கிழி ஆகியவற்றுடன் கூடிய ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியானதாக இவ்விருது அமையவுள்ளது. இவ்விருதினை, கம்பன் விழாவின் நிறைவு நாளன்று மாலை கழகப்பெருந் தலைவர் நீதியரசர் ஜெ. விஸ்வநாதன் எழுத்தாளர் சிவசங்கரி அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.



## சான்றோர் கௌரவம் பெறும் நம்நாட்டுப் பெருமக்கள் அறுவர்

தம் செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டுதோறும் அகில இலங்கைக் கம்பன் கழகம் கௌரவித்து வருகிறது. அவ்வரிசையில் இவ்வாண்டு கௌரவத்துக்குரியவர்களாக, இலங்கையின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், என்பு அறுவை சிகிச்சை நிபுணர் டொக்டர் சண்முகம் ஸ்ரீதரன், தமிழ் அறிஞர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், வடமாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தத்தம் துறைசார்ந்து இப்பெரியோர்கள் நம் தேசத்திற்கும், இனத்திற்கும் தன்னலமற்று செய்த பெருந்தொண்டுக்காகவும் அவர்தம் துறைசார்ந்த ஆற்றலுக்காகவும் வழங்கப்படும் இவ்விருதுகள் ஈழத்தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன. இவ்விருதுக்கு உரியவர்களுக்கான கௌரவங்கள், விழாவின் இறுதி நாளில் சகல மரியாதைகளுடனும் வழங்கப்படவுள்ளன.

## அறக்கட்டளை விருதுகள்

கம்பன் விழாவில் வருடாந்தம் வழங்கவென அறக்கட்டளை விருதுகளை சிலர் ஏற்படுத்தியுள்ளனர். நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் அமரர் என். கருணை ஆனந்த சிறந்த அறிஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள 'நாவலர் விருது' இவ்வாண்டு அரிய பல நூல்களை வெளியிட்டுவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற 'சிவாலயம்' ஜெ. மோகனுக்கு (பொறியியலாளர்) வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திருக்குவளை இராமஸ்ரீனிவாசன் மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர், சிறந்த இசைக் கலைஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள 'விபுலாநந்தர் விருது' இவ்வாண்டு புகழ்பெற்ற சங்கீத பூஷணம் பொன். ஸ்ரீவாமதேவனுக்கு வழங்கப்படுகிறது. கவிஞர் அமரர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான், ஈழத்துக் கவிஞர்களைக் கௌரவிப்பதற்காக நிறுவிய 'மகரந்தச் சிறகு' விருது இவ்வாண்டு இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான கவிஞர் மேமன்கவிக்கு வழங்கப்படுகிறது. புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனின் நினைவாக அவரின் குடும்பத்தினர் நிறுவியுள்ள அறக்கட்டளை மூலம், சிறந்த ஆய்வு நூல் ஒன்றுக்கு 'நுழைபுலம் ஆய்வு' விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டுக்குரிய சிறந்த ஆய்வு நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எழுதிய "யாழ்ப்பாணத்து கல்வி வளர்ச்சியில் இந்திய அறிஞர்களின் பங்களிப்பு" எனும் நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவியுள்ள 'ஏற்றமிகு இளைஞர்' விருது, அண்மையில் புகழடைந்துவரும் தமிழ் கிரிக்கெட் விளையாட்டு வீரர் வி. வியாஸ்காந்துக்கு வழங்கப்படுகிறது.

## சமூக நிதியுதவி

அமரர் எல். அலமேலு ஆச்சி ஞாபகமாகத் தமிழ்நாடு ஏ. எல். சிதம்பரம் நிறுவிய அறக்கட்டளை நிதி, இவ்வாண்டு மட்டக்களப்பு யோகர் சுவாமி மகளிர் இல்லத்திற்கு வழங்கப் பெறுகிறது. மேலும், அமரர் சி. கே. இலங்கராஜா ஞாபகார்த்த நிதி, அமரர் வித்துவான் க. ந. வேலன் ஞாபகார்த்த நிதி, அமரர் டாக்டர் செ. சபாநடேசன் ஞாபகார்த்த நிதி, முன்னாள் அதிபர் அமரர் ஈ. சபாலிங்கம் ஞாபகார்த்த நிதி, திருமதி சூரியகண்ணம்மாள் அறக்கட்டளை நிதி உதவிகள் இலங்கையில் பல பாகங்களிலும் அமைந்திருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு அவர்களது உயர் கல்வியைத் தொடரும் பொருட்டு வழங்கப்படவுள்ளன.

## இளையோர் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கான பரிசளிப்பு

இயல்த் துறையில் ஈடுபடும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டு தோறும் கம்பன் கழகம் நடத்தி வரும் அமரர் துரை. விஸ்வநாதன் நினைவுப் பேச்சுப் போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி, நாவலர் நற்பணிமன்ற அனுசரணையில் நடத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரின் அனுசரணையில் நடாத்தப்படும் இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டி முதலியவற்றில் வெற்றி பெற்ற போட்டியாளருக்கான பதக்கங்களும் பரிசில்களும் வழங்கும் நிகழ்ச்சி விழாவின் மூன்றாம் நாள் மாலை நிகழ்வில் நடைபெறவுள்ளது.

## கம்பன் விழா நிகழ்ச்சிகள்

இவ்வாண்டுக் கம்பன்விழாவில்; தனியுரை, விவாத அரங்கம், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கு, கவியரங்கம், கருத்தரங்கம், நாடக அரங்கம், வழக்காடு மன்றம், நாட்டிய அரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## சிறப்பு நாட்டிய அரங்கம்

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதல் நாள் மாலை அரங்கில் சிறப்பான நாட்டிய நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "இராமன் எத்தனை இராமனடி?" எனும் பொருளில் இடம்பெறவுள்ள இந்நிகழ்ச்சியை நம் நாட்டின் புகழ்பெற்ற நடன ஆசிரியர்கள் நால்வரின் மாணவர்கள் சேர்ந்து வழங்கவுள்ளனர். கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், கலைமாமணி ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதாசன், நாட்டிய பூரண கலாநிதி ஸ்ரீமதி நிர்மலா ஜோன், நாட்டிய கலைமணி ஸ்ரீமதி பவானி குகப்பிரியா, ஆகியோரின் மாணவியர்கள் இணைந்து இந்நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர்.




## விழாவில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள், அறிஞர்கள்

இவ்விழாவில் மலேசிய நாட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை முன்னாள் பிரதியமைச்சரும் மலேசியக் கண்ணதாசன் அறவாரியத்தின் செயலாளருமான டத்தோ ஸ்ரீ எம். சரவணன் தலைமையில் மலேசிய இலக்கியப் பிரமுகர் குழுவினர் கலந்து சிறப்பிக்கின்றனர். அவ்வாறே புதுச்சேரி சட்டசபையின் முன்னாள் சபாநாயகர் வி. பி. சிவக்கொழுந்து தலைமையில் புதுவைப் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றனர். மேலும் கோவிலூர் ஆதீன கர்த்தர் சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள், 'கற்க' அறக்கட்டளையின் தலைவர் எஸ். செந்தில்குமார், டில்லி கம்பன் கழகத் தலைவர் பெருமாள், அவுஸ்திரேலியாவில் வதியும் வைத்தியநிபுணர் செ. சிதம்பரக்குமார், சிங்கப்பூரைச் சார்ந்த முன்னாள் வங்கி அதிகாரி மகாலிங்கம் முதலிய பிறநாட்டுப் பிரமுகர்கள் பலரும் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர்.இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றவென தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள் மற்றும் பேச்சாளர்கள் பலரும் வருகை தருகின்றனர். 'இலக்கியச் சுடர்' த. இராமலிங்கம் முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், கவிச்சுடர் கவிதைப்பித்தன், முனைவர் இரா மாது, திருமதி பாரதி பாஸ்கர், வழக்கறிஞர் கே. சுமதி, பேராசிரியை பர்வீன் சுல்தானா ஆகியோர் வருகை தருகிறார்கள். இவர்களோடு சென்னைக் கம்பன் கழகம், புதுவைக் கம்பன் கழகம், கோவில்ப்பட்டிக் கம்பன் கழகம், டில்லி கம்பன் கழகம், திருச்சி கம்பன் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவர்களோடு நம்நாட்டைச் சார்ந்த பிரபல பேராசிரியர்கள், அறிஞர்கள், நிர்வாகிகள், சமுதாயப் பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள் முதலிய பெரியோர்கள் பலரும் இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

## புத்தகக் கண்காட்சி

விழா நடைபெறும் நான்கு நாட்களிலும் மண்டபவாயிலில் பூபாலசிங்கம் புத்தகசாலை, புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளது. இக் கண்காட்சியில் சிறப்புத் தள்ளுபடியில் புத்தகங்கள் விற்பனை செய்யப்படும்.

## இரசிகர்களுக்கு வேண்டுகோள்

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளதால் இரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.


பாடசாலை மாணவிகளின் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் வலுவூட்டுவதற்குமான நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ்

**சுகாதார அணையாடைகளைக் கொள்வனவு செய்வதற்காகப் பரிசுப்படிவங்களை வழங்குதல்.**

பாடசாலை மாணவிகளின் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தி வலுவூட்டும் நோக்கில் பெருந்தோட்டப் பாடசாலை வகைக்குள் அடங்கும் 7 தேசிய பாடசாலைகள் மற்றும் சகல மாகாணப் பாடசாலைகளிலும் தரம் 6 க்கு மேல் கல்வி பயிலும் பருவமடைந்த மாணவிகளுக்கு 2024 ஆம் ஆண்டுக்காக சுகாதார அணையாடைகளைக் கொள்வனவு செயவதற்குப் பரிசுப் படிவங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதில் 2024 ஆம் ஆண்டில் சுகாதார அணையாடைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு மாணவிக்குத் தலா ரூபா 600.00 வீதம் இரண்டு பாகங்களுக்கும் ரூபா 1,200.00 பெறுமதியான பரிசுப்படிவம் பாடசாலையால் வழங்கப்படும்.

**இந்தப் பரிசுப்படிவங்களைப் பயன்படுத்தி சுகாதார அணையாடைகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள்**

- ★ சுகாதார அணையாடைகளைக் கொள்வளவு செய்வதற்கான பரிசுப்படிவம் பாடசாலையால் வழங்கப்பட்டபின் பரிசுப்படிவத்தில் A மற்றும் B என 02 பாகங்கள் உள்ளனவா எனப் பரிசோதித்துக்கொள்ளல் வேண்டும்.
- ★ அந்தப் பரிசுப்படிவத்தில் A எழுத்துடன்கூடிய பாகத்தை முதலாவதாகவும் B எழுத்துடன்கூடிய பாகத்தை இரண்டாவதாகவும் பயன்படுத்த வேண்டும்.
- ★ பரிசுப்படிவம் செல்லுபடியாகும் காலப்பகுதியானது A பாகத்துக்காக 2024.06.10 தொடக்கம் 2024.07.10 வரையாகவும் B பாகத்துக்காக 2024.09.01 தொடக்கம் 2024.09.30 வரையாகவும் இருக்கும்.
- ★ மேலே கூறப்பட்ட காலப்பகுதிக்குள் சுகாதார அணையாடைகளைக் கொள்வனவு செய்துகொள்ளல் வேண்டும். இதன்போது கல்வி அமைச்சில் பதிவு செய்துகொண்ட வர்த்தக நிறுவனங்களில் மட்டுமே சுகாதார அணையாடைகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ★ பரிசுப்படிவத்தின் விலைப்பெறுமதி மற்றும் பரிசுப்படிவ இலக்கம் என்பன சேதமடைந்திருந்தால் அது செல்லுபடியாகாது என்பதால் அது குறித்துக் கவனமாக இருத்தல் வேண்டும்.
- ★ இலங்கை தர நிர்ணய சான்றிதழுடனான (SLS) சுகாதார அணையாடைகள் தரமானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவைகளைக் கொள்வனவு செய்வது ஆரோக்கியத்துக்கு உத்தரவாதமானதாகும்.










අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

**சுதந்திரத்தின் பின்னரான இலங்கை வரலாற்றில் பொருளாதாரம் முதற் தடவையாக பின்னடைவுக்குள்ளாகி உலகின் வெளி அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதபடி வீழ்ச்சி அடைந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமையினால் சர்வதேச அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் ஏற்றுமதிக்கான கேள்விகள் குறைவடைந்தன. உள்நாட்டு சந்தையில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. பணவீக்கம் வேகமாக அதிகரித்தது. அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சியடைந்தது. ரூபா மதிப்பிழந்தது. மின்வெட்டு அடிக்கடி அமுல்படுத்தப்பட்டது. வரவு செலவுத்திட்ட இடைவெளி அதிகரித்தது. கடன் நெருக்கடி தீவிரமடைந்தது. இந்நிலையில் அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சியினால் நாட்டை எந்த வகையிலும் முகாமை செய்ய முடியாதளவுக்கு பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தது. அச்சந்தர்ப்பத்தில் அன்றைய அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் அரசிலிருந்து வெளியேறி தேர்தலின் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகக் கொண்ட அமைச்சரவையை அமைத்தனர்.**

**அன்று பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போதும் நாட்டை மீட்டெடுக்க முன்வந்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான். அவர் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை செய்து ஒரு வருடம் செல்வதற்குள் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பினார். ஆனால் வரலாற்றில் ஒரு தடவை இடம்பெற்றது மீண்டும் நிகழ்ந்துள்ளது. 2001இல் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பி நாடு மீண்டும் வங்குரோத்து அடையாதிருப்பதற்காக 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதி முகாமைத்துவ பொறுப்புக்கூறல் சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். அதன் ஊடாக நாடு வங்குரோத்து அடையாதிருப்பதற்கு தேவையான சட்ட ரீதியான ஒழுங்குவிதிகளை நடைமுறைக்கு கொண்டு வந்து இந்நாட்டு அரசியலில் இருக்கும் ஒரே அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்க தான். இரண்டாவது தடவையாக 2022 இல் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் அனுபவம், பொறுமையுடன் கூடிய தொலைநோக்கு அறிவு, சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய முதிர்ச்சியான தலைமைத்துவம் மற்றும் பொருளாதார நோக்குடன் கூடிய ஒரே அரசியல் தலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான்'.**

# நாட்டை மீண்டும் கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் ரணில் மாத்திரம்தான்



## இந்நாட்டை எவர் ஆட்சி செய்தாலும் IMF உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு ஏற்ப நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்

## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

● மர்லின் மரிக்கார்

வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது கட்டாயமான விடயமாகும். அதனைச் செய்யாது யார் ஆட்சிக்கு வந்தாலும் இரு வாரங்களாவது நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்படும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இலங்கையில் 2022 இல் ஏற்பட்ட கடும் பொருளாதார வீழ்ச்சி அதற்கு முன்னர் ஒரு போதும் ஏற்படவில்லை. நாடு வங்குரோத்து அடைவதற்கு ஒரு நபரினதோ ஒரு அரசாங்கத்தினதோ தவறு காரணமல்ல. கடந்த 30 வருடங்களாக வரவு செலவுத் திட்டத்தில் தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவி வருகிறது. அன்றாடம் ஆட்சியைக் கொண்டு செல்வதற்கு கூட அரசாங்கத்திற்கு மீண்டெழும் செலவுகளுக்கான வருமானம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

அதனால் அன்றும், இன்றும், நாளையும் இந்நிலைமை அவ்வாறே நீடிக்கிறது. குறிப்பாக அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும உள்ளிட்ட மக்களுக்கான நிவாரணங்கள் மாத்திரமல்லாமல் எமது நாடு பெற்றுக்கொண்டுள்ள கடன்களுக்காக செலுத்தும் வட்டி ஆகிய நான்கு விடயங்களுக்கும் தேவையான வருமானம் இல்லாமை நீண்ட காலமாக நீடிக்கும் ஒரு பிரச்சினையாகும். சிலர் குறிப்பிடுவது போன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வற் வரியைக் குறைத்ததால் இந்நெருக்கடி ஏற்பட்டது என்று கூறுவது எவ்வித அறிவியல் அடிப்படையும் அற்ற அரசியல் கதையாகும். செலவை ஈடுசெய்வதற்கு ஏற்றவாறான வருமானம் கிடைக்கப்பெறாததன் வெளிப்பாடு இது.

அந்த வகையில் கடந்த 2023இன் வரி மற்றும் வரி அல்லாத வருமானத்தை எடுத்து நோக்கினால் ரூ 03 ரில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றது. ஆனால் மீண்டெழும் செலவு ரூ. 4.6 ரில்லியன்களாகும். அதனால் 2023இல் அரசாங்கத்தைக் கொண்டு செல்ல ரூ. 1.6 ரில்லியன் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் யார் ஆட்சிக்கு வந்தாலும் அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்ள நிதி அத்தியாவசியமானது.

இந்த நிலையில் கடந்த கால ஆட்சியாளர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதற்காக கடன்பெற்றார்கள். கடன் நிதி பற்றாக்குறையாக அமைந்த சந்தர்ப்பங்களில் இடைக்கால வரவு செலவுத்திட்டங்களை முன்வைத்து பணத்தை அச்சிட்டார்கள். ஆனால் இப்போது அவை இரண்டையும் செய்ய முடியாது. வெளிநாடுகளில் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாததால் கடன் கிடைக்கப்பெறுவதுமில்லை. நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதற்காக பணம் அச்சிடவும் முடியாத படி தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைய வழிவகுத்த காரணிகள் என்பதை மறந்துவிடலாகாது.

மேலும் நாடு வங்குரோத்து அடையவும் இரண்டு விடயங்கள் காரணமாக அமைந்தன. அவற்றில் ஒன்று நீண்ட காலம் நிலவிவரும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையாகும். அதேநேரம் மூலதனச் செலவுகளும் கூட கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அண்மைக்கால வரலாற்றில் இந்நாட்டின் அனைத்து அரசாங்கங்களுக்கும் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தவும் நிதி இருக்கவில்லை. ஆனால் வீதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மின்னுற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பஸ், ரயில் என்ஜின்கள், ரயில் தண்டவாளங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மக்களின் வரிப்பணத்தில் அன்றி கடனுக்கே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் வேறு நாடுகளில் மக்களின் வரிப்பணத்தில் தான் இம்மேம்பாட்டு பணிகள் முன்னெடுக்கப்படுவது வழமை. இந்நாட்டில் இவை அனைத்தும் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்கள் ஊடாகத் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நாட்டில் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தான் முழுமையாக கடனுதவி வழங்கியுள்ளன.

அடுத்த காரணம் தான் நாம் தேயிலை, இறப்பர், தேங்காய், இரத்தினக்கற்கள் என்பவற்றை ஏற்றுமதி செய்கின்றோம். எமது வெளிநாட்டு வர்த்தகத்தின் ஊடாக வருடமொன்றுக்கு நாட்டுக்குக் கிடைக்கப்பெறும் அந்நியச் செலாவணியை விடவும் வெளியே செல்லும் அந்நியச் செலாவணி மிக அதிகமாகக் காணப்படுவதாகும். இது 1977 முதல் நீடிக்கக்கூடிய விடயம். குறிப்பாக அரிசி, சீனி போன்ற பாவனைப் பொருட்கள், சமையல் எரிவாயு, மசகு எண்ணெய், பசளை போன்ற இடைநிலை பொருட்களை இயந்திரங்கள் உள்ளிட்ட மூலதனப் பொருட்கள் என எதை எடுத்துக் கொண்டாலும் அவற்றை இறக்குமதி செய்யும் அளவுக்கு அந்நிய செலாவணியை இந்நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடிவதில்லை. அதனால் இப்பொருட்கள் கடன் பெற்றே எப்போதும் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதன் நிமித்தம் அடிக்கடி கடன்பெற்றதால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக வரவு செலவுத்திட்டத் துண்டு விழும் தொகை பெரிதும் அதிகரித்தது.

1977இல் டொலரின் பெறுமதி 8.00 ரூபாவாகக் காணப்பட்டது. 1978 நவம்பர் வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் டொலரின் பெறுமதி ரூ. 16.00 வாக அதிகரித்தது. அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005இல் அரசாங்கத்தைப் பொறுப்பெடுக்கும்போது ஒரு டொலர் ரூ 105.00 வாக இருந்தது. அது 2015 ஆகும் போது ரூ. 131.00 வானது. 2019 இல் கோட்டாபய ஜனாதிபதியாகும் போது டொலரின் பெறுமதி ரூ. 200.00 வாகக் காணப்பட்டது. நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த சந்தர்ப்பத்தில் கறுப்பு சந்தையில் ஒரு டொலருக்கு ரூ. 420.00 செலுத்தும் நிலை இருந்தது. இப்போது ஒரு டொலரின் பெறுமதி 300.00 ரூபாவாக உள்ளது. நிலைமை இவ்வாறிருக்கும் போது அரசியல்வாதிகளால் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியுமா என்பது கேள்விக்குறிய விடயம்.

1977 க்கு முன்னர் ஒரு டொலர் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்ய 08.00 ரூபாவை நாம் எடுத்து செல்வோம். ஆனால் இன்று எட்டு ரூபாவை எடுத்துச் சென்று ஒரு டொலர் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்ய முடியாது.

அதன் விளைவாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையையும், மீண்டெழும் செலவுகளையும் ஈடுசெய்ய உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடன்கள் பெறப்பட்டன. இதன் காரணத்தினால் நாடு வங்குரோத்து அடையும் என்பதை அறிந்து ஐ.எம்.எப். உடன் ஏற்கனவே 16 தடவைகள் உடன்படிக்கைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த உடன்படிக்கைகளின் ஊடாக நாடு வங்குரோத்து அடைவதைத் தவிர்ப்பதற்கான சிபாரிசுகள் ஐ.எம்.எப். இனால் முன்வைக்கப்பட்டன. இருந்த போதிலும் அந்த முன்மொழிவுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து அந்த உடன்படிக்கைகள் அவ்வப்போது ஆட்சியாளர்களால் கைவிடப்பட்டுள்ளன.

இந்நாட்டின் முதலாவது பாரிய பொருளாதார வீழ்ச்சி 2001 இல் ஏற்பட்டதோடு பொருளாதாரம் மறை 2.4 வீதத்தற்கு வீழ்ச்சியடைந்தது. அது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவி வகித்த காலப்பகுதியாகும்.

அச்சமயம் அன்றைய அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த அரசில் நான் கிராமிய பொருளாதார விவகார அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் நிதி பிரதி அமைச்சராகவும் பதவி வகித்தேன். அக்காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியம்,

> **'IMF தனிநபர்களுடனோ கட்சிகளுடனோ அன்றி நாட்டுடன் தான் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும். அரசாங்கத்துடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடும். அதனைக் கைவிட்டால் அந்த நிதியம் நாட்டைக் கைவிட்டுவிடும். அப்போது வங்குரோத்து நிலை உறுதியாகிவிடும். அதன் நிபந்தனைகளை மாற்றினால் இரண்டு வாரங்களுக்குக் கூட நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாகும். அதன் விளைவாக நாடு தீப்பற்றி எரிவதைத் தவிர்க்க முடியாது'**



இந்நாடு இவ்வாறு தொடர்ந்தும் பயணிக்க முடியாது. அவ்வாறு பயணித்தால் கடன் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு நாடு வங்குரோத்து அடையும். அந்நிலை ஏற்படுவதைத் தடுக்க சட்டமொன்றைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுமாறு கூறியது.

அதன்படி, 2003ஆம் ஆண்டின் 03 இலக்க நிதி முகாமைத்துவ பொறுப்புக்கூறல் சட்டத்தை நாம் கொண்டு வந்தோம். அதன் ஊடாக மூன்று விடயங்கள் சட்டமாக்கப்பட்டன.

1). 2006 ஆம் ஆண்டாகும் போது வரவு செலவுத்திட்ட இடைவெளி மொத்த தேசிய உற்பத்தியில் 5 வீதமாக இருக்க வேண்டும் என்பதோடு அதன் பின்னர் எவர் நாட்டை ஆட்சி செய்தாலும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை 5 வீதமாகப் பேண வேண்டும்.

2). 2013இல் திருப்பி செலுத்தப்படாத மொத்த அரச கடனையும் மொத்த தேசிய உற்பத்தியில் 65 வீதத்திற்கும் கொண்டு வர வேண்டும் என்பதாகும். அதன் ஊடாக கடனை திருப்பி செலுத்துவதில் நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க எதிர்பார்க்கப்பட்டது.

3). அரசாங்கம் பெறும் கடன்களில் மொத்த தேசிய உற்பத்தியில் 4.5 சதவீதம் வரை மாத்திரமே இலங்கை அரசினால் பிணை நிற்க முடியும் என்பதாகும்.

இவ்வாறு அன்று வீழ்ச்சி அடைந்திருந்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதன் பின்னர் நாடு வங்குரோத்துக்கு உள்ளாகாமல் இருப்பதற்காக இச்சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

அன்றைய காலத்தில் மறை பொருளாதாரத்தை நேர்மறை பொருளாதாரமாக முன்னேற்றினார். இதன் நிமித்தம் பல்வேறு அர்ப்பணிப்புக்கள் செய்யப்பட்டன. விஷேட சுற்றறிக்கையின் ஊடாக அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு முற்றாக நிறுத்தப்பட்டது. அவ்வாறு செய்து தான் 2001இல் வீழ்ச்சி அடைந்த நாடு மீளக்கட்டியெழுப்பப்பட்டது.

ஆனால் அன்றைய காலப்பகுதியில் யுத்த நிறுத்தம் கையெழுத்திடப்பட்டதால், அது நாட்டைக் காட்டி கொடுப்பதாகக் குறிப்பிட்டு மக்கள் மத்தியில் அபிப்பிராயம் கட்டியெழுப்பப்பட்டது. அதன் ஊடாக, 2004 தேர்தலில் நாம் தோற்கடிக்கப்பட்டோம்.

அதன் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் நிதியமைச்சு செயலாளர் கலாநிதி பி.பி ஜயசுந்தர, இந்த சுற்றறிக்கையின் படி சென்றால் தொழில்வாய்ப்புக்கள் வழங்க முடியாது. மக்களுக்கான நலன்புரி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாது. அதனால் இச்சட்டத்தை திருத்த வேண்டும் என்றார். அதற்கேற்ப இச்சட்டம் அடிக்கடி திருத்தப்பட்டது. அதனால் இச்சட்டத்தை திருத்தப் பங்களித்த ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததற்கு பொறுப்பு கூற வேண்டும்.

இச்சட்டத்தை திருத்தி, கடன் பெறுதலும் திருப்பி செலுத்துதலும் மீண்டும் ஆரம்பமாகின. தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. நலன்புரி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தேர்தல்களில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

இந்நிலையில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் சலுகைக் கடன்கள் போதியதாக அமையாத சந்தர்ப்பங்களில் சர்வதேச சந்தைக்கு சென்று 'இறையாண்மை பத்திரங்கள்' (Sovereign bonds) வெளியிட்டு அதிக வட்டிக்கு கடன் பெறவும் ஆரம்பித்தனர்.

அதேநேரம் யுத்த காலத்தில் எவரும் நிதியுதவி அளிக்க முன்வராததால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பத்தாண்டு ஆட்சிக் காலத்தில், இறையாண்மை பத்திரங்கள் வெளியிடப்பட்டு 6.5 பில்லியன் டொலர்கள் கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. நல்லாட்சிக் காலத்திலும் இறையாண்மை பத்திரங்கள் வெளியிடப்பட்டு 12.5 பில்லியன் டொலர்கள் கடன் பெறப்பட்டது.

ஆனால் சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற மூடி, பிட்ச் ரேட்டிங் போன்ற கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள் இலங்கையில் கடன் தொடர்பில் நிலைபேறு தன்மையில்லை எனக் குறிப்பிட்டு தொடர்ந்தும் இலங்கையை தரமிறக்கி வந்தன. எமது அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இதனை புரிந்து கொள்ளாது உலக நிறுவனங்கள் எம்மை தரமிறக்குகின்றன எனக் குறிப்பிட்டனர். ஆனால் அவ்வாறு செய்ய முடியாது. எமது நிதி நிலைமைத் தரவுகள் குறித்து எம்மை விடவும் தெளிவான புரிதல் உலகில் நிதிமுறைமையைப் பகுப்பாய்வு செய்யும் ரேட்டிங் நிறுவனங்களுக்கு உள்ளது என்பதை நாம் மறந்து விடலாகாது. அவர்கள் முழு உலகினதும் நிதி முறைமைக்கு பொறுப்புக் கூறுபவர்களாவர். வங்கி முறைமை, அரச நிதி முறைமை, பங்குச் சந்தை இவை அனைத்துக்கும் வழிகாட்டும் நிறுவனங்கள் அவை. அறிவியல் பூர்வமான முறைமைக்கு ஏற்ப தான் இந்நிறுவனங்கள் அவற்றை மேற்கொள்கின்றன. அதனால் நாம் வங்குரோத்துக்கு உள்ளாகவில்லை. எம்மால் கடனை திருப்பி செலுத்த முடியும் என அரசியல்வாதிகள் கூறலாம். ஆனால் அவர்கள் திருப்பி செலுத்த முடியாது என்றனர்.

**2024 முதல் 2027 வரை வெளிநாட்டு நிதி இடைவெளியும் நிதி வேலைத்திட்டங்களும்** (அமெரிக்க டொலர் மில்லியன்)

| | 2024 | 2025 | 2026 | 2027 |
|---|---|---|---|---|
| நிதி இடைவெளி (அ) | - 4,843 | - 5,018 | -3,608 | -3,911 |
| வேலைத்திட்டங்களுக்கான நிதி (ஆ) | 4,843 | 5,018 | 3,608 | 3,911 |
| ஐ.எம்.எப். இன் விரிவாக்கப்பட்ட கடன் வசதிகள் | 665 | 663 | 662 | 329 |
| ஐ.எம்.எப். இன் வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு | 850 | 700 | 700 | 600 |
| உலக வங்கி | 400 | 400 | 400 | 300 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 450 | 300 | 300 | 300 |
| ஏனையவை | 0 | 0 | 0 | 0 |
| கடன் செலுத்தாதிருத்தல் வெளிநாடுகளுக்கு செலுத்தப்பட நிலுவையுள்ள கடன் | | | | |
| கடன் நிவாரணம் | 3,328 | 3,655 | 2,246 | 1,482 |
| இறையாண்மைப் பத்திரங்கள் (சந்தையில் பிரவேசித்தல்) | 0 | 0 | 0 | 1,500 |
| பற்றாக்குறை | 0 | 0 | 0 | 0 |
| தனிநபர் சர்வதேச கையிருப்பு | 6,128 | 8,520 | 10,888 | 14,208 |
| திட்டக் கடன்கள் | 1,542 | 1,585 | 1,633 | 1,682 |

மூலம் ஐ.எம்.எப். (2023) இலங்கைக்கு விரிவாக்கப்பட்ட கடன் வசதிகளின் கீழான வேலைத்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் ஊடக அறிக்கை, பணிக்குழாம் அறிக்கை மற்றும் நிறைவேற்று பணிப்பாளரின் இலங்கைக்கான அறிவிப்பு

ஆனால் தொடர்ந்து தரமிறக்கப்படுவதன் விளைவாக எம்மால் கடன் பத்திரங்கள் (letter credit) வழங்க முடியாது. இருப்பினும் வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்ய இது மிகவும் அவசியமானது. தரமிறக்கப்படுவதால் கடனைத் திருப்பி செலுத்தும் பலம் இலங்கைக்கு இல்லை என்பதை அறிந்து கொண்டதும் இந்நாட்டின் வங்கிகள் வழங்கும் கடன் பத்திரங்களுக்கு மூன்றாம் தரப்பின் ஊடான உத்தரவாதம் அளிக்க வேண்டும். உதாரணத்துக்கு கூறுவதாயின் எண்ணெய் இறக்குமதிக்கு இலங்கை வங்கி கடன் பத்திரம் வழங்குமாயின் அதற்கு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் போன்ற வங்கியின் உத்தரவாதம் தேவைப்படும். இதற்காக மேலதிக நிதியை செலுத்தவும் வேண்டும். இவ்வாறு செலுத்தி வந்த நிலையில் எமது அந்நிய செலாவணி கையிருப்பு பூச்சிய நிலைக்கு வீழ்ச்சி அடைந்தது. அதன் காரணத்தினால் எண்ணெய்க்கப்பல் வந்தும் அதற்கு செலுத்த நிதி இல்லாததால் கப்பல் திரும்பி செல்லும் நிலை ஏற்பட்டது. இதேபோன்று தான் எரிவாயு உள்ளிட்ட ஏனைய அனைத்து இறக்குமதிகளின் போதும் இடம்பெற்றது. அதனால் தினமும் மின்வெட்டை 10-12 மணித்தியாலயங்கள் அமுல்படுத்தும் நிலை ஏற்பட்டது. எரிவாயு, எண்ணெய் உள்ளிட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு அவற்றுக்காக இரண்டு மூன்று நாட்கள் வரிசைகளில் காத்திருக்கும் நிலையும் உருவாகி இருந்தது. அந்த வரிசைகளில் மக்கள் உயிரிழக்கும் நிலை கூட ஏற்பட்டிருந்தது.

இவை எதனையும் அறிந்திராத அடிப்படை வாதிகளுக்கும் ஏழை மக்களுக்கும் ஜே.வி.பி உள்ளிட்ட அமைப்புக்கள் இவை அனைத்துக்கும் அரசில் இடம்பெறும் திருட்டு தான் காரணம் என்று கூறினர். அதன் விளைவாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வீதியில் கொல்லப்பட்டார். 12 மணித்தியாலயங்களுக்குள் 72 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டது. வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. முழு நாடும் தீப்பற்றி எரிந்தது. பாராளுமன்றத்தையும் எரிக்கவும் முயற்சி செய்தனர். நாட்டில் பேரழிவு ஏற்படுத்தப்பட்டது. இவை அனைத்தும் தர்க்க ரீதியிலான எண்ணங்களுடன் மேற்கொள்ளப்பட்டவை அல்ல. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்பதை இந்நாட்டின் அரசியல்வாதிகளும் அமைப்புக்களும் புரிந்து கொள்ளாத துரதிர்ஷ்ட நிலை இந்நாட்டில் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

இப்பொருளாதார நெருக்கடியின் பாரதூரத்தை அறிந்ததால் எவரும் நாட்டைப் பொறுப்பெடுக்க முன்வராத சூழல் ஏற்பட்டது. அந்த சூழலில் ஐந்து தடவைகள் பிரதமர் பதவியை வகித்து பரந்த அனுபவத்தை பெற்றுள்ள ஜனாதிபதி, சர்வதேசத்துடன் கலந்துரையாடி நாட்டை மீட்டெடுப்பேன் என முன்வந்து ஐ.எம்.எப். உடன் உறுதியான கடன் உடன்படிக்கையை மேற்கொண்டார்.

உலகம் எம்மை நம்பிக்கையுடன் பார்க்கும் நிலை ஐ.எம்.எப். உடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் ஊடாகவே மீண்டும் ஏற்பட்டுள்ளது.

அதனால் நாட்டில் ஏற்கனவே ஏற்பட்ட வன்முறைகள் ஏற்படாதிருக்க வேண்டுமானால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய நாட்டை கொண்டு செல்ல வேண்டும். ஏற்கனவே 16 தடவைகள் மீறியது போன்று இந்நிதியத்தின் உடன்பாடுகளை மீற முடியாது. அதனால் எந்தவொரு அரசாங்கமும் தாம் விரும்பியபடி செயற்பட முடியாது.

இவ்வருட இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருக்கிறது. மேலும் 06 மாதங்களில் 2025 ஆம் ஆண்டு வரவுள்ளது. இந்த அட்டவணை படி, அடுத்துவரும் 06 மாதங்களில் 2025ஆம் ஆண்டு வந்ததும் சர்வதேசத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவென எமக்கு 05 பில்லியன் டொலர்கள் வரை தேவைப்படுமென அனுமானிக்கின்றோம். அதனை இந்த கடன் உடன்படிக்கை ஊடாகப் பெற்றுக்கொள்ளும் முறைமை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் ஐ.எம்.எப் 663 மில்லியன் டொலர்களையும், 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கவென 700 மில்லியன் டொலர்களையும், உலக வங்கி 400 மில்லியன் டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் டொலர்களையும் வழங்கும். அத்தோடு கடன் செலுத்தாததால் எமக்கு கடன் நிவாரணமாக ஒரு தொகை நிதியும் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். இவ்வாறு தான் 2025 ஆண்டில் ஏற்படக்கூடிய நிதி இடைவெளி நிரப்பப்படவிருக்கிறது.

ஆனால் ஆட்சியை பொறுப்பெடுக்கக்கூடியவர் இந்த கடன் உடன்படிக்கையை மாற்றினால் அல்லது அதிலிருந்து வெளியேறினால் அடுத்துவரும் ஆறு மாதங்களில் வரும் வரவு செலவுத்திட்டத்தை எவ்வாறு தயாரிப்பர்? அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பர் என்பதை முதலில் கூற வேண்டும்?

2027ஆம் ஆண்டாகும் போது சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள எமக்கு சுமார் 3911 மில்லியன் டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும். அவ்வாறு டொலர்கள் பற்றாக்குறை ஏற்பட்டாலும் ஐ.எம்.எப். தனது விரிவாக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் கீழ் 329 மில்லியன் டொலர்கள் வழங்கும். வரவு செலவுத்திட்டத்திற்காக 600 மில்லியன் டொலர்களை வழங்கும். உலக வங்கி 300 மில்லியன் டொலர்களையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் டொலர்களையும் 1482 மில்லியன் டொலர்கள் கடன் நிவாரணமாகவும் கிடைக்கப்பெறும். இதன்படி 2027 ஆகும் போது 1.5 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்படும். இவ்வாறு நிதியுதவிகள் கிடைக்கப்பெறும் போது தான் உலக சந்தைக்கு செல்ல வாய்ப்பு கிடைக்கப்பெறும். அதுவரையும் எவர் ஆட்சி செய்தாலும் எம்மால் சர்வதேச சந்தைக்கு செல்ல முடியாது. ஜே.வி.பி உள்ளிட்ட எந்தக் கட்சியினருக்கும் அது பொதுவானதாகும். அப்படியென்றாலும் எம்மால் 1.5 பில்லியன் டொலர்களைத் தான் பெற்றுக் கொள்ள முடியும். 1.5 பில்லியன் டொலர்களைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்கு இறையாண்மை பத்திரங்களை வெளியிடும் சந்தர்ப்பங்களில் சர்வதேச வளங்கள் 14 பில்லியன் டொலர்களுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இலங்கை இருபக்க மற்றும் வர்த்தகக் கடன்களை திருப்பி செலுத்தாமல் இருப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2027 முதல் கடனை செலுத்தும் முறைமை தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும்.

அதனால் இந்த இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் சகல அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள இணக்கம் காண்பது அவசியம். அதற்கு அமைவாகவே பொருளாதார நிலைமாற்ற சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரச கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கு 2032ஆம் ஆண்டாகும் போது இந்நாட்டின் திருப்பி செலுத்தப்படாத கடன்கள் மொத்த தேசிய உற்பத்தியில் 95 வீதத்திற்கு குறைவாக இருக்கும் என்று நாம் உலகுக்கு கூற வேண்டும். தலா வருமான நிதித்தேவை வருடமொன்றுக்கு மொத்த தேசிய உற்பத்தியில் 13 சதவீதத்திற்கு மேற்படாததாக இருக்க வேண்டும். கடன் தவணை, வட்டி செலுத்துதல் என்பன மொத்த தேசிய உற்பத்தியில் 4.5 சதவீதத்துக்கு மேற்படாததாக இருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி வேகம் 5 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வகையில் பேணப்பட வேண்டும்.

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் ஒரு சதவீதமாகக் கொண்டிருக்க வேண்டும். வேலையற்றவர்களின் விகிதாசாரத்தை 5 சதவீதத்திற்கு உட்பட்டதாக வைத்திருக்க வேண்டும். இவ்வாறான இணக்கப்பாடுகளின் அடிப்படையில் தான் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளக்கூடிய முறைமையைக் குறிப்பிடக்கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் கடன் செலுத்தும் உடன்படிக்கை 2027 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்படுத்திக் கொள்ளப்படும். முதல் 5 - 6 வருடங்களில் செலுத்தப்படாதுள்ள கடன்களில் 37 சதவீதமே செலுத்தப்படும். செலுத்த வேண்டியுள்ள வெளிநாட்டுக் கடன்களில் 51 சதவீதத்தை செலுத்த வேண்டியது 06 - 20 வருடங்களுக்குள் ஆகும். அக்கடன்களில் 12 சதவீதம் 20 வருடங்களுக்கு பின்னரே செலுத்தப்படும். 2027 முதல் 2048 வரையில் இக்கடனை செலுத்தி முடிப்பதற்கு ஏற்ப இலகுபடுத்தப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுவார்த்தைகள் அவ்வாறே இடம்பெறுகின்றன. இந்த இணக்கப்பாட்டை தேசிய இணக்கப்பாடாக உருவாக்கிக் கொள்ளாவிட்டால் எந்தவொரு அரசாங்கத்திற்கும் நாட்டுக்கு மசகு எண்ணெய், சமையல் எரிவாயு, மருந்துப் பொருட்கள் மற்றும் மின்சாரத்தை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாது. அவ்வாறான இணக்கப்பாட்டின் ஊடாகத் தான் 2022 போன்ற நிலை ஏற்படாத வகையில் இதனை வலுவானதாக உருவாக்கிக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் பேரழிவு ஏற்படும்.

இலங்கைக்கு இறுதியாக வருகை தந்த சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் குறிப்பிடும் போது, இலங்கை எதிர்காலத்தில் கத்தியின் கூர் முனையில் பயணிப்பது போன்றே செல்ல வேண்டும்' என்றுள்ளார்.

என்றாலும் எதிர்க்கட்சியினர் தாம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஐ.எம்.எப் நிபந்தனைகளை மாற்றியமைப்பதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் சர்வதேச நாணய நிதியம், இலங்கையுடன் மாத்திரம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில்லை. அது கட்சிகளுடனோ, தனிநபர்களுடனோ கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதும் இல்லை. அந்நிதியம் நாட்டுடனேயே கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கிறது. அது உடன்படிக்கைகளை மேற்கொள்வதும் அரசுடனேயாகும். அதனால் அந்நிறுவனத்துடனான தொடர்பைத் துண்டித்துக் கொண்டால் அந்நிறுவனமும் அந்நாட்டைக் கைவிட்டு விடும். அப்போது வங்குரோத்து நிலை ஏற்படும். இந்த நிபந்தனைகளை மாற்றினால் இருவாரங்களுக்குக் கூட நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்படும். நாடு தீப்பற்றி எரிவதை எவராலும் தடுக்க முடியாது.

## பொருளாதார நிலைமாற்றச் சட்டத்தில் நாடு என்ற வகையில் இணக்கப்பாடு காணப்பட வேண்டிய அடிப்படை ஷரத்துகள்

இலங்கையில் பொருளாதார நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கொள்கைக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் அரசினால் பொருளாதார நிலை மாற்றத்திற்கான தேசிய கொள்கை வர்த்தமானி அறிவித்தல் கடந்த மே மாதம் 10ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதன் ஊடாக நாட்டின் நிறுவன ஒழுங்கமைப்பை கட்டியெழுப்ப பிரதானமாக எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக இலங்கை பொருளாதார ஆணைக்குழு, இலங்கை முதலீட்டு வலயம் என்ற பெயரிலான நிறுவனக் கட்டமைப்பு, சர்வதேச வர்த்தகத்திற்கான அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கை பொருளியல் மற்றும் சர்வதேச வர்த்தக நிறுவனம் ஆகிய ஐந்து நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- இவ்வாறான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவதன் ஊடாக அரசாங்கம் எதிர்பார்ப்பது, போதிய உணவு, உடுதுணிகள், வீடு, வாழ்க்கைத் தரத்தில் தொடரான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், ஓய்வு, சமூக, கலாசார வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்துதல், போதிய வாழ்க்கைத் தரத்தை சகல குடிமக்களுக்கும் பெற்றுக்கொடுத்தல் என்பனவே முதலாவது நோக்கமாக உள்ளது.
- அரச மற்றும் தனியார்த்துறையினரின் பொருளாதார செயற்பாடுகளை நாட்டின் சமூக நோக்கு, பொது சுபீட்சத்திற்காக முன்னெடுத்தல், ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான திட்டங்களையும் நிர்வாகத்தையும் சட்ட ரீதியாக ஒழுங்கமைத்தல் என்பவற்றின் ஊடாக முழு நாட்டிலும் துரித அபிவிருத்தியை எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கவும் இதன் மூல நோக்கமாக கொள்ளப்பட்டுள்ளது.
- 2032 ஆகும் போதும் அதன் பின்னரும் மொத்த தேசிய உற்பத்திக்கு அமைய அரச கடன் விகிதாசாரத்தை 95 வீதத்தை விடவும் குறைந்த மட்டத்தில் பேணுவதும் மொத்த தேசிய உற்பத்திக்கு மத்திய அரசின் வருடாந்த மொத்த நிதி வழங்கல் விகிதாசாரத்தை 2032 ஆகும் போதும் அதன் பின்னரும் 13 சதவீதமாகவோ அதனை விடக் குறைந்த மட்டத்திலோ பேணுவதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது.
- மத்திய அரசாங்கம் மொத்த தேசிய உற்பத்திக்கான வருடாந்த கடன் சேவை விகிதத்தை 2027 ஆகும் போதும் அதன் பின்னரும் 4.5 வீதத்திற்கும் குறைந்த மட்டத்திற்கு கொண்டு வர முக்கியமாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு 2050 ஆகும் போது நாட்டின் சுற்றாடல் பிரச்சினையான காபன் உமிழ்வை பூச்சிய மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- உலகளாவிய பொருளாதாரத்துடன் ஒருங்கிணைவதன் ஊடாக பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கும் ஒரு நிலையான மெக்ரோ சமநிலை மற்றும் நிலையான கடன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் விவசாயத்தின் உற்பத்தித் திறன் மற்றும் வருமானம், விவசாய ஏற்றுமதி என்பவற்றை மேம்படுத்துவதற்கும் குறைந்த பொருளாதார வளர்ச்சியையும் சமூக முன்னேற்றத்தையும் அடைந்து கொள்வதற்கும் இத்திறனாளர்களை ஸ்தாபிப்பதன் ஊடாக எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பொருளாதாரத்தில் போட்டித் தன்மையை ஏற்படுத்துதல், ஏற்றுமதியை முன்னேற்றுதல், டிஜிட்டல் பொருளாதாரமாக எமது பொருளாதாரத்தை மாற்றமடையச் செய்தல் போன்ற பல நோக்கங்களை இச்சட்டத்தின் அடிப்படையில் அவதானிக்க முடிகிறது.
- வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை வருடாந்த மொத்த தேசிய உற்பத்தியில் ஒரு வீதத்திற்கு மேற்படாதிருத்தல்.
- 2025 முதல் தொழிலின்மை, தொழிலாளர் படையணியில் 5 வீதத்தை விடவும் குறைந்த மட்டத்தை அண்மித்தல், தொழிலின்மையை எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மட்டத்திற்கு குறைத்துக்கொள்ளல், மகளிர் உழைப்பாளர் படையணியின் பங்களிப்பு 2030 ஆகும் போது 40 வீதத்திற்கும் குறைவாக உயர்த்தல் பேணுவதும் 2040 ஆகும் போது 50 வீதத்திற்கு மேற்பட்ட மட்டத்தில் பேணவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- மொத்த தேசிய உற்பத்தியின் விகிதாசாரத்தின் படி பொருட்கள், சேவைகள் ஏற்றுமதியை 2025 ஆகும் போது 25 சதவீதமாகப் பேணவும் 2030 ஆகும் போது 40 வீதத்திற்கு குறைவாக மட்டத்தில் பேணவும் 2040 ஆகும் போது 60 வீத மட்டத்தில் பேண எதிர்பார்க்கப்படுகிறது.
- மொத்த தேசிய உற்பத்தி விகிதாசாரப்படி, தேறிய நேரடி வெளிநாட்டு முதலீட்டை 2030 ஆகும் போது 5 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தை அடைந்து கொள்ளவும் 2030 ஆகும் போது தேறிய நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாக 40 சதவீதம் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி அடிப்படையில் அண்மிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 2032 ஆகும் வரை அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் ஆரம்ப இருப்பு மொத்த தேசிய உற்பத்தியில் 2.3 சதவீத மட்டத்திலும் 2023 முதல் அது மொத்த தேசிய உற்பத்தியில் குறைந்தது 2 சதவீத மட்டத்தையும் அண்மித்தல்.
- இலங்கையின் கொடுப்பனவு இருப்பு ஆரம்ப கணக்கு ஏதாவதொரு முறையில் சாதகமான நிலையை அடைந்து கொள்வதற்காக செயற்படுவதாகவும், விஷேடமாக 2027 ஆகும் போது அரசாங்கத்தின் வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 15 சதவீத மட்டத்தை அண்மிப்பதற்கும் பல்வகை கொள்ளளவு விகிதாசாரம் 2027 ஆகும் போது 15 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்திற்கு கொண்டு வருவதற்கும் 2035 ஆகும் போது அதனை 10 சதவீதத்தை விடவும் குறைவான மட்டத்திற்கு கொண்டு வருவதற்கும் இதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.
- நாட்டுக்குள் செயற்படுத்தப்படுகின்ற பொருளாதார ஆணைக்குழுவுக்கு பதிலாக இலங்கை பொருளாதார ஆணைக்குழு என்று பெயர் மாற்றம் செய்து அதற்குரிய அதிகாரங்களை வழங்கி அங்கத்தவர்களை நியமிப்பதற்கும் நிதி பரிமாற்றம் செய்து கொள்ளும் வகையிலும் ஆணைக்குழுவின் நோக்கம் எதுவோ அதனைக் கணக்காய்வு செய்வது எவ்வாறு என்பதையும் விபரித்தல்.
- முதலீட்டு வலயங்களை அமைத்தல், சர்வதேச சந்தைக்கான அலுவலகத்தை அமைத்தல், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, பொருளியல் மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்பு தொடர்பான இலங்கை நிறுவனம் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து நோக்கங்களை அடைந்து கொள்வது எவ்வாறு எனவும் நியமனங்களை மேற்கொள்வது எவ்வாறு எனவும் நீக்குவது எவ்வாறு எனவும் அதற்கான நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்படும்.



# தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதில் மாறுபட்ட நிலைப்பாடுகளில் தமிழ்த் தரப்புகள்!




## எதிர்கால நன்மை தரும் தீர்மானங்களே அவசியமென தமிழ் சமூகம் அபிப்பிராயம்

**எதிர்வரும் சில மாதங்களில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது என்ற விடயம் தொடர்ந்தும் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றது.**

சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்கள் போன்றோர் பொதுவேட்பாளர் ஒருவர் அவசியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பலரையும் இதனை நோக்கி ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளை எடுத்துள்ளனர். இருந்தபோதும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் செய்யும் கட்சிகள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாடு ஏற்படவில்லையென்றே கூற வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பது இன்று நேற்று எழுந்த கோரிக்கையல்ல. பல வருடங்களுக்கு முன்னர் இருந்தே அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கை இதுவாகும். இதற்கு முன்னர் குமார் பொன்னம்பலம் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர் தனிப்பட்ட ரீதியில் தேர்தலில் களமிறங்கியிருந்தனர்.

அந்தக் காலகட்டங்களில் அவர்கள் அனைத்து தமிழ்த் தரப்புக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு களமிறங்கியிருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிட்டு வெல்லமுடியுமா என்றால் அதற்கான பதில் இல்லையென்பது நாம் அனைவரும் அறிந்த விடயம்.

இருந்தாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் அபிலாஷைகளை உரத்துக் கூறுவதற்கும், தென்னிலங்கையில் தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியைப் பரிசோதிப்பதற்குமான ஒரு முயற்சியாகவும் இது அமையும் என்பது இதனை ஆதரிக்கும் தரப்பினரின் நிலைப்பாடாக உள்ளது.




இது விடயத்தில் தமிழ் மக்கள் எந்தளவுக்கு உறுதியாக இருக்கின்றார்கள் என்பதற்கு அப்பால், ஒருசில அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் களத்தில் இறங்கி இதற்காக வேலை செய்கின்றதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

இருந்தாலும், தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் பொதுவான நிலைப்பாடொன்றை இதுவரை அவர்களால் ஏற்படுத்த முடியாது போயிருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒன்றுகூடிய இரு தமிழ் அரசியல் கட்சிகளின் உயர்மட்டக் கூட்டத்தில் பொதுவேட்பாளர் ஒருவரைப் போட்டியிடச் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் அண்மையில் கூடிய ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி அல்லது புளொட் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து ஏற்றுக்கொண்டதுடன், அதனை முன்கொண்டு செல்வதற்கான முழுமையான ஆதரவையும் வெளிப்படுத்தியிருப்பதாக அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும், சமூக வாழ்வின் எதிர்பார்ப்புகளையும், நாளாந்தம் முகம்கொடுத்துவரும் நெருக்கடிகளையும், தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் தொடர்ச்சியான ஏமாற்றுத்தனங்களையும் உறுதியாக வெளிப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அத்தரப்பினர் தெரிவித்தனர்.

இந்தத் தீர்மானமானது ஒருசில அரசியல் கட்சிகளினதும் ஒருசில சமூக செயற்பாட்டுக் குழுக்களினதும் தீர்மானமாக அன்றி, தமிழ் தேசியப் பரப்பில் இயங்கும் அனைத்துத் தரப்பினரதும் ஏகோபித்த கோரிக்கையாக முன்னெடுக்கப்படுவது அவசியம். இதனை தமது கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொண்டதுடன், அதனை முன்கொண்டு செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அக்கட்சியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற ரெலோ கட்சியின் உயர்மட்டத்திலும் இந்த விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது. பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிட வேண்டும் என்பதில் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆதரவான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பொது தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தை இம்முறை முதன் முதலில் வலியுறுத்தியது ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியாகும். அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறிய கருத்தே தற்பொழுது இந்தளவுக்குச் சென்றுள்ளது. அவரைத் தொடர்ந்து இதனை வெகுவாக ஆதரிக்கும் மற்றுமொரு தமிழ் அரசியல் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் காணப்படுகின்றார்.

பல சந்தர்ப்பங்களில் இவர் இக்கருத்தினை வலியுறுத்தியிருந்தார். அண்மையில் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரை நேரில் சந்தித்தபோதும் இது பற்றி வினவப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது கடினமானது என்ற தொனியில் ஜனாதிபதி கூறிச் சென்றதாக விக்னேஸ்வரன் எம்.பி ஊடகங்களுக்குக் கூறியிருந்தார். எனவே, பொதுவேட்பாளர் என்ற கருத்தாடல் அரசியல் கட்சிகள் மத்தியில் அதிகரித்துள்ளது.

எனினும், ஆரம்பம் முதல் பொது வேட்பாளர் என்ற விடயத்தை நிராகரிக்கும் நிலைப்பாட்டை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்துள்ளது. ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது அவர்களுடைய நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

இது பற்றி அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிடுகையில், வாக்குச் சாவடிகளுக்கு சென்று மக்கள் வாக்களிக்கும் மனநிலையை உருவாக்கவே இந்த பொதுவேட்பாளர் நாடகம் அரங்கேறியுள்ளது. இன்று கூட்டமைப்பினர் சொல்லும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்கும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை. இவ்வாறு மக்கள் வெறுப்படைந்த நிலையில் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதாக கூறியே விக்னேஸ்வரன் போன்றோர் செயற்படுகின்றனர்.

அவ்வாறு பொதுவேட்பாளர் யாரும் நிறுத்தபட்டால் கூட அவர் 72 மணித்தியாலத்திற்கு முதல் சொல்லக் கூடும் "எமது கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்களில் ஒரு தரப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளனர் அவருக்கு வாக்களியுங்கள்" எனக் கூறி விலக கூடும்.

இல்லையெனில் இரண்டாவது விருப்பு வாக்கை சிங்கள வேட்பாளருக்கு வழங்கக் கூடும். இதன் காரணமாக எதிர்நிலையில் இருக்கூடிய மக்களின் மனநிலையை வாக்குச்சாவடிக்கு கொண்டு செல்லவே இந்த நாடகம் ஆடப்படுகின்றது என அவர் கூறியிருந்தார்.

மறுபக்கத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியானது பொதுவேட்பாளர் விடயத்தில் உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எதனையும் விடுக்காதபோதும், அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் மத்தியில் இரட்டை நிலைப்பாடு இருப்பதைக் காணமுடிகின்றது. சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் பொதுவேட்பாளர் விடயத்தை ஆதரிப்பதாகத் தெரியவில்லை.

அண்மையில் தன்னைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடத்திலும் இதனைப் பிரஸ்தாபித்திருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. தமிழ் மக்களின் வரலாற்றில் பொதுவேட்பாளர் போன்ற விடயங்களை எப்போதுமே முன்னிறுத்தியது கிடையாது எனவும், அவ்விதமான நிலையில் தற்போது பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பொருத்தமற்ற அணுகுமுறையாகவே இருக்கும் எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்திருப்பதாக ஊடகங்கள் செய்திகளைப் பிரசுரித்துள்ளன.

அக்கட்சியின் முக்கியஸ்தரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் பொதுவேட்பாளர் விடயத்தை ஆதரிக்கவில்லை. இது தென்னிலங்கையில் இனவாதத்தைத் தூண்டி, பெரும்பான்மை வேட்பாளர் ஒருவர் அதாவது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒருவர் வெல்வதற்கு வழிவகுத்துவிடும் என்ற அர்த்தத்தில் அவர் கூறியிருந்தார்.



### தமிழ்க் கட்சிகளை ஒரே முடிவுக்குக் கொண்டுவருவதில் சிவில் சமூக அமைப்புகளின் முயற்சிகள் வெற்றியளிக்குமா?

இருந்தாலும், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பொதுவேட்பாளர் என்ற கோட்பாட்டுடன் இணங்கிப் போகவேண்டும் என்ற தனிப்பட்ட நிலைப்பாட்டில் இருக்கின்றார். அவர் மாத்திரமன்றி, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான சட்டத்தரணி தவராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் உள்ளிட்டவர்களும் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இருந்தபோதும், அனைத்துத் தமிழ் தரப்புக்களையும் ஒன்றிணைப்பதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் கடும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. புலம்பெயர்ந்துவாழ் தரப்பினரும் இதற்கு ஆதரவு வழங்கி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறு இருந்தாலும், தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் எந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கப் போகின்றது என்ற கேள்வி வலுவாகக் காணப்படுகின்றது. களமிறக்கப்படும் தமிழ் பொதுவேட்பாளரை வெற்றிபெறச் செய்வது சாத்தியமில்லையென்பது இதற்காகப் பாடுபடும் தரப்பினருக்கு நன்கு தெரிந்த விடயம். இருந்தாலும், தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை சோதித்துப் பார்ப்பதற்கான சந்தர்ப்பமாக அல்லது தென்னிலங்கை வேட்பாளர்கள் மத்தியில் நம்பிக்கை இல்லையென்ற செய்தியை சர்வதேசத்துக்குச் சொல்ல முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

இது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாக இருக்கப் போகின்றது என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். கடந்த காலங்களைவிட இம்முறை தேர்தல் களம் மிகவும் வித்தியாசமாக இருக்கப் போகின்றது என்பது உறுதி. நாட்டுப் பற்று மற்றும் இனவாதம் என்பவற்றை முன்வைத்தே 62 இலட்சம் பேரின் வாக்குகளினால் முன்னாள் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதாகவும், அன்றைய அந்த ஆட்சியாளர்கள் மக்கள் போராட்டத்தினால் அகற்றப்பட்டதாகவும் சிறுபான்மை மக்கள் தரப்பில் கசப்புணர்வு இன்றும் நிலவுகின்றது.

அதன் பின்னர், பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த சூழ்நிலையில் எதிர்கொள்ளும் தேர்தல் இதுவென்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலம் மற்றும் ஸ்திரமான அரசியல் சூழல் போன்ற விடயங்களை முன்னிலைப் படுத்தியே மக்கள் இம்முறை தேர்தலை அணுகுவார்கள்.

இவ்வாறான பின்னணியில் தென்னிலங்கைத் தலைவர்களுக்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கு தமிழ் மக்களின் வாக்கு எந்தளவுக்கு சாதகமாக இருக்கும் என்பது சற்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

குறிப்பாக, அரசியல் நிலைப்பாடு தொடர்பில் பெரும்பான்மை மக்களின் விருப்புக்கு எதிராக தமிழ் மக்கள் தனித்து நின்று எதையாவது சாதிக்க முடியுமா என்பது இங்கு காணப்படும் மற்றுமொரு கேள்வியாகும்.

அதேநேரம், தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய வேட்பாளர் ஒருவர் இனவாதத்தைக் கையில் எடுக்கும் பட்சத்தில் தமிழர்கள் தனியாக நிற்பது அவருக்கு மிகச் சாதகமாக அமைந்துவிடும். இது தென்பகுதி மக்கள் மத்தியில் பாரிய மாற்றத்துக்கு வித்திட்டுவிடலாம். இதுபற்றிய கசப்பான அனுபவங்கள் பல கடந்தகாலங்களில் தமிழர்களுக்கு உண்டு என்பதால் இதற்கான சாத்தியத்தை முற்றுமுழுதாக மறுத்துவிட முடியாது.

எனவே, தென்னிலங்கையில் களமிறங்கும் வேட்பாளர்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரக்கூடிய ஒருவருடன் உறுதியான பேச்சுவார்த்தைகளை நடத்தி அதன் அடிப்படையில் தீர்மானமொன்றுக்கு வரமுடியும்.

இருந்தாலும், கடந்த காலங்களில் அவ்வாறான இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் இவை நடைமுறையில் எந்தளவுக்குச் சாத்தியமாகின என்பதும் கேள்விக்குறியே. எனவே, தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை தமிழ் அரசியல் தரப்புக்கள் சரியான வகையில் கையாள்வதே எதிர்காலத்தில் தமிழ் சமூகத்துக்கு நன்மை வகிக்கும் ஒன்றாக அமையும்.

---

# கிரிக்கெட் ஜாம்பவானை உலகுக்கு ஈன்றளித்த பிரீடா ஜயசூரிய

ஒருவன் தன் வாழ்நாளில் தன் தாயை இழப்பதைத் தவிர தாங்க முடியாத துயரமும் வேதனையும் வேறில்லை.

பிரீடா ஜயசூரியவின் மரணத்திற்குப் பிறகு குடும்பத்தின் கடைக்குட்டியான சனத் ஜயசூரியவும் இதேபோன்ற சோகத்தை அனுபவித்திருக்க வேண்டும். சந்தன மற்றும் சனத் ஆகிய இருவருக்கும் தாங்க முடியாத சோகத்தை மீதப்படுத்தி விட்டு அவர்களது தாய் அண்மையில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். உலகை வெற்றி கொண்ட கிரிக்கெட் விளையாட்டு வீரரை நாட்டுக்களித்த பிரீடா ஜயசூரியவைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மாத்தறை கொட்டுவேகொட, மகாமாயா மாவத்தையில் உள்ள 'மஹகெதர' பகுதிக்கு சென்ற போதே சனத் ஜயசூரிய தினகரனுக்கு அந்த சோகக் கதையை கூறினார்.

"எங்கள் அம்மா அற்புதமானவர். மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். என் அம்மாவுக்கு கிரிக்கெட் விளையாட்டைப் பற்றி அதிகம் தெரியாது. நாங்கள் சிறு வயதாக இருந்த போது, சாதாரண தரத்தில் சித்தியடைந்து, உயர் தரத்தில் நன்றாகப் படித்து நல்லதொரு தொழிலைச் செய்யவேண்டும் என்றே அவர் எப்போதும் எம்மிடம் கூறுவார். அந்த எதிர்பார்ப்புடன்தான அம்மா இருந்தார். அவ்வாறிருக்கும் போதுதான் நான் கிரிக்கெட்டில் பிரவேசித்தேன்.

அதையிட்டு அம்மா கொஞ்சம் பயந்தார். விளையாட்டு என் படிப்பை பாதித்த பிறகு என் எதிர்காலம் என்னவாகும் என்று என் அம்மா கவலைப்பட்டார்.

சனத் ஜயசூரியவைப் பற்றி உலகம் அறிந்து கொண்டது 1996ஆம் ஆண்டு உலக கிண்ணப் போட்டியின் போதுதான். அந்தப் போட்டியில் சிறந்த வீரராக அவர் தெரிவாகி விருது பெற்றதன் பின்னர்தான் பின்னர் அவர் ரொசான் மஹாநாமவுடன் இணைந்து 1997ஆம் ஆண்டு ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் துடுப்பாட்டத்தில் உலக சாதனை படைத்தார். தனது சிறந்த டெஸ்ட் இன்னிங்ஸை விளையாடி 340 ஓட்டங்களை எடுத்தார்.

'அம்மா மகிழ்ச்சியடைந்திருந்திருக்க வேண்டும். எனினும் அதனை பெரிதாகக் காட்டிக் கொள்ளவில்லை. சனத் ஜயசூர்யவின் தாய் என்பதில் அதிகம் பெருமை பட்டுக் கொள்ளவுமில்லை. மிக எளிமையான வாழ்க்கைதான் வாழ்ந்தார். சாதாரண முறையில்தான் வாழ்ந்தார். என் அம்மாவிடம் நான் கண்ட சிறந்த விடயம் அதுதான்.

அன்று முதல் உடல்நிலை மோசமாகும் வரைக்கும் நடந்தேதான் கடைக்குச் செல்வார்.

வெளியாட்கள் அவரை எப்படி அழைத்தாலும், தனது இளைய மகனை அழைக்க சனத்தின் தாய்க்கு ஆயிரம் பெயர்கள் இருந்தன.

'அம்மா என்னை ஒவ்வொரு பெயர் சொல்லி அழைப்பார். சில நேரங்களில் பிசாசு என்றும் அழைப்பார். மகன் என அழைப்பார். அம்மா என்னை அழைப்பதற்கு இவ்வாறு பல பெயர்கள் இருந்தன. நான் குடும்பத்தின் குறும்புக்காரனல்லவா. சொல்வதைக் கேட்காத குறும்புக் காரனாச்சே. அதனால்தான் அவர் என்னை எப்போதும் கண்காணித்து வந்தார்.

'எங்கள் குடும்பத்தில் அம்மாதான் மிகப்பெரிய ஊக்க சக்தியாக இருந்தார். அப்பா இருந்தாலும் அம்மாதான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார். அர்ப்பணிப்பு, ஆற்றல் மற்றும் கடின உழைப்புடன் அம்மா அனைத்தையும் செய்தார். அதே போன்று மிக வேகமாக செயலாற்றிய ஒருவர். என்னையும் என் சகோதரனையும் நல்ல இடத்தில் வைத்துப் பார்க்க அம்மா ஆசைப்பட்டார்.

அவர் எனக்கும் என் சகோதரனுக்கும் எப்போதும் சிறந்ததை வழங்க முயற்சித்தார்.

அப்போது உள்ளூராட்சி அமைச்சில் பரிசோதகராகப் பணியாற்றிய சனத்தின் தந்தை டன்ஸ்டன் ஜயசூரியவின் சம்பளம் இரு மகன்களின் கல்விக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் போதவில்லை. எனவே, மேலதிக வருமானம் தேவை என்பதை ஜயசூர்யா குடும்பத்தினர் கடுமையாக உணர்ந்தனர்.

'2020ல் அப்பா இறந்துவிட்டார். அதன் பிறகு எல்லாவற்றுக்கும் இருந்தது அம்மா மாத்திரமே.

"ஊரவர்கள் அம்மா மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். அதே போன்று அம்மாவும் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தார். நிறைய புண்ணிய காரியங்களை அவர் செய்திருக்கிறார். அவர் பௌத்த சிந்தனையை மிகவும் அறிந்திருந்தார்.

ஜயசுமணாராம விகாரையுடன் தொடர்பைப் பேணி பக்தி மிக்க வாழ்க்கையை வாழ்ந்த பிரீடா ஜயசூரிய தனது பிள்ளைகளுக்காகத் தொடர்ந்தும் போதி பூஜைகளைச் செய்து வந்தார்.



உலகை வென்ற கிரிக்கெட் விளையாட்டு வீரரை உலகிற்கு வழங்கிய பிரீடா ஜயசூரிய மரணிக்கும் போது அவரது வயது 84 ஆகும். அவரது இறுதிச் சடங்கு அண்மையில் மாத்தறை பொது மயானத்தில் இடம்பெற்றது.



பௌஸ் முஹம்மட்
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# நிதிமுகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இரண்டு சட்டமூலங்கள்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் சந்திப்பு



**நாட்டின் நிதிமுகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இரண்டு சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட அவர் மேலும் குறிப்பிட்டதாவது:**

**கே: அரசாங்கத்தினால் புதிய நிதிச்சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: ஆம், 'பொருளாதாரப் பரிமாற்ற சட்டமூலம்' மற்றும் 'அரச நிதிமுகாமைத்துவ சட்டமூலம்' ஆகிய இரண்டு சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில் அரச நிதிமுகாமைத்துவ சட்டமூலம் முக்கியமானதாகும். அரசின் நிதிநிர்வாகத்தை சீரமைக்கும் வகையில் இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1935 இல் நிதி விடயங்களுக்காக நிதி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட்டு வருகின்றோம். 1965 இல் விதிமுறைகளாக மாறியது. 1992 இல், அதுவும் ஓரளவு திருத்தப்பட்டது. அதன் பின்னர், 2003 இல் அரச நிதிமுகாமைத்துவச் சட்டத்தைக் கொண்டுவந்தபோதும், அதனை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி காணப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே அரசாங்கம் இரண்டு முக்கிய சட்டமூலங்களைச் சமர்ப்பித்துள்ளது.

**கே: இந்த இரண்டு சட்டமூலங்களும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் ஆலோசனைக்கு அமைய கொண்டுவரப்பட்டவையா?**

பதில்: சர்வதேச நிதி அமைப்புகள், குறிப்பாக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றன நமது நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப நிதிரீதியான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தியுள்ளன. ஒரு நிதிச்சட்டமூலத்தின் கீழ் இவற்றைக் கொண்டுவர வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட விடயம் அல்ல. சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட முயற்சியாகும்.

அதேநேரத்தில், நாட்டில் நிதிநெருக்கடி ஏற்பட்டது. அதன் பிறகு, இதுபற்றி ஆய்வு செய்தபோது, நமது நிதி அமைப்பின் மெத்தனமே இந்தச் சம்பவங்களுக்குக் காரணம் என்று கண்டறிந்தோம். இவ்வாறான நிலையிலேயே நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்லும் நோக்கில் இரண்டு சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டன. ஆனால் நான் சொன்னது போல் இந்த இரு சட்டமூலங்களையும் துரிதப்படுத்துவதற்கு நிதிநெருக்கடியும் ஒரு காரணமாக அமைந்தது.

> **இன்று, நேற்று ஆரம்பிக்கப்பட்ட விடயம் அல்ல. சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட முயற்சி இதுவாகும்**

**கே: வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் நீண்டகாலமாக நாம் எதிர்கொண்டுவரும் விடயங்கள். எனவே, இந்தச் சட்டமூலங்களை முன்னரே கொண்டுவந்திருக்க முடியாதா?**

பதில்: சுதந்திர இலங்கையின் 70 வருடங்களிலும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை இருந்தது. இருந்தபோதும் நான் முன்பே கூறியது போல், 2013 இல் இருந்து, இந்த நிதிச்சட்டமூலங்களைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2023 இல் அது முடிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. நிதிக்கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை இது எங்களுக்குக் காணப்படும் பாரியதொரு சவாலாகும். இவ்வாறான நிலையில் இச்சட்டமூலங்களைத் தற்போதாவது கொண்டுவரக் கிடைத்திருப்பது மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்த நிதிக்கான உரிமையாளர்கள் மக்கள் என்பதால், அரசநிதி முறையாக முகாமைத்துவம் செய்ப்பட வேண்டும்.

**கே: சில சட்டங்களில் குறைபாடுகள் இருப்பது கடந்த காலங்களில் உணரப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் குறித்த சட்டமூலத்தில் குறைபாடுகள் இல்லையென்ற உறுதிப்பாட்டை வழங்க முடியுமா?**

பதில்: சர்வதேச நிதிநிறுவனங்களின் வழிகாட்டுதலின் கீழ் அதிக நேரம் செலவழித்து இந்தச் சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, குறைபாடுகள் ஏற்படுவதற்குக் குறைவாகவே உள்ளது. எனினும், காலப்போக்கில் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டாலும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு காலத்துக்கு ஏற்ற வகையிலான திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இந்தச் சட்டமூலங்கள் ஊடாக நிதிக்கட்டுப்பாடு எப்படி இருக்க வேண்டும் என்பது மிகத்தெளிவாக உள்ளது. உதாரணமாக, இது ஒருவருக்கொருவர் இடையே உள்ள பொறுப்புகளைக் காட்டுகிறது. நிதி அமைச்சின் செயலாளரின் பொறுப்புகள் என்ன என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய அதிகாரிகளின் பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே, இதிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது.

**கே: இந்தச் சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்று கூற முடியுமா?**

பதில்: 'நிபந்தனைகள்' என்ற வார்த்தை எமக்குப் பொருத்தமானதல்ல. சர்வதேச நாணய நிதியத்துக்கும் எமக்கும் இடையில் ஒப்பந்தமே உள்ளது. நிபந்தனைகள் இல்லை. 2000ஆம் ஆண்டிலும் 2013ஆம் ஆண்டிலும் இதைப் பற்றிப் பேசினோம். எங்கே தவறு செய்தோம்? அது ஏன் தவறு என்று சர்வதேச நாணய நிதியம் எமக்குச் சுட்டிக்காட்டியது. எனவே, ஒருங்கிணைந்த நிதிச் சட்டத்தை உருவாக்க வழிகாட்டினார்கள். அதன்படி, அவர்களின் பரிந்துரைகள் மற்றும் ஒப்பந்தங்களின்படி நாங்கள் செயல்பட்டோம். அந்த ஒப்பந்தங்கள் இந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தின.

**கே: அப்படியெனில் விசாரணைக்குழு இல்லையென்றால் சிறப்புத் திட்டக்குழு போன்ற கட்டமைப்பு இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதா?**

பதில்: நிதி அமைச்சருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், சிறப்புத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்குவது நீங்கள் சொன்னது போல் ஒரு குழு மூலமாகத்தான் செய்யப்படுகிறது. அந்தக் குழுவின் ஒப்புதல் இல்லாமல் எதையும் செலவு செய்ய முடியாது. அந்தக் குழுவில் திட்டம் தொடர்பான பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளனர். இதன் மூலம் கடுமையான நிதி ஒழுக்கத்துடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கே: இச்சட்டமூலங்களுக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு கிடைக்கும் என நினைக்கிறீர்களா?**

பதில்: எதிர்க்கட்சியில் பலவற்றையும் எதிர்க்கும் அரசியல்வாதிகள் பலர் இருக்கின்றனர் என்பதால் அது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. தற்போது குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு தலா 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது. அதற்குச் சொல்லப்பட்ட கதைகள் பலவாகும். ஒருபுறம், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு விரைவான தீர்வாக சலுகை வழங்கப்பட்டது. மேலும் நெல் விவசாயிக்கு விரைவான நிவாரணம் வழங்கும் நோக்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தேர்தலுக்காக அரசு எடுத்த முடிவுகள் அல்ல.

ஆனால் எதிர்க்கட்சிகளின் கதைகளைப் பாருங்கள். ஒரு பக்கம் வரியைக் குறைப்பதாகச் சொல்கிறார்கள், இன்னொரு பக்கம் சம்பளத்தை உயர்த்துவதாகச் சொல்கிறார்கள். இவை இரண்டும் வானமும் பூமியும் போன்றவை.

> **எதிர்க்கட்சிகளின் கதைகளைப் பாருங்கள். ஒரு பக்கம் வரியைக் குறைப்பதாகச் சொல்கிறார்கள், இன்னொரு பக்கம் சம்பளத்தை உயர்த்துவதாகச் சொல்கிறார்கள். இவை இரண்டும் வானமும் பூமியும் போன்றவை**

**கே: மத்திய வங்கியின் சுதந்திரமும் இச்சட்டமூலங்களுடன் தொடர்புடையது அல்லவா? குறிப்பாக கடன் முகாமைத்துவச் சட்டத்தின் அடிப்படையில் பார்க்கும்போது?**

பதில்: மத்திய வங்கியின் சுதந்திரம் குறித்து நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இப்போது இந்த சம்பளப் பிரச்சினை ஒரு கோணத்தில் மட்டுமே பார்க்கப்படுகிறது. மத்திய வங்கியை சுதந்திரமாக மாற்றுவதன் மூலம், அரசாங்கம் விரும்பியபடி மத்திய வங்கி செயல்படாது. உதாரணமாக, அரசாங்கம் மத்திய வங்கிக்கு பணத்தை அச்சிட உத்தரவிட முடியாது. 3 ட்ரில்லியன் கடந்த காலத்தில அச்சிடப்பட்டது. மத்திய வங்கி சுயாதீனமாக இருந்தாலும், மத்திய வங்கி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். உதாரணமாக, சம்பளப் பிரச்சினை எழுப்பப்பட்ட போது, மத்திய வங்கியின் ஆளுநரும் மற்றவர்களும் பாராளுமன்றத்திற்கும் நிதிக் குழுவிற்கும் அழைக்கப்பட்டனர். மேலும் அந்த சம்பள உயர்வு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. மத்திய வங்கி சுதந்திரமாக மாறினாலும் சில விதிமுறைகளுக்கு உட்பட்டுள்ளதை காணமுடிகிறது.

# பிரதமராக இன்று பதவியேற்கிறார் நரேந்திர மோடி



இந்தியாவின் புதிய அரசின் பிரதமராக நரேந்திர மோடி இன்று பதவியேற்கின்றார். அவர் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமராக இன்று பதவியேற்கவுள்ள நிலையில், டெல்லியில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ட்ரோன்கள் பறக்கத் தடை, எல்லைகளில் கண்காணிப்பு, போக்குவரத்து மாற்றம் எனப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய ஜனநாயக கூட்டணியின் (என்.டி.ஏ) நாடாளுமன்ற குழுத் தலைவராக பிரதமர் மோடி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, மத்தியில் ஆட்சி அமைக்க உரிமை கோரிய அவருக்கு குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தார். இன்றிரவு 7.15 மணியளவில் நடைபெறும் விழாவில், 3 ஆவது முறையாக மோடி பிரதமராக பதவியேற்கிறார்.

இந்நிலையில் தலைநகர் டெல்லியில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்ற பாதுகாப்புப் படையினர், என்.எஸ்.ஜி கமாண்டோக்கள், ட்ரோன்கள், ஸ்னைப்பர்கள் என பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில் சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த ஆண்டு டெல்லியில் ஜி20 மாநாடு நடந்த போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு அம்சங்கள் இப்போதும் பின்பற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியேற்பு விழாவுக்கு வருகை தரும் உலகத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் இருந்து விழா நடைபெறும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருவதற்கு பிரத்தியேக வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாதை முழுவதும் ஸ்னைப்பர்களும், துப்பாக்கி ஏந்திய காவல் துறையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். நகரில் முக்கியமான பகுதிகளில் ட்ரோன்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

வங்கதேசம், இலங்கை, மாலைதீவு, பூட்டான், நேபாளம், மொரீஷியஸ், செசல்ஸ் தீவுகள் தலைவர்களுக்கு பிரதமர் பதவியேற்பு விழாவுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசு செய்திகள் தெரிவித்தன. இதனால் ஹோட்டல்கள் லீலா, தாஜ், ஐ.டி.சி மவுரியா, க்ளாரிட்ஜெஸ், ஒபரோய் ஆகியன பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

குடியரசுத் தலைவர் மாளிகையில் டெல்லி பொலிஸ் துறையின் சிறப்பு ஆயுதங்கள், உத்திகள் படைப்பிரிவான ஸ்வோட் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்பு விழாவை முன்னிட்டு டெல்லியில் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நகரின் பல பகுதிகளில் இருந்தும் மத்திய டெல்லி செல்லும் பாதைகள் பொதுமக்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. டெல்லி எல்லையை ஒட்டிய பகுதிகளில் தீவிர கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்று இரவு 7.15 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரௌபதி முர்மு, நரேந்திர மோடிக்கு பிரதமராக பதவிப்பிரமாணம் மற்றும் இரகசிய காப்புப் பிரமாணம் செய்து வைக்கிறார். ஏற்கனவே நரேந்திர மோடி கடந்த 2014, 2019 ஆகிய ஆண்டுகளில் பிரதமராக பதவியேற்று 10 ஆண்டு பணியை நிறைவு செய்தார். இன்று அவர் தொடர்ந்து 3 ஆவது முறையாக பிரதமராக பதவியேற்கிறார்.

> **தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக பிரதமராகப் பதவியேற்பதால், நேருவின் சாதனையை நிலைநாட்டுகிறார் மோடி!**

இதன்மூலம் அவர் மறைந்த முன்னாள் பிரதமர் நேருவின் சாதனையை சமன் செய்கிறார்.

வங்தேச பிரதமர் ஷேக் ஹசீனா நேற்றைய தினமே இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார். ஏனைய தலைவர்கள் இன்று வருகை தருகின்றனர்.

உலகத் தலைவர்கள் தவிர இன்றைய விழாவில் பா.ஜ.க முதல்வர்கள், கூட்டணி கட்சித் தலைவர்கள், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், மடாதிபதிகள் போன்றோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 தொகுதிகளைக் கைப்பற்றி உள்ளது. இதனால் கூட்டணியில் உள்ள பீகார் முதல்வர் நிதிஷ் குமாரின் ஜே.டி.யுவின் 12 எம்பிக்கள், ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சியின் 16 எம்.பி.க்கள் உட்பட 14 கட்சிகளின் 53 எம்.பிக்கள் ஆதரவுடன் இன்று பிரதமர் மோடி பிரதமராகின்றார். தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்கள் அனைவருமே மோடி தலைமையில் பா.ஜ.க கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான ஆதரவுக் கடிதங்களை வழங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



இவை ஒருபுறமிருக்க, தேசிய ஜனநாயக் கூட்டணியில் உள்ள பல கட்சிகளுடன் பா.ஜ.கவுக்கு சித்தாந்த ஒற்றுமை இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் சந்திரபாபு நாயுடு, நிதீஷ் குமார், சிராக் பாஸ்வான் போன்ற அரசியல் தோழர்களை ஒற்றுமையுடன் வைத்திருந்து நரேந்திர மோடி எவ்வாறு பிரதமர் நாற்காலியில் நீடிக்கப் போகிறார் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இக்கட்சிகளில் முறையே 16 மற்றும் 12 இடங்களில் வெற்றி பெற்ற ஐக்கிய ஜனதா தளம் (ஜே.டி.யு), தெலுங்கு தேசம் கட்சி (டி.டி.பி) ஆகியவை முக்கியமானவை.

இருப்பினும் 7 தொகுதிகளை வென்றுள்ள சிவசேனையின் ஏக்நாத் ஷிண்டே பிரிவும், ஐந்து இடங்கள் உள்ள லோக் ஜனசக்தி ராம்விலாஸ் பாஸ்வான் (எல்.ஜே.பி) பிரிவும், உத்தரப் பிரதேசத்தில் 2 இடங்களில் வென்று நாடாளுமன்றத்தில் நுழைந்த ராஷ்டிரிய லோக்தளம் (ஆர்.எல்.டி) ஆகியவையும் பா.ஜ.கவுக்கு முக்கியமானவை. இவற்றில் சிவசேனையைத் தவிர ஏனைய கட்சிகளுடன் பா.ஜ.கவின் உறவு அவ்வளவு சுமுகமாக இருந்ததில்லை.

ஜே.டி.யுவும், தெலுங்கு தேசம் கட்சியும் கடந்த காலங்களில் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகளாக இருந்துள்ளன. சில விஷயங்களில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து அவை விலகின. இப்போது அவை ஒன்றுசேர்ந்துள்ளன.

## தீவிரமான பாதுகாப்பு வளையத்துக்குள் புதுடில்லி!

இத்தகைய சூழ்நிலையில் இந்தக்கட்சிகள் அனைத்தையும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஒன்றாக வைத்திருப்பது மோடிக்கு சவாலாக இருக்கக்கூடும். பா.ஜ.க அக்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு அடிபணிய வேண்டியிருக்கும் என்றும் கூறப்படுகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் கூட்டத்துக்குப் பிறகு இதன் அறிகுறிகள் தெரியத் தொடங்கியுள்ளன.

ஜே.டி.யு தலைவர் கே.சி தியாகி வியாழனன்று அக்னிவீர் திட்டத்தை மறுபரிசீலனை செய்வது பற்றி பகிரங்கமாகப் பேசினார்.

நிதீஷ், நாயுடு இருவருமே பீகார் மற்றும் ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து கோரி வருகின்றனர்.

இந்த அரசியல் கட்சிகள் தங்களுக்கு அமைச்சரவை அமைச்சர் பதவியை கோரி வருவதாகவும் ஊடகங்களில் பேச்சு அடிபடுகிறது.

ஆனாலும் நரேந்திர மோடி புத்திசாலித்தனமான தலைவராவார். அரசியல் இராஜதந்திரமும் தெரிந்தவர். கூட்டணிக் கட்சிகளை தம்வசப்படுத்துவதில் கைதேர்ந்தவர் என்ற நம்பிக்கையும் பரலாக நிலவுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே மூன்றாவது தடவையாக பிரதமராக இன்று பதவியேற்கிறார் நரேந்திர மோடி.

**எஸ்.சாரங்கன்...**



# மின்சாரசபையை வினைத்திறனுள்ளதாக மாற்றியமைப்பதற்கு பாதை திறந்தது!

## மின்சார சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேறியதால், நீண்ட காலம் நிலவிய குறைபாடுகள் நீங்குவதற்கு வாய்ப்பு

**நாடொன்றின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும் துறைகளில் முக்கியமானவற்றில் ஒன்றாக வலுசக்தித்துறை விளங்குகின்றது. எரிபொருள் வளங்கள் குறைந்த நாடுகளில் இத்துறைக்கான செலவினங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன.**

கடந்த காலத்தில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின்போது இத்துறையில் ஏற்பட்ட பாதிப்பு ஒட்டுமொத்த நாட்டிலும் உணரப்பட்டது.

மின்சார உற்பத்திக்காக அரசாங்கம் செலவு செய்யும் அளவுக்கேற்ப மக்களுக்கு அதனால் நன்மை கிடைக்கின்றதா என்ற கேள்வியும், மின்சாரத் துறையைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் இலங்கை மின்சாரசபையின் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாக உள்ளதா என்ற கேள்வியும் நீண்ட காலமாக வருகின்றன.

இலங்கை மின்சாரசபையே மின்சாரத்துறையில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தமையால் அங்குள்ள ஒரு சிலர் எடுக்கும் தீர்மானங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் வழங்கும் அழுத்தத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களால் இத்துறை பாரிய சவால்களைச் சந்தித்து வந்தது. குறிப்பாக அரசாங்கத்துக்கு அதிக சுமையாக இருக்கும் அரசாங்க நிறுவனங்களில் இலங்கை மின்சாரசபையும் ஒன்றாக மாறியது.

இவ்வாறான பின்னணியில், இலங்கையில் மின்சார உற்பத்தி கடந்த கால பொருளாதார நெருக்கடியால் கணிசமான சவால்களுக்கு முகங்கொடுத்தது. 2022 ஆம் ஆண்டில் அனல்மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி மற்றும் எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்ட இடையூறுகளின் விளைவாக, மொத்த மின் உற்பத்தி 4.6 சதவீதம் சரிவை பதிவு செய்தது.

அதன்படி, 2021 இல் 16,716 கிகாவற்றாக இருந்த மொத்த மின்உற்பத்தி 2022 இல் 15,942 கிகாவற்றாகக் குறைந்தது. இவ்வாறான நிலையில் புதுப்பிக்கத்தக்க சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்திக்கான திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது. 2030 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்உற்பத்தித் திறனை தற்போதுள்ள 4,043 மெகாவாட்டிலிருந்து (மெகாவாட்) 6,900 மெகாவாட்டாக அதிகரிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.




இலங்கை ஏற்கனவே 98 சதவீத கிரிட் இணைப்பை அடைந்துள்ளது, இது தெற்காசிய தரத்தின்படி ஒப்பீட்டளவில் உயர்ந்ததாகும். இருப்பினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி மின்சாரத்துறை உட்பட பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய பிரிவுகளையும் பாதித்துள்ளது.

இலங்கையில் மின்சாரம் மூன்று முதன்மை ஆதாரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகிறது: அனல் மின்சாரம் (நிலக்கரி மற்றும் எரிபொருள் எண்ணெய் உட்பட), நீர் மின்சாரம் மற்றும் பிற மரபுசாரா புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் (சூரிய சக்தி மற்றும் காற்றாலை சக்தி).

எவ்வாறாயினும், மோசமான எரிசக்தி கொள்கைகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை விரிவுபடுத்துவதில் தோல்விகள் மற்றும் கடந்த தசாப்தத்தில் டிரான்ஸ்மிஷன் கிரிட் நவீனமயமாக்கல் மற்றும் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் இல்லாமை ஆகியவை நாட்டின் வளர்ச்சிக்கு மின்சார விநியோகத்தைத் தடுப்பதாக இருந்தன.

இருந்தபோதும், சவால்களுக்கு முகங்கொடுத்து நாட்டில் தடையற்ற மின்சாரத்தை உறுதிசெய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கடுமையான முயற்சியை எடுத்திருந்தது. இத்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதாயின் இதனை மறுசீரமைக்க வேண்டும் என்ற கடுமையான தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருந்தது. இத்துறையை மறுசீரமைப்பதற்குக் குறிப்பாக இலங்கை மின்சாரசபையின் சட்டத்தை திருத்தியமைத்து, வினைத்திறன் மிக்க சேவையை வழங்கச் செய்வதற்கான முயற்சிகள் கடந்த அரசாங்கங்களின் காலத்தில் எடுக்கப்பட்டிருந்தாலும் அவை தோல்வியில் முடிந்திருந்தன. எனினும், இந்த அரசாங்கம் இத்துறையை மறுசீரமைக்கும் இலக்கில் முதற்படியை வெற்றிகொண்டுள்ளது.

இத்துறையை மறுசீரமைக்கும் நோக்கில் இலங்கை மின்சாரசபைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய இலங்கை மின்சார சட்டமூலம் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் தொடர்பில் கருத்தாடல்கள் ஆரம்பிக்கப்பட்டு, இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதனை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சட்டமூலத்தில் சில சரத்துக்கள் அரசியலமைப்பை மீறும் வகையில் அமைந்திருப்பதால் அவற்றைத் திருத்துமாறு ஆலோசனை வழங்கியிருந்தது. இந்த ஆலோசனைகளை ஏற்று உரிய திருத்தங்களை முன்வைத்து கடந்த வியாழக்கிழமை குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் பின்னர் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 44 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இச்சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பில் எதிர்க்கட்சி வாக்கெடுப்பைக் கோரியிருந்தது. அதற்கமைய இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 103 வாக்குகளும், எதிராக 59 வாக்குகளும் வழங்கப்பட்டன. அதனையடுத்து, குழுநிலையின் போது சட்டமூலத்துக்கு திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதுடன், மூன்றாவது மதிப்பீடு வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

மின்சக்தித் துறையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளை செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கிலான இந்த சட்டமூலம் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை மின்சாரசபையை தனியார்மயப்படுத்துவதற்கான அதிகாரத்தை வழங்கும் நோக்கிலேயே இச்சட்டமூலம் கொண்டுவரப்படுவதாக எதிர்க்கட்சிகள் பகிரங்கமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தன. எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் மறுத்திருந்த மின்வலு அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இச்சட்டமூலத்தின் ஊடாக இலங்கை மின்சாரசபையின் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டு மக்களுக்கு நன்மை ஏற்படுத்தப்படும் என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார்.

இலங்கை மின்சாரசபையின் தொழிற்சங்கங்கள் பல்வேறு காரணங்களைக் கூறி இதனை மறுசீரமைப்பதற்கு அனுமதிக்காமல் இருந்து வந்தன. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான சட்டத்திருத்தங்களைக் கொண்டுவர முயற்சித்தபோதும், இது பலனளித்திருக்கவில்லை.

இலங்கை மின்சாரசபையைப் பொறுத்தவரையில் புதுப்பிக்கத்தக்க சக்தியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்திக்குச் செல்லும் நோக்கில் கொண்டுவரப்பட்ட முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தவறியது. பாரம்பரியமான மின்உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தும் போது விசேடமாக மின்சாரத் தேவை அதிகரிக்கும்போது தனியார் நிறுவனங்களிடமிருந்து உடனடி மின்சாரக் கொள்வனவுக்கு மின்சார சபையின் பொறியியலாளர்கள் பரிந்துரைப்பார்கள்.

இதனால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய தரகுப்பணம் அதிகமாக இருந்தமையால் புதுப்பிக்கத்தக்க சக்தியைக் கொண்ட மின்சார உற்பத்தியில் அதிக நாட்டம் காண்பிக்காது இருந்து வந்தனர். அது மாத்திரமன்றி, சம்பள அளவிலும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை மின்சாரசபையின் சம்பள அளவு அதிகமாகவே உள்ளது. இதனால் அரசாங்கத்துக்கான செலவும் அதிகமாகவே காணப்பட்டது.

இந்த நிலையில், மின்சாரசபையை மறுசீரமைத்து அதற்குக் காணப்படும் சுமைகளை தனியார் பங்குடைமைகளின் ஊடாகக் குறைத்து வினைத்திறன்மிக்க வகையில் மின்சார விநியோகத்தை வழங்குவது இச்சட்டமூலத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. இது விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆரம்ப வெற்றி கிடைத்துள்ளது என்றே கூற வேண்டும்.

**பி.ஹர்ஷன்...**

# காஸா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி வகுத்துள்ள திட்டம்!



## பைடனின் யுத்தநிறுத்த திட்டத்தை ஆதரித்தால் நெதன்யாகு ஆட்சி முடிவுறும் என்கின்றனர் இஸ்ரேல் அமைச்சர்கள்

**காஸா மீது இஸ்ரேல் கடந்த 08 மாதங்களாக முன்னெடுத்துவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித் திட்ட வரைவை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்வைத்துள்ளார்.**

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் செய்தியாளர்கள் மத்தியில் முன்வைத்த இத்திட்டம் குறித்து ஜனாதிபதி பைடன் குறிப்பிடுகையில், 'இந்த யோசனையை ஒரு நீடித்த போர் நிறுத்தத்திற்கான வரைபடம்' என்றும் 'காஸா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நேரம் வந்துள்ளது' என்றும் தெரிவித்துள்ளார். உலகின் கவனத்தை ஈர்த்துள்ள இத்திட்டத்தை ஹமாஸ் உட்பட உலகின் பல நாடுகளும் வரவேற்றுள்ளன.

ஆன போதிலும் இந்த யுத்தநிறுத்த நிகழ்ச்சித் திட்டம் முன்வைக்கப்பட்டு சுமார் ஒரு வார காலம் கடந்துள்ள போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இஸ்ரேலும் ஹமாஸும் இன்னும் உறுதியான முடிவை அறிவிக்காதுள்ளன. இத்திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னரும் கூட காஸா மீதான யுத்தம் நீடிப்பதோடு, தினமும் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வருகின்றனர்.

இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இற்றை வரையும் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டும், 83 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துமுள்ளனர். அவர்களில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களாவர்.

கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியதோடு, 240 பேரை பணயக்கைதிகளாகப் பிடிந்துச் சென்றது. அத்தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதற்காகவும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காகவும் இஸ்ரேல் காஸா மீது போரை ஆரம்பித்தது. இப்போரின் விளைவாக காஸாவின் உட்டமைப்பு வசதிகளில் 70 சதவீமானவற்றுக்கும் மேற்பட்டவை சிதைவடைந்துள்ளன. மக்கள் குடியிருப்புகள், அகதிமுகாம்கள், பாடசாலைக் கட்டடங்கள், பொதுக்கட்டடங்கள் என அனைத்தும் சேதமடைந்தும் அழிவடைந்தும் உள்ளன. காஸா முழுவதும் சாம்பல் மேடாகவே காட்சியளிக்கிறது.

அதனால் 23 இலட்சம் சனத்தொகையைக் கொண்ட காஸாவில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி இடம்பெயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற கூடாரங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளனர்.

இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை கட்டார், எகிப்து, அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. கட்டார், எகிப்து என பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. ஏழு மாதங்கள் கடந்தும் அந்த முயற்சிகள் வெற்றியளித்ததாக இல்லை.

யுத்தம் தொடர்வதன் விளைவாக பலஸ்தீனின் காஸா, மேற்குகரைப் பிராந்திய மக்கள் முகம்கொடுத்துள்ள அவலங்கள் நீடித்த வண்ணமுள்ளன. பணயக் கைதிகளும் உயிருடன் விடுவிக்கப்படாத நிலையே தொடர்கிறது.

இவ்வாறான சூழலில்தான் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், காஸா மீதான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான திட்ட வரவை கடந்த 31 ஆம் திகதி முன்வைத்தார். மூன்று கட்டங்களை இத்திட்ட வரைபடம் கொண்டுள்ளது.

அதன் முதலாம் கட்டத்தில், ஆறு வாரங்களுக்கு முழு அளவிலான யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும். இக்காலப்பகுதியில் மக்கள் செறிவாகக் காணப்படும் காஸாவின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இஸ்ரேலியப் படைகள் வெளியேறுதல், பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்களவிலான இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவித்தல், அவர்களில் அமெரிக்க பணயக்கைதிகள் முதற்கட்டத்தில் விடுவிக்கப்படல், அதற்கு ஈடாக இஸ்ரேலிய சிறைகளிலுள்ள நூற்றுக்கணக்கான பலஸ்தீன கைதிகளையும் விடுவித்தல், பலஸ்தீனர்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல அனுமதித்தல், காஸாவுக்குள் தினமும் 600 ட்ரக்குகளில் மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைத்தல், சர்வதேச சமூகம் ஆயிரக்கணக்கான வீடுகளை வழங்கவும் வேண்டும்.

முதலாம் கட்டத்தில் யுத்தநிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தை 6 வாரங்களுக்கு மேல் நீடித்தால் பேச்சுவார்த்தை தொடரும் வரையும் யுத்தநிறுத்தம் நீடிக்கும்' ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் மேலுமொரு ஆறு வார கால யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும். அதன் போது இஸ்ரேலியப் படையினர் காஸாவில் இருந்து முழுமையாக வெளியேறுதல், அனைத்துப் பணயக் கைதிகளையும் ஹமாஸ் விடுவித்தல், பகைமையை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவரவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

மூன்றாம் கட்டத்தின் போது, காஸாவில் பாரிய புனரமைப்பு மற்றும் நிலைப்படுத்தல் திட்டத்தை முன்னெடுத்தல். அதனை மூன்று முதல் ஐந்து வருடங்கள் வரை நடைமுறைப்படுத்தல், வீடுகளும் பாடசாலைகளும் வைத்தியசாலைகளும் மீளமைக்கப்படல். கொல்லப்பட்டுள்ள இஸ்ரேலியக் கைதிகளின் எச்சங்கள், பிரேதங்களை அவர்களது குடும்பத்தினரிடம் கையளித்தல்.

இவ்வாறு மூன்று கட்டங்களை உள்ளடக்கியுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க காஸா யுத்தநிறுத்தத்திற்கான அமெரிக்க ஜனாதிபதியின் நிகழ்ச்சித் திட்டம் கட்டார் ஊடாக ஹமாஸுக்கு வழங்கப்பட்டது.

அத்திட்டத்தையும் அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்களையும் வரவேற்றுள்ள ஹமாஸ், நிரந்தரப் போர்நிறுத்தம், காஸாவில் இருந்து இஸ்ரேலியப் படையினரை திரும்பப் பெறுதல் மற்றும் புனரமைப்பு, கைதிகள் பரிமாற்றம் என்பன உள்ளடக்கப்பட்டிருப்பதையும் வரவேற்றுள்ளனர்.

எனினும் இத்திட்டத்திற்கு இஸ்ரேல் ஆதரவு என்று பைடன் கூறியதும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் கடும் ஆட்சேபனையை தெரிவுத்துள்ளன. குறிப்பாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் இட்டமர் பென் கிவிரும், நிதியமைச்சர் பெஷ்லெல் ஸ்மொட்ரிச்சும் அமெரிக்க ஜனாதிபதி வகுத்துள்ள திட்டம் நிறைவேற்றப்பட்டால், நெதன்யாகுவின் அரசாங்கத்தைக் கலைத்து விடுவோம் என்று எச்சரித்துள்ளதோடு, அரசில் இருந்து வெளியேறுவதாகவும் ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாகவும் கூறியுள்ளனர். அவர்களது கட்சிகள் காஸாவில் தொடர்ந்தும் யுத்தத்தை முன்னெடுக்கவே வலியுறுத்துகின்றன.

இந்நிலையில் பிரதமர் நெதன்யாகு, 'ஹமாஸை ஒழித்துக்கட்டி தனது நாடு அதன் அனைத்து நோக்கங்களையும் அடையும் வரை போரைத் தொடரும். அதுவரை யுத்தநிறுத்தம் இல்லை' என்றுள்ளார்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி பைடன், 'என்னதான் அழுத்தம் வந்தாலும் இந்த ஒப்பந்தத்தின் பின்னால் நிற்குமாறு இஸ்ரேலிய தலைமையை நான் கேட்டுக் கொள்கிறேன்' என்றுள்ளார்.

அதேநேரம் பணயக்கைதிகளை விடுவிக்கவென யுத்தநிறுத்தத்திற்கு செல்லுமாறு நெதன்யாகு அரசை வலியறுத்தி வரும் இஸ்ரேல் மக்கள், ஜனாதிபதி பைடனின் யோசைனையை வரவேற்றுள்ளதோடு, பாரிய ஆர்ப்பாட்டமொன்றையும் டெல்அவிவில் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரன், 'அமெரிக்க ஜனாதிபதி முன்வைத்துள்ள காஸாவில் நீடித்த அமைதிக்கான போர்நிறுத்த திட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். காஸா போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். பிராந்தியத்தில் அனைவரது அமைதி மற்றும் பாதுகாப்புக்காக எங்களது பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம்' என்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டெரஸ், அமெரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ள போர்நிறுத்தம் மற்றும் காஸாவிலுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பாதை வரைபடத்தை வரவேற்றுள்ளார்.

அத்தோடு, 'காஸாவில் நாங்கள் பல துன்பங்களையும் அழிவுகளையும் கண்டுள்ளோம். யுத்தம் நிறுத்த வேண்டிய நேரம் இது. அமெரிக்க ஜனாதிபதியின் முன்முயற்சியை நான் வரவேற்கிறேன். போர்நிறுத்தம், பணயக்கைதிகள் அனைவரையும் விடுவித்தல், தடையில்லா மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைத்தல் மற்றும் நீடித்த அமைதிக்கான இந்த வாய்ப்பைப் பயன்படுத்த அனைத்துத் தரப்பினரையும் ஊக்குவிக்கிறேன்' என்றும் எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

மேலும் ஜனாதிபதி பைடனின் காஸா யுத்தநிறுத்தத் திட்டத்தை வரவேற்று ஆதரவு தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், அத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வர இஸ்ரேலும் ஹமாஸும் முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஜி 7 நாடுகள் அமைப்பும் அமெரிக்க ஜனாதிபதியின் யோசனையை முழுமையாக ஆதரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு மத்திய கிழக்கு உட்பட உலகின் பல நாடுகளும் இத்திட்டத்தை வரவேற்றுள்ளன.



### உலக நாடுகள் வரவேற்றும் இஸ்ரேலும் ஹமாஸும் இணக்கப்பாட்டை அறிவிக்கத் தாமதம்

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி முன்வைத்துள்ள யுத்தநிறுத்தத் திட்டத்தை இறுதிப்படுத்துமாறு கட்டார், எகிப்து, அமெரிக்க மத்தியஸ்தர்கள் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். அத்தோடு ஜோர்டான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய ஐந்து அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் பைடனின் முன்மொழிவை தீவிரமாகவும் சாதகமாகவும் பரிசீலிக்குமாறு இஸ்ரேலையும் ஹமாஸையும் கோரியுள்ளனர்.

அந்த வகையில் இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக், காஸாவிலுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்கும் இஸ்ரேலின் பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதற்கும் வழிவகுக்கும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் நான் முழுமையாக ஆதரிப்பேன் என்பதை நான் மீண்டும் கூறுகிறேன்' என்றுள்ளார்.



இருந்த போதிலும் அமெரிக்க ஜனாதிபதியின் திட்டத்திற்கு இஸ்ரேலும் ஹமாஸும் ஒரு வார காலமாகியும் உறுதியான இணக்கப்பாட்டை தெரிவிக்காத நிலை நீடித்துவருவது குறிப்பிடத்தக்கது.

**மர்லின் மரிக்கார்...**

# உலக சமுத்திர தினத்தைக் கொண்டாடுவோம்

## எமது சமுத்திரம் மற்றும் காலநிலைக்கான வினையூக்கி செயற்பாடுகளை மேற்கொள்ளல்

**உலக சமுத்திர தினத்தை தொனிப்பொருளாகக் கொண்டு இலங்கை சமுத்திர பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வசந்த ரத்னாயக்க அவர்களுடன் செய்த நேர்காணல்.**

* உலக சமுத்திர தின வரலாறு பற்றி மீண்டும் ஞாபகமூட்டினால்,

உலக சமுத்திர தினம் என்பது வருடாந்தம் ஜூன் 8 ஆம் திகதிக்கு இடம்பெறும் சர்வதேச தினமாகும். இந்த சிந்தனை ஆரம்பத்தில் 1992 ஆம் ஆண்டு கனடாவின் சமுத்திர வளர்ச்சிக்கான சர்வதேச நிலையம் மற்றும் கனடாவில் சமுத்திர நிறுவனத்தால் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் இடம்பெற்ற பூமி உச்சிமாநாடு - சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா. மாநாட்டில் முன்மொழியப்பட்டது.

* இம்முறை சமுத்திர தினத்தின் தொனிப்பொருள் என்ன?

2024 ஆம் ஆண்டுக்காக புதிய பல்லாண்டு செயற்பாட்டு தொனிப்பொருள் ஒன்றை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது "எமது சமுத்திரம் மற்றும் காலநிலைக்கான வினையூக்கி செயற்பாடுகளை மேற்கொள்ளல்" என்ற தொனிப்பொருளாகும். அதன்மூலம் நாடுகளுக்கு இடையே மாற்றத்தக்க ஒத்துழைப்பு ஒன்றை மேம்படுத்துவதோடு ஆரோக்கியமான நீர் பூகோளம் ஒன்றை உருவாக்குவது மாத்திரமல்ல மிகவும் நியாயமான மற்றும் பேண்தகு சமூகம் ஒன்றை உருவாக்குவதும் இலக்காகும்.

* சமுத்திரம் என்பது மனித இருப்புக்கு மற்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு தாக்கம் செலுத்தும் ஒன்றா?

ஆம் நிச்சயமாக. பூமியின் நூற்றுக்கு 70க்கு மேற்பட்ட பகுதி சமுத்திரத்தை உள்ளடக்கியதாகும். அது உயிர் மூலமாவதோடு, மனித குலத்தின் மற்றும் பூமியின் மற்ற அனைத்து உயிர்களினதும் ஊட்டத்திற்கு உதவுகிறது. பூமியின் ஒட்சிசனில் குறைந்தது நூற்றுக்கு 50 வரையாவது சமுத்திரம் உற்பத்தி செய்கிறது. அது பூமியின் உயிர் பல்வகைமையின் அதிக அளவுக்கு அடைக்கலமாவதோடு உலகெங்கும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு புரதத்தின் முக்கிய ஆதாரமாக செயற்படுகிறது. 2030 ஆம் ஆண்டாகும்போது 40 மில்லியன் மக்கள் கடல் சார் தொழில்துறை மூலம் தொழில்களில் ஈடுபடுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரத்திற்காக சமுத்திரம் பிரதான பங்களிப்பு ஒன்றை மேற்கொள்கிறது.

அதேபோன்று தற்போது எமது பூமிக் கோள் மற்றும் அதில் உள்ள அனைத்து உயிரினங்கள் பல பிரச்சினைகள் மற்றும் அபாயத்திற்கு முகம்கொடுத்து வருகின்றன. காலநிலை பிரச்சினை அதில் முதன்மையானதாகும். ஆரோக்கியமான காலநிலை ஒன்றுக்கு எமக்கு ஆரோக்கியமான சமுத்திரம் ஒன்று தேவை என்பது தெளிவானது.



**இலங்கை சமுத்திர பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வசந்த ரத்னாயக்க**

அதேபோன்று மீன் அளவில் நூற்றுக்கு 90 வீதம் அழிந்து போயிருப்பதோடு பவளப்பாறைகளில் நூற்றுக்கு 50 வீதம் அழிவுற்றிருப்பதால் நாம் மீண்டும் நிரப்ப முடியுமான அளவை விடவும் மிக அதிகமான அளவு சமுத்திரத்தில் இருந்து பெற்றுக்கொள்கிறோம். சமுத்திரத்துடன் புதிய சமநிலைப் போக்கு ஒன்றை ஏற்படுத்துவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதோடு அது தொடர்ந்து தனது வெகுமதிகளை குறைக்காதபோதும் அதற்கு பதில் அதன் பீடையை மாத்திரம் மாற்றி புத்துயிர் தருகிறது.

சமுத்திரத்தை பாதுகாப்பதற்கு எமது ஒத்துழைப்பு தேவையான காலம் ஒன்றாக குறிப்பிடவும் முடியும். முறையான அவதானிப்பு, வலுவான சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் செயற்பாடுகள் அதற்கு உதவுகிறது.

* சமுத்திரம் தொடர்பிலான செயற்பாடுகளுக்கு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் ஆரம்பத்தைப் பற்றி ஞாபகமூட்டினால்

முதலில் கடற்றொழில் அமைச்சின் கீழ், 1963 ஆம் ஆண்டில் தேசிய கடற்றொழில் மற்றும் பயிற்சி நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 1996 இன் 36 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடற்படை பொறியியல் சட்டத்தின் கீழ் தேசிய கடற்றொழில் மற்றும் கடற்படை பொறியியல் நிறுவனமாக அமைக்கப்பட்டது. அந்த நிறுவனம் தான் 2014 இன் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றாக மாற்றப்பட்டது. பல்கலைக்கழகம் ஒன்றாக 2015 ஜூலை மாதத்தில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. சமுத்திர பல்கலைக்கழகம் என்ற சொல்லாடலுக்கு விரிவான அர்த்தம் ஒன்று உள்ளது. தேசிய கடற்றொழில் மற்றும் கடற்படை பொறியியல் நிறுவனம் என்று குறிப்பிட்டால், அதில் கடற்றொழில் செயற்பாடுகள் மற்றும் கடற்படை பொறியியல் செயற்பாடுகள் இடம்பெறுகிறது என்ற வகையில் அர்த்தப்படுகிறது. அதனை விடவும் விரிவான நிலைக்கு செல்வதற்கே இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் என்பது ஆரம்பிக்கப்பட்டது.

* இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் இலக்கு மற்றும் பணிகள் தொடர்பில் குறிப்பிடுவதாயின்

இதன் இலக்காக இலங்கை கடற்றொழில், சமுத்திரம் மற்றும் கடல்சார் துறைகளில் மனித சக்தியின் தேவையை பூர்த்தி செய்வது பிரதானமாக குறிப்பிட முடியும். அதேபோன்று கடற்றொழில், சமுத்திர அறிவியல் ரீதியான கடல்சார் தொழில்நுட்பம் என்ற துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களின் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தேர்ச்சியை மேம்படுத்தல். அதேபோன்று பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளும் சான்றிதழ் ஒன்றுக்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் ஒன்று உள்ளது. கடற்றொழில், கடல்சார், சமுத்திரம் என்ற துறைகளில் பெறும் சான்றிதழ் ஒன்றுக்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதும் ஓர் இலக்காக உள்ளது. அதேபோன்று கடற்றொழில் துறையைச் சேர்ந்த குடும்பங்களில் இருக்கின்ற பிள்ளைகள் கற்கின்றனர். அவ்வாறு கற்பவர்களுக்கு தமது உயர் கல்வியை மேற்கொள்வது பொதுவாக மற்ற பல்கலைக்கழகங்களில் கடினமானது. ஆனால் சமுத்திர பல்கலைக்கழகத்தில் உள்ளது. தொழில் பயிற்சி கற்கை (NVQ) ஒன்றை கற்ற பின் அந்த சான்றிதழை பெற்றும் வர முடியும். தற்போது இரண்டு பட்டப்படிப்பு கற்கைகள் உள்ளன. அதன் மூலமும் அவர்களுக்கு தமது கல்விக் கனவை எட்டுவதற்கு முடியுமாக உள்ளது.

* இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் தொடர்பில் இளைஞர், யுவதிகளிடையே அறிவு குறைவாக இருப்பது மற்றும் ஊடகங்கள் மூலம் வெளிவராது இருப்பதற்கு தாக்கம் செலுத்தும் காரணம் என்ன?

பெரும்பாலும் இது தேசிய பல்கலைக்கழகம் ஒன்றாக இருப்பதால் தனியார் துறைக்கு பெருமளவு பிரசாரங்களை மேற்கொள்ள முடியும். ஆனால் அரச பல்கலைக்கழகம் ஒன்றாக இருப்பதால் அதன் பிரசார செயற்பாடுகளில் குறைவை காண்கிறோம். ஒரு வகையில் பிரசார செயற்பாடுகளை அதிகரிக்க வேண்டி உள்ளது. சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றாக்குவது தான் எமது இலக்காகும். அதேபோன்று சமுத்திரத்தில் இருக்கின்ற வளங்களை இன்னும் நாம் முறையான வகையில் புரிந்துகொள்ளவில்லை. நீலப் பசுமைப் பொருளாதாரம் ஒன்றுக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்குவது அதன் அடிப்படை நோக்கமாகும்.

**நெத்மி பூஜனி ரத்னாயக்க**


Ocean University of Sri Lanka
கல்வி அமைச்சு
முழுமையான அரச பல்கலைக்கழகம்

2024/2025 கல்வி ஆண்டுக்காக விண்ணப்பங்களை அழைத்தல்



முடிவுறுத்தல் திகதி: 2024-07-31

எப்படி விண்ணப்பிப்பது:

இந்த நிகழ்நிலை (online) விண்ணப்பத்தைத் தொடர விண்ணப்பதாரருக்கு மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்கள் நிகழ்நிலை (online) முறை ஊடாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
https://emis.ocu.ac.lk/app/applicationform_OCU.php

எம்முடன் தொடர்புகொள்ளவும்:

உதவிப் பதிவாளர் (மாணவர் விவகாரங்கள் பிரிவு) +94 71 173 0540
கல்விசார் பணியாளர்: https://ocu.ac.lk/academic_staff/#
IT உதவி (Whatsapp மட்டும்): +94 71 190 1970

www.ocu.ac.lk

காக்கைத் தீவு, மட்டக்குளி, கொழும்பு-15.

FACULTY OF FISHERIES AND OCEAN SCIENCES

கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி BSc (General / Hons.)

மாணவர்கள் சராசரி Z-புள்ளி தர வரிசை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் பட்டப் படிப்பிற்கு தகுதிகாண் பரீட்சை நடாத்தப்படும். சிறப்பாக செயற்படும் மாணவர்கள் சிறப்புப் பட்டத்திற்கு தெரிவு செய்யப்படுவர்

அனுமதிக்கான தகைமைகள்:
க.பொ.த (உ/த) 2023(2024) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் மூன்று முயற்சிகளுக்குள் உயிரியல் விஞ்ஞானம் / விவசாய பாடப்பரப்பில்.

சமுத்திரவியலில் விஞ்ஞான இளமாணி BSc (General / Hons.)

மாணவர்கள் சராசரி Z-புள்ளி தர வரிசை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

அனுமதிக்கான தகைமைகள்:
க.பொ.த (உ/த) 2023(2024) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் மூன்று முயற்சிகளுக்குள் பௌதிகவியல் / உயிரியல் விஞ்ஞானம் பாடப்பரப்பில், பௌதிகவியல் அல்லது கணிதத்தை பாடமாகக் கொண்ட வேறு ஏதாவது பாடப்பரப்புகளில்.

விவசாயம் மற்றும் கடல் உணவு தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி (B.Tech)

பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையின் ஊடாக விவசாயம் மற்றும் கடல் உணவு தொழில்நுட்ப பொதுப் பட்டத்திற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.
அனுமதிக்கான தகைமைகள்:
தொடர்புடைய தொழில்நுட்பவியல் பாடப்பரப்பில் (விவசாயம், உணவு தொழில்நுட்பம்) தேசிய தொழிற்றிறனில் (NVQ) 5ஆம் நிலை அல்லது அதற்கு மேல் அல்லது க.பொ.த (உ/த) 2023(2024) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் மூன்று முயற்சிகளுக்குள் உயிரியல் பாடப்பரப்பில் தொழில்நுட்பவியல் / உயிரியல் விஞ்ஞானம் பாடப்பரப்புகள்.

FACULTY OF ENGINEERING AND MANAGEMENT

கடல்சார் பொறியியலில் விஞ்ஞான இளமாணி BSc (Hons.)

மாணவர்கள் சராசரி Z-புள்ளி தர வரிசை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். சேர்த்துக்கொள்ளப்படும் சகல மாணவர்களும் நுழைவிற்கான கட்டாயத் தேவையாக பல்கலைகக்ழகத்தில் பதிவு செய்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டதன் பின் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசீலனை அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.
அனுமதிக்கான தகைமைகள்:
க.பொ.த (உ/த) 2023(2024) பரீட்சையில் ஒரே அமர்வில் (கணிதம், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் உட்பட) குறைந்தபட்சம் இரண்டு "C" மற்றும் ஒரு "S" சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் மூன்று முயற்சிகளுக்குள் பௌதிகவியல் பாடப்பரப்பில்.

கடல்வழி போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் பண்டகசாலை விஞ்ஞான இளமாணி BSc (General / Hons.)

தகுதிகாண் பரீட்சையின் ஊடாக கடல்வழி போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் பண்டகசாலை பட்டத்திற்கான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

அனுமதிக்கான தகைமைகள்:
க.பொ.த (உ/த) 2023(2024) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் மூன்று முயற்சிகளுக்குள் ஏதாவது பாடப்பரப்பில்,

கடற்கரை மற்றும் கடல் வளங்கள் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி BSc (General / Hons.)

கடற்கரை மற்றும் கடல் வளங்கள் முகாமைத்துவ பட்டத்திற்கு தகுதிகாண் பரீட்சையின் ஊடாக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். மூன்று வருட பொதுப் பட்டப் படிப்பில் சிறப்பாக செயற்படும் மாணவர்கள் சிறப்புப் பட்டத்திற்கு (Honors Degree) தெரிவு செய்யப்படுவர்.

அனுமதிக்கான தகைமைகள்:
க.பொ.த (உ/த) 2023(2024) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் மூன்று முயற்சிகளுக்குள் ஏதாவது பாடப்பரப்பில்



# கொலன்னாவையைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணிலின் புதிய திட்டம்

## முல்லேரியா மற்றும் IDH வைத்தியசாலைகளை வேறு இடத்திற்கு மாற்றவும் பணிப்புரை

தென்மேற்கு பருவமழை தொடங்கியதன் பின்னர், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை அறிவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 3ஆம் திகதி காலை கொலன்னாவ, களனி மற்றும் அம்பத்தளை ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டார். அதன் பின்னர், கொலன்னாவ சேதவத்தை வெஹரகொட ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஜனாதிபதி, இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அம்பத்தளை கல்வான புராண ரஜமஹா விகாரை, கொலன்னாவ டெரன்ஸ் எஸ்.சில்வா வித்தியாலயம் மற்றும் வெல்லம்பிட்டி காமினி வித்தியாலயம் ஆகிய பாதுகாப்பு நிலையங்களுக்குச் சென்று மக்களிடம் நலம் விசாரித்தார். இதன்போது பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை ஆராய்ந்து, அவற்றை தொடர்ச்சியாக வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கொலன்னாவ பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றிரவு முதலே சமைத்த உணவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொலன்னாவ பிரதேச செயலாளருக்கு பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, அந்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் ஆகியன இணைந்து நிரந்தர வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குழாய்களைப் பயன்படுத்தி வெள்ள நீரை வேகமான வெளியேற்றி மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். அத்துடன் இந்தப் பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்படும் அகழ்வுகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், முல்லேரியா மற்றும் IDH வைத்தியசாலைகளை வேறு இடத்திற்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். சீரற்ற காலநிலையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கொழும்பு, கொலன்னாவ மற்றும் நாட்டின் ஏனைய பிரதேச மக்களுக்கு உணவுகள் வழங்கல் மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை விசாரிப்பதற்காக ஜனாதிபதி மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போது பிரதேசவாசிகள் மற்றும் அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். நீண்ட காலமாக இருந்தே கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் திடீர் கால நிலையினால் ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், கொழும்பு, கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவினுள் களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணப் பணிகளுக்கு அனுமதி வழங்காதிருத்தல், அனைத்து அனுமதியற்ற நிர்மாணங்களையும் அகற்றுதல், தற்போது மேற்கொள்ளப்படும் நில அகழ்வுப் பணிகளை நிறுத்துதல், வடிகால் அமைப்பு கட்டமைப்புக்களை புனரமைத்தல் மற்றும் எந்த ஒரு உடனடி திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கும் முடியுமான வகையில் தற்போதுள்ள நீர் இறைக்கும் நிலையங்களின் தற்போதைய நிலையை மதிப்பிடுவது உள்ளிட்ட துரித நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுவதற்கும் அமைச்சரவையினால் கொலன்னாவ பிரதேச செயலக அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் கொழும்பில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான மூல காரணங்களை இனங்கண்டு எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாதவாறு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரை செய்வதற்கும், கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் நிலங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் கொலன்னாவ நகரை மீண்டும் திட்டமிடுவதற்கான விரிவான அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்வதற்குமாக கொழும்பு மாவட்ட செயலாளர் தலைமையில் சம்பந்தப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், இந்தக் குழுவின் அறிக்கையை உரிய பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கக் கூடியவாறு ஒரு மாத காலத்துக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுவதற்கு அமைச்சரவையினால் கொழும்பு மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதற்காக உரிய பரிந்துரைகளும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளன. மேலும் கொலன்னாவ பிரதேச செயலகத்திற்கான விரிவான அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், கொலன்னாவ நகரத்தை மறுசீரமைத்தல் மற்றும் காணி பயன்பாட்டை மேம்படுத்துவதற்காகவும் அமைச்சரவை பரிந்துரை செய்துள்ளது.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை உரிய மாவட்ட செயலாளர்களுக்கு உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதுடன் அதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது,

“கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற அனர்த்த நிலையின் காரணமாக 71 வீடுகள் முழுமையாகவும், 9177 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 821 நடுத்தர வணிகங்கள் மற்றும் 63 உட்கட்டமைப்பு வசதிகளும் சேதமடைந்துள்ளன. மலைப் பகுகளுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள பெரும்பாலான வீடுகளுக்கு உரிய அனுமதி பெறப்படவில்லை. இந்த வீடுகள் சட்டரீதியற்ற நிர்மாணங்களின் கீழே அடங்குகின்றன. 15,000 வீடுகளை நிர்மாணிக்க வேண்டும். சிலர் இந்த வீடுகளைப் பெற்றுக் கொண்டும் பழைய வீடுகளிலேயே வசிக்கின்றனர். அவ்வாறு செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் நிவாரணங்களை வழங்கும்போது, இந்த சட்டரீதியற்ற கட்டுமானங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்.

மே மாதம் 15ஆம் திகதியிலிருந்து ஜூன் 05ம் திகதி வரைக்கும் 30 மரணங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாறு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் இழப்பீடு தற்போது வழங்கப்பட்டுள்ளன. இன்னும் இழப்பீட்டுத் தொகையினை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்படவுள்ள இழப்பீட்டுத் தொகையின் மொத்த அளவு கணக்கிடப்பட்டு வருவதால் அந்த தொகை எவ்வளவு என்பதை இப்போதைக்குக் கூற முடியாதுள்ளது.

இது தொடர்பான விசேட அமைச்சரவைப் பத்திரம் ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் திறைசேரியிலிருந்து மேலதிக ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சுற்றுநிருபத்தின் ஊடாக அன்றாடம் சமைத்த உணவுக்காக வழங்கப்படும் நிதி 33 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு உணவு வழங்கும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. முன்னர் அனர்த்த நிலையங்களில் தங்கியிருப்பவர்களுக்கு மாத்திரமே உணவு வழங்கப்பட்ட போதிலும், பின்னர் வீடுகளின் மேல் மாடிகளில் சிக்கியிருப்பவர்களுக்கு அவ்வீடுகளுக்கே சென்று உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. எந்த தடைகள் வந்தாலும், இந்நாட்டினுள் வெள்ள நிலைமைகளைத் தடுப்பதற்கு, தேவையான தீர்மானங்களை மேற்கொண்டு அரசாங்கம் அதனை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து வருகிறது” என்றும் அவர் சுட்டிக்காட்டினார். தற்போதைய அனர்த்தத்தின் காரணமாக முற்றாக சேதமடைந்துள்ள அனைத்து வீடுகளையும் அரச நிதியில், முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பங்களிப்புடன் அடுத்த 02 மாதங்களுக்குள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் இது தொடர்பான விரிவான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்போது, பொது நிர்வாக அமைச்சு, பாதுகாப்பு அமைச்சுடன் முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்ட செயலகங்கள், பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களின் அத்தியாவசிய உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் தலைமையிலான பிரதேச அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

*ரசிக கொட்டுதுரகே*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*





பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# இஸ்ரேலின் போர்நிறுத்த உடன்பாடு: போரை நீடிப்பதற்கான நகர்வா?

இஸ்ரேல் காஸா போரை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேல் விரிவான திட்டத்தை முன்மொழிந்துள்ளதாக அறிவித்துள்ளமை அதிகம் கவனத்தைப் பெறுகின்ற விடயமாக இருந்தது. ஆனாலும் போர்நிறுத்தத்துக்கான வாய்ப்பு தென்படாத சூழலில் போர் நீடித்துக் கொண்டிருக்கின்றது. பாலஸ்தீனர் மீதான தாக்குதல் தீவிரமடைந்துள்ளதுடன் இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ் அமைப்பினைத் தேடியழிப்பதில் முனைப்புக் காட்டுகின்றது. அதேநேரம் இஸ்ரேல் இராணும் மீதான தாக்குதலை ஹமாஸ் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் இஸ்ரேலிய இராணுவத்தினரை ஹமாஸ் கைது செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. இஸ்ரேலின் விமானத்தாக்குதலில் பாலஸ்தீனப் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் அதிகளவில் கொல்லப்படுவதையும் பாலஸ்தீன சுகாதாரப் பிரிவினர் உறுதிப்படுத்தியுள்ளனர். அப்படியாயின் இஸ்ரேலின் போர்நிறுத்தம் பற்றிய திட்டம் எதற்கானது என்ற கேள்வி இயல்பானது. இது அதற்கான பதிலைத் தேடமுயலும் கட்டுரையாக உள்ளது.

முதலில் போர்நிறுத்தம் பற்றி இஸ்ரேல் முன்மொழிந்ததாக அமெரிக்க ஜனாதிபதி வெளிப்படுத்திய உடன்பாட்டை நோக்குவோம். இஸ்ரேல் ஹமாஸ் போர்நிறுத்தம் மூன்று கட்டங்களைக் கொண்டது. ஆறுவாரங்களைக் கொண்ட முதல் கட்டம் முழுமையான போர்நிறுத்தமாக அமையும். அதன் பிரகாரம் காஸா முனையில் மக்கள் அதிகமுள்ள பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் பின்வாங்கும். ஹமாஸ் ஆயுதப்படைகள் தங்கள் பிடியிலிருந்த பணயக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். இதற்கு பதிலாக இஸ்ரேலிய சிறையிலுள்ள பாலஸ்தீனக் கைதிகள் நூற்றுக்கணக்கானவர்கள் விடுதலை செய்யப்படுவர். முதலாவது கட்டத்தில் ஹமாஸ், அமெரிக்க பணயக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். வடக்கு காஸா உட்பட காஸாவின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள மக்கள் தங்கள் குடியிருப்புகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். காஸாவிற்குள் மனிதாபிமான உதவிப்பொருட்களை கொண்டு செல்லும் வாகனத் தொடரணியின் எண்ணிக்கையை 600ஆக அதிகரிப்பதெனவும் குறிப்பிட்டுள்ளது.

இரண்டாவது கட்டம், ஆறுவாரங்களுக்குப் பின்னர் போர்நிறுத்த ஒப்பந்தங்களை இஸ்ரேல் ஹமாஸ் மேற்கொள்ளும். இதற்குள் இருதரப்பின் நிரந்தர போர்நிறுத்த ஒப்பந்தமும் உள்ளடங்கும். இரண்டாம் கட்டத்தில் பேச்சுவார்த்தை நீடித்தாலும் போர்நிறுத்தம் தொடரும். இதன்போது பாலஸ்தீனக் கைதிகள் விடுதலைக்கு மாற்றாக, ஹமாஸ் பிடியிலுள்ள இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் உட்பட அனைத்துப் பணயக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். இதன் பின்னர் இஸ்ரேலிய படைகள் காஸாவிலிருந்து வெளியேறும். இதில் ஹமாஸ் உறுதியாக ஒத்துழைத்தால் தற்காலிகப் போர்நிறுத்தம் நிரந்தரப் போர்நிறுத்தமாக மாற்றமுறும்.

மூன்றாவது கட்டம், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் காஸாவை மீண்டும் கட்டமைக்க திட்டங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். இந்த திட்டங்களில் ஹமாஸ் ஆயுதப்படையினர், தங்கள் பிடியில் உயிரிழந்த பணயக் கைதிகளின் சடலங்களை இஸ்ரேலிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதனை வெளிப்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி போர்நிறுத்தம் ஏற்பட வேண்டுமாயின் இந்த சந்தர்ப்பத்தை ஹமாஸ் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். இஸ்ரேலால் முன்மொழியப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டுத் திட்டம் கட்டார் மூலம் ஹமாஸின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதற்கான சாதகமான பதிலை ஹமாஸ் வெளிப்படுத்தியதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் ஹமாஸ் எந்தவித பதிலையும் வெளியிடவில்லை என கட்டார் வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது. இவ்வரைபை வரவேற்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் அந்தோனியோ குட்றஸ், யுத்த நிறுத்தம் உடனடியாக அமுலாக்கத்துக்கு வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேநேரம் ஹமாஸ் அழிக்கப்படுவதற்கு முன்னர் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்க முடியாது எனவும் அதனை எதிர்ப்பதாகவும் இஸ்ரேலிய நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோர்ரிச் மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இட்டமர் பென் கிவிர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். போர்நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேலிய பிரதமர் ஆதரிப்பாராயின் ஆளும் வலதுசாரி கூட்டணி அரசாங்கத்தை கலைக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதேநேரம் இஸ்ரேலியப் பிரதமர் போர்நிறுத்தத்தை ஆதரித்தால் அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதாக இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய போர்நிறுத்தத் திட்டத்தை முன்வைத்த இஸ்ரேல் தொடர்ச்சியாக தாக்குதலை காஸாவுக்குள்ளும் லெபனான் எல்லை நகரங்களிலும் மேற்கொண்டுவருகிறது. இதற்கான காரணங்களை தெரிந்து கொள்வது அவசியமானது. ஒன்று, ஹமாஸ், இஸ்ரேல் முன்மொழிந்த போர்நிறுத்த உடன்பாட்டை முழுமையாக ஏற்றுக் கொண்டதாக கருத்துத் தெரிவிக்கவில்லை என்பது பிரதான காரணமாக அமைய வாய்ப்புள்ளது. ஆனால் ஹமாஸ் இத்திட்டத்தை மேற்குறித்த வடிவில் ஏற்காமல் இருப்பதற்கு வலுவான காரணம் எதுவும் இல்லை என்ற விவாதம் நிகழுகிறது. ஆனால் அத்தகைய போர்நிறுத்த உடன்பாட்டில் ஹமாஸை அழித்தல் என்பது காணப்படுவதாகவும் அதுவே ஹமாஸ் இதற்கு முழுமையான கருத்தை வெளியிடாமைக்கு காரணம் எனவும் பிபிசி குறிப்பிடுகிறது.



இரண்டு, இஸ்ரேலிய பிரதமர் இத்திட்டத்தை முன்மொழியும் போது, இஸ்ரேலிய நிதியமைச்சரும், பாதுகாப்பு அமைச்சரும் எத்தகைய கருத்துநிலையைக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிந்து கொள்ளப்படாது, நெதன்யாகு இவ்வுடன்பாட்டை வெளிப்படுத்தியது உண்மையானதாக அமையுமா? அப்படியாயின் இத்தகைய போர்நிறுத்த உடன்பாடு போலியான உரையாடலாக மட்டுமே பார்க்கப்பட வேண்டியதென்றா என்பது தவிர்க்க முடியாத கேள்வியாகும். காரணம் நெதன்யாகு அரசாங்கம் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணை வலுவான விடயமாக மாறுகின்றது. அதற்கு ஆதரவாக மேற்குலக நாடுகளும் களமிறங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஐ.நா.வை திருப்திப்படுத்துவதற்கும் நெதன்யாகு முயன்றுள்ளதாகவே தெரிகிறது. அதனையே அமெரிக்காவும் விரும்புகிறது. தற்போதைய சூழலை சரியான முறையில் கையாளுவதே போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையாக உள்ளது.

மூன்று, கடந்தகாலம் முழுவதும் (1947முதல்) இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் உலகத்தாலும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையாலும் முன்வைக்கப்பட்ட அனைத்து சமாதான உடன்பாடுகளையும் திட்டங்களையும் நிராகரித்தது மட்டுமல்லாது ஏற்றுக்கொண்ட திட்டங்கள் எதனையும் அமுல்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இஸ்ரேலிய பலஸ்தீன பாகப்பிரிவினைத் திட்டத்தை ஐ.நா. முன்வைத்த போது, அதனை நிராகரித்ததுடன் பாலஸ்தீன மக்களின் வாழ்விடத்தை யூதக் குடியேற்றத்தால் அழித்தொழித்தவர்கள் அவர்கள். அதுவே தற்போதுவரை நிலவும் முரண்பாட்டுக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளது. அதன் பின்னர் காஸா ஜெரீக்கோ உடன்பாடு, வைநதி உடன்பாடு, இருநாட்டுத் தீர்வுத்திட்டம், என பலதிட்டங்களில் இஸ்ரேல் கையெழுத்திட்ட போதும் நடைமுறையில் எதனையும் யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பல திட்டங்களை அவர்களே முன்மொழிந்தார்கள் பின்னர் அவர்களே அவற்றைக் கிழித்தெறிந்தார்கள். யூதர்களைப் பொறுத்தவரை பாலஸ்தீனர்களை முற்றாகவே அழித்தொழித்துவிட்டு அப்பிரதேசத்தை யூதர்களின் பிரதேசமாக மாற்றும்வரை போரை நிகழ்த்திக் கொண்டு சமாதானத்தை தற்காலிக தந்திரோபாயமாகவே கையாளுவார்கள். அதனையே நெதன்யாகு அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு மீண்டும் ஒரு ஏமாற்றுத்தனமான போர்நிறுத்த உடன்பாட்டை பற்றி உரையாடியுள்ளார். இதனால் எத்தகைய மாற்றமும் காஸாப் பகுதியில் நிகழப் போவதில்லை. மாறாக இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் நகர்வுகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தற்காலிக தீர்வு சாத்தியமாகும்.

நான்கு, இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு நீண்ட ஆட்சியை மேற்கொண்டிருப்பவர். அவர் தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்கே போரைத் தொடங்கியதாக அவர்மீது விமர்சனங்கள் உண்டு. அத்தகைய விமர்சனங்களுக்கு நெதன்யாகுவுக்கு எதிராக நிகழும் யூதர்களின் போராட்டங்கள் ஆதாரமானவை. அதனால் அவர் ஆட்சியைத் தக்கவைப்பதற்கும் நெருக்கடியைக் கடப்பதற்கும் எடுத்த நகர்வாகவே போர்நிறுத்த உடன்பாடு பற்றிய விடயம் நோக்கப்பட வேண்டியுள்ளது. தனது ஆட்சியை தக்கவைக்க எடுத்த போரை பின்வாங்க முடியாத நிலையில் ஆட்சி அதிகாரத்தின் மீதான பிடியை பாதுகாத்துள்ளார். அதனாலேயே ஆட்சிக் கவிழ்ப்பு என்ற உத்திக்குள் அவரது போர்நிறுத்த உடன்பாடு அகப்பட்டுள்ளது.

ஐந்து, முழுமையான திட்டமிடலின்றி ஹமாஸ் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு செவிசாய்க்கவில்லை என்ற அடிப்படையில் போரை நகர்த்தும் முயற்சியாகவே போர்நிறுத்த உடன்பாடு காணப்படுகிறது. காரணம் போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள உள்ளடக்கங்கள் அனைத்துமே, இஸ்ரேலிய பாதுகாப்பை மையமாகக் கொண்டிருப்பதோடு போர்நிறுத்தத்தை மீறுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் அதன் உள்ளடக்கம் கொண்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இஸ்ரேல் தான் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து தனது இராணுவம் வெளியேறும் என்றோ ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதென்ற விடயத்தை கைவிட்டதாகவோ தெரியப்படுத்தவில்லை. ஆனால் ஹமாஸ் உடன் உடன்பாடு மேற்கொள்ள திட்டமிடுவதென்பது அதனை அழிப்பதற்கானதென்றும் புரிந்து கொள்ள முடியும். பணயக் கைதிகளை மீட்டெடுப்பதே பிரதான நோக்கமாக தெரிகிறது. அதனை இதுவரை எட்டமுடியாதுள்ளது என்பதற்காக அதனை இஸ்ரேலிய புலனாய்வு எட்டாது என்ற முடிவுக்கும் வரமுடியாது. ஆதலால் ஹமாஸை நெருங்குவதென்பது அதனை சரிசெய்வதற்கான உத்தியாகவே உள்ளது. போரியலில் ஒருவடிவமாக அணைத்து அழிப்பது உலகளாவிய ஆதிக்க சக்திகளின் உத்தியாகவுள்ளது. அதனையே உடன்பாட்டின் உள்ளடக்கம் அதிகம் கொண்டுள்ளது.

எனவே போர்நிறுத்த உடன்பாட்டுக்கான இஸ்ரேலியஅமெரிக்கக் கூட்டின் உத்தியானது, நெதன்யாகுவின் ஆட்சியை பாதுகாப்பதற்கும், போரை நீடிப்பதற்குமான அடிப்படையாகவே உள்ளது. போர் நீடிப்பானது இஸ்ரேலின் விஸ்தரிப்புத் திட்டமிடலாகவே உள்ளது. முழுமையாக ஹமாஸை அழித்தல் என்பது, முழுமையாக பாலஸ்தீனர்களை அழிப்பதாகவே உள்ளது. அதேநேரம் ஹமாஸ் போரை எதிர்கொள்வதும் மறுபக்கத்தில் போர்நீடிப்புக்கான வழிமுறையாகவே தெரிகிறது. அதனால் போர்நிறுத்த உடன்பாடு போரை நீடிப்பதற்கான நகர்வாகவே தெரிகிறது. உலகிலுள்ள அனேக சமாதான உடன்பாடுகள் போரை எதிர்கொள்வதற்கான முனைப்பாகவே அமைந்துள்ளன. அந்த வரைவுக்குள்ளேயே இஸ்ரேலின் போர்நிறுத்த திட்டம் காணப்படுகிறது.

# உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் இலங்கை வானொலி

## 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியின் மீள்அறிமுகம்

இலங்கையின் ஒலிபரப்புச் சேவை நூற்றாண்டு வரலாற்றை சந்திக்கவிருப்பது வானொலி நேயர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சிதரும் விஷயமாகும். அந்தவகையில், ஒலிபரப்புச் சேவையுடன் இணைந்து தோற்றம்பெற்ற தாய் வானொலியாகப் போற்றப்படும் இலங்கை வானொலி இன்னும் ஆறு மாதங்களில், அதாவது எதிர்வரும் டிசம்பர் மாதம் 16ஆம் திகதியன்று தனது வரலாற்றுப் பாதையில் 99 வருடங்களை நிறைவு செய்து நூறாவது ஆண்டில் கால்பதிக்கிறது.

தென்கிழக்கு ஆசியாவிலேயே முதன் முதலாக ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்த பெருமைக்குரியது இலங்கை வானொலி. தேசிய சேவை, வர்த்தக சேவை, கல்விச் சேவை முதலான பல்வேறு சேவைகளாக வகைப்படுத்தி, மும்மொழிகளிலும் ஒலிபரப்பை முன்னெடுத்து வரும் இலங்கை வானொலி, செய்தியறிக்கை, நேயர்களுக்கான அறிவூட்டல் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கியதாக பல நிகழ்ச்சிகளை காலத்துக்குக் காலம் அறிமுகம் செய்து வழங்கி வருவதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இந்தவகையில் இலங்கை வானொலி தமிழ் தேசிய சேவையின் பழம்பெரும் நிகழ்ச்சிகளுள் ஒன்றான 'வாரம் ஒரு வலம்' இம்மாதம் (ஜூன்) முதலாம் திகதியிலிருந்து மீள்அறிமுகமாக ஒலிபரப்பாகி வருகிறது. மூத்த ஒலிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா நிகழ்ச்சியை தயாரித்து தொகுத்து வழங்கி வருகிறார். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 7.00 மணி முதல் 8.00 மணிவரை இந்த நிகழ்ச்சி இடம்பெறுகிறது. இதனை வெறுமனே ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி என்றோ அல்லது நேரத்தை நிரப்பும் நிகழ்ச்சியாகவோ சொல்லிவிட முடியாது. இலங்கை வானொலி வழங்கும் தனித்துவமான நிகழ்ச்சியாகவே இதனை குறிப்பிடவேண்டும். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் பெரும் வரலாற்றுச் சிறப்பொன்று இருக்கிறது.

நேயர்கள் கடிதங்கள் வாயிலாக வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வந்த அன்றைய நிலை சற்று மாற்றமும் வளர்ச்சியுமடைந்து, தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு, எந்தவொரு நிகழ்ச்சியிலும் குரல் மூலம் நேரடியாகக் கலந்து கொள்ளும் நிலை உருவானது. இதுவே நவீன தொழில்நுட்ப வசதியுடன் இணைந்த *Phone in programme* என்பதாக தோற்றம் பெற்றது. இந்தப் புதிய தொழில்நுட்பத்துடன் அமைந்த இன்றைய வானொலி நிகழ்ச்சிகளுக்கு முன்னோடியாக அமைந்ததுதான் இந்த 'வாரம் ஒரு வலம்'. இலங்கையில் தனியார் வானொலிகள் தோற்றம் பெறாத காலப்பகுதியில், அதாவது 1992 ஜூலை மாதத்தில் இலங்கை வானொலி தேசிய சேவையில் இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

ஒலிபரப்பு வரலாற்றிலே சிறப்புமிக்கதாக குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்ற அன்றைய 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியானது, இப்போது சகல வானொலிகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் வெறுமனே திரைப்படப் பாடல்களை விரும்பிக் கேட்கும் ஒரு நேரடி நிகழ்ச்சியாக இருந்திருக்கலாம் என சமகால நேயர்கள் நினைக்கக்கூடும். அது முற்றிலும் தவறானது.


அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா

அன்றைய காலப்பகுதியில் இலங்கை வானொலியில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஒலிபரப்பாளர் எஸ். எழில்வேந்தன் 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியை அறிமுகம் செய்தார். 1989ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள 'பொதுநலவாய நாடுகள் நட்புறவு நிதியம்' என்ற அமைப்பு ஒலிபரப்புத்துறையில் முத்திரை பதித்தவர்களை அழைத்து, அங்குள்ள தொலைக்காட்சி,


ஹட்சன் சமரசிங்க
( தலைவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)

வானொலி நிலையங்களுக்குச் சென்று ஒலிபரப்பு, ஒலிபரப்பு தொடர்பான தகவல்களையும், நுட்பங்களையும் அறிந்து கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது. அவர்களுள் ஒருவராக இலங்கை வானொலியிலிருந்து லண்டன் சென்றிருந்த எஸ். எழில்வேந்தன் அங்கு பார்த்து கற்றறிந்த விஷயங்களின் வெளிப்பாடுதான் இந்த நிகழ்ச்சியின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது.

வாரம் ஒரு வலம் நிகழ்ச்சி ஆரம்பத்தில் சனிக்கிழமைகளில் காலை மணி 8.05 முதல் 8.30 வரை ஒலிபரப்பாகி வந்தது. 1996 ஜனவரி 15ஆம் திகதியிலிருந்து ஞாயிற்றுக்கிழமைகளில் காலை மணி 7.10 முதல் 8.00 மணிவரை ஒலிபரப்பாகத் தொடங்கியது. இந்த நிகழ்ச்சியை எஸ். எழில்வேந்தன் அறிமுகம் செய்த நாளிலிருந்து நான்கு வருடங்களுக்கும் மேலாக, அதாவது 1996ஆம் ஆண்டு இறுதிப் பகுதிவரை தொகுத்து வழங்கியிருப்பது சிறப்புக்குரியது.

எஸ். எழில்வேந்தனுக்குப் பின்னர் மயில்வாகனம் சர்வானந்தா இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். அதேவேளையில் அறிவிப்பாளர் குணராசாவும் நிகழ்ச்சித் தொகுப்புக்கு இடையிடையே உதவி வந்துள்ளார். 1997ஆம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து இளையதம்பி தயானந்தா 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வந்தார். இணைத் தொகுப்பாளராகவிருந்த முருகேசு ரவீந்திரன், தொகுப்பாளரான தயானந்தா இல்லாதவேளைகளில் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியிருக்கிறார். தயானந்தா தொகுப்பாளராகவிருந்த காலத்தில் அறிவிப்பாளர் அகமட் எம். நசீர் இந்த நிகழ்ச்சித் தொகுப்புக்கு பெரிதும் உதவி வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் சமகாலத் தகவல்கள், அந்தந்தப் பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகள், பொதுமக்களின் தேவைகள் என்பனவற்றை உடனுக்குடன் நேரடியாக அறிந்து கொள்வதுடன், அது தொடர்பாக உடனடியாகவே வானொலி நிலையத்திலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, அத்தகைய குறைபாடுகளுக்கு தீர்வு அல்லது தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதே இந்த வாரம் ஒரு வலம் நிகழ்ச்சியாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சர்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டு, தேவையான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

2002 மார்ச் மாதத்திலிருந்து வாரம் ஒரு தொகுப்பாளர் என்ற ரீதியில் இந் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் செயற்பாடு நடைமுறைக்கு வந்தது.

'வாரம் ஒரு வலம்' ஞாயிற்றுக்கிழமைகளில் ஒலிபரப்பாகி வந்தவேளையில், ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் 'நாள் மகிழ் அரங்கம்' என்ற பெயரில் மற்றுமொரு சமகால விவகார நிகழ்ச்சி 2000ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதியிலிருந்து (திங்கள் முதல் வெள்ளி வரை) ஒலிபரப்பாகத் தொடங்கியது. 2003 ஜூன் மாதத்துடன் 'வாரம் ஒரு வலம்', 'நாள் மகிழ் அரங்கம்' ஆகிய இரு நிகழ்ச்சிகளும் நிறுத்தப்பட்டன. இதற்குப் பதிலாக, இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒன்றிணைக்கப்பட்டு, மற்றொரு வடிவமாக 'விடியும் வேளை' என்ற பெயரிலான புதிய நிகழ்ச்சி 2003 ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து தேசிய சேவையில் தினமும் ஒலிபரப்பாகத் தொடங்கியது.

நீண்டகாலமாக ஒலிபரப்பாகி வந்த 'விடியும்வேளை' நிகழ்ச்சிக்குப் பதிலாக, மற்றுமொரு வடிவமாக 2022 ஒக்டோபர் 24ஆம் திகதியிலிருந்து 'காலைக் கதம்பம்' என்ற பெயரிலான நிகழ்ச்சி தேசிய சேவை, தென்றல் ஆகிய இரு சேவைகளிலும் ஏக காலத்தில் ஒலிபரப்பாகி வந்தது. 2023 ஜனவரி 2ஆம் திகதியிலிருந்து 'காலைக் கதம்பம்' தென்றல் சேவையில் மட்டும் ஒலிக்கத் தொடங்கியது. அதேநேரம் தேசிய சேவையில் கொழும்பு சர்வதேச வானொலி நிகழ்ச்சி இணைக்கப்பட்டது. இந்த வருட ஆரம்பத்தில் தென்றல் சேவையில் ஒலிபரப்பாகி வந்த 'காலைக் கதம்பம்' நிகழ்ச்சியும் நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்த நிலையிலேயே, இலங்கை வானொலி தேசிய சேவையில், அந்நாளில் வரலாற்றுச் சாதனை படைத்த 'வாரம் ஒரு வலம்' மீள் அறிமுகமாகி மாலைநேர நிகழ்ச்சியாக ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. அரச வானொலியொன்று முதன்முதலாக உலகளாவிய ரீதியில், ஒருமொழி பேசுகின்ற தனியார் வானொலிகளுடன் இணைந்து தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் நேரடி நிகழ்ச்சியாகவும் இது முக்கியத்துவம் பெறுவதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பல்வேறு சந்தர்ப்பங்களில் பதவி வகித்துள்ள இப்போதும் பணியாற்றிவரும் ஹட்சன் சமரசிங்கவின் நீண்டகால ஒலிபரப்புத்துறை மீதான ஈடுபாடும் அனுபவ முதிர்ச்சியும் காரணமாக, அவர் இத்தகையதொரு காத்திரமான நிகழ்ச்சியை தமிழ் தேசிய சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் கொண்டவராக, அதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருப்பதை இங்கு சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மூத்த ஒலிபரப்பாளர் இலங்கை வானொலியின் முன்னாள் அறிவிப்பாளர் அந்நாளில் 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியை நீண்டகாலமாக தொகுத்து வழங்கியவர் என்ற சிறப்புக்குரிய இளையதம்பி தயானந்தா மீளவும் அழைக்கப்பட்டு, மீள்அறிமுக நிகழ்ச்சியை தயாரித்து தொகுத்து வழங்கும் சந்தர்ப்பம் கையளிக்கப்பட்டிருப்பது இலங்கை வானொலி நேயர்களுக்கு பெரு மகிழ்ச்சிக்குரிய விஷயம். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவரின் விருப்பத்திற்கமைய, தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் ஆர். கணபதிப்பிள்ளை தேவையான ஒத்துழைப்பை வழங்கியிருப்பதுடன், அதற்கான நேரத்தையும் ஒதுக்கி தேசிய சேவையில் நிகழ்ச்சியை ஒலிக்கச் செய்திருக்கிறார்.


ஆர்.கணபதிப்பிள்ளை
( தமிழ்ச் சேவை பணிப்பாளர்)

2024 ஜூன் மாதம் முதலாம் திகதி. மாலைப்பொழுது மறைந்து இரவுப் பொழுது தோன்றும் நேரம். "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவை. நேரம் ஏழு மணி" என்று கம்பீரமான குரலுடன் தனது அறிவிப்பைத் தொடங்குகிறார் இளையதம்பி தயானந்தா. "வாரம் ஒரு வலம் உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் இலங்கை வானொலியின் நேரலை நிகழ்வு" என்று மகுடவாசகமாகக் குறிப்பிட்டு, "சங்ககாலத்து கணியன் பூங்குன்றனாரின் கவிவரிகளுடன் நிகழ்ச்சியை ஆரம்பிக்கிறோம்" என்று அறிவித்தார்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கவிவரிகள் ஒலித்தன. அதற்கு விளக்கமும் தந்தார் நிகழ்ச்சித் தொகுப்பாளர். யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் நவரட்ணம் பரந்தாமன் குரலில் பாடல் இடம்பெற்றது.

முதலில் இலங்கை வானொலி தமிழ்ச்சேவையின் முன்னாள் பணிப்பாளர் திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவுஸ்திரேலியா சிட்னியிலிருந்து நிகழ்ச்சிக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார். தொடர்ந்து, சென்னை பல்கலைக்கழக இதழியல், தொடர்பியல்துறை பேராசிரியர் தங்க ஜெய்சக்திவேல் வாழ்த்து தெரிவித்ததுடன், அவரது கருத்துக்கள் நேர்காணலாக அமைந்திருந்தது. "நூற்றாண்டை எட்டப்போகும் இலங்கை வானொலியுடன் தமிழக நேயர்களுக்கு நெருங்கிய தொடர்புண்டு. தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் இலங்கை வானொலி ஒலித்துக் கொண்டிருந்த பெருமை உண்டு." என்று சிறப்பாகக் குறிப்பிட்டார். இவர் சில வருடங்களுக்கு முன் 'பன்முகப் பார்வையில் இலங்கை வானொலி' என்ற நூலை வெளியிட்டு எங்கள் வானொலிக்கு பெருமை சேர்ந்தவர் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

இவரைத் தொடர்ந்து, எங்கள் தாய் வானொலி பெற்றெடுத்த புதல்வர்களான பி. விக்னேஸ்வரன், க. சிவசோதி ஆகிய இருவரும் கனடாவிலிருந்து இணைந்துகொண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

இலங்கை வானொலியில் மட்டுமன்றி, ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையின் தமிழ்ப் பிரிவுத் தலைவராகவும் பணியாற்றிய பி. விக்னேஸ்வரன் இப்போது கனடாவிலும் ஒலி / ஒளி ஊடகப் பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார். இவர் தனது வானொலி மற்றும் தொலைக்காட்சி அனுபவங்களை தொகுத்து, அண்மையில் 'நினைவு நல்லது' என்ற நூலொன்றை வெளியிட்டிருக்கிறார்.

கனடா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் க. சிவசோதி இலங்கை வானொலியின் முன்னாள் அறிவிப்பாளர். இப்போது இளையபாரதி என்ற பெயரில் கனடாவில் வானொலி சேவையை நடத்திவரும் இவர், அங்குள்ள தமிழ் நேயர்களது பேரபிமானம் பெற்றுத் திகழுகிறார்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து ஒலிக்கும் அனைத்துலக தமிழ் ஒலிபரப்பு நிலையத்தை நடத்தி வரும் எங்கள் தாயகத்தைச் சேர்ந்த எஸ். கே. ராஜென் வழங்கிய வாழ்த்துச் செய்தியில் "உலகத் தமிழ் வானொலிகள் ஒன்றிணைந்து ஒலிபரப்புச் சேவையை நடத்த வேண்டும் என மூத்த ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல்ஹமீத் அன்று விரும்பியது போலவே இப்போது வாரம் ஒரு வலம் அமைந்திருப்பது சிறப்புக்குரியது" என்று குறிப்பிட்டிருந்தார்.

நோர்வேயிலிருந்து 'றேடியோ தமிழ்' வானொலியில் தேன் தமிழ் ஓசை நிகழ்ச்சியை நடத்திவரும் ஜூலியஸ் அன்ரனி, கனடாவிலிருந்து ரைம் எப்.எம் வானொலி ஒலிபரப்பாளர் தயா கதிர்காமநாதன் ஆகியோரும் வாரம் ஒரு வலம் நிகழ்ச்சியில் தங்கள் வாழ்த்துகளை தெரிவித்திருந்தனர். இதேவேளை ஜெர்மனியிலிருந்து நேரலையாக ஐரோப்பிய தமிழ் வானொலியும் இணைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.


ஒலிபரப்புக் கலையகத்தில்

இலங்கை வானொலியில் 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சி தோற்றம் பெறுவதற்கு காரணமாகவிருந்த எஸ். எழில்வேந்தன் அவுஸ்திரேலியா சிட்னியிலிருந்து நிகழ்ச்சியில் இணைந்து கொண்டார். தனது ஒலிபரப்பு வாழ்க்கை ஆரம்பமாவதற்கு களமாகவிருந்த தாய்வீடான இலங்கை வானொலி, தான் வெளிநாடுகளில் ஒலிபரப்புத்துறை சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்ததை நன்றியுடன் நினைவுகூர்ந்தார். இங்கிலாந்தில் தான் பெற்றுக் கொண்ட பயிற்சியின்போது கற்றறிந்த விடயங்களுக்கு அமைய நிகழ்ச்சியொன்றை தயாரித்து வழங்கப்போவதாக அப்போதைய பணிப்பாளர் நாயகத்திடம் கேட்டபோது, அதற்கு அவர் அனுமதி வழங்கியதையும் எடுத்துச் சொல்லி, இன்றைய நிகழ்வை அன்றைய நாட்களுக்கு கொண்டு சென்று நினைவூட்டி மகிழ்ந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும், இப்போது லண்டனில் வாழ்ந்து வருபவருமான மு. நித்தியானந்தன் தனது வாழ்த்துச் செய்தியில் "உலகின் மூலைமுடுக்கெல்லாம் எளிதாகச் சென்றடையும் சிறப்பு வானொலிக்கு உண்டு. முன்பெல்லாம் வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றிய விமர்சனங்களையும் கருத்துக்களையும் நேயர்கள் கடிதங்கள் ஊடாக எழுதியனுப்பினர். அவ்வாறு இப்போது அனுப்புவதில்லை. நேரடியாகவே அபிப்பிராயங்களை சொல்லக்கூடியதாக நிலைமை மாறிவிட்டது" என்று தெரிவித்தார்.

தினகரன் நாளிதழ் மற்றும் தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தமிழன் நாளிதழ் ஆசிரியர் இ. சிவராஜா ஆகியோரும் நிகழ்ச்சியில் இணைந்து கொண்டு வாழ்த்துச் செய்திகளை வழங்கியதுடன், "ஒரே நேரத்தில் உலக நாடுகளை இணைத்து தகவல்களை பரிமாற்றம் செய்யக்கூடியதான இந்த நிகழ்ச்சி மிகப் பயனுள்ளதாக அமையும். நிகழ்ச்சியின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் எங்கள் நாளிதழ்கள் ஊடாக தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம்" என்று தெரிவித்தனர்.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பித்த 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சி விறுவிறுப்பாக சென்று கொண்டிருந்த நிலையில் இரவு 8.00 மணியை எட்டிப் பிடித்து விட்டதால் நிகழ்ச்சியில் இணைந்து கொள்வதற்கு காத்திருந்த ஒருசிலருக்கு சந்தர்ப்பம் கிடைக்காதது வருத்தத்திற்குரியது. அவர்கள் அனைவருக்கும் எதிர்வரும் வாரங்களில் நிச்சயமாக இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

வாரம் ஒரு வலம் நிகழ்ச்சியை தயாரித்து தொகுத்து வழங்கும் இளையதம்பி தயானந்தா என்பவர் யார்? என சில நேயர்கள் கேட்கக்கூடும். இவர் பலருக்கு அறிமுகமாக இருந்தாலும், சமகால நேயர்களுக்கு இவரை தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இவர் 1993ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டுவரை இலங்கை வானொலி தேசிய சேவையில் அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார். கவிதைக் கலசம் வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, சித்தத்தின் உள்ளே (உளவியல் தொடர்), தேன் தமிழ் நாதம், அருணாசலக் கவிராயரின் கீர்த்தனைகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட இராம நாடகம் (இசை நாடகத் தொடர்) போன்ற பல நிகழ்ச்சிகளை வழங்கியிருக்கிறார். பல துறைசார் அறிஞர்களையும், கலைஞர்களையும், அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து நேர்காணல்களை நடத்தியிருக்கிறார். ஆலய உற்சவங்கள் மற்றும் தேசிய நிகழ்வுகளின்போது நேர்முக வர்ணனைகளிலும் இவர் பங்கு கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், இலங்கை வானொலியிலிருந்து விலகிச் சென்ற இவர் இரு வருடங்கள் ஐரோப்பிய தமிழ் ஒளிபரப்பு நிலையமான வெக்ரோன் தொலைக்காட்சி சேவையின் இலங்கை கலையகப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றினார். 2006ஆம் ஆண்டிலிருந்து 'இருக்கிறம்' என்ற மாதாந்த சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், பின்னர் 'வியூகம்' என்ற மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

2008ஆம் ஆண்டு லண்டன் சென்ற இவர், 2010ஆம் ஆண்டு முதல் லண்டன் பி.பி.ஸி தமிழோசை வானொலி லண்டனில் செயற்பட்ட காலம்வரை, அதில் இணைந்து பணியாற்றியிருக்கிறார். பின்னர் லண்டன் லைக்கா நிறுவனத்தின் ஆதவன் தொலைக்காட்சி சேவையின் பொறுப்பதிகாரியாக சில வருடங்கள் கடமையாற்றிவிட்டு, இலங்கை திரும்பி இலத்திரனியல் ஊடகப் பணியில் பங்காற்றி வருகிறார்.

இருதசாப்த காலத்திற்கு முன் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்து நடத்திய ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் முதலாவது கற்கைநெறியின் போது இ. தயானந்தா அங்கு விரிவுரையாளராக கடமையாற்றியிருக்கிறார். இது தவிர, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஊடக கற்கை நிலையத்திலும் இவர் விரிவுரையாளராக சேவையாற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஒலிபரப்புச் சேவை நூற்றாண்டு வரலாற்றை அண்மித்துக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில், இலங்கை வானொலி தேசிய சேவையில் மற்றுமொரு காத்திரமான நிகழ்ச்சியாக தோற்றம்பெற்று உலகளாவிய ரீதியில் வலம் வரத் தொடங்கியிருக்கும் 'வாரம் ஒரு வலம்' பல்லாயிரக்கணக்கான உலகத் தமிழ் நேயர்களின் செவிகளுக்கு சென்றடைகிறது என்பது சிறப்புக்குரியது. இது இனிவரும் காலங்களில் மேலும் வளர்ச்சியும் எழுச்சியும் பெற்று நேயர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

– ஊரெழு அ. கனகசூரியர்




# ஈழத்து இரசனைமுறை விமர்சனத்துறையில் திருப்பத்தை ஏற்படுத்திய கனக செந்திநாதன்

திரு. கனக செந்திநாதன் சிறுகதை, நாவல், கவிஅரங்கு, கட்டுரை, கவிதை, மேடை நாடகம், வானொலி நாடகம், விமர்சனம், வாழ்க்கை வரலாறு, சிறுவர்பாடல் எனப் பல்துறைகளில் இயங்கியவர். இவர் எழுதிய 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற நூல் 1946ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலே ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசிய முதலாவது வரலாற்று நூலாகும்.

இந்நூலுக்கு முன்னுரை எழுதிய ஈழகேசரி பத்திரிகை ஆசிரியர் இராஜ அரியரத்தினம் தனது முன்னுரையில்,

"கனக செந்திநாதன் ஆறுமுக நாவலர் தொடக்கம் இன்றைய இளம் கவிஞர்கள் வரை ஆராய்ந்து பழமையையும் புதுமையையும் நமக்கு இந்நூலில் காட்டியுள்ளார். தமிழ்ச்சுடர் மணிகளையும், ஈழத்து ஒளி விளக்குகளையும், பேனா மன்னர்களையும், இளம் எழுத்தாளர்களையும் காலத்தை வைத்துப் பிரித்து ஆராய்ந்திருப்பது மிக நன்று. ஒவ்வொரு பத்தாண்டு காலத்தைப் பற்றி முகவுரையாக விடயங்களையும் சரித்திர நிகழ்ச்சிகளின் எழுச்சிகள் ஆகியவற்றையும் கூறிவிட்டு அப்பத்தாண்டு காலத்தில் எழுதிய எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புகளையும் அறிமுகம் செய்துள்ளார். பின் முடிவுரையாக பத்தாண்டு காலத்தில் இலக்கிய உலகம் என்ன சாதித்தது என்பதைத் தொகுத்துக் கூறியுள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கனக செந்திநாதனின் இயற்பெயர் திருச்செல்வேழ். குரும்பசிட்டி கனகசபை பொன்னம்மா தம்பதிக்கு 05.11.1916இல் மகனாகப் பிறந்த இவர், குரும்பசிட்டி மகாதேவ வித்தியாலயம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை ஆகியவற்றில் கல்வி கற்றவர்.

1937 1938 காலப்பகுதியில் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவனாகப் படித்து வெளியேறி ஆசிரியராகப் பணியாற்றியவர்.

கனக செந்திநாதனின் வீட்டின் முன்பகுதியில் ஒரு தென்னோலைக் கொட்டில் அமைந்திருந்தது. அதுவே அவரது நூல்நிலையம். ஏராளமான நூல்கள் அவரது சேகரிப்பில் இருந்தன. அந்த நூல்நிலையத்தை மற்றவர்களும் பயன்படுத்துவதற்கு அவர் அனுமதிப்பார். இதன் காரணமாக இலக்கிய கர்த்தாக்கள் கூடும் இடமாகவும் அவரது இல்லம் விளங்கியது.




ஈழத்து நவீன இலக்கியக் கணக்கெடுப்பை அதன் ஆரம்ப காலத்திலிருந்தே மேற்கொண்டவர் கனக செந்திநாதன். எந்தவொரு ஈழத்துப் படைப்பும் அது பத்திரிகையிலோ, சஞ்சிகையிலோ வெளிவந்தாலும் அதனைத் தேடிப்பெற்று அந்தப் படைப்பினை கவனமாக வெட்டியெடுத்து சீ.ஆர். கொப்பிகளில் ஒட்டி வைத்துக்கொள்வார்.

பிற்பட்ட காலத்தில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற பயன்மிக்க ஆய்வுநூலை எழுதுவதற்கு அவர் சேகரித்து வைத்திருந்த ஒட்டுக்கொப்பிகள் உதவியிருக்கின்றன.

அந்தக் காலத்தில் 'ஈழத்துப் பேனாமன்னர்கள்' என்ற எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகத் தொடரை ஈழகேசரியில், 'கரவைக்கவி கந்தப்பனார்' என்ற புனைபெயரில் எழுதினார். அந்தத் தொடரில் நாற்பது எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். அவரது இத்தகைய இலக்கியச் செயற்பாடுகள் காரணமாக அவர் 'நடமாடும் நூல்நிலையம்' என்று இலக்கிய உலகில் பேசப்பட்டார்.

அவரது கிராமமாகிய குரும்பசிட்டியில் சன்மார்க்கசபை என்ற இலக்கிய அமைப்பு இயங்கி வந்தது. அங்கு அடிக்கடி இலக்கிய நிகழ்வுகள் இடம்பெறும். அந்நிகழ்வுகளில் அவரும், ஒரு சிறப்புப் பேச்சாளராக இருப்பார். அவரது சொற்பொழிவுகள் கருத்தாழம் மிக்கதாகவும் சுவாரஸ்யமானதாகவும் அமைந்திருக்கும். தனது பேச்சின் நடுவே அனேகமான சந்தர்ப்பங்களில் தான் வாசித்த சிறுகதையொன்றையும் விமர்சனப் பாங்கில் விபரித்து அக்கதையை எழுதிய எழுத்தாளர் பற்றிய குறிப்பையும் கூறுவார். கேட்போர் இலக்கியச் சுவையில் திளைப்பர்.

எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை, ஞானம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் கனக செந்திநாதனின் நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"ஈழத்து இலக்கிய முயற்சிகளின் தற்கால இலக்கியப் படைப்பு முயற்சிகளின் உத்தியோகபூர்வமான முதலாவது உண்மையான வரலாற்று ஆவணம் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் வரலாற்று நூல். கனக செந்திநாதனை முதலில் நான் சந்தித்தபொழுது எனக்கு ஏற்பட்ட பிரமிப்பு என்னவென்றால் அவர் ஒரு யுகசங்கமத்தின் தலைவனாகத் திகழ்ந்தார். பழைய பண்டித வர்க்கத்தினரதும் படித்த இலக்கியச் சுவைஞர்களினதும் பரம்பரையாக வந்து புதிய இலக்கிய மாற்றங்களை வரவேற்கக் கூடிய ஒரு படைப்பாளியாக கனக செந்திநாதன் வாழ்ந்துகொண்டிருந்தார்.

அதுமட்டுமன்றி தமிழ் ஆசிரியரான அவர், மிகச்சிறந்த படைப்புகள் அனைத்தையும் ஒட்டுப்புத்தகங்களாகத் தயாரித்து அவற்றையே அவர் ஒரு நூல் நிலையம் போல வைத்திருந்து இவற்றைச் சாதித்தார். இந்தச் சாதனையை இலங்கை இலக்கிய வரலாற்றில் வேறு யாருமே சாதித்ததில்லை. இந்தச் சாதனையை அவர் செய்வதற்கு தூண்டுகோலாக இருந்தது இரண்டு விடயங்கள் என நான் நம்புகிறேன். ஒன்று பண்டிதமணியின் பரம்பரையில் அவர் ஒரு கல்விமானாகவும் ஆசிரியராகவும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது. இரண்டாவதாக யாழ்ப்பாண மண்ணில் பண்டைய தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை மட்டுமன்றிப் புதிய அரசியல் மாற்றங்களையும் பிரசித்தப்படுத்துவதற்காகத் தொடக்கப்பட்ட, ஈழகேசரி பத்திரிகையை நடத்திய பொன்னையா பிறந்த குரும்பசிட்டியிலே வாழ்ந்தது. இவற்றின் காரணமாகத்தான் இந்தத் தற்கால இலக்கிய வரலாற்றை எழுதக்கூடிய ஒரு மாமுனி கனக செந்திநாதன் என்பதை அறிந்து, கைலாசபதி ஊக்குவித்து ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற தொடர் தினகரனில் வந்தது" (ஞானம் 2005 டிசம்பர் இதழ் 67. பக் 38)



1964இல் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் கனக செந்திநாதனுக்கு 'இரசிகமணி' என்ற பட்டத்தை வழங்கியது. அவரது மிகநெருங்கிய நண்பராக விளங்கிய எஸ். பொ. வே இவரது சிறுகதைத் தொகுதியான 'வெண்சங்கு' சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதியிருக்கிறார்.

பேராசிரியர் செ.யோகராசா கனகசெந்திநாதன் பற்றிக் குறிப்பிடுகையில்,

"ஈழத்து இரசனைமுறை விமர்சன வளர்ச்சியிலே திருப்பத்தை ஏற்படுத்தியவர் கனக செந்திநாதன். இத்தகைய இரசனைமுறை முன்னோடிகளில் முக்கியமானவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

அவரது அம்மரபிலே பழந்தமிழ் இலக்கியங்கள் முதன்மைபெற்றன. மாறாக, அவரது மாணவரான கனக செந்திநாதன் அவ்வழியிலே நவீன இலக்கியங்களை அணுக முற்பட்டார்.

முதன்முதலாக தனிப்பட்ட ஆளுமைகளை அத்தகு விமர்சன நோக்கில் அணுகி தனி நூல்களாக வெளிப்படுத்தியவரும் கனக செந்திநாதனே. சோமசுந்தரப்புலவர், அல்வாயூர் மு.செல்லையா, பண்டிதமணி பற்றிய நூல்கள் அத்தகையனவேயாகும்.

இளம் எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் இனங்கண்டு கவனத்திற்குரிய விமர்சனத் தொடர் குறிப்புகளை முதன்முதலில் எழுதியவரும் அவரே. இவ்வழி இத்தகைய தமிழ் விமர்சனப் பாரம்பரிய வழிநின்று நவீன இலக்கியங்களை அணுகமுற்பட்ட ஈழத்து முன்னோடியாக கனக செந்திநாதன் காணப்படுகிறார்

நமது இலக்கிய இரசனையும் அதன்மதிப்பீடும் நமது மண்ணிலேயும் தமிழ் நெஞ்சங்களிலேயும் வேரூன்றிய மரபிலே நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்று ஆணித்தரமாகக்குறிப்பிட்டு (ஈழத்து இலக்கிய வளர்ச்சி பக்:123) அதனை இனங்காண முற்பட்டவர் கனகசெந்திநாதன்.

இலக்கிய விமர்சனம் என்பது வேறு. இரசனை என்பது வேறு என்ற தெளிவு கனக செந்திநாதனிடம் காணப்பட்டது என்பதும் விதந்துரைக்கப் படவேண்டியதே." எனக் குறிப்பிட்டுள்ளார் ( ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இரசிகமணி கனக செந்திநாதன் சிலகுறிப்புகள் ஞானம் ஜூலை 2018 பக்:9)

இரசிகமணி கனக செந்திநாதன் 25 சிறுகதைகளையும் நான்கு புதினங்களையும் பன்னிரண்டு நாடகங்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அவரது 'ஒரு பிடி சோறு' என்ற சிறுகதை ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பிற்பட்ட காலத்தில் அவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு சத்திர சிகிச்சை மூலம் அவரது கைவிரல்களும் கால்விரல்களும் அகற்றப்பட்டன. '

நடமாடும் நூல்நிலையம்' என அழைக்கப்பட்ட அந்தப் பெருமகன் நடமாடமுடியாத நிலையில் வீட்டில் முடங்கிப்போனார். அவருக்கு எழுத்தாளர் டானியல் ஒரு சக்கர நாற்காலியைச் செய்துகொடுத்தார்.

கனக செந்திநாதன் 16.11.1977இல் தனது அறுபத்தோராவது வயதில் அமரரானார்.

வஃபீரா வஃபியின்...

# "புள்ளியில்லாக் கோலம்" வியப்பூட்டும் 'துளிப்பா'க்களின் தப்பாத தாளம்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

"முத்தமிழ்க் கலசம்" என்ற காலாண்டு இதழின் பிரதம ஆசிரியராகச் செயற்படும் கொழும்பைச் சேர்ந்த வஃபீரா வஃபி என்பவரின் ஹைக் கூக்களின் தொகுப்பாக, தமிழ் நெஞ்சம் அமீனின் வடிவமைப்பில் 365 ஹைக்கூக்களோடு, 128 பக்கங்களில் மலர்ந்திருக்கின்றது

"புள்ளியில்லாக் கோலம்".

"உள்ளதை உள்ளபடி" சொல்லும் மூன்றடிக் கவிதை வடிவமான "ஹைக்கூ", இன்று பலராலும் விரும்பப்படுகின்ற ஒரு கவிதை வடிவமாகத் திகழ்கின்றது.

குறிப்பாக, புதிதாக எழுத்துலகில் பிரவேசிப்பவர்களின் முதல் கவிதை முயற்சியாக ஹைக்கூ அமைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஹைக்கூ தமிழுக்கே உரித்தான ஒரு கவிதை வடிவமல்ல.

14ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் பிறந்த கவிதை வடிவமான ஹைக்கூ, 19ஆம் நூற்றாண்டில், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டு, இப்போது சென்றியூ, குக்கூ, பழமொன்றியு, விடுகவிக் கூ, எதுகைக்கூ மோனைக்கூ என்று கிளைகள் பல பரப்பி விரிந்து நிற்கிறது.

ஈழத்தைப் பொறுத்தவரையில் "வரவுப்பா" வான ஹைக்கூ அதிக செல்வாக்கைப் பெற்றிருக்க வில்லையென்பதே உண்மையாகும். இங்கு ஹைக்கூ நூல்களும் அதிகம் வெளிவரவில்லை.1988 முதல்2016 வரை மிகக் குறைந்த எண்ணிக்கையான (12 நூல்கள் அளவில். முதல் நூல் சு.முரளீதரனின் "கூடைக்குள் தேசம்") நூல்களே வெளி வந்துள்ளதாக அறியக் கிடைக்கிறது.

ஆயினும், சமூக வலைத் தளங்கள், முக நூல் இலக்கிய குழுமங்களின் செயற்பாடுகள், இந்திய குழுமங்களின் முகநூல் பயிற்சி வகுப்புக்களோடு நம்மவர்கள் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் என்பவற்றினூடாக ஹைக்கூ, தற்போது ஈழத்தின் இளைய தலைமுறைப் படைப்பாளிகளை ஈர்த்து வருவதை அவதானிக்க முடிகிறது. அதன் தொடர்ச்சியாகவே வஃபீரா வஃபீயின் "புள்ளியில்லாக் கோலம்" வெளிவந்திருக்கின்றது.

ஹைக்கூக்கள் பற்றி அறிந்து, பயின்று பயிற்சி பெற்று அவர் ஹைக்கூக்களை எழுதி வருவதை நூலிலுள்ள ஹைக்கூக்களைப் படிப்பதனூடாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஹைக்கூ பற்றிய அறிவு, அதன் விதிகள், இலக்கணங்கள் குறித்தும் வஃபீரா சில ஹைக்கூக்களை இந்நூலில் எழுதியுள்ளார்.

ஒரு காட்சிப் படிமம்
பலகோணத்தில் சிந்திக்க வைக்கும்
தலைசிறந்த ஹைக்கூ.(291)




எழுதிய ஹைக்கூ
சேர்க்கப்படவே இல்லை
கற்பனை வளம்(290)

அழகிய சூழல்
வடிவம் பெற்று வருகிறது
புதிய ஹைக்கூ.(286)

கவிஞனின் வெற்றி
திருப்புமுனையாக அமைந்திருந்தது
ஹைக்கூவின் ஈற்றடி(300)

பல சிற்றுயிர்கள்
சிறப்பித்து மகிழ்வு தரும்
தரமான ஹைக்கூ.(294)

ஹைக்கூ ஒரு காட்சிப் படிமமாக அமைவதை, கற்பனை, உவமை, உருவகம், இருண்மை, பிரசாரத் தன்மை என்பவற்றைத் தவிர்த்து எளிமையான சொற்களில் அமைவதை ஹைக்கூ வரிகளில் எடுத்துச் சொல்வதோடு, சிற்றுயிரையும் நேசித்து எழுதுவதையும், ஈற்றடி வியப்பூட்டுவதாக அமைவதையும் அவ்வரிகளில குறிப்பிடுகின்றார் கவிஞர். ஒருபடப் பிடிப்பாளனைப் போல காட்சிகளை ஹைக்கூக் கவிஞன் தன்கவி வரிகளுக்குள் படம் பிடிப்பான். வஃபீராவும் இயற்கையை, சமூக அவலங்களை, நிகழ்வுகளை, உணர்வுகளை காட்சிப் படிமமாக்கித் தருவதில் முன்னிற்பதை அவரின் பெரும்பாலான கவிதைகள் பறைசாற்றுகின்றன.

இனிய சங்கீதம்
ஒலித்துக் கொண்டே இருக்கும்
சொட்டும் மழை நீர்(7)

வேலியில் பச்சோந்தி
அடிக்கடி நிறம்மாறும்
அந்தி வானம்(16)

அருகில் புதையல்
தொடாமல் நின்று ரசிக்கும்
வரைந்த ஓவியன்.(29)

அழகு மயில்
பறந்ததும் ஆட ஆரம்பிக்கும்
மிதக்கும் படகு(35)

அடுப்பில் வைத்த பாத்திரம்
திடீரென வெடித்துச் சிதறும்
சோளப் பொரி(48)

அழகான சிலைகள்
ஒரே பாறையில் செதுக்கப்படும்
பலமதச் சின்னங்கள்(126)

பூந்தோட்டத்தில் கைம்பெண்
நெற்றியில் திலகமிட்டுச் செல்கிறது
உரசிய பட்டாம் பூச்சி.(210)

பாய்ந்த முயல்
கையில் பிடிபடவே இல்லை
அதன் நிழல்.(310)

உதித்த சூரியன்
இன்னும் மறையவே இல்லை
பனிக் கூட்டம்(365)

கவிஞனின் அனுபவத்தை வாசகருக்குள்ளும் பரவச் செய்கின்ற வகையில் அவரின் ஹைக்கூக்கள் அமைந்திருக்கின்றன. வாசகன், முதல் இரு வரிகளைப் படித்து விட்டு, சற்று சிந்தித்துப் பார்த்துவிட்டு. பின்னர் மூன்றாம் வரியைப் படிக்கையில் வியப்பூட்டுவதை எதிர்பாராத முடிவைத்தரும் விதமாக ஹைக்கூக்கள் அமைந்திருப்பதை அவரின் பெரும்பாலான ஹைக்கூக்களில் தரிசிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக.

அடுப்பில் வைத்த பாத்திரம்
திடீரென வெடித்துச் சிதறும்

நிறுத்தி, ஏன் என்று கேள்வி எழுப்பி விட்டு மூன்றாம் வரியைப் பார்த்தால் சோளப் பொரி என்று வியப்பூட்டுகிறார் கவிஞர். இவ்வாறு ஒவ்வொரு ஹைக்கூவாகப் பார்க்கின்ற போது ஈற்றடி திருப்புமுனையாக அமைந்து கவி இன்பம் தருகின்றன ஹைக்கூக்கள். ஹைக்கூ கவிதைகளில் தொடர்ந்தியங்கும் முனைவர் கா.ந. கல்யாண சுந்தரம், தமிழ் நெஞ்சம் அமின், தென்றல்கவி தமிழ்ச்சிட்டு, வெண்பா வேந்தர் ஏடி வரதராசன், டாக்டர் கவிஞர் ஜலீலா முஸம்மில், மணிக்கூ கவி நஸீரா எஸ். ஆப்தீன், கவிஞர் அன்புச் செல்வி சுப்புராஜு, எஸ்.கமர் ஜான்பீபீ ஆகிய தமிழக இலங்கை பிரான்ஸ் எழுத்தாளர்களின் அணிந்துரை, மகிழ்ந்துரை, வாழ்த்துரை, என்பவற்றைப் பெற்றிருக்கின்றது நூல். ஒரு128 பக்க நூலுக்கு இவ்வளவு உரைகள் அவசியம் தானா? என்று கேள்வியெழ இடமுண்டு. எதிர்காலத்தில் இதனைக் கருத்தில் கொண்டு ஆக்கங்களைத் தரவேண்டுமென்பதே நமது அன்புக் கோரிக்கையாகும்.

**நூல்: புள்ளியில்லாக் கோலம்**
**வெளியீடு: சித்தி வஃபீரா, 023,அமரசேகர மாவத்தை, ஹவ்லொக் டவுண், கொழும்பு 05**
**விலை இலங்கை ரூபா 850/–**

கொடகே நிறுவனத்தின்

# தமிழ் ஆக்க இலக்கியப் பிரதி போட்டி முடிவுகள்

கோரப்பட்ட பிரசுரிக்கப்படாத நாவல். சிறுகதைத்தொகுப்பு, கவிதைத் தொகுப்புக்கான பிரதிகள் போட்டியின் முடிவுகள்





**சிறுகதை**

சிறந்த சிறுகதைத் தொகுப்பாக சம்மாந்துறையை சேர்ந்த சித்தி றபீக்கா பாயிஸ். எழுதிய "வளகு வாப்பா போடியின் ஊஞ்சல்" எனும் சிறுகதைத் தொகுப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு முதல் எழுதிவரும் சித்தி றபீக்கா பாயிஸ், இதுவரை ★வற்றாத ஈரம்" '★சதுப்புநில கொக்கின் கால்கள்' இரண்டு ஆகிய இரண்டு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இதில் 'வற்றாத ஈரம்' கவிதைத் தொகுப்பாகும்.

2020ஆம் ஆண்டுக்கான சிறந்த கவிதைத் தொகுப்புக்கான கொடகே சாகித்திய விருதினையும் அவர் பெற்றமை குறிப்பிடதக்கது.

சிறந்த சிறுகதைத் தொகுப்பான "வளகு வாப்பா போடியின் ஊஞ்சல்" இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும்.

**கவிதை**

சிறந்த கவிதைத் தொகுப்பாக பதுளை – மடுல்சீமை, கொக்காகலை என்ற ஊரை வசிப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணசாமி அருளின் "காலாதீதமும் சாம்பற்குவியலும்" என்ற கவிதைத் தொகுப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.


ஆசிரியராகக் கடமை புரியும் கிருஷ்ணசாமி அருள் பத்திரிகை, மற்றும் சமூக வளைத்தளங்களில் தனது படைப்புகளைப் பதிவேற்றி வருகின்றார்.

எழுத்துகளோடு முகிழ்த்துக் கிடக்கும் இவரது முதல் கவிதைத் தொகுதியே "காலாதீதமும் சாம்பற்குவியலும்" ஆகும்.

**நாவல்**

கொடகே நிறுவனம் நாடத்தும் தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகள் போட்டி2023 இல் சிறந்த நாவல் ஒன்றும் தெரிவு செய்யப்படவில்லை.

# 'மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்' நூல் அறிமுக விழா













(அஷ்ரப் ஏ சமத்)

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட தினகரன் வாரமஞ்சரியில் நூறு வாரங்களாக தொடராக எழுதி வந்த ஆக்கங்கள் 'மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்' எனும் நூலாக அண்மையில் வெளிவந்தது.

கடந்த சனியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கொழும்பு தமிழ் சங்கத்தின் தலைவர் கலாநிதி ரகுபரன் தலைமை வகித்தார்.

பிரதம அதிதியாக முன்னாள் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் கே.ஸ்ரீ பவன் கலந்து கொண்டார்.

வரவேற்புரையை பாத் பைன்டர் பௌன்டேசனின் முகாமைத்துவ பணிப்பாளர் கே.பாலசுந்தரம், நூலாய்வினை கொழும்புப் பலகலைக்கழக பொருளாதாரத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தியும் விமர்சன உரையை, சட்டக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி யசோதரா கதிர்காமத் தம்பியும் இந்தியா கலாசார நிலையம் மற்றும் சுவாமி விவேகானந்தா நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அங்குரன் டட்டா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## தோட்டத் தொழிலாளர்களின்

# சம்பள அதிகரிப்பு இழுபறி; விரைவில் முற்றுப்புள்ளி!

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்த விடயம் தற்பொழுது நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மே மாதம் அறிவித்த இந்த சம்பள அதிகரிப்பைத் தொடர்ந்து அதற்கான வர்த்தமானி அறிவிப்பை, தொழிலமைச்சு வெளியிட்டிருந்தது.

இந்த வர்த்தமானி அறிவிப்பை உறுதி செய்து மே மாதம் 21ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இரண்டாவது விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையிலேயே தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகளால் இந்த விடயம் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.



கடந்த 31ஆம் திகதி இது தொடர்பில் கவனத்தில் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், கம்பனிகளின் கோரிக்கையை நிராகரித்தது. அதாவது, தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி மனுவை தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்திருந்தன. மனுவை விசாரித்த நீதிமன்றம் கம்பனிகளின் கோரிக்கையை நிராகரித்தது.

நீதியரசர்கள் சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு கடந்த மாதம் (30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா விடயங்களை முன்வைத்தார். இதனையடுத்து சமர்ப்பணங்கள் மீதான பரிசீலனை கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அகரபதன பெருந்தோட்டக் கம்பனி உட்பட 21 தோட்டக் கம்பனிகளினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் தொழில் ஆணையாளர் உட்பட 52 பேர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பெருந் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 1,350 ரூபாவாகவும் விசேட கொடுப்பனவு 350 ரூபாவும் அடங்காலாக நாளாந்த சம்பளம் 1700 ஆக நிர்ணயிக்கப்பட்டதுடன் மேலதிக தேயிலைக்கொழுந்துக்கான கொடுப்பனவு ரூபா 80 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை உறுதி செய்து கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தொழில் அமைச்சின் இரண்டாவது விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

நீதிமன்றத்தில் மனு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சமீபத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களிலும் அரசியல்வாதிகள் தமது கருத்துக்களை இது தொடர்பில் வெளிப்படுத்தியதாக மனுதாரர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

தொழில் அமைச்சர் தங்களிடம் கலந்தாலோசிக்காமல் இதுபோன்ற முடிவை எடுத்திருப்பது நீதியின் சட்டக் கோட்பாட்டை மீறுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வர்த்தமானி அறிவிப்பை வலுவிழக்கச் செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தோட்டக் கம்பனிகள் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தொழிலாளர்களின் சம்பள விடயம் நீதிமன்றத்தில் இருந்த போதிலும் வர்த்தமானி அறிவிப்புக்கு அமைவாக மே மாதம் 21 ஆம் திகதி முதல் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்புக்கு உரித்தானவர்களாவர்.

2021ஆம் ஆண்டு சம்பள அதிகரிப்பின் போதும் தோட்டக் கம்பனிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அப்பொழுது கோரப்பட்ட 1000 ரூபா சம்பள அதிகரிப்பு பின்னர் தொழிலாளர்களுக்கு கிடைத்தது. இதுவும் பெரும் இழுபறிகளுக்கு மத்தியிலேயே அவர்கள் இதனைப் பெற வேண்டியதாக இருந்தது.

ஏனைய தொழில் துறையை சார்ந்த தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் இவர்கள் குறைந்த வருமானத்தைப் பெறுவதாக கம்பனிகள் குறிப்பிட்டிருந்தன. அப்போதைய காலகட்டத்தில் உதாரணமாக ஆடைத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 7,500 ரூபா முதல் 15,450 ரூபா வரையில் வருமானமாக கிடைப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்தம் 1000 ரூபா சம்பளத்துடன் மாதத்தில் 25 நாட்கள் பணிபுரிந்தால் 25 ஆயிரம் ரூபா பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. தற்பொழுதும் அதே மனநிலையிலேயே கம்பனிகள் செயல்படுவதாக தொழிலாளர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாக இருந்தபோதிலும் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இப்பொழுதும் உறுதியாக உள்ளனர்.

சம்பள நிர்ணய சபையின் விதிகளுக்கு உட்பட்டதாக 45 வர்த்தக தொழிற்துறையைச் சார்ந்தவர்களுக்கு சம்பள நிர்ணய சபை சம்பளத்தை நிர்ணயம் செய்துள்ளது.

பெருந்தோட்ட தேயிலை தோட்டத்துறை கடந்த 10 ஆண்டுகளில் 51,150 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் தொடர்பான மதிப்பீட்டுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அதுகோரல தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேயிலை உற்பத்தி 2013ஆம் ஆண்டில் 34 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். 2015ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தேயிலையின் அளவு 328,800 மெற்றிக் தொன்களாகும். 2020ஆம் ஆண்டில் 278,489 மெற்றிக் தொன்னும், 2023ஆம் ஆண்டில் 256,039 மெற்றிக் தொன்னுமாக வீழ்ச்சியடைந்ததாக பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் 2013ஆம் ஆண்டில் 319,700 மெற்றிக் தொன்னும் 2015ஆம் ஆண்டில் 306,900 மெற்றிக் தொன்னும் 2020 ஆம் ஆண்டில் 265569 மெற்றிக் தொன்னும், 2023 ஆம் ஆண்டில் 241,912 மெற்றிக் தொன்னுமாக வீழ்ச்சியடைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வீழ்ச்சி கண்டதனால் ஏற்பட்ட நஷ்டம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனில் 75 சதவீதத்துக்கு சமமானதாகுமென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுவாக தேயிலை ஏற்றுமதி 24 சதவீதம் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். தேயிலைத் துறையின் ஏற்றுமதி குறித்தும் உற்பத்தி குறித்தும் இந்த விபரங்களை வெளியிட்டிருந்த போதிலும் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

ஊடகம் ஒன்றுக்கு இந்தத் தகவல்களை பேராதனை பேராசிரியர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இத்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கு காரணமான விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அதுமாத்திரமன்றி இத்துறையுடன் தொடர்புபட்ட தொழிலாளர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கும் இவர்கள் முழுமையான கவனத்தை செலுத்துவதன் மூலமே ஏற்றுமதித் துறையின் மூலமான வருமானத்தை அதிகரிக்க முடியும் என்பது பலரது அபிப்பிராயமாகும்.

அதற்கு தொழிலாளர்களின் நலன் மிக முக்கியமானதாகும். விசேடமாக இழுபறியற்ற நிலையில் அவர்களுக்கான சம்பள அதிகரிப்பு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கிடைப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

தற்பொழுது தோட்டங்களை நிர்வகித்த வரும் 21 கம்பனிகளின் குறைபாடுகள் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியாத கம்பனிகளின் ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தேயிலை சபைக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தோட்டக் கம்பனிகள், தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தரகு நிறுவனங்களுக்கு குறைந்த விலைக்கு தேயிலையை வழங்குவதாகவும் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். நிறுவனங்கள் அதனை அதிக விலைக்கு விற்று வருமானத்தைப் பெறுகின்றன. இந்த தரகு நிறுவனங்கள் தோட்டக் கம்பனிகளின் மறைமுகமான பங்குடமையின் கீழ் செயற்படுகின்றன.

அவ்வாறாயின் இத்துறையின் மூலம் பெறப்படும் முழுமையான வருமானம் என்ன என்பது கண்டறியப்பட வேண்டும். 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோட்டங்கள் அரசாங்கத்தினால் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர் கம்பனிகள் சம்பாதித்த வருமானத்தை கணக்கிட்டுப் பார்ப்பது முக்கியமானதா என்பதும் கேள்விக்குறியாகும்.

ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட குழுக்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும். 1992ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தில் பிரதமராக இருந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோட்டங்கள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட உடன்படிக்கை குறித்து அவர் அறிவார்.

இதனால் அவர் முன்னெடுத்திருக்கும் குழுக்கள் மூலமான நடவடிக்கை பெருந்தோட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பது பலரதும் கருத்தாகும். சமீபத்தில் மலையக தோட்டமொன்றில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அனேக ஊடகங்கள் மிகைப்படுத்தி செய்தி வெளியிட்டதை அனைவரும் அறிவார்கள்.

குறிப்பிட்ட தோட்டம் பயிர்ச்செய்கையில் மாற்றத்தை மேற்கொள்ள முற்பட்டதுமன்றி தொழிலாளர்கள் விடயத்திலும் தான்தோன்றித் தனமாக நடந்தமையும் அதற்குக் காரணமாகும்.

இந்த விடயத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலையிட்டு நீதிக்காக செயல்பட்டுள்ளார். இந்த சம்பவத்தின் போது தோட்ட உற்பத்தியை ஏற்றுமதிக்காக எடுத்துச் செல்வது தடுக்கப்பட்டதால் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது.

சில ஊடகங்கள் பெரும்பாலும் பக்கசார்பாக செயல்படுவதாக சிலர் கூறுகின்றனர். இவர்களது இந்த நிலைப்பாட்டை மாற்றுவதற்கு இந்த தொழில் துறையை சார்ந்த முன்னோடிகள் முன்வர வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் உரிமை அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் போன்று அவர்கள் சார்ந்துள்ள தோட்டத் தொழில் துறை இன்று வீழ்ச்சி கண்டதற்கான காரணத்தை தெளிவுபடுத்துவது காலத்தின் தேவை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

– ஏ.கே.எம். பிள்ளை

# பொது மன்னிப்பின் சட்ட விதிகளை மீறிய மைத்திரி!!

## முன்னுதாரணமான தீர்ப்பு

வாழ்நாளில் தாம் ஒருபோதும் எதிர்பார்க்காத பயங்கர சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த சுவீடன் சிங்கள கலப்பு குடும்ப உறுப்பினர்களின் அழுகுரல்களினால் இலங்கை மற்றும் வெளிநாட்டு தனவந்தர்கள் வாழ்ந்த ராஜகிரிய ரோயல் பார்க் சொகுசு வீடமைப்புத் தொகுதியின் வழமையான அமைதி 2005ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி சிதைந்து போனது.

ஸ்வீடன் நாட்டு தந்தைக்கும், இலங்கையைச் சேர்ந்த தாய்க்கும் பிறந்த இவோன் ஜோன்சன் என்ற 19 வயதுடைய அழகியான யுவதியின் சிதைக்கப்பட்ட தலையுடன் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்த சடலத்தைக் கண்டவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

ரோயல் பார்க் வீடமைப்புத் தொகுதியில் தனது பெற்றோர் மற்றும் சகோதரியான கரோலின் ஜோன்சனுடன் வசித்து வந்த குறித்த யுவதி, தனது நீண்டகால பாடசாலை நண்பரான ஜூட் சமந்த அந்தோனி ஜயமகவுடன் காதல் தொடர்பில் இருந்ததோடு, தனது பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க மேலதிக கல்விக்காக வெளிநாடு சென்றிருந்தார்.

அந்தக் காலத்தினுள் இவோனின் சகோதரியான கரோலின் ஜோன்சனுடன் ஜூட் சமந்த காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்ததோடு இது தொடர்பில் இவோன் ஜோன்சன் எதனையும் அறிந்திருக்கவில்லை.

கரோலின் மற்றும் ஜூட் சமந்த இருவரும் 2005 ஜூன் 30ஆம் திகதி இரவு விடுதிக்குச் செல்ல ஆயத்தமான போது இவோனும் அவர்களோடு இணைந்து கொண்டுள்ளார்.

இதன் போது தனது சகோதரியுடன் ஜூட்டுக்கு இருந்த உறவு தொடர்பில் இவோனுக்கு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் இவோன் ஜூட்டை இரவு விடுதியில் வைத்து விசாரித்துள்ளார்.

தனக்கு தலை வலிப்பதாகக் கூறியதால் கரோலின் ஜோன்சனுடன் ஜூட் சமந்த மீண்டும் வீட்டுக்குத் திரும்பியிருந்ததோடு, கரோலினை வீட்டில் விட்டுவிட்டு வெளியேறிச் சென்ற சந்தர்ப்பத்தில் 24ஆவது மாடியின் லிப்ட் அருகில் இவோன் ஜோன்சனைச் சந்தித்துள்ளார்.

இதன்போது இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதோடு, வாக்குவாதப்பட்டவாறே அவர்கள் இருவரும் மாடிப்படிகளின் ஊடாக சில மாடிகள் கீழே இறங்கி வந்திருந்தனர்.

இதன் போது கடும் கோபத்திற்குள்ளான ஜூட் சமந்த இவோனைத் தாக்கியுள்ளதோடு, அவளது தலையை பல தடவைகள் சுவற்றில் அடித்து சிதைத்ததோடு நின்றுவிடாமல் அவளது தலைமுடியைப் பிடித்து இழுத்தவாறு 19ஆவது மாடிக்குச் சென்றுள்ளான். பின்னர் அவள் அணிந்திருந்த ஜீன்ஸ் வகையைச் சேர்ந்த காற்சட்டையைக் கொண்டு அவளது கழுத்தை நெரித்து படுகொலை செய்துள்ளான்.

மறுநாள் இடம்பெற்ற வகுப்பில் கலந்து கொள்வதற்காக கரோலின் ஜோன்சனும் அவரது தாயும் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து வெளியே வந்தபோது, அங்கு சற்று பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

எனினும் பின்னர் தலை சிதைக்கப்பட்ட இவோனின் சடலத்தை அவர்கள் கண்டார்கள். சிறப்பு பிரமுகர்கள் வாழும் ரோயல் பார்க் வீடமைப்புத் தொகுதியினுள் நுழைவது முடியாததும், சிரமமானதுமான காரியமாக இருந்தது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர தலைமையில் வெலிக்கடை பொலிஸார் இவோனின் மரணம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில், இந்தக் கொலை தொடர்பில் எதுவுமே தெரியாததைப் போன்று நடந்து கொண்ட ஜூட் சமந்த, அவ்விடத்திற்கு வந்து இவோன் ஜோன்சனின் உடலுக்கு இறுதி அஞ்சலியும் செலுத்தினான்.

எவ்வாறாயினும், சம்பவ இடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, சுவரில் இருந்த இரத்தக்கறை படிந்த கைரேகைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதோடு, அந்த கைரேகைகள் ஜூட் சமந்தவுடையது என்பதை கைரேகை திணைக்களம் உறுதி செய்தது. கைரேகையில் இருந்த இரத்தம் கொலை செய்யப்பட்ட இவோன் ஜோன்சனுடையது என டி. என். ஏ. பரிசோதனையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

படிக்கட்டுக்கள் மற்றும் சுவற்றில் அடிபட்டதால் இவோன் ஜோன்சனின் தலையில் 64 சிதைவுகள் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட தனது சகோதரிக்கு அதிகபட்ச நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக சட்டத்தை அணுகிய கரோலின் ஜோன்சன், தனக்கு தெரிந்த அனைத்து உண்மைகளையும் விசாரணை அதிகாரிகளிடம் கூறினார்.

இதனடிப்படையில் ஜூட் சமந்த அந்தோனி ஜயமக அவ்வருடமே கைது செய்யப்பட்டான்.



அவனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு சட்டமாஅதிபர் நடவடிக்கை மேற்கொண்டதோடு, 2005 ஜூலை முதலாம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் இவோன் ஜோன்சன் என்ற யுவதியைக் கொலை செய்தமை அவனுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

இந்த வழக்கு விசாரணை 55 நாட்களாக மேல் நீதிமன்ற நீதிபதி ஐ. எம். அபேரத்ன முன்னிலையில் இடம்பெற்றதோடு, அப்போதைய பிரதி சொலிசிட்டர் ஜெனரலாக இருந்த ஜயந்த ஜயசூரியவினால் முறைப்பாட்டுத் தரப்பில் சாட்சிகள் முன்வைக்கப்பட்டன.

கொலை செய்யப்பட்ட இவோன் ஜோன்சனின் சகோதரியான கரோலின் ஜோன்சன் இந்த வழக்கு விசாரணைகளின் பிரதான சாட்சியாளராக இருந்ததோடு, அவர்களின் மேற்கத்திய வாழ்க்கை முறை மற்றும் இரவு விடுதிகளில் நேரத்தை கழிக்கும் முறைகள், அவர்களுக்கிடையிலான பாலியில் நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் சாட்சியம் அளித்தார்.

இதன்போது, முறைப்பாட்டுத் தரப்பினரால் சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட இரத்த மாதிரிகளின் டி.என்.ஏ பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோடு, பிரதிவாதியான ஜூட் சமந்த மனநோயால் பாதிக்கப்படவில்லை என்பதற்கான ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

யுவதியின் முகத்தை சுவரில் பலமுறை தாக்கியுள்ளதோடு, தலைமுடியைப் பிடித்து மாடிப்படிகள் வழியே இழுத்து சென்றதும் சாட்சிகளின் ஊடாகவும், சம்பந்தப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் ஊடாகவும் வழக்கு விசாரணையில் தெரியவந்தது.

இந்த வழக்கு விசாரணை முடிவில் மேல் நீதிமன்ற நீதிபதியினால் இது தொடர்பான தீர்ப்பு 2012ஆம் ஆண்டு வழங்கப்பட்டதோடு, பிரதிவாதி கொலைக் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதற்குப் புறம்பாக 3 இலட்சம் இழப்பீட்டை பாதிக்கப்பட்ட யுவதியின் தரப்பினருக்குச் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.


இந்தத் தீர்ப்பினால் அதிருப்தியடைந்த பிரதிவாதியான ஜூட் சமந்த தமக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை நீக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்ததுடன், அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை போதுமானதாக இல்லாததால் தண்டனையை அதிகரிக்குமாறு சட்டமா அதிபரும் மேன்முறையீட்டு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

(22 ஆம் பக்க பார்க்க)

நெல்கா மெதகெதர
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்

இந்தியா ஒரு நோக்கு
வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்



# மூன்றாவது முறையாகவும் ஆட்சியை கைப்பற்றிய பா.ஜ.க

## இதோ ஒரு இமாலய வரலாற்றுச் சாதனை

இந்திய மக்களவைத் தேர்தலில் மூன்றாவது முறையாக வெற்றி பெற்ற பா.ஜ.க தலைமையிலான கூட்டணிக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதோடு. மூன்றாவது முறையாக பிரதமர் பொறுபேற்க இருக்கும். நரேந்திர மோடிக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன. பல்வேறு விதமான கருத்துக் கணிப்புகளை எல்லாம் முறியடித்து மக்கள் வேறுமாதிரியான தீர்ப்பு வழங்கியிருப்பது கட்சிகளுக்கு வியப்பாகவே இருக்கிறது. இந்தத் தேர்தலின் முடிவுகள் இப்படித்தான் இருக்கும் என்று நான் முன்பே கணித்து எழுதியிருந்தேன். எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காது. இந்தியா கூட்டணி, தேசிய ஜனநாயக கூட்டணி இரண்டுக்கும் இடையிலான வெற்றி மிக நெருக்கமாகவே இருக்கும். ஐம்பது தொகுதிகள் தான் வெற்றியை நிர்ணயிக்கும் என்று நான் எதிர்பார்த்தது சரியாகவே நடந்திருக்கிறது.

தேர்தல் களம் அரசியல் கட்சிகளுக்கு படிப்பினைகளைக் கொடுக்கும். என்பது பொதுவாகவே எல்லா தேர்தல்களிலும் வாடிக்கையானது தான். ஆனால், இந்தத் தேர்தல் முற்றிலும் வித்தியாசமானதாக நடந்திருக்கிறது.

பத்து ஆண்டுகள் அசுர பலத்துடன் ஆட்சியில் இருந்தவர் நரேந்திரமோடி. இந்தத் தேர்தலில் மீண்டும் அமோக வெற்றி பெறுவார் என்று. எதிர்பார்த்த நிலையில் தட்டுத்தடு மாறி ஆட்சியைப் பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். இந்த விழ்ச்சிக்கு காரணம் என்ன என்று பார்த்தால் நம்பிக்கையோடு எதிர்பார்த்த உத்திரபிரதேசம் கை கொடுக்கவில்லை. ஏற்கனவே கைவசம் இருந்து இழந்த 60 தொகுதிகளில் பாதிக்கு மேல் உத்திர பிரதேசத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

உத்திரபிரதேசத்தில் இராமர் கோயில் கட்டப்பட்டதால் மீண்டும் நல்ல ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்த்த நிலையில் அங்கே அதிக இடங்களில் தோல்வியை சந்தித்திருப்பது பா.ஜ.க.வுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இப்படி ஒரு தோல்வியை சந்திப்போம் என்று எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள், உத்திரபிரதேசத்தில் காங்கிரஸ் அதிக இடங்களில் வெற்றி பெற்றிருப்பதும் ஆச்சரியப்பட வைக்கிறது. இந்த வெற்றிக்கு ராகுல் காந்தியின் நடைப் பயணமும் ஒரு காரணம் என்று சொல்லலாம்.

மொத்தமுள்ள 593 தொகுதிகளில் இந்தியா கூட்டணி 232 தொகுதிகளையும், தேசிய ஜனநாயக கூட்டணி 293 தொகுக்களையும் கைப் பற்றியிருப்பதால் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை இல்லை. இந்தத் தேர்தல் ஒரு அரசியல் கட்சிக்கு எதிரான போராட்டம் அல்ல. அரசியல் சட்டத்தை காப்பதற்கான போராட்டமாகத்தான் இந்த தேர்தல் நடத்தப் பட்டிருக்கிறது என்று ராகுல் காந்தி குறிப் பிடுவதிலும் உண்மை இருக்கிறது. பா.ஜ.க தலைமையிலான முந்தைய பத்தாண்டுகால ஆட்சியில் அதிகாரத்தின் மூலம் மக்களையும். எதிர்க்கட்சிகளையும் ஒடுக்க வேண்டும் என்று செயற்பட்டதன் விளைவுக்கு மக்கள் சரியான பதிலடி கொடுத்திருக்கிறார்கள் என்பதும் உண்மையே.

இது ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு கட்சிக்கும் விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கையாகவே எடுத்துக் கொள்ளலாம். சர்வாதிகாரம் வெற்றி பெற்றதாய் சரித்திரம் இல்லை. பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி எடுத்த இரண்டு முடிவுகள் தான் அவர்களின் வெற்றியைத் தக்க வைத்திருக்கிறது. ஒன்று ஆந்திர மாநிலம் சந்திரபாபு தலையிலான தெலுங்கு தேசம் கட்சியை மீண்டும் இணைத்துக் கொண்டது. இரண்டாவதாக பீகார் மாநிலம் நிதிஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் கட்சியை கூட்டணியில் இணைத்துக் கொண்டது.

ஆந்திராவில் முதலில் ஜெகன் மோகன் தலைமையிலான ஆளும் ஒய் எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியுடன் பா.ஜ.க முதலில் பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனால், தெலுங்கு தேசம் கட்சியுடன் கூட்டணி முடிவு செய்யப்பட்டதால். இந்தக் கூட்டணி அங்கு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலிலும். மக்களவைத் தேர்தலிலும் அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. இரண்டாவதாக பிகார் மாநிலம் நிதிஷ் குமாரை கூட்டணியில் சேர்த்ததும் வெற்றிக்கு முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது.

இந்தியா கூட்டணி உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் நிதிஷ்குமார் தான். ஆனால், தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் இந்தியா கூட்டணியிலிருந்து விலகி தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து கொண்டார். நிதிஷ் குமாரின் இந்த முடிவு பா.ஜ.க.வுக்கு பலமாக அமைந்திருக்கிறது. இந்த இரண்டு கட்சிகளின் ஆதரவும் இல்லை என்றால் பா.ஜ.க மீண்டும் ஆட்சியமைக்க முடியாமலே போயிருக்கும். அதேபோல இந்த கட்சிகளும் பா.ஜ.க.வின் கடிவாளமாகவும் மாறியிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இரண்டு கட்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கிறது. முக்கியத்துவம் தரவில்லையெனில் கூட்டணியிலிருந்து வெளியேறவும் வாய்ப்புள்ளது.

மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அமைத்த இந்தியா கூட்டணி 232 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. இதில் காங்கிரஸ் 99 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டுமானால் 38 இடங்கள் கூடுதலாக தேவைப்படுகிறது. ஆகையால் நிதிஷ் குமா, சந்திரபாபு நாயுடு இருவரிடமும் ஆதரவு கேட்க இந்தியா கூட்டணியும் முயற்சி செய்து வருகிறது.

பா.ஜ.க தலைமையிலான ஆட்சி அமைவதற்கு முன்பாகவே மத்திய அமைச்சரவையில் 4 கேபினட் அமைச்சர்கள். ஒரு இணையமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்று நிதிஷ்குமார் கோரிக்கை வைத்திருக்கிறார், சந்திரபாபும் இதே போன்று கோரிக்கையை முன்வைக்கலாம். பா.ஜ.க.வும் வேறு வழியில்லாமல் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

மூன்றாவது முறையாக, பிரதமர் பொறுப்பேற்க இருக்கும் நரேந்திர மோடிக்கு அவரது எதிர்க்கட்சிகள் மீதான விமர்சன பாணிக்கு எதிராகவும், மக்களின் தீர்ப்பு உறுதியாக அமைந்துள்ளது.

இது ஒரு தெளிவான தார்மீக தோல்வி என்பதைத் தாண்டி. தனிப்பட்ட முறையில் அவருக்கு ஒரு பெரிய அரசியல் இழப்பாகும், என்று கங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்திருப்பது அவதானிக்க வேண்டிய விடயம்.

அரசியலில் சாணக்கியர் என்று சொல்லிக் கொண்ட அமித்ஷா தான் விரித்த வலையிலேயே மிகவும் மோசமாக மாட்டிக் கொண்டார்.

இந்தியா கூட்டணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக தமிழ்நாட்டில் தி.மு.க தலைமையிலான கூட்டணியும் முக்கிய பங்கு வசிக்கிறது, நாற்பது தொகுதிகளும் நமக்கே என்று தமிழ்நாட்டு முதலைமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்த தேர்தல் பரப்புரையும் நல்ல பலனைத் தந்திருக்கிறது.

நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெற்று மற்ற மாநிலங்களுக்குக் கிடைக்காத சிறப்பை தி.மு.க கூட்டணி பெற்றிருக்கிறது. இந்த வெற்றியை ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கிறது. கொள்கையில் உறுதியும், இலட்சியப் பார்வையும், திட்டமிட்ட உழைப்பும், தெளிவான வியூகமும் இருந்தால் நாற்பதுக்கு நாற்பது தொகுதிகளையும் வெல்லவும் முடியும். அதன் மூலம் நாட்டை வழிநடத்தும் ஆற்றலுடன் செயல்படவும் முடியும் என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன என்று ஸ்டாலின் கூறியுள்ளது வருங்கால தேர்தல் காலத்துக்கு அவசியமானது என்றே எடுத்துக் கொள்ளலாம்.

மதவாதத்தையும், வெறுப்பு அரசியலையும், விதைக்க நினைப்பவர்கள் தமிழகத்தில் எப்படியாவது கால் ஊன்றி விட வேண்டும் எனத் திட்டமிட்டனர். வன்ம விதைகளைத் தூவி, வதந்தி நீர் ஊற்றி வளர்க்கப் பார்த்தனார். பிரதமர் நரேந்திர மோடி எட்டுமுறை தமிழ்நாட்டுக்கு வந்து. பரப்புரையில் ஈடுபட்டும் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. தி.மு.க வெறுப்புப் பரப்புரை செய்யவில்லை, பொறுப்பான முறையில் தேர்தல் களத்தில் தன் கடமையை ஆற்றியது.


சுகாதார அமைச்சு

### தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்டம்
விலைமனு அழைப்பு அறிவித்தல

**(Prime Rated) 125KVA Standby Generator**
**வழங்கல் மற்றும் ஸ்தாபித்தல்**

1. சுகாதார அமைச்சின் அமைச்சரவை கொள்முதல் குழுவின் தலைவர் மூலம் வழு வழங்கல் அமைப்பொன்றினை கொள்வனவு செய்வதற்கான தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.
3. இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்குத் தகுதிபெற, விலை மனுதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருக்க கூடாது. மேலும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
   - மனுதாரர், வழங்கும் மின் பிறப்பாக்கி இயந்திர தொகுதிக்கு இலங்கையில் உள்நாட்டு முகவர் ஒருவர் இருக்க வேண்டும்.
   - மனுதாரர், மின் பிறப்பாக்கி இயந்திர நிபுணத்துவத்தின் EM3 அல்லது அதற்கு மேற்பட்ட தரப்படுத்தலின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. ஒப்பந்தம் தொடர்பாக தகுதி பெற தேவையான தகுதிகள்.
   a) கடந்த (5) வருடங்களுக்குள் மேற்கொண்ட குறைந்தபட்ச பொது வருடாந்த விற்பனைப் புரள்வாக 30 மில்லியன் ரூபாய் இருக்க வேண்டும்.
   b) கடந்த 05 வருடங்களுக்குள் குறைந்தபட்சம் 125kVA அல்லது அதற்கு அதிகமான மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் நிறுவல்கள் மூன்றினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் தேசிய AIDS தடுப்பு வேலைத்திட்டம், டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலக முகவரியில் விலைமனு ஆவணங்களை பரிசோதிக்க முடியும்.
6. ஆர்வமுள்ள மனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தின் மூலம் மற்றும் மீள செலுத்தா ரூ.2,500/- கட்டணத்தினை செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு தொகுதியினை, 2024.06.10 முதல் 2024.07.01 வரை, அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்து திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை (அவ் இரண்டு நாட்களும் உட்பட) 9.00 முதல் 3.00 மணித்தியால காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

   உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட 2024.07.03 திகதி 10.00 மணித்தியாலத்தில், பிரதியுடன் பின்வரும் முகவரிக்கு கடித உறையில் இட்டு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தேசிய AIDS வேலைத்திட்டம், 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 எனும் முகவரியில் உள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "2024, 10.00 மணித்தியாலமளவில் (Prime Rated) 125KVA Standby Generator வழங்கல் மற்றும் ஸ்தாபித்தல்" என எழுத வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் ரூ.500,000.00 விலைமனு பாதுகாப்புத் தொகையுடன் முன்வைக்கப்பட வேண்டும். விலைமனு அழைப்பு முடிவு திகதி 119 நாட்கள் செல்லுபடியாக வேண்டும்.
8. அழைப்பு இறுதி திகதி முதல் 91 நாட்கள் வரை விலைமனு செல்லுபடியாக வேண்டும்.
9. விலைமனு ஏற்பு திகதி முடிவடைந்தவுடன் உடனடியாக விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதி நிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

பணிப்பாளர்
தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்டம்
29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.
தொலைபேசி இலக்கம் : 011-2696433



சுகாதார அமைச்சு

### தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்டம்
விலைமனு அழைப்பு அறிவித்தல

**NSACP ஆய்வகத்தை மறுசீரமைத்தல் - 1ம் கட்டம்**

1. கொழும்பு 10, தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்டத்திற்காக அமைச்சரவை கொள்முதல் குழுவின் தலைவர் மூலம் தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்டத்தின் ஆய்வகத்தின் முன்மொழியப்பட்ட நடவடிக்கை - 1ம் கட்டத்திற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

   இதன் நடவடிக்கைகளுக்கு பிரதானமாக தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்ட கட்டிடத்தில் உள்ள ஆய்வகத்தினை மறுசீரமைப்பதற்காக, புதிய வீட்டுபகரணங்கள் வழங்கல் மற்றும் மலசலகூட புதுப்பித்தல் ஆகியன உள்ளடங்கும்.
   இவ்விடம் இலக்கம் 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் அமைந்துள்ளது.
   கட்டுமானக் காலம் 90 நாட்கள்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.
3. இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்குத் தகுதிபெற, விலை மனுதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருக்க கூடாது. மேலும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
   - இவ் ஒப்பந்ததாரர் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டிட கட்டுமான நடவடிக்கைகளுக்கான C4 அல்லது C5 தர பதிவினை பெற்றிருக்க வேண்டும்.
   - 1987, 03ம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 1ம் பிரிவிற்கமைய 5.0 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான அனைத்து விலைமனுக்கும் (சட்டத்தின் 2ம் பிரிவிற்கமைய) பொது ஒப்பந்த பதிவாளரினால் வெளியிடப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழினை வைத்திருக்க வேண்டியமையினால் அவர் அதனை பெற்றிருக்க வேண்டும்.
4. ஒப்பந்தம் தொடர்பாக தகுதி பெற தேவையான தகுதிகள்:
   - கடந்த ஐந்து வருடங்களுக்குள் மேற்கொண்ட கட்டுமான நடவடிக்கைகளின் குறைந்தபட்ச விற்பனைப் புரள்வு 35 மில்லியன் இலங்கை ரூபாயாக இருக்க வேண்டும்.
   - குறைந்தது 35 மில்லியன் ரூபா பெறுமதியான மற்றும் கடந்த ஐந்து வருடங்களில் இதே போன்ற சிக்கலான கட்டிட நிர்மாணத் திட்டத்தில் பிரதான ஒப்பந்தக்காரராகப் பணிபுரிந்திருக்க வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் தேசிய AIDS தடுப்பு வேலைத்திட்டம், டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலக முகவரியில் விலைமனு ஆவணங்களை பரிசோதிக்க முடியும்.
6. ஆர்வமுள்ள மனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தின் மூலம் மற்றும் மீள செலுத்தா ரூ.10,000/- கட்டணத்தினை செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு தொகுதியினை, 2024.06.10 முதல் 2024.07.01 வரை, அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்து திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை (அவ் இரண்டு நாட்களும் உட்பட) 900 முதல் 1500 மணித்தியால காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட 2024.07.02 திகதி 10.00 மணித்தியாலத்தில், பிரதியுடன் பின்வரும் முகவரிக்கு கடித உறையில் இட்டு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தேசிய AIDS வேலைத்திட்டம், 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 எனும் முகவரியில் உள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "2024, 10.00 மணித்தியாலமளவில் NSACP ஆய்வகத்தை மறுசீரமைத்தல் - 1ம் கட்டம்" என எழுத வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் ரூ.330,000.00 விலைமனு பாதுகாப்புத் தொகையுடன் முன்வைக்கப்பட வேண்டும். விலைமனு அழைப்பு முடிவு திகதி 04 மாதங்கள் வரை செல்லுபடியாக வேண்டும்.
9. 2024.06.26 ம் திகதி 10.00 மணித்தியாலத்தில், கொழும்பு 10, டி சேரம் பிளேஸ், NSACP மாநாட்டு அறையில் மனுத்திறப்பிற்கு முன்னைய சந்திப்பு நடைபெறுவதுடன் அதன் பின்னர் கள பரிசோதனை நடைபெறும்.

பணிப்பாளர்
தேசிய STD/AIDS தடுப்பு வேலைத்திட்டம்
29, டி சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.
தொலைபேசி இலக்கம் : 011-2696433



### விசேட அறிவித்தல்

**புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியை முறையாக நிறைவேற்றுதல்**

புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான சகல காணிப் பாவனையாளர்கள் மற்றும் புதிய விண்ணப்பதாரிகள் இணையதளத்தின் ஊடாக https://pms.railway.gov.lk என்ற இணையதள தொடர்பு ஊடாக 2024.07.15ம் திகதிக்கு முன்பு பதிவு செய்தல் வேண்டும்.

2024.07.15ம் திகதிக்கு பதிவு செய்யாத சகல அனுமதிபெறாத பதிவாளர்களையும் புகையிரத வளாகங்களில் இருந்து அகற்றுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கையெடுப்பதாக அறிவித்துக் கொள்கிறேன்.

பொது முகாமையாளர்,
இலங்கை புகையிரதத் திணைக்களம்.



### RAJARATA UNIVERSITY OF SRI LANKA
**Centre for Distance and Continuing Education (CDCE)**
**DIPLOMA IN ENGLISH (EXTENSION) - YEAR 2024/2025 (INTAKE 24)**
**(Online or Physical mode) conducted by**
**Department of English Language Teaching**
**Faculty of Social Sciences & Humanities**

Applications are invited for the above program from those employed in the public and the private sectors and school leavers. Applicants should possess the following entry requirements.

A. A candidate should have passed General Certificate of Education (Advanced Level) Examination, **or** an equivalent qualification **or** a course equivalent to SLQF level 2 (Sri Lanka Qualifications Framework) **or** NVQ 4 (National Vocational Qualification) **and**
- Credit pass (C)for English at GCE (O/L) **or**
- Pass (S) for General English at GCE (A/L) **or**
- Basic or Professional English Certificate from a recognized university **or**
- Pass at the National Certificate in English (NCE) **or**
- Pass at the compulsory English examination conducted by a university as a requirement for the award of a degree **or**
- A degree in English medium from a recognized university. **or**

Any other qualification, the Board of Studies may, on case-by-case evaluation, consider suitable and acceptable to the Senate **or**

B. An Advanced Certificate in English from a recognized university

In addition, the candidates have to sit for a written or oral selection test conducted by the University.

**Duration**
One Year (Saturday or Sunday-Day Time or Evening)

**Course**
This course includes lessons and activities to improve advanced Listening, Speaking, Reading and Writing skills and Grammar. The course includes a Literature component as well.

The course is conducted **both in the physical/in-campus mode and the online mode** according to the preference of the candidate. **The examinations are conducted in-campus physically.**

**Fees**

| | | |
|---|---|---|
| Course Fee | - | Rs. 30,000/= |
| Examination Fee | - | Rs. 2,500/= |
| Registration Fee | - | Rs. 1,000/= |
| Total | - | Rs. 33,500/= |

(With the option of paying in 2 installments: Rs. 21,000/= + Rs.12, 500/=)

**Applications**
Application forms and further information could be downloaded from **www.rjt.ac.lk/notice** or **http://cdce.rjt.ac.lk/cdce/news.php** or obtained by personally visiting the university. Completed application should be sent to **Deputy Registrar, Centre for Distance & Continuing Education, Rajarata University of Sri Lanka, Near Sarvodaya, Bulankulama Disawa Mawatha, Stage II, Anuradhapura** along with a copy of the birth certificate, copies of educational certificates, and the bank slip after depositing the **selection fee of Rs.500.00** credited to Account No. 5022233 of Rajarata University of Sri Lanka at Bank of Ceylon, Mihintale Branch (Payment could be made at any branch of Bank of Ceylon).

**Extended Closing Date of Applications: 20.06.2024**

*Inquiries : Coordinators - 0716858691 , 0714349191*
*Department of English Language Teaching - 025 -2266802*
*Centre for Distance and Continuing Education - 0252260120*

**Academic Coordinator**
**Rajarata University of Sri Lanka**
**Mihintale**
09.06.2024

# முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவின் நூல் பிரதி வழங்கல்




The Pathfinder Foundation இன் ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சரும், இந்தியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகருமான மிலிந்த மொரகொட அண்மையில் வெளியிட்ட "மலரும் யுகத்திற்குப் புதியதோர் வடிவம்" என்ற நூலின் பிரதியை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் எம்.ஐ.எம்.ரிஸ்வே முப்தியிடம் அண்மையில் கையளித்தார். கொழும்பில் உள்ள இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் (ACJU), அலுவலகப் பணியாளர்கள் மற்றும் ACJU இன் செயற்குழு உறுப்பினர்களும் நூல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.


## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

"வாழ்க்கையை மாற்றியமைக்கும் கற்றல் அனுபவத்திற்காக"



**தினவரவு மாணவர்களுக்கான கட்டண அடிப்படையிலான பட்டப்படிப்பு கற்கை நெறிகள் 2024/2025 (முழுநேரம்)**

**கட்டண அடிப்படையில் பட்டப்படிப்பை தொடர்வதற்கு பொருத்தமான தகைமையுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் – இரத்மலானை இல் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகள்**

| பட்டப்படிப்பு கற்கைநெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | உ/தர பிரிவு |
|---|---|---|
| **பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைப் பீடம் (FDSS)** | | |
| உபாய கற்கை மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஏதேனும் ஒரு பிரிவு |
| **மருத்துவ பீடம் (FOM)** | | |
| இளநிலை மருத்துவம் மற்றும் அறுவையியல் (MBBS) | 05 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் |
| **பொறியியல் பீடம் (FOE)** | | |
| வான்வெளி பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் |
| உயிர்மருத்துவ பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| கட்டிட சேவைகள் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| கட்டிட பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| பொறிமுறை பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| பொறிமுறை இலத்திரனியல் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| கப்பல் கட்டுமானம் மற்றும் கடல்சார் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | | |
| விமான பராமரிப்பு விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/உயிரியல் விஞ்ஞானம்* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| **சட்ட பீடம் (FOL)** | | |
| சட்டமாணி | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/பௌதீக விஞ்ஞானம்/ வர்த்தகம் மற்றும் கலை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| **முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம் (FMSH)** | | |
| முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப விஞ்ஞான விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம் |
| முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப விஞ்ஞான விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம் |
| விநியோக முகாமைத்துவ விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம்/ தொழிநுட்பவியல் |
| விநியோக முகாமைத்துவ விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ தொழிநுட்பவியல் |
| சமூக விஞ்ஞான விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஏதேனும் ஒரு பிரிவு |
| சர்வதேச வணிகம் மற்றும் பொருளாதார விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஏதேனும் ஒரு பிரிவு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| பிரயோக தரவு விஞ்ஞான தொடர்பாடல் விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம்/ தொழிநுட்பவியல் / கலை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| பிற மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் கலைமாணி (TESOL) | 03 வருடங்கள் | ஏதேனும் ஒரு பிரிவு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| விஞ்ஞானமாணி முகாமைத்துவம் (மெட்ரோபொலிடன் வளாகம் – கொழும்பு இனால் நடாத்தப்படும் பாடநெறி) | 03 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம்/ தொழிநுட்பவியல் |
| வணிக பகுப்பாய்வு விஞ்ஞானமாணி (கௌரவம்) (மெட்ரோபொலிடன் வளாகம் – கொழும்பு இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம்/ தொழிநுட்பவியல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| நிதி பகுப்பாய்வு விஞ்ஞானமாணி (கௌரவம்) (மெட்ரோபொலிடன் வளாகம் – கொழும்பு இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம்/ தொழிநுட்பவியல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |


| பட்டப்படிப்ப கற்கை நெறி | காலம் | உ/தர பிரிவு |
|---|---|---|
| **கணினி பீடம் (FOC)** | | |
| கணினி விஞ்ஞான விஞ்ஞானமாணி (கௌரவம்) (CSSL இன் முழுமையான அங்கீகாரம் பெற்றது) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ஏனையவை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ஏனையவை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| கணினி பொறியியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ஏனையவை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| தரவு விஞ்ஞானம் மற்றும் வணிக பகுப்பாய்வு விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ஏனையவை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) (CSSL இன் முழுமையான அங்கீகாரம் பெற்றது) (தெற்கு வளாகம் - சூரியவெவ இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம் / வர்த்தகம் / கலை |
| தகவல் முறைமை விஞ்ஞானமாணி (கௌரவம்) (CSSL இன் முழுமையான அங்கீகாரம் பெற்றது) (தெற்கு வளாகம் - கொழும்பு இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம் / வர்த்தகம் / கலை |
| **இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் (FAHS)** | | |
| தாதிய விஞ்ஞானமாணி (கௌரவம்) (கட்டணம்/கட்டணமின்றி) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம் |
| இயன் மருத்துவ விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *உயிரியல் விஞ்ஞானம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *உயிரியல் விஞ்ஞானம் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| கதிர் வீச்சியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *உயிரியல் விஞ்ஞானம் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| கதிர் வீச்சு சிகிச்சை விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *உயிரியல் விஞ்ஞானம் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| மருந்தகவியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *உயிரியல் விஞ்ஞானம் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| **தொழிநுட்ப பீடம் (FOT)** | | |
| கட்டுமான தொழிநுட்ப பொறியியல் தொழிநுட்பமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *தொழிநுட்பவியல் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| கட்டிட சேவை தொழிநுட்ப பொறியியல் தொழிநுட்பமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *தொழிநுட்பவியல் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| உயிரி மருத்துவ கருவியாக்க தொழில்நுட்ப பொறியியல் தொழிநுட்பமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *பௌதீக விஞ்ஞானம் / *தொழிநுட்பவியல் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| பிரயோக உயிரில் தொழிநுட்ப உயிரியல் தொழிநுட்பமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் / *தொழிநுட்பவியல் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தொழிநுட்பமாணி (கௌரவம்) (மெட்ரோபொலிடன் வளாகம் – கொழும்பு இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் / *பௌதீக விஞ்ஞானம் / தொழிநுட்பவியல் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| **குற்றவியல் நீதி பீடம் (FOCJ)** | | |
| குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம் / கலை* *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |

**சூரியவெவ தெற்கு வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்**

| பட்டப்படிப்பு கற்கைநெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | உ/தர பிரிவு |
|---|---|---|
| **சூழலியல் மற்றும் இடம் சார் விஞ்ஞான பீடம் (FBESS)** | | |
| கட்டிடக்கலை இளமாணி (கௌரவம்) | 05 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம் / *கலை *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| அளவையியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) Pathway programme (2+2) with the Western Sydney University, Australia for the Bachelor of Construction Management (Honours degree) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / *ஏனையவை *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| அளவையியல் விஞ்ஞான விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம் / *ஏனையவை *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| தொழிற்துறை மற்றும் சேவைத் தர முகாமைத்துவ விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | பௌதீக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வர்த்தகம் / கலை |
| சொத்து மற்றும் முதலீட்டு முகாமைத்துவ விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஏதேனும் ஒரு பிரிவு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| புவிசார் தகவலியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஏதேனும் ஒரு பிரிவு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |

- 2022 அல்லது 2023 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர் தரம் அல்லது கேம்பிரிஜ் / எடெக்சல் உயர் தரம் அல்லது அதற்கு நிகரான வெளிநாட்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் MBBS தவிர்ந்த ஏனைய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.
- 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர் தரம் அல்லது 2024 ஆம் ஆண்டில் கேம்பிரிஜ் / எடெக்சல் உயர் தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மாத்திரம் MBBS கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த. உயர் தர பரீட்சையில் ஒவ்வொரு பிரிவிலும் அகில இலங்கை ரீதியில் 1 தொடக்கம் 50 வரையான நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும். விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது



- பல்கலைக்கழக வளாகத்திற்குள் கிடைக்கும் தன்மையினைக் கொண்டு தங்குமிட வசதிகள் வழங்கப்படலாம்

பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணனி வவுச்சர் வழங்கப்படும்

**i3 - LKR 75,000 | i5 - LKR 125,000 | i7 - LKR 175,000** (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

உங்களது தகவலினை கண்டறிந்து விண்ணப்பிக்க கீழுள்ள இணையத்தளத்தினை பார்வையிடுங்கள்.

**www.kdu.ac.lk**

ஒன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 30 ஜூன் 2024

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை 10390, இலங்கை.

The Association of Commonwealth Universities | ECFMG | World Directory of Medical Schools | Sri Lanka Medical Council | WESTERN SYDNEY UNIVERSITY | CSSL | ECSL

**Tel : 0112635039, 0112632028, 0112635268, 0112638656 Ext. : 326,329 Email : kdudayscholar@kdu.ac.lk**





# பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவது அரசியலமைப்பின் பிரதான கோட்பாடு





அரசியலமைப்புக்கு அமைவாக நாம் பௌத்த மதத்திற்கு முன்னுரிமையை வழங்க வேண்டும் என்றும், இந்தக் கோட்பாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு நிறைவேற்று, சட்டவாக்க சபை மற்றும் நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் எவருக்கும் விவாதிக்க முடியாது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதனை மாற்ற வேண்டிய தேவை யாருக்காவது இருக்குமானால் உடனடியாகச் சென்று அரசியலமைப்பை மாற்றுமாறும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார். கடந்த 01ஆம் திகதி ஹோமாகம, கிரிவத்துடுவவில் நிர்மாணிக்கப்பட்ட "குருதேவ் சுவ அரண ஹிலன் பிக்சு மத்தியஸ்தான" வைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் நிறைவேற்று, சட்டவாக்க சபை மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளும் பௌத்த கோட்பாட்டிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்கு ஒத்துழைப்பை வழங்காதிருப்பது அரசியலமைப்பை மீறும் செயலாகும் எனவும், அரசியலமைப்பை பாதுகாப்பதற்கு பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

மக்களின் இறைமை, பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்குதல், பிராந்திய ஒருமைப்பாட்டைப் பேணுதல் என்பனவே இந்த நாட்டின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கோட்பாடுகளாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்தக் கோட்பாடுகளைப் பாதுகாத்து நாம் எப்போதும் முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனவும் அவற்றிற்கு எதிராகப் பேசுவதும் அரசியலமைப்பை மீறுவதாகும் என்றும் வலியுறுத்தினார்.

அதேபோன்று, மரணத்தைத் தழுவும் நிலையில் இருந்த நோயாளியைக் குணப்படுத்தும் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாவும், அந்த நோயாளி தற்போது படிப்படியாகக் குணமடைந்து வருவதாகவும், இந்த வேலைத்திட்டத்தின் போது இந்நாட்டு மகா சங்கத்தினரிடமிருந்து கிடைக்கும் வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இதன் போது அங்கு உரையாற்றிய ஜனாதிபதி தனதுரையில் மேலும் கூறியதாவது,

“இலங்கையில் பிக்குகளுக்காக கட்டப்பட்ட முதலாவது வைத்தியசாலை இதுவாகும். எமது நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் துறவிகளுக்கான வார்ட்கள் இருந்தன. எனினும் இது துறவி வார்ட் அல்ல. இந்த மருத்துவமனை நோய்வாய்ப்பட்ட துறவிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய உதவி செய்த தென் கொரியாவைச் சேர்ந்த Neunghaeng பிக்குனி தலைமையிலான அனைவருக்கும் எமது அரசாங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்காக சுகாதார சுதேச அமைச்சின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும், இவ் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் அரசாங்கம் உதவி வழங்கவுள்ளது. இப்போது அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டும் என வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன் சட்ட நிலைமைகள் தொடர்பில் கூறுவதானால் எமது நாட்டில் அனைத்து குடிமக்களுக்கும் அவரவர் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை உள்ளது. அதேபோன்று எந்த மதத்திலும் நம்பிக்கை கொள்ளாதிருப்பதற்கான உரிமையும் உள்ளது.

இதற்கு மேலாக, எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என எமது அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. அந்தப் பொறுப்பு அரசுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்படியானால், அரசாங்கத்திற்குரிய மூன்று பிரிவினரான ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்று அதிகாரம், சபாநாயகர் தலைமையிலான பாராளுமன்றம் மற்றும் பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை ஆகிய மூன்று துறைகளின் ஒத்துழைப்பும் இதற்காகக் கிடைக்க வேண்டும்.

இந்த ஒத்துழைப்பை வழங்காதிருப்பது அரசியலமைப்பிற்கு எதிரானதாகும். பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் அரசியலமைப்பை பின்பற்றுவோம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். அதேபோன்று நாம் அனைவரும் அந்த அரசியலமைப்பை பின்பற்ற வேண்டும். இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்ற போதிலும் இவ்வாறானதொரு கோரிக்கை இதுவரை எவராலும் முன்வைக்கப்படவில்லை. அது தொடர்பில் விவாதிக்கப்படவுமில்லை.

இந்த நாட்டில் நிறைவேற்று, சட்டவாக்க சபை, நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளும் பௌத்த கோட்பாட்டிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். வழங்கப்படும் ஒதுக்கீடுகள் தொடர்பில் எம்மால் வாதப் பிரதிவாதங்களை முன்வைக்கலாம். எனினும் கோட்பாடுகள் தொடர்பில் எம்மால் வாதிட முடியாது. அரசாங்கம் என்ற வகையில் நாம் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். இதை யாரேனும் மாற்ற விரும்பினால் அரசியலமைப்பை மாற்ற வேண்டும்.

மக்களின் இறையாண்மை, பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் நாட்டின் பிரிவினையின்மை அதாவது பிராந்திய ஒருமைப்பாடு என்பன எமது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அடிப்படை விடயங்களாகும். நாம் இதனை அடிப்படையாகக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும். இதில் எதற்கு எதிராகவாவது பேசுவது அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படுகிறது. இன்று இந்த வைத்தியசாலையில் பல நோயாளிகள் உள்ளனர். அவர்களில் ஒரு நோயாளியை குணப்படுத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணிக்கும் நிலையிலிருந்த நோயாளியை நாம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகக் குணப்படுத்தி வருகிறோம். தொடர்ச்சியாக நாம் இது தொடர்பில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறோம். உலகில் எந்த நோயாளியும் திடீரெனக் குணமாகுவதில்லை. இந்த நோயாளியைக் குணப்படுத்த இன்னும் மூன்று முதல் நான்கு ஆண்டுகள் ஆகும். எனினும் இந்தப் பணியை மேற்கொள்ள எங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த வேலைத்திட்டத்திற்கு மகா சங்கத்தினரிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கு இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

கொஹுவல ஸ்ரீ தாத்துமாலுவின் தற்போதைய விகாராதிபதி பிட்டிகல சோனுத்தர நாயக்க தேரர் கருத்துக் கூறுகையில் “நாட்டில் மிகவும் கடினமான ஒரு காலகட்டம் இருந்தது. அத்துடன் நாட்டில் வரிசை யுகம் இருந்தது. எனினும் எமது ஜனாதிபதி இந்த நாட்டைப் பொறுப்பேற்றதன் பின்னர் இன்று இந்த நிலையான நிலையை எம்மால் அடைய முடிந்துள்ளது.

இது சந்தேகமில்லாமல் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மையாகும். அவர் நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வந்ததால் தான் இன்று இந்த சமய விழாவை நடத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதை எப்போதும் நன்றியுடன் நினைவுகூருகிறோம். குறிப்பாக மிகவும் பணிமிகுந்த சூழ்நிலையிலும் கூட இன்று இந்தப் பணியில் பங்குபற்றியதற்காக ஜனாதிபதிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.



மகா விஹாரவன்ஷிக ஸ்ரீலங்கா ராமன்ய மகா நிகாயவின் மகநாயக்க அக்கமஹா பண்டித மகுலேவே விமலாபிதான நாயக தேரர், மகா விஹாரவன்சிக ஸ்யமோபாலி மகா நிகாயாவின் மல்வத்து விஹார தரப்பின் அனுநாயக்க கலாநிதி நியங்கொட விஜிரசிரி நாயக தேரர், பம்பலப்பிட்டி ஸ்ரீ வஜிராராமாதிபதி ஸ்ரீலங்கா அமரபுர தர்மரக்சித நிகாயவின் மகாநாயக்க அக்கமஹா பண்டித, திருகோணமலை ஆனந்த தேரர் உள்ளிட்ட மூன்று நிக்காயாக்களின் மகாநாயக்க மற்றும் அனுசாசக தேரர்கள், நிக்கவரட்டிய சமதராபிட்டிய ஸ்ரீபாலித வித்யாயதன பிரிவெனவின் விகாராதிபதி ஸ்ரீலங்கா ராமஞ்ஞ நிகாயவின் அனுசாசக ராஜகிரிய பண்டித தேரர் கலபிட்டியாகம விமலதர்ம நாயக்க தேரர், உள்ளிட்ட பெரும் திரளான தேரர்கள் மற்றும் தரப்பினரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

டொயோட்டா கோஸ்டர் 33 ஆசனங்கள் ஆட்ஜெஸ்டபில் சீட் ஒட்டோ கதவு. மெனுவல் கியர். 15B என்ஜின் உரிமையாளரின் பதிவு. 0777 631831. 037402

## வர்த்தகம்

### 234 இயந்திராதிகள்/கை கருவிகள்

பாவித்த அல்லு புதிய Sheering Mchine and Bending Machine தேவை. 6mmx2500mm தொடர்பு 070 6723953. 038256

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

வத்தளையில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு மின் சாரம் குழாய் நீர் மற்றும் சாதாரண பராமரிப்பு விடயங்களில் அறிவுடைய ஊழியர்கள் தேவை. பியகமவுக்கு கிளீனிங் சுப்பவைசர் மற்றும் ஊழியர்கள் தேவை. பியகமவுக்கு பகலுணவு இலவசம். அழையுங்கள் 077 5731669, 076 3166991, 072 3873934. 038105

Shearing Machine and Bending Machine Opera tor அனுபவமுள்ள ஒப்பரேட்டர் தேவை. 070 6723953. 038259

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

எமது உணவகத்திற்கு அனுபவமுள்ள திறமை வாய்ந்த ரைஸ் கொத்து பாஸும் ரைஸ் அன்ட் கறி பாஸ்மாரும் தேவை. வெயாங்கொட. 075 9565603. 038522

பிங்கிரிய பிரபல ஹோட்டலுக்கு வேலை தெரிந்த கொத்து பாஸ் உடன் தேவை. கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள். 0706333810. 038135

ரைஸ் கொத்து பாஸ் மற்றும் சகல வேலைகளும் தெரிந்த வெயிட்டர் 2025 வயதிற்கிடையில். 077 3603159 பன்னல. 037939

### 325 தொழில்துறை பொது

எமது தொழிற்சாலையில் சேவைக்காக 18 வயது முதல் 40 வயதிற்கிடைப்பட்ட ஆண்கள், கைத்தொழில் ஊழியர்களாக சேர்த்துக் கொ ள்ளப்படுவர். மாதாந்த சம்பளம் ரூ. 40, 000/ மேலதிக மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் ரூ. 50, 000/ இற்கு மேல் பகல் உணவுடன் தங்குமிடம் இலவசம். முகாமையாளர். ஐஸ் குயூப்ஸ் தனியார் நிறுவனம், இல. 9, புதிய வீதி, ஹுனுப்பிட்டி, வத்தளை. 077 6819009. 038086

டயர் வேலை தெரிந்த ஊழியர் தேவை. 07 1 3416383. 037935

ஹோமாகம கைத்தொழில் பேட்டையில் உற்பத்தி தொழிற்சாலைக்கு உற்பத்தி பிரிவிற்கு ஊழியர் வெற்றிடம் உண்டு. வயது 18 26 இற்கிடையில்/ சாதாரணம் பயின்ற (சித்தியடைதல் கட்டாயமில்லை)/ பகல் இரவு முறை மாற்று வேலை செய்யும் ஆற்றல்/ மாதாந்தம் 45,000/ முதல் 75000/ வரையாக வருமானத்தை ஈட்டக் கூடி யதுடன் தங்குமிடம், காலையுணவு, மருத்துவ வசதிகள் மற்றும் ஏனைய கொடுப்பன வுகள் உண்டு. தகவல்களை அனுப்புங்கள் ஈமெயில் aplproductionjobs@gmail.com அழையுங்கள் 077 8869803 (manpower நிறுவனத்திற்கு வாய்ப்பு உண்டு.) 038392

www.adz.lk
it's what you want

## காணி/தோட்டம்

### 613 பலகைக் குற்றிகள்

தெஹிவளை, ஹில் வீதி புதிதாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. 9.5 பே. 2 மாடி தனியான நுழைவாயில். 7 படுக்கையறைகள், 5 குளியலறைகள், 2 பவுடர் அறைகள், தனியான இரு மின்சாரம்/ நீர் மீட்டர்கள். தரகர் தேவையில்லை. 91.5 மில்லியன். 0713693999. 034945


### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

60.76 பர்ச்சஸ் வர்த்தகத்திற்கு குடியிருப்புக்கு ஏற்ற வெற்று காணி விற்பனைக்கு உண்டு. கொழும்பு 05, திம்பிரிகஸ்யாய வீதி, (அபயாராம விகாரைக்கு முன்னால்) அனுமதிக்கப்பட்ட திட்டம் உண்டு. விலையை பேசி தீர்மானிக்கலாம். தொ/ இல. 071 8098673/ 076 0375925 (புரோக்கர்கள் தேவை இல்லை) 038082

### 630 வீடு சொத்து காலி மாவட்டம் விற்பனைக்கு

பலபிட்டிய வெல்லபட 395.39 பேர்ச் காணி விற்பனைக்கு. mobile No. 076-9309953. 038062





இலங்கையின் முப்படையில் கடமையாற்றும் முஸ்லிம் உறுப்பினர்களுக்கு ஹஜ் கடமையை நிறைவேற்ற சவூதி அரேபியா அரசாங்கம் இம்முறை முதல்முறையாக வாய்ப்பளித்துள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனின் வேண்டுகோளுக்கு அமைய, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரலாற்றில் முதல் தடவையாக ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதன் நிமித்தம் இராஜாங்க அமைச்சர் தென்னகோன், சவூதி அரேபியத் தூதுவர் அல் கஹ்தானியை அவரது கொழும்பு அலுவலகத்தில் சந்தித்து நன்றி தெரிவித்து அளவளாவிய போது பிடிக்கப்பட்ட படம். இச்சமயம் அரச ஹஜ் குழு உறுப்பினர் மில்பர் கபூர், பாதுகாப்பு துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

48 பேர்ச் காணி விற்பனைக்கு ராகம- கனேமுல்ல வீதியில் நாரங்கொடபாலுவ, பட்டுவத்த, ராகம. 5 நிமிட வாகன பயணத்தில் தேவத்தை பசிலிக்கா,ராகம நகரம்/ ஆஸ்பத்திரி மற்றும் பட்டுவத்த சந்திக்கு. 5 நிமி நடையில் வல்பொல புகையிரத நிலையத்திற்கு.

தயவு செய்து 074 13 989 11 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

LANDS FOR SALE
**WATTALA**
2 ACRES AND 6 ACRES AND 40 PERCHES AND 80 PERCHES
IDEAL FOR **WAREHOUSE FACTORY**
CONTACT
**0712 791 881**

ராகம பட்டுவத்த சந்தியில் 52 பேர்ச் காணி விற்பனைக்கு. 1 நிமிடத்திற்கு குறைவான நேரத்தில் பன்சல மற்றும் பட்டுவத்த புகையிரத நிலையத்திற்கு. ராகம, கம்பஹா, கந்தானை மற்றும் கனேமுல்ல இற்கு பஸ் சேவையுண்டு.

தயவு செய்து 0741398911 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.




பத்தரமுல்ல, பெலவத்த, பாகொட கார்டன்ஸ் இல் 22 பேர்ச் காணி விற்பனைக்கு. 5 நிமிடத்திற்கு குறைவான நேரத்தில் பெலவத்த சந்தி மற்றும் வெளிநாட்டு பாடசாலைக்கு

தயவு செய்து 0741398911 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.




**20** PERCHES LAND FOR SALE IN
**MOUNT LAVINIA**
OFF TEMPLERS ROAD
CORNERSTONE
**3.1 MILLION** (per perch & Negotiable)
Features
20 Feet Road Access
Wide Road Frontage
Can be subdivided
Highly Residential Neighbourhood
CONTACT US 077 122 3643
www.cornerstone.lk

URGENT SALE (DUE TO OVERSEAS PLANS)
**LAND IN COLOMBO 5**
IN POLHENGODA ANDERWATTE ROAD
6.07 PERCHES
**43 MILLION**
• 30 FEET ROAD ACCESS
• HIGHLY RESIDENTIAL AREA
Easy Access to Baseline Road, Nawala, and Park Road.
0777 435 904

**LAND CRUISER V8**



DIESEL - USED BY FIRST OWNER FROM 2015
**0777 446 631**

**MORATUWA**
GALLE ROAD FACING PROPERTY
CORNERSTONE
- Suitable for any business. (Showroom)
- Highly Footfall Commercial Area

36 PERCHES **250 MN**
70+ FEET ROAD FRONTAGE
CALL 077 122 3643

10 MINUTES DRIVE TO HIGHWAY INTERCHANGE FROM EVERY PROJECTS
NS RESIDENCIES

| NITTABUWA | YAKKALA | GIRIULLA |
|---|---|---|
| Rs. 255,000/- | Rs. 585,000/- | Rs. 142,000/- |
| 0701 57 57 57 | 0705 777 222 | 0706111 777 |
| **IBBAGAMUWA** | **POLGAHAWELA** | **KADAWATHA** |
| Rs. 85,000/- | Rs. 139,500/- | Rs. 845,000/- |
| 0701 76 76 76 | 0704 666 111 | 0704 333 999 |

Rs. 85,000/- PER PERCH UPWARDS
PAY RS. 50,000/- AND RESERVE YOUR PLOT TODAY

**PENTHOUSE** FOR SALE IN **COLOMBO 4**
**160 MILLION**
04 BEDROOMS 04 BATHROOMS
3000 SQFT
• 3 Parking slot
• Servant quarters
• 10th floor
• TV Room
• Uninterrupted view
0777 435 904

**PELAWATTA - BATTARAMULLA**
PRIME RESIDENTIAL LAND FOR SALE
13 Perch Square shaped bare land within 200 metres to Pelawatta junction for sale.
- SERIOUS BUYERS ONLY -
**0777 772299**




**VACANCY**
**OIL REFINERY COMPANY REQUIRES**
**Retired officer (Male)**
Age 50-60
Around Colombo area.
Monday to Friday
SEND CV TO
**M. Aadil**
No. 41 Col T.G. Jayawardana Mawatha, Colombo 03.
E mail :
mohamedaadil939@gmail.com




**AGRO TOURISM LANDS**
FOR SALE

**For sale :** 600 perch River front land in **Rambukkana, Kegalle District.** 3-phase electricity, 15 ft road access. Aboundant jack, Mahogany, Mango, Ebony, Kalumadiriya & Kumbuk trees. Perfect for Conamon Coffee, Agarwood, Vanilla plantations. Ideal for agriculture, Agro- tourism or Villa project. 10 min drive to Pinnawala Elephant orphanage & Pinnawala Zoo. 5 min drive to Central Expressway Rambukkana Exit. **Price Negotiable**

**For Sale :** 5-acre Paddy Field and 33 perch housing block near **Mawathagama, Kandy District.** 33 perch adjoining Villa land with scenic views of the paddy field and Alagalla mountain range. Ideal for agriculture, Agro-tourism Villa project or Green House project. 12 ft access road, 3-phase electricity. 20min drive to Nothern Highway Kurunegala Exit. **Price Negotiable**




CONTACT OWNER : **0777 765 873/ 0773 067 790**

OFFERS CONSIDERED
6.5m PP
More Information call us
071-484-3733
LAND TOTAL EXTENT 19.9 Perches



**PRIME SALE**
Ample Spaces on Building, 3 Large Name Boards for Long Distance, Iron Pole for 2 LOGO Boards + On the Roof

Prime Location in Galle Road, Rawatawatta, Moratuwa.

FEATURES
- 2 Floors on 7.5 Perches
- 23 Feet road frontage to Galle Road
- Western Boundary Galle Road
- Car parking lot for total 20 cars
- Infront of Rawatawatta Petrol Shed
- 15 Feet Wide Road (Additional)
- In between Cargills Supermarket and Union Assurance

ceo@sfacolombo.lk

WhatsApp Inquires
+1 (281) 771-6755

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



**Corolla 141 KJ-XXXX Mint Condition. Sale or Exchange. Dammika Motors - Kalubowila - 0777880800 / 0777224500**
1472 - 1



**Axio 2014/15 CAG - XXXX White & KX - XXXX Meroon Sale or Exchane - Dammika Motors - 0777880800 / 0777224500**
1472 - 2

# படித்ததும் பகர்வதும் 194






சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்!




கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியானதைத் தொடர்ந்து, அது பற்றிய பேச்சுக் களே எங்கும் பரவலாக இடம் பெறுவதைக் காணலாம். அதிலும் குறிப்பாக 'வாட்ஸ்எப்' முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களில் பலரும் இப்பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிட்டு வருகின்ற னர். இம்முறை நாடளாவிய ரீதியில் இந்த கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 229,057 பாடசாலை பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளதோடு 40,556 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என 269,613 பேர் தோற்றியிருந்தனர் எனவும், இவர்களில் 27,970 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ள புள்ளி விபரங்களை நோக்கும் பொது பல விடயங்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வருட பரீட்சை பெறுபேறுகள் சாதனை அதிகரிப்பை காட்டுவதாக தெரிவித்துள்ள அவர், விண்ணப்பித்தவர்களில் 173,444 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாகவும் இது 64.33 வீதமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

2023 உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ஆண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வீழ்ச்சியையும், பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகரிப்பையும் காட்டுவதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார்.நாட்டின் எதிர்கால கல்வியைத் திட்டமிடுபவர்களும், கல்வியியலாளர்களும், சமூக சேவையாளர்களும் இந்த புள்ளிவிபரங்களை நன்கு ஆராய்ந்து, மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்கும் வழிவகைகளை செய்தல் வேண்டும். இது அவர்கள் மீதுள்ள தார்மீகப் பொறுப்பாகும். இதேவேளை, பரீட்சையின் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதை தவிர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல மாணவர்கள் தங்கள் பரீட்சை முடிவுகளை முகநூலில் பதிவிடுவதைப் பார்க்கிறோம். அதை செய்யக்கூடாது. அந்த பரீட்சை எண்ணில் இருந்து வேறு ஒருவரின் விண்ணப்பம் அல்லது தேசிய அடையாள அட்டையின் எண் யாருக்காவது தெரிந்தால், அந்த விண்ணப்பத்தை நிரப்பினால், கேள்விக்குரிய மாணவருக்கு அதை மீண்டும் நிரப்ப இரண்டாவது வாய்ப்பு கிடைக்காது.


அது நடந்தால், நீண்ட காலத்திற்குப் பிறகு, முழு கணினி செயல் முறையையும் மாற்றிய பின்னரே சட்டப்பூர்வ உரிமையாளரால் இந்த அணுகலைப் பெற முடியும். எனவே பரீட்சார்த்திகளோ, அவர்களது உறவினர்களோ தயவு செய்து பரீட்சார்த்தியின் பரீட்சை எண்ணை ஃபேஸ்புக் அல்லது சமூக ஊடகங்களில் வெளியிடுவதைத் தவிர்க்கவும்." என்று பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்திருகிறார்.இவற்றை ஒவ்வொருவரும் கவனத்தில் எடுத்து செயல்படுவதே புத்திசாலித்தனமானது.

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### 'கம்பன் விழா 2024'

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் 'கம்பன் விழா 2024', அடுத்த வாரம் 14ஆம் திகதி முதல் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 2020 ஜனவரி/பெப்ரவரி மாதங்களில் நடாத்தப்பட்டதற்குப் பின்னர், நான்கு ஆண்டுகள் கழிந்து இவ்வருடம் இவ்விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

கம்பவாரிதி இ. ஜெயராஜ் 1980 இல் யாழ்ப்பாணத்தில் வைத்து, முதன் முதலாக அகில இலங்கை கம்பன் கழகத்தை தோற்றுவித்தார். அது முதல் 1995ஆம் ஆண்டு வரை 13 கம்பன் விழாக்களை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடத்தி சாதனை புரிந்தார்.



1995இலிருந்து அகில இலங்கை கம்பன் கழகம், கொழும்பில் இயங்க ஆரம்பித்ததுடன் 2003 இல் 'கம்பன் கோட்டம்' என்ற பெயரில் கொழும்பு 6, வெள்ளவத்தையில் கம்பன் கழகத்துக்கென தனிக் கட்டடம் ஒன்றையும் நிர்மாணிப்பதில் கம்பவாரிதி ஜெயராஜ் வெற்றி கண்டார். இப்போது அங்கிருந்தே அகில இலங்கை கம்பன் கழகம் செயற்படுகிறது.

1995இலிருந்து கொழும்பில் இயங்கும் இலங்கை கம்பன் கழகம், தொடர்ச்சியாக வருடாந்தம் கம்பன் விழாக்களை நடத்தி வருகிறது. அவ்வப்போது தவிர்க்க முடியாத காரணங்களினால் ஓரிரு வருடங்களில் கம்பன் விழாக்கள் நடாத்தப்படுவது தடைப்பட்டாலும், பெரும்பாலும் கம்பன் விழாக்களை தொடர்ச்சியாக நடத்தி வந்தமை பாராட்டுக்குரியது.

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் கம்பன் விழா நடைபெறுவது தமிழ் பேசும் மக்களுக்கு உற்சாகம் அளிப்பதாக உள்ளது. "கம்பன் புகழ் பாடி கன்னித் தமிழ் வளர்ப்போம்" என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படும் கம்பன் கழகம் மூலம், செந்தமிழ் சிறப்பாக வளர்க்கப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது.

இவ்வருட கம்பன் விழாவில் தனியுரைகள், விவாத அரங்கு, கவியரங்கு, கருத்தரங்கு, நாடக அரங்கு, சிந்தனை அரங்கு, பட்டிமன்றம், வழக்காடு மன்றம், அஞ்சலி அரங்கம், பரிசளிப்பு அரங்கம், எனப் பல அரங்குகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இலங்கை, இந்தியா மலேசியா உட்பட பல நாட்டு அறிஞர்கள் பங்கு பற்றி பங்களிப்பு செய்ய உள்ளனர்.



அறக்கட்டளை விருதுகள் வழங்கல், சான்றோர் விருதுகள் வழங்கல் என பல முக்கிய பிரமுகர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் இவ்வருட கம்பன் விழாவை கம்பவாரிதி இ. ஜெயராஜ் வழிகாட்டலில் ஏற்பாடு செய்துள்ளவர்களை பாராட்டுவதோடு இவ்விழா எல்லா வகையிலும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

## சிந்தனை செய் மனமே

### எது விவேகம்?

பொழுது போகாத சிலர் ஒன்று சேர்ந்து சில நாய்களுக்கும் ஒரு சிறுத்தைக்கும் இடையில் எந்த விலங்கு வேகமாக ஓடுகிறது என்று பார்க்க ஒரு போட்டியை ஏற்பாடு செய்தனர்.

போட்டி நடத்துனர் போட்டியை ஆரம்பிக்க வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். எல்லா நாய்களும் வேகமாக ஓட ஆரம்பித்தன. ஆனால் சிறுத்தை தன் இடத்தை விட்டும் கொஞ்சமும் நகரவே இல்லை. போட்டியை பார்க்க கூடியிருந்த அனைத்து மக்களுக்கும் ஆச்சரியம்.

"என்ன இது. என்ன நடந்தது? ஏன் சிறுத்தை ஓடவில்லை?" என்று போட்டி நடத்துனரிடம் எல்லோரும் ஒன்றாகக் கேட்டார்கள்.



அதற்கு அவர் அமைதியாகச் சொன்ன பதில் தான் மிகவும் அபாரமானது. அவர் இப்படிக் கூறினார்.

"சில சமயங்களில் நீங்கள் சிறந்தவர் என்பதை மற்றவர்களுக்கு நிரூபிப்பது கூட ஒரு அவமானம் போன்றதுதான். சிறுத்தை அதன் வேகத்தை வேட்டையாடுவதற்கு மட்டுமே பயன்படுத்தும். அது தன் வேகத்தையும், திறனையும், ஆற்றலையும், வலிமையையும் ஒரு சில நாய்களுக்கு நிரூபிக்க வேண்டியதில்லை. அதனால் தான் சிறுத்தை ஓடவில்லை."

இது எல்லோருக்கும் நல்ல படிப்பினையாகும். நம் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில், பல சூழ்நிலைகளில், பல்வேறுபட்ட நிலைமைகளில் "நாம் சிறந்தவர்கள்" என்பதை எல்லோருக்கும் நிரூபிக்க முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. அப்படி செய்வது நமக்குத்தான் அவமானம். அது வீணான ஒரு முயற்சி மட்டுமல்ல. கூடவே கால, பொருள், ஆற்றல், நேர விரயமும் தான் என்பதை ஒவ்வொருவரும் தமது நினைவில் வைத்திருக்க வேண்டும்.

தேவையில்லாதவர்களிடம், தகுதியற்றவர்களிடம், பொறாமைக்காரர்களிடம், சுயநலவாதிகளிடம், கோமாளிகளிடம், பொருத்தமற்றவர்களிடம் எவரும் தமது தகுதியை, திறமையை நிரூபிக்கத் தேவையில்லை. அது புத்திசாலித்தனமான செயலாக இருக்க முடியாது. அத்தகைய சந்தர்ப்பங்களில், அமைதியாக அவர்களை கடந்து செல்வதுவும், அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் போதுமான இடைவெளியை பேணி வாழ்வதுமே சிறந்த புத்திசாலித்தனமாக இருக்கும்.

## நலமே வாழ்வோம்

### எங்கும் வெள்ளம் – எச்சரிக்கை!



வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் வாழும் மக்கள் தமது ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு எச்சரிக்கையோடு நடந்துகொள்ளுமாறு கோரியுள்ள சுகாதார மேம்பாட்டு பணியகம், மிக முக்கியமான வழிகாட்டுதல்களையும் அறிவித்துள்ளது.

வெள்ள நீரில் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள் இருக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம் என்பதால் வெள்ள நீரில் நடப்பதையோ நீந்துவதையோ இயன்ற அளவில் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வெள்ளத்தின் ஊடாக பயணிக்கும் போது லெப்டோஸ்பைரோசிஸ் அல்லது எலிக்காய்ச்சல் போன்ற தொற்றுக்களை தடுத்துக்கொள்வதற்காக இயன்றவரை இறப்பர் பூட்ஸ், கையுறைகளை அணிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைகளும், சிறுவர்களும் வெள்ள நீரில் விளையாடுவதை முடிந்த வரை தவிர்க்கவும். குழந்தைகள், சிறுவர்கள், மற்றும் செல்லப் பிராணிகளை அசுத்தமான தண்ணீரிலிருந்து விலக்கி வைப்பதன் மூலம் நோய்கள் தொற்றுவதிலிருந்து தடுத்துக்கொள்ள முடியும்.

அழுக்கு நீரையோ. வெள்ள நீரையோ பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும்.

இவற்றைக் குடிப்பதற்கு, சமைப்பதற்கு அல்லது குளிப்பதற்கு பயன்படுத்தவும் கூடாது. பாதுகாப்பான தண்ணீரை மட்டுமே அருந்தவும். நீரினால் பரவும் நோய்களைத் தவிர்க்க, குறைந்தபட்சம் கொதிக்க வைத்த தண்ணீரை அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தவும். நிரம்பிய கிணறுகளின் நீரை பயன்படுத்துவதை முடிந்த வரை குறைக்கவும்.

இக்காலத்தில் நோய் அறிகுறிகளைப் புறக்கணிக்காதீர்கள். எவருக்கேனும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், மருத்துவ கவனிப்பைத் தேடுவதில் தாமதிக்காதீர்கள்.

வெள்ள நீர் நுளம்பு பெருக்கத்தை அதிகரிக்கும். எனவே, உங்கள் வீட்டைச் சுற்றி நுளம்புகள் பெருகும் இடங்களை குறிப்பாக தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்றவும்.

உணவைப் பாதுகாப்பாக சேமித்து வைப்பதுடன் உணவு மாசுபடுவதைத் தடுக்க, வெள்ளம் ஏற்படாத அல்லது வெள்ள பாதிப்புக்கு உள்ளாகாத பகுதிகளில் உணவைச் சேமித்து வைக்கவும். கைகளை எப்போதும் சோப்பு போட்டு கழுவவும், குறிப்பாக சாப்பிடுவதற்கு முன் அல்லது உணவு தயாரிக்கும் முன் கழுவுவது அவசியம். எவருக்கேனும் நோய் அறிகுறிகள் தென்பட்டால், அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்குச் செல்லவும் அல்லது மருத்துவ ஆலோசனையைப் பெறுதல் வேண்டும்.

## தகவல் களஞ்சியம்

### நீல நிறமாகும் கறுப்பு வீதிகள்



வீதிகள் கடுமையான நிறத்தில் இருக்கும் போது சூரிய வெப்பத்தை குவிப்பதாலும் வெப்பத்தை உறிஞ்சுவதன் மூலமும் அதிக வெப்பநிலையை தோற்றுவிக்கின்றன. இளம் நிறங்கள் வீதிகளில் இருந்து சூரிய ஒளியை தெறிக்கச் செய்வதன் மூலம் வீதிகளின் மேற்பரப்பினது வெப்ப நிலையைக் குறைக்கின்றன.

அத்துடன் நீல நிறப் பூச்சு, வாகனங்களின் சக்கரங்களை பாதிப்பது குறைவு என்பதுடன், அவற்றின் பயன்பாடு கூடுதலாக இருக்கும். நீல நிறப்பூச்சு வீதிக்கு ஒரு தனித்துவமான மற்றும் வித்தியாசமான வடிவத்தையும் வழங்குகின்றது.

கட்டார் எப்போதும் புதுமையான தொழில்நுட்பங்களுக்கு முன்னோடியாக இருந்து வரும் நாடாகும். அந்த வகையில் வீதிகளில் கடுமையான வெப்பநிலையை குறைக்க கட்டார் அரசாங்கம் இந்த புதிய முறையைக் கையாண்டுள்ளது. வீதிகளை கறுப்பு நிறத்தில் இருந்து நீல நிறமாக மாற்றத் தொடங்கிய உலகின் முதல் நாடு கட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேசும் படம்




**காலுக்கு செருப்பில்லையே என்றழுதேன்
காலே இல்லாதவனைக் காணும்வரை..!**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# காணாமல் போய் விட்டாளே துர்கா! கண்டுபிடியுங்களேன் அவளை சுருக்கா!

"நேற்றிரவு கொழும்புக்கு சென்ற புகையிரதத்தில் தான் அவள் போனாள். கிராகம வரையில் எனது காரிலேயே அவளை அழைத்துச் சென்று நான்தான் அந்த ஸ்டேஷனில் அவளை ஏற்றி விட்டேன்! உங்களுடன் எல்லா விஷயங்களையும் கதைத்துக் கொண்டிருப்பாள் என்றுதான் நான் நினைத்தேன்!"

சொலமன் இப்படிச் சொல்லும் போது,

அவர் மேனியிலும் ஒருவித படபடப்பு ஊர்ந்து சென்றதை சிரஞ்சீவி கவனிக்கத் தவறவில்லை.

"ம் அவள் போகும் போது எதையாவது கொண்டு போனாளா?"

"சூட்கேஸ் ஒன்றை மட்டும்தான் கொண்டு போனாள் ஏன் ஏதாவது தவறு நடந்துவிட்டதா?" பதற்றத்துடன் கேட்டார் சொலமன்.

"நாங்கள் வரும்வரை வீட்டை விட்டு எங்கும் போகமாட்டேன் என்று எனக்கு வாக்குக் கொடுத்திருந்தாளே !" உடைந்து போன குரலில் சொன்னார் சிரஞ்சீவி.

"எனக்கும் இது கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கிறது!"

"எது வியப்பாக இருக்கிறது?"

"உங்களுக்கும் அவள் போகும் விஷயம் தெரியும் என்பதைப் போல்தான் அவள் நடந்து கொண்டாள்!"

"இரவு எங்கே தங்கப் போகிறேன் என்பதைப் பற்றி ஏதாவது சொன்னாளா?"

"இல்லை அதைக் கேட்க வேண்டிய அவசியமும் எனக்கு இருக்கவில்லை!"

அடுத்து,

தனது அறைக்குச் சென்ற சிரஞ்சீவி,

வேலனை அழைத்து,

"எங்கே வேலன் துர்கா அம்மா, அவங்க எங்கே போனாங்க ?" கோபத்தால் கோலம் போட்ட படியே கேட்டார்.

"அதைப்பற்றித்தான் சேர் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்! நீங்கள் சொன்னதைப் போல் நேற்றுப் பகல் நான் நன்றாகத் தூங்கினேன். நான் எழுந்திருந்த போது மாலை ஐந்து மணியாகியிருந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில்தான் அந்தம்மா போயிருக்காங்க கார் போன நேரத்தையும் வந்த நேரத்தையும் மட்டும்தான் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது!"

"அவங்க போவதாக எதையும் உங்களிடம் சொல்லவில்லையா?"

இல்லையென்பதைப் போல்,

தலையை ஆட்டினான் வேலன்,

பிறகு,

"சொலமனின் அறைக்குள் அமர்ந்து ஏதோ புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்த அந்த அம்மா தனது சப்பாத்தில் கிளம்பியிருந்த ஆணி ஒன்றை கழற்றித் தரும்படி என்னிடம் சொன்னார். ஆனால் அவர் இங்கிருந்து போவதைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. சப்பாத்தில் இருந்த அந்த ஆணியை கழற்றிக் கொண்டு கொடுக்கச் சென்ற போது தொலைபேசி அலறிக் கொண்டிருந்தது. நான் சப்பாத்தைக் கொடுத்துவிட்டு வந்து விட்டேன் !"

அவன் இப்படிச் சொன்னதும்,

சிரஞ்சீவி மெல்லத் திரும்பி,

பக்கத்தில் நின்ற சிந்துஜனைப் பார்த்தார்!

அவன் முகம்,

ஒரு கிழவனின் முகத்தைப் போல் சுருங்கிப் போயிருந்தது!

"இதோபார் சிந்துஜா இதற்குமேலும் தாமதிக்கக் கூடாது, நீ உடனே போய் பொலிசில் ஒரு தகவல் கொடுத்து விட்டு வா ! நான் தலைமை அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கிறேன்!" அவசரமாகச் சொன்னார் சிரஞ்சீவி.

"மாமா அவளுக்கு ஏதும் ?"

சிந்துஜனின் வார்த்தைகள் தடுமாறின!

"ஆமாம் அவளுக்கு ஏதோ ஆபத்தென்று நினைக்கிறேன் முன்பு அவள் தலைமறைவானதைப் போல், இதை நினைக்க முடியாது. என் மனதிற்குள் ஏதோ ஓர் உணர்வு ஓடிக் கொண்டிருக்கிறது " தாழ்ந்த குரலில் சொன்னார் சிரஞ்சீவி.

"இதோ பாருங்க சிரஞ்சீவி நான் இப்போது காரை எடுத்துக் கொண்டு கிராகமவுக்குப் போகிறேன். அதேநேரம் பொலிசுக்கும் தகவல் கொடுக்கிறேன். நீங்களும் கொழும்புக்கு போன் பண்ணுங்கள். இது யாரோ ஒருவர் செய்திருக்கும் சதி என்றுதான் நான் நினைக்கிறேன்!" என்றார் சொலமன்.

"சதியா?" வியப்புடன் கேட்டபடியே அவரை உற்றுப் பார்த்தார் சிரஞ்சீவி.

"ஆமாம் தோமஸ் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார். அதே நேரம் அவருக்காக எந்த பொய்யை வேண்டுமானாலும் சொல்லுவாள் துர்கா!"

"ம் அதுவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் தான்!" தலையை ஆட்டிய படியே சொன்னார் சிரஞ்சீவி!

அடுத்து,

விரைந்து நடந்து சென்ற சொலமன்,

கிராகமவை நோக்கிப் பயணமானார்!

சில மணித்தியாலங்களுக்குப் பிறகு அவர் திரும்பி வந்த போது,

அவர் முகம் வாடிப் போயிருந்தது!

அதைப் பார்த்ததும்,

அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை என்பதை சிரஞ்சீவி புரிந்து கொண்டார் அதேநேரம்,

சிரஞ்சீவியின் பெயருக்கு மின் அஞ்சல் ஒன்று வந்திருந்தது.

அது,

துர்காவிடமிருந்து வந்திருந்தது.

பரபரப்புடன்,

அதைத் திறந்து பார்த்த சிரஞ்சீவி,

மகிழ்ச்சியில்,

வாய்விட்டுக் கத்தி விட்டார்.



அவர் மகிழ்ச்சிக்குக் காரணம்,

கொழும்பு சேரம் மாவத்தையில் உள்ள 60 ஆம் இலக்க வீட்டிற்கு உடனே சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு வரவும். நான் மிகவும் பாதுகாப்பாகவே இருக்கிறேன். எனக்கு முக்கியமான தகவல் ஒன்று கிடைத்திருக்கிறது. வேலனைச் சந்திப்பதற்கு சுனேத்ரா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்!"

"யார் இந்த சுனேத்ரா?" வேலனின் பக்கம் திரும்பிக் கேட்டார் சிரஞ்சீவி.

"நான் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணின் பெயர்தான் அது துர்கா. அம்மா சொன்ன அந்தப் பகுதியில் தான் அவளும் இருக்கிறாள்!" வேலனின் வார்த்தைகளில்,

சிறிது நாணமும் கலந்திருந்தது!

நிம்மதியான பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டான் சிந்துஜன்,

"அப்பாடா துர்கா பாதுகாப்பாக இருக்கிறாள் என்பதைக் கேள்விப்பட்ட பிறகு தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது!" என்றான்.

"சரி இப்போதே நாம் கொழும்புக்குப் போகத் தயாராக வேண்டும். ம் வேலாக உனக்கும் எங்களுடன் வர முடியும். நீ போய் உடனே தயாராகி வா!" என்றார் சிரஞ்சீவி.

அன்று மாலை புறப்பட்ட புகையிரதத்தில்,

மூன்று பேரும்,

இரண்டாம் வகுப்பு ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள்.

அதேநேரம்,

மூவரும் பலமான சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள்!

திடீரென்று,

"ச்சீ நான் சரியான ஒரு முட்டாள் !" என்று கத்தினார் சிரஞ்சீவி!

மற்ற இருவரும்,

அவரை வியப்புடன் பார்த்தார்கள்.

"ம் வேலா நீங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வதற்காக உங்கள் இருவரது பெயர்களையும் நோட்டிஸ் போர்ட்டில் போட்டீர்கள் தானே?" அவன் பக்கம் திருப்பிக் கேட்டார் சிரஞ்சீவி.

"ஆமாம் ஏன் சேர்?"

"ஒரு பத்திரிகை ஒன்றிலும் இரண்டு பேர்களுடைய புகைப்படத்துடன் அது போடப்பட்டிருந்ததல்லவா?"

அவர் இப்படிக் கேட்டதும்,

வியப்புடன் அவரைப் பார்த்தான் வேலன்!

"ஆமாம் சேர் ஆங்கில பத்திரிகை ஒன்றிலும் தமிழ் பெண்களுக்கான பத்திரிகை ஒன்றிலும் அதைப்பற்றி பிரசுரித்திருந்தார்கள்!"

"இந்தத் தந்தியின் மீது எனக்கு இப்போது சந்தேகம் வந்திருக்கிறது!" என்று சொல்லிவிட்டு,

மீண்டும் சிந்தனையில் மூழ்கினார் சிரஞ்சீவி.

பொழுது நன்றாக விடியாத அந்த நேரத்தில்,

சேரம் மாவத்தையில் அமைந்திருந்த 60ஆம் இலக்க வீட்டைக் கண்டுபிடிப்பதற்கு அவர்களுக்கு சிரமமேதும் இருக்கவில்லை!

ஆனாலும்,

அது ஒரு முஸ்லிம் அன்பருக்குச் சொந்தமான தேநீர்க் கடையாக இருந்தது.

தான் அப்படி ஒரு தந்தியைக் கொடுக்கவில்லையென்றும்,

துர்கா என்ற பெயரில் எந்த பெண்மணியும் அங்கே வரவில்லை என்றும், தூக்கக் கலக்கத்தில் எழுந்து வந்த காதர் என்ற அந்த கடை முதலாளி சொன்னார்.

இந்தத் தகவலினால்,

ஏமாற்றமடைந்த மூவரும்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்!

"ம் இப்போது என்ன செய்வது மாமா ?" கரகரத்த குரலில் கேட்டான் சிந்துஜன்.

"நாம் போய் சுனேத்ராவைச் சந்தித்து விசாரித்துப் பார்ப்போம்!" என்றான் வேலன்.

அடுத்து,

எல்லோரும் அங்கே போனார்கள்!

ஆனாலும்,

அங்கு ஏமாற்றம்தான் அவர்களுக்கு காத்திருந்தது.

துர்காவை அவள் சந்திக்கவில்லையென்றும்,

இது சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாதென்றும் சுனேத்ரா சொன்னாள்.

"இது ஒரு தந்ரோபாயம் என்பது புகையிரதத்தில் வரும்போதே எனக்குத் தோன்றியது" என்றார் சிரஞ்சீவி.

"என்ன மாமா சொல்றீங்க?" இமைகள் படபடக்கக் கேட்டான் சிந்துஜன்!

அவனை உற்றுப் பார்த்தார் சிரஞ்சீவி.

(தொடரும்)

லங்கா சதொச

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## லங்கா சதொச லிமிடெட்டின் தல்கஸ்வல விற்பனையகத்தின் புனரமைப்பு மற்றும் சீரமைப்பு

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/62/Renovation-Thalgaswala/2024

தேசிய போட்டிரீதியான விலைமனு

லங்கா சதொச லிமிடெட்டின் தல்கஸ்வல விற்பனையகத்தின் புனரமைப்பு மற்றும் சீரமைப்புக்காக C6 தரங்களுக்கு மேற்பட்ட முன்னுரிமை அடிப்படையில் CIDA (நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை) உடன் பதிவு செய்யப்பட்ட தகைமை மற்றும் அனுபவம் உடைய நிர்மாண ஒப்பந்ததாரர்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடெட்டின் திணைக்கள பெறுகைக் குழு**, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்தப் பெறுகையின் மதிப்பீடப்பட்ட செலவு 11.5 மில்லியன் ரூபாவாகும்.

**விலைமனு ஆவணக் கட்டணமாக (மீளளிக்கப்படாத) 2,500.00 ரூபாவை செலுத்தி 2024 ஜூன் 10 ஆம் திகதி தொடக்கம் 2010 ஜூலை 01 ஆம் திகதி வரை (திங்கள் தொடக்கம் வெள்ளி வரை) மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.15 வரை** கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெறலாம் என்பதோடு ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் கட்டணம் இன்றி விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024 ஜூன் 24 ஆம் திகதி** மு.ப. 11.00 **இற்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

விலைமனுக்களை **2024 ஜூலை 01 ஆம் திகதி** பி.ப. 01.00 **அல்லது அதற்கு முன்னர்** பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/62/Renovation-Thalgaswala/2024"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் இயங்கும் உள்ளூரில் இயங்க உரிமம்/ பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட **(மீளளிக்கப்படும்) 115,000.00 ரூபா தொகையில் நிபந்தனையற்ற விலைமனு பிணை** ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுக்கள் 2024 ஜூலை 01 ஆம் திகதி பி.ப. 01.00 இற்கு** மூடப்படும் என்பதோடு அதன்பின் விலைமனுதாரர்களின் முன்னிலையில் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு, கீழுள்ள இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்,
திலினி – 070 1560428 (நிர்வாக விடயங்களுக்காக)

இந்த கேள்வி/ ஒப்பந்தம் தொடர்பில் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிடெட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** எடுக்கப்படும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடெட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

SPMC

# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

## சுகாதார அமைச்சு

அரச மருந்தாக்கங்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேவைப்படுத்தப்படும் தகைமைகளை கொண்டுள்ள இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. முகாமையாளர் - உற்பத்தி (எம்எம் 1-1)
2. முகாமையாளர் - தர கட்டுப்பாடு (எம்எம் 1-1)
3. முகாமையாளர் - உருவாக்கல் அத்துடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (எம்எம் 1-1)

விபரங்களுக்காக **https://www.spmc.gov.lk** என்ற அமகூ இணையதளத்தை பார்வையிடவும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 10 நாட்களுள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை அடையும் தன்மையில் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபாலினூடாக அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்க திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் நிறுவனங்களின் தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தெரிவு செய்யப்படின் விண்ணப்பதாரியானவரை விடுவிக்க இயலுமா என்பதையும் சான்றுபடுத்தல் வேண்டும்.

இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களுக்கு இணங்காத விண்ணப்பங் கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம் - இரத்மலான.**

09.06.2024

# ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## விலைமனுக்கோரல்

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட தேக்கு மரப்பலகையிலான தரை வேலைகள் மற்றும் பலகையிலான கைப்பிடிச் சட்டத்தினை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/08/2023**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட ஒலியியல் கூரை அமைப்பினை வழங்குதல், கட்டமைத்தல் மற்றும் நிறுவுவதற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2024.06.10 ஆம் திகதியிலிருந்து 2024.07.03 ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான (இலங்கை வங்கி கணக்கு இலக்கம் - 9405831) காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.6,500/- கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் **2024.06.10 முதல் 2024.07.03** ஆம் திகதி வரையான **அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449)**
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. **2024.07.04 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர்** (ஏற்பாட்டியல்), **இரத்மலான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி : 0710219449, ocrepair@kdu.ac.lk** மற்றும் **விலைமனுக்கோரலில் www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம்)

**தவிசாளர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலான,**
**இலங்கை.**

# தேசிய மாணவச்சிப்பாய் படையணி

## தேசிய மாணவச்சிப்பாய் படையணியில் அதிகாரவாணையுடைய அதிகாரிகளாக இணைந்துகொள்க

கல்வி நிர்வாக சேவை,கல்வியியலாளர் சேவை, அதிபர் சேவைகளின் தரங்களை சார்ந்தோரை தேசிய மாணவச் சிப்பாய் படையணியின் அதிகாரவாணையுடைய அதிகாரிகளாக இணைத்துக்கொண்டு மாணவச் சிப்பாய்களினை நாட்டின் எதிர்கால தலைவர்களாகவும் ஒழுக்கமுள்ள பிரஜையாகவும் மாற்றுவதற்கான சிறந்த சந்தர்ப்பம்.

### அடிப்படைத்தகுதிகள்

- இலங்கை பிரஜையாக இருத்தல்
- இலங்கை கல்வி நிர்வாக சேவை, கல்வியியலாளர் சேவை மற்றும் அதிபர் சேவையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினையுடையவராக இருத்தல்.

| கல்விச்சேவை | பாடநெறி காலம் | உள்ளீர்ப்பு செய்யப்படும் நிலை | உள்ளீர்ப்பு செய்யப்படும் வயது |
|---|---|---|---|
| அதிபர் சேவை தரம் III | 21 நாட்கள் | லெப்டினன்ட் | 42 வயதிலும் குறைந்தோர் |
| அதிபர் சேவை தரம் II | | லெப்டினன்ட் | 44 வயதிலும் குறைந்தோர் |
| அதிபர் சேவை தரம் I | | கெப்டன் | 50 வயதிலும் குறைந்தோர் |
| கல்வி நிர்வாக சேவை தரம் III<br>கல்வியியலாளர் சேவை தரம் III | | கெப்டன் | 44 வயதிலும் குறைந்தோர் |
| கல்வி நிர்வாக சேவை தரம் II<br>கல்வியியலாளர் சேவை தரம் II | | மேஜர் | 50 வயதிலும் குறைந்தோர் |
| கல்வி நிர்வாக சேவை தரம் I<br>கல்வியியலாளர் சேவை தரம் I | | மேஜர் | 52 வயதிலும் குறைந்தோர் |

- சிறந்த உடற் தகுதியுடையவராய் இருத்தல்.
- ஆண் விண்ணப்பதாரின் உயரம் - 160cm குறையாதிருத்தல் வேண்டும். பெண் விண்ணப்பதாரின் உயரம் - 150cm குறையாதிருத்தல் வேண்டும்.



### சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்கள்

- இலவச சீருடை
- வெளிநாட்டு பயணம் மற்றும் பயிற்சி நெறிகள்
- முப்படை மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களில் பயிற்சி நெறிகள்
- இணைப்புச் சேவையின் போது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்
- இணைப்புச் சேவையின் போது இலவச வைத்திய சலுகைகள்



விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2024 ஜூன் 25

விண்ணப்பம் மற்றும் மேலதிக தகவல்களுக்கு கீழ் வரும் இணையதளத்தில் பிரவேசிக்கவும்
www.cadet.gov.lk

forward your application to -
Brigadier Corps Secretery, Headquarters, National Cadet Corps, No. 15, Dutugemunu street, Pamankada, Dehiwala

More information.....
Brigadier Corps Secretary Branch
011-2815343
070-3613103
070-3613194

Headquarters
National Cadet Corps
No 15, Dutugemunu Street
Pamankada
Dehiwala

011 28 15343
ncchq.lk@gmail.com
www.cadet.gov.lk

කොළඹ
අඩුම මිලට Flex Printing
Lake House Digital Printing Unit

LAKE HOUSE DIGITAL PRINTING UNIT
අමතන්න 0112 695 677

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல்

1. 2024 ஆம் ஆண்டிற்கான பொறியியல் சேவைகளை செய்வதற்காக பொறியியல் பொருட்களின் வகைப்பாட்டின் கீழ் கொள்வனவு செய்வதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரை செய்யப்பட்ட மனுக்களாக பனாகொட, ஹோமாகமவில் உள்ள பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் (மேற்கு) இராணுவ டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவர் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலுக்கான கொள்முதல் ஆவணங்கள் பொறியியல் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் (மேற்கு) **இராணுவ முகாமின் நூலகம் - பனாகொடயில்** விலைமனுக்கள் **2024.06.10 ஆம் திகதி முதல் 2024.07.10** ஆம் திகதி வரை வார நாட்களில் **0900** மணி முதல் **1600** மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் **2024.07.11** ஆம் திகதி **1000 மணிக்கு** இராணுவ முகாமின் நூலகம் - பனாகொட, ஹோமகம என்ற முகவரியில் திறக்கப்படும்.

3. குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.promise.lk** என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

அ. பாதுகாப்பு படை தலைமையகம் (மேற்கு) கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 4057107

ஆ. படைத்தளபதி,
பாதுகாப்பு படை தலைமையகம் (மேற்கு)
பனாகொட,
ஹோமாகம.

DSL.ADE



අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION
SLGTI KILINOCHCHI

## SRI LANKA GERMAN TRAINING INSTITUTE
KILINOCHCHI
### PART TIME COURSES

ADMISSION OPEN

DEPARTMENT OF AUTOMOTIVE TECHNOLOGY
- Motor Vehicle Technology 1
- Motor Vehicle Technology 2

DEPARTMENT OF CONSTRUCTION TECHNOLOGY
- NVQ 6 - Construction Technology (TVEC certificate)
- NVQ 5 - Drafting Technology (TVEC certificate)
- Diploma in Auto CAD
- Diploma in Revit Architecture (BIM)
- Diploma in Computer Aided Drafting & Building Studies
- NVQ 4 - Surveying Field assistant (TVEC certificate)

DEPARTMENT OF INFORMATION COMMUNICATION TECHNOLOGY
- Advanced Surveillance and Technology Maintenance
- Foundations of Artificial Intelligence (AI)
- Full Stack Web Developer

DEPARTMENT OF MECHANICAL TECHNOLOGY
- Lathe Machine Operator 1
- Lathe Machine Operator 2
- Milling Machine Operator
- Gas Welding
- ARC Welding
- Mig & Tig Welding

DEPARTMENT OF FOOD TECHNOLOGY
- Bakery
- Laboratory Assistant

DEPARTMENT OF ELECTRICAL ELECTRONICS TECHNOLOGY
- Electrical Troubleshooting Technique
- Programmable Logic Controllers and Pneumatic Control System

Closing Date 09-07-2024

ENROLL NOW

For more details please visit : www.slgti.ac.lk 070 306 0138 021 492 7799
THE CENTER OF EXCELENCE



## இலங்கை மருத்துவப் பேரவை

### பதிவை மீள்புதுப்பித்தல் மற்றும் புதுப்பித்தல்

இலங்கை மருத்துவப் பேரவையின் பின்வரும் பதவி வகைகளுக்கு மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 26 A (1) மற்றும் 26 (A) (4) இன் கீழ் பதிவை மீள்புதுப்பித்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. மருத்துவச்சிகள் (பிரிவு 51) | 1. MIDWIVES (SECTION 51) |
| 2. மருந்தாளர்கள் (பிரிவு 56) | 2. PHARMACISTS (SECTION 56) |
| 3. மருத்துவ உதவியாளர்கள் (பிரிவு 60A) | 3. PARA MEDICAL ASSISTANTS (SECTION 60A) |
| • எலக்ட்ரோ கார்டியோகிரா.்.ப் பதிவுபடுத்துபவர் (1)(e) | • Electrocardiograph Recordists (1)(e) |
| • ஆடியோலஜிஸ்டுகள் (1)(f) | • Audiologists (1)(f) |
| • மருத்துவ உடலியல் நிபுணர்கள் (1)(g) | • Clinical Physiologists (1)(g) |
| • பேச்சு சிகிச்சையாளர்கள் (1)(h) | • Speech Therapists (1)(h) |
| • பாதசிகிச்சையாளர் (1)(i) | • Chiropodists (1)(i) |
| • உணவியல் நிபுணர்கள் (1)(j) | • Dietitians (1)(j) |
| • கண் மருத்துவ உதவியாளர்கள் (1)(k) | • Ophthalmic Auxiliaries (1)(k) |
| • எலக்ட்ரோஎன்செபலோகிரா.்.ப் பதிவுபடுத்துபவர் (1)(1) | • Electroencephalograph Recordists (1)(1) |
| • ஊட்டச்சத்து நிபுணர்கள் (1)(m) | • Nutritionists (1)(m) |
| • மருத்துவ உளவியலாளர்கள் (1)(n) | • Clinical psychologists (1)(n) |
| 4. மருத்துவத்திற்கான தொழில்முறை துணை (பிரிவு 60F) | 4. Professional supplementary to medicine (section 60F) |
| • ரேடியோகிரா.்.பர்கள் (1)(a) | • Radiographers(1) (a) |
| • மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் (1)(b) | • Medical Laboratory Technologists (1)(b) |
| • பிசியோதெரபிஸ்டுகள் (1)(c) | • Physiotherapists (1)(c) |
| • தொழில் சிகிச்சையாளர்கள் (1)(d) | • Occupational Therapists (1)(d) |

31.12.2019 அன்று அல்லது அதற்கு முன்னர் தமது முதன்மைப் பதிவை ((முதல் பதிவு) பெற்ற பயிற்சியாளர்கள், ஆனால் பதிவைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள் இலங்கை மருத்துவப் பேரவையின் www.slmc.gov.lk என்ற இணையதளத்தின் ஊடாக பதிவை மீள் புதுப்பிக்க இணைய அடிப்படையிலான விண்ணப்ப செயன்முறையை பின்பற்றலாம்.

SLMC பதிவு (பயிற்சிக்கான உரிமை) இல்லாமல் பயிற்சி செய்வது குற்றவியல் தவறாகும்.

**வைத்தியர் எச்.டி.பி.ஹேரத்**
**பதிவாளர்**
**இலங்கை மருத்துவப் பேரவை**
**31, நோரிஸ் கால்வாய் வீதி, கொழும்பு 10.**
**தொலைபேசி - 0717412222/0702538490**
**30.05.2024**



**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**

## மத்திய மின்கம்ப முற்றவெளிக்காக காணியொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவை – LECO வடக்கு இயக்கப் பிரதேசம்

**விலைக்கோரல் இல. LECO/24/NCB/PR3/200**

ஜா-எல, கந்தானை, வத்தளை, பேலியகொட அல்லது அதற்கு அண்மித்த பிரதேசங்களுக்கிடையில் (இந்தப் பிரதேசங்களிலிருந்து 5 கி.மீற்றருக்குள்) பிரதான வீதிக்கு முகப்பாக அல்லது அண்மையில் கனரக வாகனம் (Prime Mover Trucks) செல்லக்கூடிய 20 அடிக்குக் குறையாத அகலப் பாதை சகிதம் LECO விற்கு மத்திய மின்கம்ப முற்றவெளியாகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான சுமார் 350 - 400 பேர்ச் பரப்பளவுள்ள காணியொன்று வாடகைக்கு / குத்தகைக்குத் தேவை.

உத்தேச வாடகை அல்லது குத்தகைக் காலம் 03 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024-07-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்தப் பெறுகைக்கு இயைபான விலைமனு ஆவணங்களிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்தப் பெறுகைக்கான விலைமனு ஆவணங்களை www.leco.lk ("Tender Notice" Section) இணையதளத்திற்குப் பிரவேசித்து அல்லது www.promise.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது LECO பெறுகைப் பிரிவை 011-2371637 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் (விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு இலங்கை மின்சார நிறுவனத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்) அல்லது நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடலாம்.

இடப்பரப்பின் உரிமையாளர் மட்டும் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் விலைக்கோரல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானால் தயவு செய்து 011-2371600 என்ற தொலைபேசி எண்ணினூடாக (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) மேலதிக பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

PROCUREMENT NOTICE
www.leco.lk



## விலைமனுக்களுக்கான அழைத்தல்
சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

### சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியின் வெளியக விளையாட்டரங்கின் உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல்

1. கீழே விபரிக்கப்பட்டவாறு சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியின் வெளியக விளையாட்டரங்கின் உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ. 2211 சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியின் தலைவரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**வேலைகளின் நோக்கம்**:
சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியின் வெளியக விளையாட்டரங்கின் உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல்.

புதுப்பித்தல் வேலையானது இடித்தல், மாற்றுதல், பழுதுபார்த்தல் மற்றும் ஊடக கட்டிட மேல் மற்றும் கீழ் கிராண்ட் ஸ்டாண்ட் மற்றும் பொது மக்களுக்கான அமரும் பிரதேசத்தின் பராமரிப்பு வேலைகள், ஊடக கட்டிட புதுப்பித்தல் வேலைகளானது அனைத்து தூண்களைச் சுற்றியுள்ள பழுதுபட்ட அலுமீனியம் காவலிடப்பட்டவைகள், உத்தரங்கள், பழுதுபட்ட அலுமீனிய கதவுகள் மற்றும் யன்னல்கள் அடங்கலான அனைத்து இரும்பு ஆகியவற்றை அகற்றுதல் மற்றும் புதிதானவைகளை பதிலீடு செய்தல், தற்போதுள்ள கூரை மூடல்களை மற்றும் பழுதுபட்ட சட்டகமைப்பு வேலை ஆகியவற்றை அகற்றி சீலிங் அடங்கலான புதிய மூடல்கள் மற்றும் சட்டகமைப்புக்களை பதிலீடு செய்தல். கொன்கிறீட் வேலையின் வெடிப்புக்களை பழுதுபார்த்தல், உருக்கு கூரை அமைப்புக்கள் உருக்கு தூண்கள், உலோக உத்தரங்கள் மற்றும் பாதுகாப்பு கம்பிகள் ஆகியவற்றிற்காக மீள்பெயிண்ட் பூசுதல் சேவைகளான, மின்சாரம், வளிச்சீராக்கிகளை வழங்கல் மற்றும் நிறுவுதல் மற்றும் தரவு வலையமைப்பு மற்றும் பொது அழைத்தல் முறை ஆகியன. தற்போதுள்ள உருக்கு மேலேறும் இறங்கும் படிகளை பழுதுபார்த்தல், படிகளை கண்ணாடி முகப்பினால் மூடல் மற்றும் பெயிண்ட் பூசுதல். தற்போதுள்ள உருக்கு மேற்தளத்தின் பழுதுபார்த்தல் வேலை, பழுதுபட்ட பாகங்களை புதியவற்றினால் பதிலீடு செய்தல் மற்றும் பெயிண்ட் பூசுதல் வேலை.

கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியின் இடப்பரப்பில் அமைந்துள்ள மேல் மற்றும் கீழ் கிராண்ட் ஸ்டாண்ட் பிரதான கூரையின் இறுதியாகவுள்ள குடாவிலுள்ள கூரை உத்தரங்கள் அத்துடன் தற்போதுள்ள கூரையின் மூடல் மற்றும் பழுதாகியுள்ள சட்டகமைப்பு வேலை மற்றும் புதிய கூரை மூடல் மற்றும் கூரை உத்தரங்களை பதிலீடு செய்தல், அறைகளிலுள்ள சிறிய கூரை வேலையை அகற்றல் மற்றும் பதிலீடு செய்தல், கொன்கிறீட் வேலை/ செங்கல் வேலையின் வெடிப்புக்களை பழுதுபார்த்தல், பழுது பார்த்தல் வேலை மற்றும் அனைத்து உருக்கு கட்டமைப்புக்கள், உருக்கு தூண்கள், உருக்கு விட்டங்கள் மற்றும் பாதுகாப்பு வேலிகள். நிர்மாணக் காலப்பகுதியானது 180 நாட்களாகும். மொத்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது பெசேவ நீங்கலாக 71 மில்லியன் ரூபாவாகும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவாகியுள்ள விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளவராகவுமிருத்தல் வேண்டும். CIDA பதிவானது சி-4 அல்லது மேற்பட்டது (கட்டிடங்கள்)
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 150 மில். ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த செயற்றிட்டத்திற்கு மாத்திரம் தேவைப்படும் ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் கடன் வசதிகளின் தொகையானது 26 மில். ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த 5 வருடங்களில் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தின் நிர்மாண பெறுமதியானது 50 மில்லியன் ரூபா அல்லது மேற்பட்ட தொகையாகவிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியிலிருந்து பெற்று வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.06.11 ஆம் திகதியிலிருந்து 2024.06.28 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 17,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2024.07.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி தலைவரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளிப்பதற்கு விருப்பமுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் 710,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (119 நாட்கள்)
9. விலைமனுவானது 2024.09.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (91 நாட்கள்)
10. 2024.06.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி, வெளியக விளையாட்டரங்கு நிர்வாக கட்டிடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி,**
**த.பெட்டி 2211,**
**ஆர்தர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**


## விதிகளை மீறிய மைத்திரி...
(15 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த இரண்டு மேன்முறையீடுகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி குழு பிரதிவாதியின் மனுவினை நிராகரித்ததோடு, சட்டமா அதிபரின் மனுவிற்கு அனுமதியினை வழங்கியது.

இந்நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதித்து குற்றவாளிக்கு வழங்கப்பட்டிருந்த பன்னிரெண்டு வருட சிறைத்தண்டனையை மரண தண்டனையாக அதிகரிக்க இதன்போது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழு தீர்மானித்தது.

இந்த தீர்ப்பில் அதிருப்தி அடைந்த குற்றவாளியின் பெற்றோர்கள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்ததோடு, அந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றமும் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கி குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்க உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமின்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் உள்ளது என அறிவித்தது.

இதனடிப்படையில் குற்றவாளிக்கு மரண தண்டனையை வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அங்கீகரித்தது.

பின்னர் சிறையில் அடைக்கப்பட்ட ஜூட் சமந்தவுக்கு விசேட ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டு 2016ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி அப்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

பின்னர் 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ஜூட் சமந்த ஜயமகவுக்கு விசேட ஜனாதிபதி பொது மன்னிப்பை வழங்கி சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். அந்த பிரிவின் கீழ் சிறப்பு பொதுமன்னிப்பைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அன்றைய தினமே ஜூட் சமந்த நாட்டை விட்டு வெளியேறியதாக செய்திகள் வெளியாகின.

ஜூட் சமந்தவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப் போவதாக அதற்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்த முன்னாள் ஜனாதிபதி, அதற்கு காரணமாகக் குறிப்பிட்டிருந்தது, அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு அவரது பெற்றோர் தனிப்பட்ட முறையில் கோரிக்கை விடுத்ததாகவும், கோபத்திற்குள்ளான நிலையில் இடம்பெற்ற இந்தக் கொலை தொடர்பில் கொலையாளி வருந்தியதாகவும்தான்.

அரசியலமைப்பின் 34(1) ஆவது பிரிவின் கீழ், இலங்கையின் எந்தவொரு நீதிமன்றத்தின் தீர்ப்பின் கீழும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

இந்தப் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதற்கு எதிராக, பெண்கள் ஊடக அமைப்பு கூட்டணி என்ற அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியதன் ஊடாக இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகத் தீர்ப்பை வழங்கி, வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை இரத்து செய்யுமாறும் அது கோரியிருந்தது.

இந்த மனு மீதான விசாரணைகள் இடம்பெற்றதுடன், மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவும் பாதிக்கப்பட்டோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவும் விடயங்களை முன்வைத்தனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதன்போது விடயங்களை முன்வைத்தார். பல நாட்களாக நீடித்த இந்த மனு மீதான விசாரணையை முடித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு, கடந்த 6ஆம் திகதி இந்த வழக்கின் தீர்ப்பை அறிவித்தது.

இந்த மனுவை விசாரித்த எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதி குழுவினர் ஏகோபித்த தீர்ப்பாக அமைந்தது, பொதுமன்னிப்பு வழங்குவதில் மைத்திரிபால சிறிசேன நாட்டின் சட்டத்தை மோசமாக மீறியுள்ளார் என்பதேயாகும்.

குறித்த மனு மீதான இறுதித் தீர்மானத்தை ஏகமனதாக வழங்கிய மூன்று நீதிபதிகளும், அதற்கான காரணங்களை விளக்கி, முந்நூற்று ஆறு பக்கங்கள் கொண்ட மூன்று தீர்ப்புகளை தனித்தனியாக வெளியிட்டனர்.

அத்துடன் பத்து இலட்சம் ரூபா இழப்பீட்டை முறைப்பாட்டுத் தரப்பினருக்கும், தலா பத்து இலட்சம் கொண்ட இழப்பீட்டுத் தொகையை கொலை செய்யப்பட்ட யுவதியின் தந்தை மற்றும் சகோதரிக்கும் தனது சொந்த நிதியிலிருந்து வழங்குமாறும் மைத்திரிபால சிறிசேனவுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்போது நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ள ஜூட் சமந்தவை அவன் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து இந்நாட்டுக்கு அழைத்து வருவதற்காக நாடு கடத்தல் சட்டம் மற்றும் சர்வதேச மரபுகளின்படி செயல்படவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அவனை இலங்கைக்கு அழைத்து வந்தவுடன் மீண்டும் சிறையில் அடைக்க சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த கொலைச் சம்பவத்தில் குற்றவாளியான தொன் ஜூட் சமந்த அந்தோனி ஜயமகவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியதில், மன்னிப்புக்கான நடைமுறை முற்றாக புறக்கணிக்கப்பட்டு செயற்பட்டுள்ளதாகவும் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த பொது மன்னிப்பை வழங்கும் போது உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றாமையினால் அரசியலமைப்பின் 12(1) மற்றும் 34(1) ஆகிய பிரிவுகளை கவனத்திற் கொள்ளாமல் அந்தச் சட்டப் பிரிவுகளை மீறி முன்னாள் ஜனாதிபதி செயற்பட்டுள்ளார் எனவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் வழங்கப்படும் ஜனாதிபதி பொது மன்னிப்புக்களும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட முடியும் என நினைவூட்டியே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த துமிந்த சில்வாவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பையும் இதேபோன்ற அடிப்படை உரிமை மீறல் மனு மீது தீர்ப்பளித்து உச்ச நீதிமன்றம் இரத்து செய்தது.

ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைகளை முன்னாள் ஜனாதிபதி பின்பற்றவில்லை என உச்ச நீதிமன்றம் இதன்போது வலியுறுத்தியிருந்தது. எவரேனும் ஒரு சிறைக் கைதிக்கு பொதுமன்னிப்பு வழங்கும் போது ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரம் மாத்திரமன்றி அதற்குரிய முறையான சட்ட நடைமுறைகளை பின்பற்றுவது அத்தியாவசியமானது என்பதை நினைவூட்டுவதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

# சிறுவர் உலகம்

சுகந்தி



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 117

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | 07 | | 08 | 09 | 10 |
| | 11 | | 12 | | 13 |
| 14 | 15 | 16 | 17 | | 18 |
| 19 | | | | 20 | |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ........................................................

வகுப்பு ........................................................

தொலைபேசி இல ........................................................

பாடசாலை பெயர் ........................................................

வதிவிட முகவரி ........................................................

........................................................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) கண்களால் பார்த்து ரசிக்கக் கூடிய கலைப்படைப்பு இது.

(6) பூக்களால் தொடுக்கப்பட்டு கழுத்தில் அணிந்து கொள்வது. அந்திப்பொழுதையும் இச்சொல் குறிக்கும். (தலைகீழான சொல்)

(8) சூரியன் உதயமானதும் ஆரம்பமாகும் பொழுது.

(14) பண்டைய காலத்தில் இந்திய நாட்டில் அரச குடும்பப் பெண்கள் இந்த ஆபரணத்தை தமது காலில் அணிந்து கொண்டார்கள். சிலப்பதிகாரத்தில் இந்த ஆபரணம் முக்கியத்துவம் பெறுகின்றது. (தலைகீழான சொல்)

(21) மூத்த சகோதரி இவள்.

(24) வீதி, தெரு என்றெல்லாம் கூறக்கூடிய மற்றொரு சொல்.

### மேலிருந்து கீழ்

(1) தென்னை, பனை, ஈச்சை போன்ற மரங்களின் இலைக்குரிய மரபுச்சொல்.

(2) நாடுகளுக்கிடையேயான விரைவான போக்குவரத்துக்கு உதவுகின்ற போக்குவரத்துச் சாதனம்.

(4) சிற்பிகளால் வடிக்கப்படுகின்ற கலைப்படைப்பு இது. (தலைகீழான சொல்)

(5) மலர்களில் சிறப்பானதெனப் போற்றப்படுகின்ற மலர் இது. வெண்ணிறமான இந்த மலர் இந்து, பௌத்த ஆலய வழிபாடுகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. (தலைகீழான சொல்)

(14) வில்லில் இருந்து எய்யப்படுவது. அக்காலத்தில் போர் புரியவும், வேட்டையாடவும் பயன்படுத்தப்பட்டது. (தலைகீழான சொல்)

(20) பூட்டைத் திறப்பதற்குத் தேவையானது. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 116

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. எரிமலை 09. கோடி 11. மஞ்சு
17. சூறாவளி 21. தோடு 23. தவளை

**மேலிருந்து கீழ்**

01. கோடரி 04. மழலை 05. அசுவம் 09. நாடி
15. புறா 17. சூடு 19. வளை 20. வளி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 115

### பாராட்டு பெறுவோர்

**1. அமாஷ் எம். ஜின்னா**
தரம் 10, ஏத்துமுல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 325, ஏத்துமுல்ல, நாகொலாகொட.

**2. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை, கொழும்பு 10.

**3. எம்.ஆர். முஹம்து இஸ்ஹாக்**
தம் 04C, ரோயல் கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி மாவத்தை, இரத்மலானை.

**4. எம். இர்ஷாத் பாத்திமா**
தரம் 05, முகர்ரமா கல்லூரி,
இல. 10, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 10.

**5. எம்.எல்.எம். ஸஹ்னா**
தரம் 09, ஸலாஹியா சர்வதேச பாடசாலை,
இல. 298, புதிய தெரு, வெலிகம.

**6. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தம் 08, அலிப் சர்வதேச பாடசாலை, தர்கா நகர்,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**7. துவாரகன்**
தரம் 07C, கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

**8. எம்.என். அப்லல் அஹ்மத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**9. லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 06, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 117
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



ஈகை : ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
தாமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர்

**தெளிவுரை :**
பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்க்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.

## பல கால தேடல்; ஒரு நொடி கவனச்சிதறல்

ஒரு மனிதன் வீட்டில் உள்ள பாதுகாப்பு பெட்டகத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிர்ந்து விடும்.

அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவனால் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டுமே தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பத்தியில் கருங்கடற்கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக்கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடற்கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடலை ஆரம்பித்தான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங் கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்துவிட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும், வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு வெறுப்பான செயல் போல் ஆகிவிட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்கும் முன் கடலில் எறிந்துவிட்டான்.

நாம் செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும், கவனமும் தேவை.

## செய்து பாருங்கள்









காரைதீவு

## சிறுவர் சித்திரங்கள்



எஸ். ஹரேன் விஷால்
தரம் 09, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி.

## முத்து தோன்றும் விதம்



இயற்கையின் அதிசயங்களுள் ஒன்று முத்து. முத்துச்சிப்பி என்ற உயிரினத்திடம் இருந்து முத்து கிடைக்கிறது. அந்த உயிரினத்தில் இருந்து முத்து கிடைப்பது வியப்பூட்டும் விஷயம்.

கடல் நீரில் உள்ள கல்சியம் கார்பனைட் என்ற தாதுப் பொருளையும் மற்றும் சில அங்கப் பொருட்களையும் சிப்பி உட்கொள்வதால் முத்து தோன்றுவதாக கூறப்படுகிறது.

சிப்பியினுள் முத்து சென்றுவிட்டால் அதற்கு ஓர் உறுத்தல் ஏற்பட்டு, தன்னிடம் உள்ள நாக்கர் என்ற ஒருவிதத் திரவத்தை அதன் மீது சுரந்து மூடிவிடும்.

**உயர்ந்த முத்துக்கள்**

கடலில் உள்ள சில புல்லுருவிகள் (தம்மால் நேரடியாக உணவுப்பொருட்களை உருவாக்க முடியாமல் சத்துக்காக பிற தாவர இனங்களைச் சார்ந்திருப்பவை), சிலநேரங்களில் சிப்பியின் வாய் வழியாக உள்ளே தவறிச் சென்று விடுகின்றன.

அப்போது சிப்பியின் உட்பாகத்தில் ஓர் உறுத்தல் ஏற்பட்டு, நாக்கர் திரவத்தை அதன் மீது பொழியும். அவ்வாறு பொழியும்போது அந்தப் புல்லுருவி மடிந்துவிடும்.

அதன் மீது நாக்கர் திரவம் பல அடுக்குகளில் படிந்துவிட, அது விலை உயர்ந்த முத்தாக மாறிவிடுகிறது.

இம்முறையிலேயே சிறு மணல் துகள் உள்ளே சென்றாலும் அது முத்தாகிவிடுகிறது.

## அறிந்து கொள்வோம்

உலகின் அமைதியான நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ள ஐஸ்லாந்தில் இராணுவம் கிடையாது



செயற்கை முறையில் பழங்களை பழுக்க வைக்க பயன்படும் வாயு எத்திலின்



யானையின் ஒரு பல் 4 கிலோ வரை எடையுள்ளதாக இருக்கும்



பென்குயின் பறவை தன் வாழ்நாளில் ஒரே ஒரு முட்டை தான் இடும்.



## கடல்நீரில் இருக்கும் உப்புத் தன்மை?



சூரிய ஒளியினால் ஏற்படும் வெப்பத்தின் மூலம் ஆவியாதலால் தான் கடலில் இருந்து நீர் வெளியேற்றப்படும் ஒரே வழி. அவ்வாறு ஆவியாகும் போது, உப்புக்கள் எடுத்து செல்லப்படாது கடலில் தங்கும். பின்னர் மழையாக நிலப்பகுதியில் பெய்து தாதுக்களுடன் மீண்டும் கடலில் சேரும்.

இதுபோன்ற நீர் சுழற்சி பல இலட்சக்கணக்கான ஆண்டுகளாக நடந்து கடல் நீரில் உப்பு தன்மை மிகுந்து விட்டது. கடலில் நீர் சேரும் விகிதத்தில் ஆவியாதல் தவிர வேறுவழியில் நீர் வெளியேறிக்கொண்டு இருந்திருந்தால் உப்பு தன்மை மிகுந்து இருக்காது. தற்போது கடலில் இருந்து உப்பு எடுக்கும் வீதமும், சேரும் வீதமும் சம அளவில் இருப்பதால், கடல் நீரில் உப்பு ஒரு சம நிலை விகிதத்தில் இருக்கிறது. கடல் நீருக்குள் பல எரிமலைகள் இருக்கின்றன. அவை வெளியிடும் லாவாக்கள் மற்றும் வாயுக்களில் இருக்கும் தாது உப்புகள் நீரில் கலந்து உப்பு தன்மையை அதிகரிக்கும்.

கடல்வாழ் ஜீவராசிகள் கடலில் இறந்து மக்கி தாதுக்களை சேர்க்கும். கடலுக்கு நதிகளும் நீரை கொண்டு வந்து சேர்க்கிறது. அவ்வாறு வரும் போது எண்ணற்ற தாதுக்களும் அடித்து வரப்படுகிறது. அவையும் உப்பு தன்மையை அதிகரிக்கும்.

கடலில் தான் நதிகள் கலக்கின்றன. கடலில் இருந்து எந்த நதியும் பிறப்பதில்லை. இதனால் நீர் வெளியேற்றம், உப்பு என எதுவும் வெளியேறாது.

## விளாடிமிர் இல்யிச் லெனின்



புகழ்ச்சியை விரும்பாத உலக தலைவர்களில் ஒருவர் விளாடிமிர் இல்யிச் லெனின். இவர், ஆசிய ஐரோப்பிய கண்டங்களில் பரவியிருந்த சோவியத் ரஷ்ய அதிபராக பதவி வகித்தவர்.

ஒருமுறை, அவரது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட நண்பர்கள் விரும்பினர். அதில் பங்கேற்க லெனினை வற்புறுத்தி அழைத்தனர். முதலில் மறுத்தவர் இறுதியில் ஒப்புக் கொண்டார்.

கூட்டம் ஆரம்பமானது. முக்கிய பிரமுகர்கள், லெனினை மிகவும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

விழாவுக்கு வருவதாக ஒப்புக்கொண்டிருந்த லெனின், அந்த நேரத்தில் வரவில்லை.

புகழ்பாடும் சொற்பொழிவுகள் முடிந்த பின், விழா நடந்த இடத்துக்கு அமைதியாக வந்தார். நண்பர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். நன்றி தெரிவித்தவர், தாமதத்துக்கு வருத்தம் தெரிவித்தார்.

பின், 'இவ்வளவு நேரம் நிகழ்த்திய பேச்சுகளை எல்லாம் கேட்காமலிருக்க என்னை அனுமதித்ததற்காக நன்றி. புகழ்ச்சி என்பது மனிதனை எளிதில் வீழ்த்தும் மிக மோசமான வியாதி...' என்று சுருக்கமாக பேச்சை முடித்தார் லெனின்.

## லிமுலஸ்



கடல் வாழ் உயிரினங்களில் ஒன்று லிமுலஸ் என்ற நண்டு.

இது பல கோடி ஆண்டுகளாக, தோற்றம் மாறாமல் உள்ளது. இதை, வாழும் படிமம் என்பர்.

இதன் இரத்தம் நீல நிறத்தில் இருக்கும். இரத்தத்தில், 'அமீபோசைட்' என்ற செல் உள்ளது. இது, பக்டீரியாவிலிருந்து வெளிப்படும் நச்சுத்தன்மையை கண்டறிய உதவும்.

இந்த நண்டின் இரத்தம் விலை மதிப்புள்ளது. இரத்தத்தை சேகரித்த பின் கடலில் விட்டு விடுவர். சில மாதங்களுக்குப் பின், நண்டை பிடித்து, மீண்டும் இரத்தம் எடுத்து பயன்படுத்துவர்.

# மஞ்சரி விளையாட்டு



## பங்களாதேஷிடம் தோற்ற இலங்கையின் 'சுப்பர் 8' வாய்ப்பில் நெருக்கடி

டி20 உலகக் கிண்ணத்தில் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாது குழு நிலை போட்டியிலும் 2 விக்கெட்டுகளால் தோல்வி அடைந்த இலங்கை அணியின் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு குறைந்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியில் 6 விக்கெட்டுகளால் மோசமான தோல்வியை சந்தித்த இலங்கை அணி நேற்று (8) பங்களாதேஷை எதிர்கொண்டது தீர்க்கமான தருணத்திலாகும்.

டலாஸில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை முதல் இரு விக்கெட்டுகளையும் 48 ஓட்டங்களுக்கு பறிகொடுத்ததால் தடுமாற்றம் கண்டது. ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க மாத்திரம் அதிரடியாக ஆடி 28 பந்துகளில் 47 ஓட்டங்களை பெற்றார். என்றாலும் அவரின் ஆட்டமிழப்பு இலங்கை அணியை மேலும் சரிவுக்கு இட்டுச் சென்றது.

14 ஓவர்களில் இலங்கை அணி 100 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து ஸ்திரமான நிலையில் இருந்தாலும் சரித் அசலங்க மற்றும் வனிந்து ஹசரங்க அடுத்தடுத்த பந்துகளுக்கு விக்கெட்டை பறிகொடுத்தது ஆட்டத்தை முழுமையாக திசை திருப்பியது.

கடைசி ஓவர்களில் இலங்கையின் விக்கெட்டுகள் மளமளவென்று பறிபோயின. அதாவது இலங்கை அணி மேலும் 24 ஓட்டங்களை பெறுவதற்குள் கடைசி எழு விக்கெட்டுகளை இழந்தது.

கடைசியில் இலங்கை அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்த 124 ஓட்டங்களையே பெற முடிந்தது. பந்துவீச்சில் முஸ்பீசுர் ரஹ்மான் மற்றும் ரிஷாட் ஹொஸை தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

பதிலெடுத்தாட வந்த பங்களாதேஷ் அணிக்கு இலங்கையால் கடைசி வரை நெருக்கடி கொடுக்க முடிந்தபோதும் அது போட்டியை வெல்வதற்கு போதுமாக அமையவில்லை.

பங்களாதேஷ் அணியின் முதல் மூன்று விக்கெட்டுகளையும் 28 ஓட்டங்களில் வீழ்த்திய இலங்கை அணிக்காக மத்திய ஓவர்களில் அணித்தலைவர் வனிந்து ஹசரங்க நெருக்கடி கொடுத்தார்.

ஹசரங்க தனது 4 ஓவர்களுக்கும் 32 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தியபோது டி20 சர்வதேச போட்டிளில் இலங்கை அணி சார்பில் அதிகூடிய விக்கெட்டுகளை வீழ்த்திய முன்னாள் அணித் தலைவர் லசித் மாலிங்கவின் சாதனையை முறியடித்தார்.

என்றாலும் நுவன் துஷார அபாரமாக செயற்பட்டார். ஆரம்பத்தில் மூன்று ஓவர்களை வீசிய அவர் 2 விக்கெட்டுகளை பதம்பார்த்த நிலையில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 18 பந்துகளில் 14 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோது தனது கடைசி ஓவரை வீச அழைக்கப்பட்டார். அந்த ஓவரில் அவர் மேலும் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி நம்பிக்கை தந்தார்.

என்றாலும் 18 ஓவர்கள் முடிவின்போது இலங்கை அணியின் நான்கு விசேட பந்துவீச்சாளர்களும் தமது ஓவர்களை போட்டு முடித்த நிலையில் 19 ஆவது ஓவரை வீச அழைக்கப்பட்ட தசுன் ஷானக்க முதல் பந்தையே புல்டோஸ் வீச அதற்கு அனுபவ வீரர் மஹ்மூதுல்லா சிக்ஸர் விளாசியதை அடுத்து இலங்கையின் வெற்றி வாய்ப்பு கை நழுவியது.

பங்களாதேஷ் அணி 19 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 125 ஓட்டங்களையும் எட்டியது.

நுவன் துஷார தனது 4 ஓவர்களுக்கும் 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி இலங்கை டி குழுவுக்காக ஆடிய தனது முதல் இரு போட்டிகளிலும் தோல்வி அடைந்த நிலையில் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.

## வாய்ப்பு எப்படி?




டி20 உலகக் கிண்ணத்தில் டி குழுவில் ஆடும் இலங்கை அணி முதல் இரு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்து இன்னும் ஒரு புள்ளியையேனும் பெறவில்லை. இதனால் இலங்கை அணி ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறும் விளிம்புக்கு தள்ளப்பட்டபோதும், இன்னும் சுப்பர் 8 சுற்றுக்கு வாய்ப்பு உள்ளது. என்றாலும் அது முழுமையாக இலங்கையின் கைகளில் இல்லை.

அடிப்படையில் இலங்கை அணி அடுத்திருக்கும் தனது கடைசி இரு குழு நிலை போட்டிகளிலும் நேபாளம் (ஜூன் 12) மற்றும் நெதர்லாந்து (ஜூன் 17) அணிகளை அதிக இடைவெளியில் வென்று தனது நிகர ஓட்ட விகிதத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அது மாத்திரம் போதாது, தனது குழுவில் இருக்கும் தென்னாபிரிக்கா, நெதர்லாந்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய மூன்று அணிகளில் இரண்டு அணிகள் தமக்கு எஞ்சி இருக்கும் தலா மூன்று போட்டிகளில் குறைந்தது இரண்டில் தோற்க வேண்டும்.

இதன்மூலம் இலங்கை அணி தனது குழுவில் நான்கு புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பிடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும்.

இந்த சிக்கலான நிலையில் தனது எஞ்சிய போட்டிகளில் வென்று மற்றப் போட்டி முடிவுகள் சாதகமாக வருவது பற்றி எதிர்பார்ப்புடன் காத்திருப்பதை மாத்திரமே இலங்கை அணியால் செய்ய முடியுமாக உள்ளது.

## போட்டிக்குப் போட்டி ஓட்டம்...



டி20 உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியில் இலங்கை அணி சந்தித்த தோல்வி மோசமானது. அதற்கு நாணய சுழற்சி தொடக்கம் ஆட்டத்தின் கடைசி பந்துவரை இலங்கை இழைத்த ஏகப்பட்ட தவறுகள் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால், அதுபற்றி ஆர அமர்ந்து அலசி ஆராய்வதற்கு நேரம் இல்லை.

நியூ யோர்க்கில் நடந்த போட்டி முடிந்த கையோடு இலங்கை வீரர்களால் ஹோட்டல் அறைக்கு ஓட்டம் பிடிக்க வேண்டி இருந்தது. அந்த ஹோட்டல் புரூக்லியில் இருந்து. அது போட்டி நடந்த மைதானத்தில் இருந்து ஒன்றரை மணி நேர தூரம். உடனடியாக புறப்பட்டால் தான் டலாஸ் செல்வதற்கு விமானத்தை பிடிக்க முடியும். டலாஸிலேயே பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது போட்டி இருந்தது.

தென்னாபிரிக்காவிடம் தோற்றதால் பங்களாதேஷுக்கு எதிரான போட்டி ஒருவகையில் வாழ்வா, சாவா ஆட்டமாக மாறி இருந்தது. காலை போட்டியை முடித்த இலங்கை அணியினர் ஒன்றரை



மணி நேரம் பயணித்து ஹோட்டலுக்கு சென்று உடைமைகளை எடுத்துக்கொண்டு நேராக விமான நிலையம் போக வேண்டும். விமானம் மாலை 6 மணிக்கு இருந்தது.

எனவே, வீரர்களின் உடைகள் மற்றும் மற்ற விடயங்களை பொதி செய்யும் வேலையை அணி முகாமையே செய்ய வேண்டி இருந்தது. ஏனென்றால் போட்டியை முடித்துவிட்டு இதனை செய்யக்கூட நேரம் இருக்கவில்லை.

தென்னாபிரிக்காவுடன் ஆடுவதற்கு நியூயோர்க் வந்த கதையும் அவசரத்துக்கு பிறந்த கதைதான். பிளோரிடாவில் அயர்லாந்துக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் ஆடிய இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியில் ஆடுவதற்கு மியாமி விமானநிலையத்திற்கு வந்தால் விமானம் புறப்படுவதில் ஏழு மணி நேரம் தாமதம் ஏற்பட்டது.

நியூயோர்க் நகருக்கு வெள்ளிக்கிழமை (மே 31) இரவு எட்டு மணிக்கே சென்றடைய திட்டமிட்டபோதும் அடுத்த நாள் அதிகாலை ஐந்து மணிக்கே போய்ச்சேர முடிந்தது. இதனால் அன்றைய தினம் காலையில் இருந்த பயிற்சியும் ரத்துச் செய்யப்பட்டது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டி தினத்திலும் இதே கதைதான். பொதுவாக போட்டி அட்டவணை இந்தியா குறிப்பாக தெற்காசிய தொலைக்காட்சி ரசிகர்களையும் கருத்தில் கொண்டே தயாரிக்கப்பட்டிருக்கிறது. தென்னாபிரிக்கா மற்றும் இலங்கைக்கு எதிரான போட்டி இலங்கை நேரப்படி பார்த்தால் இரவு எட்டு மணிக்கு ஆரம்பித்தாலும் அமெரிக்க நேரத்தில் காலையிலேயே ஆரம்பமாகிறது.



எனவே இலங்கை வீரர்கள் ஹோட்டலில் இருந்து புறப்பட்டு மைதானத்திற்கு வருவதற்கே ஒன்றரை மணி நேரம் எடுத்துக்கொள்ளும் சூழலில் மைதானம் வந்து பயிற்சி பெறுவதற்குக் கூட நேரம் இருக்காது. நேரடியாக போட்டியில் குதித்து விட வேண்டும். இத்தனைக்கும் போட்டி தினத்தில் இலங்கை வீரர்கள் மைதானத்திற் அதிகாலை 5 மணிக்கே புறப்பட வேண்டி இருந்தது.

டி20 உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றில் D குழுவில் ஆடும் இலங்கை அணி நான்கு போட்டிகளில் பங்கேற்கும். ஆனால் அந்த நான்கு போட்டிகளும் நான்கு இடங்களில் நடைபெறுகின்றன. எனவே போட்டிக்கான தயார்படுத்தல் ஒருபக்கம் இருக்க போட்டிக்குச் செல்வதற்கான பயணங்களுக்கு பிரத்தியேகமாக தயாராக வேண்டும். இது இலங்கை அணிக்கு மேலதிகச் சுமை.

இது சரிசமமாகவும் இல்லை. முதல் சுற்றில் இலங்கையுடன் நெதர்லாந்து அணி மாத்திரமே இப்படி நான்கு போட்டிகளை வெவ்வேறு இடங்களில் ஆடும் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கிறது. இதுவே இந்திய அணியின் போட்டி அட்டவணையை பார்த்தால் முதல் சுற்றின் முதல் மூன்று போட்டிகளும் நியூயோர்க்கில் ஒரே மைதானத்திலேயே நடைபெறுகிறது.

இந்திய அணி தங்கும் ஹோட்டல் கூட மைதானத்தில் இருந்து 14 நிமிட தூரத்தில்தான் இருக்கிறது.

இந்தப் போட்டி அட்டவணை மற்றும் பயண ஏற்பாடுகளில் தமது அணிக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று அணித் தலைவர் வனிந்து ஹசரங்க மற்றும் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன வெளிப்படையாகவே குற்றம் கூறுகிறார்கள். இது பற்றி சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலுக்கு எழுத்துமூலம் முறையிட்டதாக இலங்கை அணி முகாமையாளர் மஹிந்த ஹலன்கொட குறிப்பிடுகிறார்கள். என்றாலும் எல்லாமே காலதாமதமானது. இந்தத் தடங்கல்களை தாண்டினாலேயே உலகக் கிண்ணத்தை வெல்ல முடியும் என்பதே அணிக்கு இருக்கும் மேலதிக சவால்.

'எமக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நான்கு வெவ்வேறு மைதானங்களில் போட்டிகள் இருப்பதால் (போட்டிக்குப் பின்னர்) நாம் ஒவ்வொரு நாளும் பயணிக்க வேண்டி இருக்கிறது. இது நியாயமில்லை.

புளோரிடாவின் மியாமியில் இருந்து நாம் விமானத்தை பெறுவதற்கு விமானநிலையத்தில் எட்டு மணி நேரம் அளவு காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நாம் சுற்றித் திரிகிறோம். நாம் இரவு 8 மணிக்கே புறப்பட வேண்டும், ஆனால் எமக்கும் அதிகாலை 5 மணிக்கே விமானம் இருந்தது. இது உண்மையிலேயே எமக்கு பெரும் அநீதியாகும், எப்படி இருந்தபோதும் போட்டியில் அது பொருட்டல்ல' என்று கிரிக்கின்போ இணையதளத்திற்கு கவலையை கொட்டித் தீர்த்தார் தீக்ஷன.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டிக்குப் பின்னர் நடந்த ஊடக சந்திப்பில், தென்னாபிக்காவுக்கு எதிரான போட்டியில் ஏற்பாட்டில் பிரச்சினைகள் தாக்கம் செலுத்தியதாக இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க குறிப்பிட்டார்.

'எம்மால் அதனை கூற முடியாது. கடந்த சில நாட்களாக நாம் கடுமையாக சிரமப்பட்டோம். நான்கு போட்டிகளும் நான்கு மைதானங்களில் உள்ளன. அது கடுமையானது. எமக்கு (மைதானங்கள் பற்றி) எதுவும் தெரியாது. இது தான் நியூயோர்க்கில் எமது முதல் போட்டி. அடுத்த போட்டி டலாஸில் உள்ளது. (அந்த மைதானம் பற்றி) எமக்கு எதுவும் தெரியாது. அடுத்த போட்டி புளோரிடாவில் உள்ளது. அங்கேயே நாம் இரண்டு (பயிற்சி) போட்டிகளை ஆடினோம். அதுவே எமக்கு இருக்கும் ஒரே அனுகூலமாகும்' என்று ஹசரங்க குறிப்பிட்டார்.

ஒரு போட்டியில் ஓர் அணியின் பலம் மற்றும் பலவீனம் மாத்திரமல்ல மைதானத்திற்கு வெளியில் மற்ற அணிக்கு கிடைக்கு சாதகமான சூழல் கூட ஒரு அணிக்கு நியாயமற்ற வகையில் பாதகமாக அமையும். அதுவும் விசேடமாக கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

'ஒரே மைதானத்தில் போட்டிகளில் ஆடும் அணிகளை என்னால் குறிப்பிட முடியும். அப்படியானால் அவர்களுக்கு ஆடுகளம் பற்றி நன்றாக தெரிந்திருக்கும். அவர்கள் பயிற்சிப் போட்டியையும் அதே மைதானத்தில் ஆடினார்கள். வேறு யாருக்கும் அப்படிக் கிடைக்கவில்லை.

நாம் பயிற்சிப் போட்டியை புளோரிடாவில் ஆடினோம். புளோரிடாவில் எமது மூன்றாவது போட்டி உள்ளது. இந்த ஆண்டு, எதுவும் மாறாது என்பதை நான் அறிந்திருப்பதால், அடுத்த ஆண்டு அனைவரும் மறுபரிசீலனை செய்வார்கள் என்று நான் நினைக்கும் சில விடயங்கள் உள்ளன' என்றார் தீக்ஷன.

நேற்று நடந்த பங்களாதேஷுக்கு எதிரான போட்டிக்குப் பின்னர் கூட இலங்கை அணிக்கு சுதாகரிப்பதற்கு நேரம் இல்லை. ஏனென்றால் அவசரமாக லோடர் ஹில் புறப்பட வேண்டும். அங்கே தான் வரும் ஜூன் 12 ஆம் திகதி நேபாளத்திற்கு எதிரான போட்டி இருக்கிறது.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# ஓட்டப் பந்தயம்



காலம்,
ஏதோ ஒரு நியதிக்கு உட்பட்டு
கோளோஞ்சிகிறது எம்மை
காலத்தின் பொம்மைகள் நாம்
காலம் ஓடுகின்றது

நாமும் காலத்தோடு ஓடுகின்றோம்
இந்த ஓட்டப் பந்தயத்தின்
வெற்றி நாயகன் யாரோ
காலமும் நாமும் ஓடுகின்றோம்

நாம்
ஓடி ஓடிக் களைத்து சோர்ந்து
நோயுடன் உடல் வற்றி ஈர்க்காகி
சருகாகின்றோம்

காலம் ஒரு கணம்
எம்மை ஏளனப் பார்வை பார்த்து
ஓடி ஓடி
எங்கோ செல்கின்றது

காலம் நிற்குமா
அதனுடன் போட்டியிட
அடுத்த வாரிசுகள்
திரும்பவும் அதே ஓட்டம்
அதே பந்தயம்
நாம் எப்போ வெல்வோம்

**யதீஸ்வரன் ரிஷாயினி**
**மண்டூர் 01**

# மனசில் ஒரு கைவிலங்கு

இன்று
சாதி
தலை தூக்கும்,
நாளை அது
கூத்தாடும்
அதுவே பின்னர்
தலையாட்டும்
பத்து வருஷம்
பார்த்திருக்க மறையும்

நாற்பது வயது
முதிர் கன்னிக்கு
சொந்த குலத்தில்
வரன் வேண்டும்
இரண்டாம் தாரத்துக்கும்
சம்மதம்
இப்படியே
இளமையை பலி கொடுக்க
ஏன் கல்லானாய்
புதுமைப் பெண்ணே!

**கலா ரசிகா,**
**மஹரகம**



# வாப்பாவின் சைக்கிள்



வாப்பா காலமான பின்னர்
அவர் நினைவாக
தேக்கு மர சாய்வு நாற்காலி
மான்தோல் இடுப்பு பட்டி
யானை மார்க்
ராட்சத குடையென
எல்லாமே பத்திரமாக
என் வசம் இருக்கின்றன

ஆயினும் குடும்பத்திற்காக
மாடாய் உழைத்து தேய்ந்த
கம்பர் சைக்கிளை மட்டும்
வீட்டு வாசலில்
சாய்த்து வைத்திருக்கிறேன்

வீட்டுக்கு வரும் விருந்தினர்கள்
வாப்பாவை முதலில்
சந்திக்காமல்
யாரும் மண்டபம்
நுழைவதில்லை

அவர் எல்லோரையும்
புன்னகை சொரிந்தபடி
வரவேற்பதாகவே
உணர்கிறேன்

சைக்கிளின் மிதி கட்டையிலும்
இருக்கையிலும்
வரையப்பட்டிருக்கின்றன
வாப்பாவின்
பருவகால ரேகைகள்

இரு சக்கரக் கம்பிகளில்
இப்போதும் பூத்து ஒளிர்கின்றன

ஆடைக்கும்
கோடைக்கும் சிந்திய
அவரது வியர்வை மணிகள்

அதன் பெல்லை குட்டி நட்டிகள்
அடிக்கும் போதெல்லாம்
வாப்பா குழைந்து குழைந்து
பேசுவதாகவே உணர்கிறேன்

நதியில் விழுந்தும்
சாயம் போகா
வானவில்லென
எனக்குள் பூத்துக்
கிடக்கின்றார்
இவ்வுலகை அறிமுகம்
செய்த வாப்பா

வாப்பாக்கள் இறந்த பிறகும்
அனேகமான வீடுகளில்
கரள் பூத்த சைக்கிள் ரூபங்களில்
இன்னும் இறவாமல்
வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்

தொலைவில் சாலையில்
டயர் உருட்டிச் செல்லும் சிறுவன்
வாப்பாவின் நினைவுகளை
எனக்குள் உருட்டிச் செல்கிறான்

**ஜமீல்**

# விடைபெறும் வேளை

உன்னோடிருந்த பள்ளிக்காலம்
இனிய வசந்த காலம்!
நெஞ்சம் தனில் இனிக்கும்
நினைவை தந்த உம் நட்பு!
உம் பிரிவை எண்ணி வருந்துகிறது!


கல்லூரி எனும் நேசத்தில் மிதந்தோம்!
நட்பு என்ற வாசகத்தில் மகிழ்ந்தோம்!
துரோகம் எனும் குரோதத்தை மறந்து
பாசம் எனும் தொட்டிலில் தவழ்ந்தோம்!
கல்விக் கடலில் தத்தளித்து

பேனாவை நேசித்து
காகிதத்தை கண்டவுடன் தடுமாறி
முடித்தோம் கல்விக் காலத்தை!
நினைப்போம் இன்ப நினைவுகளை!

இது என்ன பிரிவுகள்!
மனதை வாட்டும் கவலைகள்!
நிலையில்லா புகழ் எண்ணி
நிலையான அறிவை ஏற்று!

பழி நிறைந்த உலகினிலே!
பாசப்பிணைப்பாக!
என்றும் திகழ்வோம்

**கவிக்குரல்,**
**யஸாரத் யஸார்**





# நிலாக்கள்!

சேற்றுக் குழிகளுக்குள்
மின்னும்,
குட்டி நிலாக்கள்.

வயல் காடு
பச்சையாய்
தெரிகிறது,
விவசாயி வியர்வை.

ஊழல் ஒழிப்பு
திட்டம் தயாரானது,
கோடி
கொமிசனோடு.

நீ ரசித்த பின்தான்
அழகு பெறுகிறது,
என் கவிதைகள்.

நகரத்து வாழ்க்கை
கீச்சிடும் கிளி,
அழைப்பு மணி.

முற்றத்து மாமரம்
பார்த்தாலே

இனிக்குது,
தேன் கூடு.

உயரச் சென்றாலும்
இன்னும்
என் பிடியில்,
பட்டம்.

அடை மழை
அதிக சத்தம்,
தகட்டுக் கூரை

அரை
வட்டத் தோரணம்
ஏழு
வண்ண ஹைக்கூ,
வானவில்.

மிகச் சரியாக
சொல்கிறாய்,
பிழைகளை.

**அய்ஷத் அப்ஸத்**
**பாலமுனை**

# உடற்பயிற்சி செய்வோம்



கரிசனையாய் நாளும் செய்திடுவோம்
வேலையில் வேட்கை தோன்றிடவே
வெகுவாய் பயிற்சியை விரும்பிடுவோம்

வளைந்தும் நெளிந்தும் பயிற்சியை
வகையாய் நாமும் புரிந்திடுவோம்
குனிந்தும் நிமிர்ந்தும் மேலுமதை
குறைவின்றி நிறைவாக்க முனைந்திடுவோம்

சோர்வும் சோம்பலும் நம்மில்
சொல்லாமல் ஓடிடும் உண்மை
ஆர்வமும் ஆவலும் அதிகரிக்க
ஆரோக்கியமாய் வந்திடும் நன்மை

உடற்கட்டமைப்பு மறுப்பின்றி
உறுதியாய் அமைந்திடும் பாரு
திடகாத்திரம் நமக்குள்ளே
திண்ணமாய் புகுந்திடும் உணரு

ஓட்டமும் நடையும் ஓயாமல்
ஒவ்வொரு நாளும் தொடர்ந்திட்டால்
வாட்டமும் வதையும் விலகிடும்
வாழ்க்கை வனப்பாய் ஜொலித்திடும்

ஆண்களும் பெண்களும் பயிற்சியை
அலுக்காமல் அன்றாடம் செய்திட்டால்
தீங்குகளும் துன்பங்களும் நீங்கிடும்
தித்திப்பாய் வாழ்வு மிளிர்ந்திடும்

வியாதிகளை விரைவாய் விரட்டிட
வினையில்லா ஔடதம் இதுதானே
தடையில்லா நலத்திற்கு நாமிதை
தக்கபடி அமைப்பது சரிதானே.

உள்ளம் புத்துணர்ச்சியாகி
உடலும் புதுத்தெம்பாகி
உதிரத்தின் ஓட்டம் சீராகிட
உடற்பயிற்சியை நாமும் செய்திடுவோம்

உடலுழைப்பின் அவசியத்தை
உணர்ந்தே நாமும் செயற்பட்டால்
உற்சாகம் அங்கே எகிறிடும் வாழ்வு
உயிரோட்டமாய் மாறி சிறந்திடும்

முயற்சி இல்லா வாழ்க்கையிலே
முன்னேற்றம் வந்து இணைந்திடுமா உடற்
பயிற்சி இல்லா நிலையினிலே
பலம் வந்து சேர்ந்திடுமா

காலையும் மாலையும் பயிற்சியை

**உசனார் எம்.பஷீர்,**
**ஏறாவூர்.**

# குறைகளுடன் நேசி

ஒருவர் முன்
கோபம் கொள்வது இலகு
கத்திப் பேசுவது இலகு
மனதை உடைப்பது இலகு
வன்முறையாய்
நடந்து கொள்வது இலகு

குத்திக் கிழித்து
துண்டு துண்டாக உடைத்து
பரிகாசமாகப் பேசி
இளக்காரமாக சிரித்து
முகத்துக்கு நேரே
பாரம் சுமந்த வார்த்தைகளை
அள்ளி வீசி
அழ வைத்தலென்பது
அத்தனை இலகு

இது தான் உன் குறை
இது தான் உன் பலவீனம்
இதனால் தான் நீ
இன்னும் இப்படியே இருக்கிறாய்
இதனால் தான்
உனக்கொரு வாய்ப்பு

இன்னும் கிடைக்கவில்லை
இதனால் தான் நீ
சரியில்லாத ஒருவரென
காயப் படுத்துவது என்னவோ
மிக மிக இலகு தான்

இருந்தும்
குறைகளுடன் நேசித்து
குழந்தைத் தனங்களை பொறுத்து
சின்னச் சின்ன எதிர்பார்ப்புகளையும்

மனம் விரும்பி செய்து
எப்போது எந் நிலையில் போனாலும்
இறுகப் பற்றிக் கொள்வார்களெனும்
நம்பிக்கை இருக்குமளவுக்கு
ஒரு சில ஆன்மாக்களை
சம்பாதித்தால் போதும்

இனி வாழ்வே வரமன்றி
வேறென்ன !

**ஷப்ரா இல்முத்தீன்**
**அட்டாளைச்சேனை**

# சிலுவை சுமந்து...

தன்னகந்தை மிகைத்து
தனிமை வளர்த்து

நெருக்கடியை உணர்ந்து
நெருப்பில் கனன்று

நெருடல்களில் உழன்று
நிம்மதி இழந்து

மனமிருகம் கசிந்து
மௌனம் தின்று

புனிதம் கழிந்து
புன்னகை இழந்து

பிம்பம் தொலைத்து
பிதற்றலே கதியாகி

சபிக்கப்பட்டவனாக மாறி
சிலுவை சுமந்து

வாடித்தளர்ந்து
வற்றாத
கண்ணீர் கொண்டு

உன்மத்தம் சூழ்ந்து
உருகி வழிந்து

இருளோடு இருளாகி
அழிந்து அரூபமாகி

மறைந்து போவதே
நேசமின்றி வாழ்வது!

**Dr ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர்**



# புரிந்துணர்வாய்

மலரின் யௌவன வாசத்தின் மணம்
நுகரும் மனத்திற்கு தெரியும்
கலர்களின் கவர்ச்சியின் காண்பரியம்
கண்களின் பார்வைக்கு புரியும்

உறவுகளின் பாசத்தின் நேயம்
உள்ள மனங்களுக்குத் தெரியும்
பறவைகளின் ரீங்கார நாத உணர்வு
பாடகரின் பாட்டுக்கு புரியும்

காலின் நெடும் பயணத்தின் தூரம்
வலியின் துயரத்திற்கு தெரியும்
தாயின் தாய்மை உணர்வின் பந்தம்
பிள்ளைப் பாசத்திற்கு புரியும்

தேனின் தெவிட்டா தேன்சுவை
தேடி சுவைத்துண்பவனுக்கு தெரியும்
வானின் நட்சத்திரக்
கூட்டத்தின் வடிவு
வானலையின் வார்ப்புக்கு புரியும்

வெயில் கொடுமையில்
வேர்வையின் தாக்கம்
நிழலில் நிற்பவனுக்கு தெரியும்
காயின் கசப்பின் கசப்புணர்வு
உண்பவனின் நாவுக்கு புரியும்

கட்டுண்ட காளையின்
காதல் தோல்வி
கன்னிப் பெண்ணின்
வாழ்வில் தெரியும்
தட்டுண்ட தடை தாண்டல் போட்டி
வெற்றி கிட்டாதவனுக்கு புரியும்

கண்ணீர் வடித்த காதலரின் துயர்
கவலையுற்ற காதலர்களுக்கு தெரியும்
நன்னீரில் கீழ்மையின் மாட்சி
நாவின் சுவைக்கு புரியும்

நோவின் கொடுமையின் வலி
சிகிச்சை யன்று நோயாளிக்கு தெரியும்
பாவின் பட்ட துயர் பரிதாபம்
பாவப்பட்டவனுக்கு புரியும்

பாடசாலை கல்வியின் தாத்பரியம்
கற்கும் மாணவர்
குழாத்துக்கு தெரியும்
வாடாமலரின் வாசத்தின் வடிவு
வண்டு நுகருன்
இன்பத்துக்குப் புரியும்

பெற்றோரின்
பெருமையின் பேருண்மை
பெற்ற பிள்ளையின்
பாசத்திற்கு தெரியும்
சுற்றோரின் சொந்த பந்தப் பாச உறவு
உற்றோரின் உணர்வுக்கு புரியும்

**கலாபூஷணம்**
**உடப்பூர் வீரசொக்கன்**

# கிராமிய வாழ்க்கை முறையை மதிப்போம்..!



தயவுறும் தார கையே நீ
தருமொழி நிலவுடன் சேர்ந்து,
புவியது ஒளிர்ந்திடும் வண்ணம்,
புன்னகை புரிவது அழகு !
இமை திற விழிகள் வானில்,
எமதுயர் கிராமியம் மலர
செகமது உழைத்திட வேண்டும் நீ
சிரிப்பினைச் சிந்திட வேண்டும்!

மாடுகள், கன்றுகள், இடையர்
மாசுறா பால், தயிர் ,மோரு
கேடுக ளில்லா வாழ்வு
கேட்பது மனிதரின் நாட்டம்
தேடுயர் செல்வங்க ளெல்லாம்,
சேர்ந்தது கிராமிய வாழ்வாம்,

பாடுறும் வளங்களை யுற்று
பாரினில் கிராமிய மோங்கும் !

வயல் வெளி கதிர்களைச் சார்ந்து,
வாழ்ந்திடும் நாடது நாடே !
அயல் வெளி மீன்பிடி ஆறு
ஆற்றுமை தருவதும் ஊரே!

கயல் முர லாம்பல் கொடுவா,
கறியுறும் மக்களின் தேவை
முயல்வது போக்கும் தாழ்வு நாம்
முதன்மை அடைந்திடும் வாழ்வு!

பனி மழை தருவதும் சுகமே !
பார் மழை வருவதும் வரமே!

கனி மரம் தோப்புக ளென்று,
காற்றுறும் காலமும் நலமே!
நனி சுகமெல்லாம் கொண்ட,
நமது கிராமியம் காப்போம்,
அமைவுறும் வாழ்வது ஓங்க நாம்
உழைத்து வளங்களைச் சேர்ப்போம்!

பார்த்து சிரித்திடும் கதிர்கள்,
பச்சைத் தளையுறும் பயிர்கள்,
சேர்த்து விளைத்திடும் செல்வம்,

சீரிய கிராமியம் காணும் !
ஊர்க்கு செழிப்பது உண்டு'
உண்மை நிலையிது என்று,
பார்க்கும் மானிடம் சொல்லும் !

பாரினில் கிராமியம் வெல்லும்!

வாழ்வுறும் கிராமிய மோங்கி
வளர்ந்து சிறந்திடும் வீடு,
நாளுறும் உழைப்பினை தாங்கி

நலிவினைக் களைந்திடும் நாடு !
தோளுறும் செல்வங்களெல்லாம்
துயரினைப் போக்கிடும் கூடு நம்
நாள் கழிந்தேகிடும் வாழ்வு
நலமுற உயரத் தேடு !

**ஏரூர் கவிமாமணி**
**எம்.ரி.எம்.அன்ஸார்.**
**ஏறாவூர்.**




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

ஆரோக்கியம் அதிகரிக்கும். உற்சாகம் ஓங்கும். எந்தக் காரியத்தையும் துணிச்சலோடு செய்வீர்கள். வெற்றி கிடைக்கும் வாய்ப்பு அதிகம். புதன் வலிமை பெறுவதால், பணப் பிரச்சினை ஏற்படாது. ஆறாம் இடத்தில் கேது இருப்பதால், கடன் பிரச்சினைகள் தீர்ந்து, நிம்மதி கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நண்பர்கள் நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்ப்பார்கள். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. பதவி உயர்வும் சிலருக்கு (தசா புத்தி சாதகமாக இருந்தால்) கிடைக்கும். புதிய பணிகள் சிலருக்கு கிடைக்கும்.

சுபகாரியப் பேச்சுகள் வெற்றிகரமாக நடக்கும். சுக்கிரன் ரிஷப ராசியில் இருப்பதாலும், அது குடும்பராசியாக இருப்பதாலும், குடும்பம் அமைதியாக இருக்கும். ஜன்மத்தில் உஷ்ண கிரகமான செவ்வாய் இருப்பதால், உஷ்ண சம்பந்தப்பட்ட நோய்களும், தோல் சம்பந்தப்பட்ட நோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு. விரய ஸ்தானத்தில் ராகு இருப்பதால், பணம் கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் வரலாம்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

ஏதோ ஒரு விதத்தில் பணம் வந்து கொண்டே இருக்கும். தெய்வ தரிசனங்கள் கிடைக்கும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரபலமானவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். பல நல்ல காரியங்களை முடிப்பீர்கள். குடும்பத்தில் சுபகாரியத்திற்கான முன்னேற்பாடுகள் நடக்கும்.

ராசிநாதன் சுக்கிரன் ராசியில் இருப்பதும் உங்களுக்கு சில மறைமுகமான வெற்றிகளைத் தரும். இட மாற்றம் நீங்கள் விரும்பியபடி அமையும். கடன் சுமை குறையும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். செவ்வாய் 12ஆம் இடத்தில் இருப்பதால், விரயம் அதிகரிக்கும். யாரை நம்பியும் கடன் கொடுக்க வேண்டாம். வாங்கிய இடத்தை விற்கும் தேவையும் ஏற்படலாம். சகோதர உறவுகளில் கருத்து வேறுபாடுகள் இருப்பதால், கவனமாக இருக்கவும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

உங்கள் திறமைக்கேற்ற அங்கீகாரமும் உதவிகளும் கிடைக்கும். சிலர் வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. லாபஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடங்கள் நல்ல விலைக்கு விற்பனையாகும்.

சிலர் சொந்த கட்டடத்திற்கு தொழிலை மாற்றும் முயற்சி வெற்றி பெறும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு வேலையும் பதவியில் இருப்பவர்களுக்கு நல்ல முன்னேற்ற வாய்ப்புகளும் கிடைக்கும். வெளிநாட்டில் வேலை செய்பவர்களிடமிருந்து வரும் செய்திகள் மகிழ்ச்சி அளிக்கும். பிள்ளைகளின் திருமணம் முதலிய சுபகாரியங்களுக்கு ஏற்ற நேரம். சுக்கிரன் 12ஆம் இடத்தில் குருவோடு அமர்ந்திருக்கிறார். உறவினர்களிடம் கவனமாக இருக்கவும். தேவையற்ற வாக்குவாதங்கள் நடந்து குடும்ப ஒற்றுமை குறையலாம்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

யோகமான காலம். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புண்டு. பழைய தொழில்கள் நல்லபடியாக முன்னேறும். சிலர் தொழில் விரிவாக்கம் செய்வீர்கள். வீடு, நிலம் முதலிய ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகளும் லாபமும் கிடைக்கும். முக்கியஸ்தர்கள் உங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வார்கள். சுக்கிரன் உங்களுக்கு சாதகமாக இருப்பதால், வருமானம் நீடிக்கும். வீண் செலவுகள் அதிகம் இருக்காது. கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் ஓங்கும். குரு பகவான் சுபபலம் பெற்றிருப்பதால், திருமணம் போன்ற சுபகாரியங்கள் வெற்றிகரமாகும். அஷ்டமச் சனி நடப்பதால், பணிச்சுமை பொறுப்புக்கள் அதிகரிக்கும். சக்திக்கு மீறிய பணிகளைச் செய்து களைத்து விடுவீர்கள்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

தொழில் வெற்றிகரமாக நடக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மன நிறைவு தரும் விதத்தில் பணிகள் அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பிள்ளைகளின் எதிர்காலம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிகரமாகும்.

அஷ்டமத்தில் சஞ்சரித்த செவ்வாய் ராகுவிடமிருந்து விலகி மேஷத்தில் சொந்த ராசியில் சஞ்சரிக்கும் காலம் யோக பலன்களைத் தரும். எதைச் செய்ய நினைத்தாலும் அது வெற்றிகரமாக முடியும். எழுத்து துறையில் ஈடுபட்டவர்கள் ஆதாயம் அடைவார்கள். ஏழாம் இடத்தில் சனி இருப்பதும், பத்தாம் இடத்தில் குரு அமர்ந்திருப்பதும் சில சிரமங்களைத் தரத்தான் செய்யும். மனைவியின் ஆரோக்கியத்தில் அல்லது கணவனின் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டிய நேரம்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

தொழில் வெற்றி நடைபோடும். போட்டிகள் விலகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குருவோடு சுக்கிரன் இணைந்து யோக பலனைத் தரும். புத்திர பாக்கியம் எதிர்பார்த்து இருக்கிறவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும் நேரம் நெருங்குகிறது. திருமண முயற்சிகளுக்கு ஏற்ற நேரம் இது. சனி பகவான் நல்ல அமைப்பில் இருப்பதால், உங்கள் செயல்களில் திறமை அதிகரிக்கும். மேலதிகாரிகள் நன்கு ஒத்துழைப்பார்கள். இதுவரை ஏழில் சஞ்சரித்த செவ்வாய் அஷ்டமத்தில் வலிமை பெறுவது நல்லதல்ல. வண்டி வாகனங்களில் போகும்பொழுது கவனமாக இருக்க வேண்டும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி, மனை வாங்கும் யோகம் உண்டு. மனைவியின் மூலமாக சில சொத்துக்கள் கிடைக்கும் ஆதாய அமைப்பும் உண்டு. வாங்கிய இடத்தை நல்ல விலைக்கும் விற்கலாம். கடன் சுமை குறையும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். 12க்கு உரிய புதன் எட்டாம் இடத்தில் இருப்பதால், சில எதிர்பாராத நன்மைகள் உண்டு. நல்ல செய்திகள் கிடைக்கும். அரசாங்க காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும். வேலை வாய்ப்புகள் கிடைக்கும். எட்டாம் இடத்தில் சூரியன், குரு சேர்க்கை உள்ளது. உடல் நலனில் கவனம் தேவை. தேவையில்லாத பிரயாணங்களும் அலைச்சல்களும் உண்டு. ஐந்தாம் இடத்தில் சனி இருப்பதால், பிள்ளைகள் விஷயத்தில் கவனம் தேவை.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எதிரிகளை வெற்றி கொள்வீர்கள். திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகள் உதவுவார்கள். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பணவரவு திருப்தியாக இருக்கும். கல்வி, கலை சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசாங்க ஆதரவும் உண்டு. வேலை இல்லாதவர்களுக்கு நல்ல நிறுவனங்களில் வேலை கிடைக்கும் குரு பகவான் உங்கள் களத்திர ராசியில் அமர்ந்து உங்கள் ராசியை பார்வையிடுவதால், எல்லா விஷயங்களும் நன்மையாகவே முடியும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு எழுத்துத்துறை, பேச்சுத்துறை, கலைத்துறையில் உள்ளவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். நான்காம் இடத்தில் சனி அமர்ந்திருப்பதால், ஆரோக்கிய விஷயத்தில் கவனம் தேவை.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

வருமானத்திற்கு குறைவிருக்காது. புதன் உங்கள் ஆறாம் ராசியில் இருப்பதால், மறைமுக அனுகூலங்கள் உண்டு. உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தகவல் தொழில்நுட்ப பணிகளில் உள்ளவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. வருமானத்தில் நினைத்த உயர்வு கிடைக்கும். மூன்றில் உள்ள சனி உங்களுடைய தொந்தரவுகளை குறைத்து மகிழ்ச்சியை அதிகரிப்பார். தேவையில்லாத போட்டிகளும் மனச் சஞ்சலங்களும் உருவாகும் வாய்ப்புண்டு. அடிக்கடி வெளியூர் பிரயாணங்கள் ஏற்படும். உறவினர்களிடம் ஒற்றுமை குறையும். சுபகாரிய முயற்சிகளில் சில தடைகள் உண்டு.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

உடலில் இருந்த சோம்பல் மறைந்து புதிய உற்சாகம் கிடைக்கும். இடம் வாங்குவது, விற்பது போன்ற விஷயங்கள் ஆதாயமாக இருக்கும். தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும். குறைந்த விலைக்கு வாங்கி போட்ட இடங்கள் நல்ல விற்பனையாகி லாபம் கிடைக்கும். ரியல் எஸ்டேட் தொழிலில் ஆதாயம், ஏற்றம் உண்டு. எழுத்தாளர்களுக்கு நல்லது. நண்பர்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவுவார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். தந்தை வழி உறவில் இருந்த கருத்து வேறுபாடு முடியும். திருத்தல தரிசனம் உண்டு. கடன்கள் அடைபடும். கலைத் துறையினர் ஆதாயமான நல்வாய்ப்புகள் பெறுவார்கள். தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளும், சிக்கல்களும் உண்டு. சில வினோதமான பிரச்சினைகளை சந்திப்பீர்கள். ஆயினும், அது உங்களை பாதிக்காது. வெளியூர் பயணங்கள், வெளிநாட்டுப் பயணங்களுக்கு வாய்ப்புண்டு. சூரியனின் நிலை உங்களுக்கு ஏற்படும் சில ஆரோக்கிய இடைஞ்சல்களைக் காட்டுகின்றது. உஷ்ணப் பாதிப்புகள் மற்றும் ஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

ராசியில் சனி இருப்பது குறித்து பெரிய கவலை வேண்டாம். ஏழரைச் சனிதான் என்றாலும், கும்ப ராசிக்கு மிகத் தீவிரமாக இருக்காது. உங்கள் எட்டாம் இடத்தையும், 12ஆம் இடத்தையும் குரு பகவான் பார்ப்பதால், கஷ்டங்கள் குறையும். பகை மறையும். மூன்று பத்தாம் இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் மூன்றாம் இடத்தில் பலம் பெறுவதால், சகோதர ஒற்றுமை பலப்படும். இடம், பூமி வாங்குவதில் ஆதாயம் உண்டு. இரண்டாம் இடத்தில் ராகு இருப்பதும், எட்டாம் இடத்தில் கேது இருப்பதும் நல்ல அமைப்புகள் அல்ல. நீங்கள் எத்தனை முயன்றாலும்கூட உங்களை அறியாமல் சில தவறுகள் ஏற்பட்டு மன வருத்தத்தைத் தரும். வருமானம் அதிகரித்தாலும், நீங்கள் எதிர்பாராத செலவுகளில் பணம் கரையும். சுபகாரிய முயற்சிகளை நன்கு யோசித்துச் செய்யவும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

பொருளாதார மேம்பாடு உண்டு. வீடு, மனை விற்பதிலும் வாங்குவதிலும் ஆதாயம் உண்டு. ஆன்மிகப் பெரியவர்களைச் சந்திப்பீர்கள். முக்கியஸ்தர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவார்கள். குடும்பத்தில் இதுவரை இருந்த சில சிக்கல்கள் மெல்ல மெல்லத் தீரும். மூன்றாம் இடத்தில் உள்ள புதன் உங்களுக்கு தாய் வழி உறவுகளின் மூலமாக நன்மையை தரும். மூன்றாம் இடத்தில் குரு இருந்தாலும்கூட, அவர் உங்கள் ஏழாம் இடத்தைப் பார்ப்பதால், கணவன் – மனைவி குடும்ப ஒற்றுமையில் பாதிப்பு இருக்காது. சூரியன் அனுகூலமாக இருப்பதால், அரசாங்க காரியங்கள் பலிதம் ஆகும். புதிய பொறுப்புக்கள் சிலருக்கு கிடைக்கும். சில நேரங்களில் நீங்கள் எதிர்பார்த்த விஷயத்தை கிடைக்காதவாறு செய்து, ஏமாற்றத்தைத் தருவார். எனவே, எந்த விஷயத்திலும் அதிக எதிர்பார்ப்புக் கொள்ளாதீர்கள்.

---

# 11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 39

# சர்வதேச ஆய்வுத் தளங்களில் திருப்தி தரும் தமிழர்களின் ஆய்வுப் பங்களிப்பு



தமிழர்களின் தொன்மையை பல்வேறு ஆதாரங்கள் எடுத்துரைத்த போதிலும் அகழ்வாராய்வு ஊடாக கிடைக்கப்பெறும் தடயங்களே உறுதிமிக்க தீர்மானத்திற்கு வழிகோலுகிறது. தமிழர்களின் தொன்மைக்கு சிந்துவெளி காலம் தொடர்பான அகழ்வாராய்வு முடிவுகள் பல ஊகங்களுக்கு காரணமாகியது. அவ் ஊகங்களை விஞ்ஞான பூர்வமாக நிறுவ வேண்டிய தேவையை ஆய்வுலகம் எதிர்பார்த்த வண்ணம் காத்திருந்தது. காலக்கணிப்பு தொடர்பான விடயத்தில் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருந்தமை கவனிக்கத்தக்கது. அதனை கரிம காலக் கணிப்பீட்டுக் கருவியின் பயன்பாட்டின் ஊடாக சரியாக நிரூபிக்கக் கூடியதாக உள்ளது. கரிம காலக் கணிப்பீட்டு முறையில் நிபுணத்துவம் பெற்ற ஆராய்ச்சியாளரும் கதிரியக்க தொழிநுட்பத்தில் இந்தியாவின் முன்னணி விஞ்ஞானியுமான டொக்டர் வ. மாசிலாமணியின் வரவு, பதினோராவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் அறிவியல் தமிழ் பற்றிய சிந்தனையில் மிகவும் காத்திரத்தை உணர்த்தியது. எழுபத்தைந்து வயதிலும் மிகச் சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை அவரது ஆளுமையின் சிறப்பம்சமாகிறது. எல்லோரிடமும் மிக இலகுவாகவும், எளிமையாகவும் பழகும் விதம் அவரில் காணப்படும் முன்மாதிரியாகிறது. பார்ப்பதற்கு மிக எளிமையானவராக தோற்றமளிக்கும் அன்னார் பழகுவதற்கும் மிக இனிமையானவராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருச்சி மாவட்டம் திருப்பைஞ்சீலியை பூர்வீகமாகக் கொண்ட அன்னார் வடிவேலு, அமிர்தம் தம்பதிகளின் புதல்வராவார். தனது ஊரிலேயே பள்ளிக் கல்வியை பெற்ற இவர், தனது கலாநிதிப் பட்ட ஆய்வை 1980இல் சென்னை ஐ.ஐ.டி பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கலாநிதி பட்டத்தின் பின்னர் இருபத்தைந்து ஆண்டுகள் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்துள்ளார். அதனைத் தொடர்ந்து அமெரிக்கா உட்பட்ட ஐரோப்பிய நாடுகளில் பேராசிரியராக கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வ.மாசிலாமணி கரிம காலக் கணிப்பீட்டு துறையில் நிபுணத்துவம் பெற்ற காரணத்தினால் மீளவும் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் சிறப்பு பேராசிரியராக பணி புரிகின்றமையும் கவனிக்கத்தக்கது. தமிழர்களின் வரலாற்று ஆவணங்களை கரிம காலக்கணிப்பீட்டு சோதனை மூலம் கால மூப்பை நிரூபிக்கும் பணியில் அன்னாரின் பங்கேற்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையப் பெறுகிறது.

கீழடி ஆய்வு என்பது தமிழர்களின் தொன்மையை மேலும் ஆதாரப்படுத்திய முயற்சியாகிறது. ஆய்வுலகத்தின் பார்வை தமிழர்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் மீளவும் கூர்மைப்படுத்துகின்றமை அவதானத்திற்குரியதாகும். கடந்த ஐந்தாண்டுகளாக கீழடி, அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட கரிமப் பொருட்களை வைத்து அமெரிக்காவில் கரிமக் காலக்கணக்கெடுப்பு கருவியில் செய்த ஆராய்ச்சியில் கி.மு 780க்கு முற்பட்ட காலத்திலேயே கீழடியில் நகர நாகரிகம் இருந்தமை உறுதிசெய்யப்பட்டது. இது கி.மு 1500 – 2000 கால கட்டத்தில் இருந்த சிந்துவெளி நாகரிகத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. இயற்பியல் தோற்றக் கொள்கைகளையுடைய அறிவியலாகவும், சோதனை முறை அறிவியலாகவும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இத்துறையிலும் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் வ.மாசிலாமணி போன்றோர் இந்தியாவின் தலைசிறந்த ஆளுகைகளாக உள்ளார்கள். “பேரண்டம் எப்படி நடந்துகொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ள இயற்கையில் நடத்தப்படும் பொதுவான பகுப்பாய்வு ஆகும்” என மேலும் இயற்பிலை வரையறுப்பார்கள். 1500 கால கட்டம், வானியலின் தந்தை என சிறப்பிக்கப்படும் நிக்கலசு கொப்பனிக்கஸ் ஆய்வு செய்து வெளியிட்ட சூரிய மையக் கொள்கை சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கான சோதனை பூர்வ ஆதாரங்களுடன் கலிலியோ கலிலி சூரிய மையக் கொள்கையின் உண்மைத் தன்மையை நிறுவினார். இவரே இயற்பியலின் தந்தை என போற்றப்படுகிறார். கோட்பாடுகளால் எட்டப்படும் தீர்வுகளை அறிவியல் சோதனை மூலமாக பரிசோதிக்க முடியும் என நிறுவியதில் நிக்கலஸ் கொப்பனிக்கஸ் முன்னுதாரணமாக திகழ்கிறார். இயற்பியல் முறைகளில் கெப்லர், பஸ்கால் போன்றோர் தம் பத்தமையை அறிவோம். சோதனை, அளவியல் முறைமைகளைக் கொண்டு இயற்பியல் விதிகளை உருவாக்குவதற்கு அடித்தளமிட்ட ஆளுமையாக நிக்கலசை அடையாளப்படுத்த முடியும். இத் துறையில் பல்வேறு இயக்க விதிகளை நியூட்டன் முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சி நிலையில் மேக்ஸின் குவாண்டம் கோட்பாடுகள், ஐன்ஸ்டைனின் சார்பு கோட்பாடுகளால் நவீன இயற்பியல் கட்டமைப்பு விரிவடைந்து வருகிறது. அதன் வழியில் இயற்பியல் துறையில் தேர்ச்சி பெற்ற ஆளுமையாகவே பேராசிரியர் வ.மாசிலாமணியின் நகர்வும் கவனத்திற்குரியதாகிறது. அகழ்வாராய்ச்சி தொடர்பான விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறைகளின் பேறுகள், அனுபவங்களைக் கொண்ட கட்டுரைகள், வ.மாசிலாமணியினால் தொகுக்கப்பட்டு இம் மாநாட்டில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அறிவியல் தமிழ் தொடர்பான முன் நகர்வில், அதனை வலுப்படுத்தும் முனைப்பில் இந்த நூலின் வரவு மிக முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. “அறிவியல் அடிப்படையிலான தமிழர் பாரம்பரியச் செறிவு” என்ற தலைப்பிலான இந் நூலை “அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பாரம்பரிய ஆய்வு மையம்” பதிப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நூலின் முகப்பு அட்டை ஓவியம் பற்றிய குறிப்பு பின்வருமாறு அமைகின்றமை கவனிக்கத்தக்கது. “சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் போரிடவும் அதை பாறை ஓவியமாக வரையவும் தெரிந்த ஒரு அற்புதமான தமிழ் ஓவியரின் கைவண்ணம்தான் முகப்பு அட்டைப் படம். காந்தி இராஜனுக்கு நன்றி என்ற வரிகள் குறிப்படத்தக்கவையாகும். அவ்வாறே பின்னட்டையில் எஸ். இளையராஜாவின் கைவண்ணத்தில் அமைந்த ஓவியம் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந் நூலில் “அறிவியல் பூர்வமான அகழ்வாராய்ச்சி” ஒரு அறிமுகம் “கரிமக் கால கணிப்பு முறைகள்” ஆகிய கட்டுரைகள் பேராசிரியர் வ. மாசிலாமணியுடையதாகவும், “தமிழக குகை ஓவியங்கள்” காந்தி ராஜனுடையதாகவும், “பழந் தமிழினத்தின் அயலக பண்பாட்டுத் தொடர்புகள்” எனும் தலைப்பில் பேராசிரியர் வீ.செல்வகுமாரின் கட்டுரையும், தூண்டொளிர் காலக்கணிப்பு முறைகள் பற்றிய பேராசிரியர் வித்தியாவின் கட்டுரையும், தமிழகத்தில் கண்ட நிலக் காந்த காலக் கணிப்பு என்ற தலைப்பில் பேராசிரியர் ஜி.போல்ராஜின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. கீழடி அகழ்வாராய்வின் தலைவர் அமர்நாத் ராமகிருஷ்ணனின் “அகழ்வாய்வு முறைகள்” என்ற நீண்ட கட்டுரையும் இடம்பெற்றுள்ளமையும் கவனத்திற்குரியது. மேற்படி நூலின் முன்னுரையில் பேராசிரியர் வ.மாசிலாமணி குறிப்பிட்டுள்ள பின்வரும் விடயங்கள் கவனத்திற்குரியவை. ஆதிசங்கரர், இராமானுஜர் போன்ற ஞானிகள் உட்பட கணித மேதை ராமானுஜர், அறிவியல் நோபல் பரிசு பெற்ற அறிஞர்களான இராமன், சந்திரசேகர், வெங்கட் ஆகியோர் தங்களுடைய படைப்புகளை தமிழில் எழுதவில்லை. இவ் விடயம் தொடர்பில் எனக்கு நீண்ட நாட்களாகவே ஆதங்கம் உள்ளது. இருந்த போதிலும் இது அவர்களுடைய தவறில்லை. காலத்தின் கட்டாயம். தமிழில் எழுதினால் அவ்வளவு ஆழமான அற்புதமான கருத்துக்களைப் படித்துப் புரிந்து உள்வாங்கிக் கொள்வோர் ஆயிரத்தில் ஒருவர் கூட அன்றில்லை. இவ் அனுபவத்தையும் பிரயோக ரீதியில் அறிந்த நிலையியே இப் புத்தக முயற்சி அமைகிறது. இன்று அக் குறையை போக்கும் வகையில் வாசிக்கும் ஆர்வத்தில் நூறில் ஒருவராவது இருப்பார் என்ற நம்பிக்கையில், பேரவாவில் இந்த நூல் தமிழும் ஆங்கிலமும் கலந்த தமிழில் இல் வெளிவருகிறது. முடிந்த போதெல்லாம், முடிந்தளவு தமிழும் முடியாத போது ஆங்கிலத்தையும் இழுத்து அரவணைத்து அறிவியல் கருத்துக்களை பெரும்பாலான மக்களுக்குக் கொண்டு செல்வதே இந்தப் புத்தகத்தில் பங்கு பெற்றிருக்கும் அறிஞர் பெருமக்களின் நோக்கமும், இந்த மையத்தின் நோக்கமும் ஆகும், என்பதாக அமைகிறது. மாநாட்டில் பேராசிரியரின் உரை மிகுந்த அவதானத்தை பெற்றிருந்தது. நீண்ட உரையாக அமைந்திருந்த அவரது உரை பின்வரும் சாராம்சத்தை கொண்டிருந்தமை கவனிக்கத்தக்கது. உலகில் எத்தனையோ நாடுகள் இருப்பினும் இந்தியாவுக்கென தனித்துவப் பண்புகள் உள்ளன. 130 கோடி மக்களைக் கொண்ட மக்களாட்சி ஜனநாயகம் கொண்ட நாடு. உலகின் முக்கிய மதங்களான இந்து மதம், புத்த மதம், சீக்கிய மதம் ஆகிய மதங்கள் தோற்றம் பெற்ற நாடு. பல வகை கொள்கைகள், பண்பாடு, வாழ்வியல் முறைகளைக் கொண்ட நாடு என்ற தனித்துவ அம்சங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். பல மாநிலங்களை கொண்டிருந்த போதிலும் தமிழகத்திற்கு என்ற தனிச்சிறப்புகள் காணப்படுகின்றன. 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழர் பாரம்பரிய பண்பாட்டை நிலைநிறுத்திய தொன்மை தமிழ் மொழிக்கு உள்ளது. இந்தியாவை பல மன்னர்கள் ஆண்டிருந்தாலும் தமிழனான ராஜேந்திரனின் வியாபக ஆட்சி கடாரம், கம்போடியா வரை நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அறிவியல் துறைக்கான மூன்று நோபல் பரிசுகளை பெற்றுத்தந்தவர்களும் தமிழர்களே! அறிவியல் உலகிற்கு தமிழகம் தனித்துவ அடையாளத்தை பதித்துள்ளது. நாசா உட்பட்ட சர்வதேச ஆய்வுத் தளங்களில் தமிழர்களின் பங்களிப்பு மிகுந்த திருப்தியை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு நாகரிகமும் பல்வேறு கால கட்டங்களில் மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டு அதனூடே பண்பாடு செறிந்த ஒரு சமூதாயமாக பரிணமிக்கும். அவ்வாறான படிம வளர்ச்சியை அடைந்ததுதான் தமிழர் சமூதாயம். இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பெருமைக்குரிய



நாகரிகமாக மதிக்கப்படுகிறது. இதன் படிப்படியான மாற்றங்களைத் தெரிந்து கொள்வதற்கு மிக உதவியாக இருப்பது அவர்களது மொழி, இலக்கியம், பண்பாடுகள், கல்வெட்டுகள், பட்டயங்கள், வாழ்விடங்கள் முதலியனவாகும். இவற்றுள் வாழ்விடங்களைத் தேடி பூமிக்கடியில் தேடுகின்ற போதுதான் அகழ்வாராய்ச்சி முக்கியம் பெறுகிறது. எல்லா நாகரிகங்களும் ஏதோ ஓர் ஆற்றங்கரை பகுதியில் தான் உருவாகியிருக்கிறது. “நீரின்றி அமையாது உலகு” என்பார்கள். ஆற்று நீரை பயன்படுத்தி சில பயிர்களை விளைவித்து உழவுத் தொழிலை தொடங்கியுள்ளார்கள். பின்னர் ஆடு, மாடுகளைத் துணையாகக் கொண்டு மேய்த்தல் தொழிலையும் மேற்கொண்டுள்ளார்கள். பின்னர்தான் குறிப்பிட்ட இடத்தில் பலர் கூடி நகரை உருவாக்கினார்கள். அப்போதுதான் நாகரிகம் தொடங்கியுள்ளது. கீழடி ஆய்வுகள் கி.மு 730 ஆண்டுகளுக்கு முன்னரே நிலவிய நாகரிக எச்சங்களை புடம் போட்டுக் காட்டுவதாக அமைகிறது. அதன் காலத்தையும் கரிம காலக் கணிப்பீட்டு அணுகுமுறையுடன் காலத்தை சரியாகவும், உறுதியாகவும் குறிப்பிட முடிகிறது. என்பதாக அவரது உரை விரிவு பெறுகிறது. மாநாட்டு களங்களில் அவருடன் கலந்துரையாடலை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அவருடைய பாரியார் திருமதி. மாசிலாமணியும் மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார். பேராசிரியரைப் போலவே அம்மையாரும் மிக அன்பாக பழகினார். பேராசிரியர் இலங்கையின் அகழ்வாராய்வு தொடர்பில் கருத்துக்களை முன் வைத்தார். பூர்வீக இராவணனின் ஆட்சி தொடர்பிலும் அதன் பின்னரும் உள்ள சான்றுகளை கரிம கால கணிப்பீட்டு முறையில் உறுதிப்படுத்தலாம் என தெளிவாக கூறுகிறார். தொடரும் தொலைபேசி தொடர்புகளில் மிக அன்பாக கருத்துக்களை பரிமாறுவார். இவ் விடயம் தொடர்பிலான சூம் வழி கலந்துரையாடலின் போது எனக்கும் அழைப்பு விடுப்பார். இவ் விடயம் தொடர்பில் இலங்கையர்களை பயிற்றுவிப்பதற்கோ, உரையாற்றுவதற்கோ வருகை தருவதற்கு தயாராக இருப்பதாவும் கூறுவார்.

*(பயணம் தொடரும்)*

# பூனை வாந்தி

இப்படி என்னை கஷ்டப்படுத்தக்கூடாது நானும் ஒரு மனுஷிதான். எத்தனை வேலையை செய்றது. விடிஞ்சதிலிருந்து நானும் நிற்கக் கூட நேரமில்லாமல் வேலை, வேலை என்று செய்திட்டுதானே இருக்கேன். உங்க கண்ணால பார்த்துட்டு தானே இருக்கீங்க. எல்லா வேலையையும் ஒன்னாப் போட்டு ஒரு மனுஷியா செய்திட்டுத்தானே குளிச்சி ரெடியானேன். இப்போ போய் இந்த அசிங்கத்தை என்னை சுத்தம் செய்யச் சொல்லுறீங்களே... மனசாட்சியே இல்லையா உங்களுக்கு.

ஏய்! இப்ப என்னாடி உனக்கு, ஏலாட்டி விடுடி நான் பார்த்துக்கிறேன்.

ஓ... நான் உங்களுக்கு என்ன சொன்னாலும் கோபம் பொத்துக்கிட்டு வந்துடும். மற்றவன் படுற கஷ்டத்தை, வலியை, கொஞ்சமாவது உணரனும். ஒழுங்கான ஆளுண்டா நீங்க என்ன செய்திருக்கனும்? குளிக்கப் போக முன் இந்த ஆட்டோவை திறந்து பார்த்து சுத்தம் செய்திருக்கனும். ஏற்கனவே ஒரு தடவையும் இப்படித்தான் அந்த பூனை மலம் கழிச்சி வச்சிட்டு போனது. அப்போவே நான் சொன்னேன் இந்த ஆட்டோவை ஒரு நல்ல படங்கு ஒன்றை வைத்து மூடுங்க எண்டு. அதை செய்றத விட்டுடு இப்போ என்னோட முறைச்சிக் கொண்டு வாறீங்க.

இங்கப்பாரு.. நீ போய் உன் வேலையைப்பாரு, நானே கிளீன் பண்றேன் எண்டு சொல்லிட்டேன்தானே. அப்புறம் எதுக்கு திரும்பத்திரும்ப கடுப்பேத்திக்கிட்டு இருக்கா நீ... என்று முனீஸ் மனைவியை நொந்து கொண்டான்.

நேற்று இரவிலிருந்து வழமைக்கு மாற்றமாக மேகம் கும்மிருட்டாக இருந்தது. கடுமையாக மழை பெய்யப் போகிறதென்று மனதுக்குள் தோன்றிக் கொண்டே இருந்தது. எதிர்பார்த்ததைப் போலவே நேற்று இரவிலிருந்து சரியான மழை. விடியற் காலையில்தான் மழை விட்டது. பெய்த மழைக்கு வாசலில் தேங்கியிருந்த தண்ணி இப்போதுதான் கொஞ்சமாக குறைந்திருந்தது. ஒவ்வொரு நாளும் தூங்கச் செல்கின்ற போது வழமையாக ஆட்டோவை படங்கினால் மூடி விட்டுத் தூங்குவது தான் வழமை. நேற்றும் அப்படித்தான். ஆனால், காலையில் முழுமையாக விடிவதற்கு முன்பு, சொந்தக்காரர் ஒருவரின் வீட்டிலிருந்து மரண செய்தி. மனைவியின் நெருக்கமான உறவினர். அவர்களுடைய வீடு. எமது வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்தது.

அவர்களின் வீடு தூரம் என்பதால் நானும் மனைவியும், மகளும் மய்யத்தை மையவாடிக்கு கொண்ட செல்ல முன்னர் போய்ப் பார்த்து விட வேண்டுமென்பதற்காக இருக்கின்ற சில வேலைகளை அப்படியே கிடப்பில் போட்டு விட்டு இருக்கின்ற வேலைகளை முடித்து விட்டு அவசர அவசரமாக கிளம்பினோம். ஆட்டோவை வெளியே எடுப்போம் என்று ஆட்டோவின் படங்குகளை திறந்தால் பூனை ஆட்டோவின்முன்சீட்டில்மலம்கழித்திருந்தது. இப்படியான நிகழ்வு ஆட்டோவில் இடம் பெறுவது இது முதற்தடவை அல்ல. பூனை மலத்தின் நாற்றம் தாங்க முடியவில்லை. குமட்டிக் கொண்டு வந்தது. மகள் மூக்கை பொத்திக் கொண்டாள். மனைவியோ பத்தடிக்கு அப்பால் நின்றாள். இதனைச் சுத்தம் செய்ய வேண்டுமென மனைவியிடம் சொன்னதால்தான் ஆயிரத்தொரு விதண்டாவாதங்கள் பூதாகரம் கண்டு கொண்டிருக்கிறது. அந்தப் பூனையை மட்டும் இப்போ இறைவன் என்ட கண்ணில காட்டினான் என்றால் நடக்குறதே வேறு. எனக்கு வாற ஆத்திரத்துக்கு என்ன செய்வேன் என்றே தெரியாது.

சும்மா புலம்பாமல் கெதியாக அதை சுத்தம் தான் செய்யுங்களேன். மைய்யத்தை அடக்க கொண்டு போய்டுவாங்க. நோய்ல படுத்துக் கிடக்கும் போதும் பார்க்கப் போக கிடைக்கல. கடைசியா அடக்கம் செய்றதுக்கு முன்னால முகத்தை யாவது போய்ப் பார்ப்போம்.

ஏய்! வாய மூடு. நான் படுற பாடு எனக்குத்தான் தெரியும். காலங்காத்தால, இங்க இப்படியொரு பிரச்சினை என்று பார்த்தால் உன்ட பாடு பெரும் பாடாய்க் கெடக்கு. என்ட கஷ்டம் எனக்குத்தான் தெரியும்.

இப்போ என்னா... இப்படியே சண்டையா பிடிச்சிட்டு இருக்கப் போறிங்க அவசரமா சுத்தம் செய்தால்தானே நேரத்துக்கு போக முடியும்.

'இப்போ நான் என்ன செய்திட்டு இருக்கேன். அதைத்தானே செய்கிறேன். நாற்றம் தாங்க முடியலடி. ஒன்னும் சாப்பிடவும் இல்லை. இதுல இந்த நாத்தம் வயிற்றை அப்படியே புரட்டிக் கொண்டு வருது.

இந்தாங்க இந்த துண்டை மூக்கில் கட்டுங்க. எனக்கு அந்த வாசம் ஒத்துக் கொள்ளுதில்ல. நீங்களே அதை துப்பரவு செய்ங்க. 'நான் போய் தண்ணியும் சவர்க்காரத் தூளையும் எடுத்துட்டு வாறேன்'

'அதை செய் முதல்ல', இப்படி காலையில் மிகவும் சிரமமான அந்த நிகழ்வை ரொம்ப வருத்தத்துடன் செய்து முடிச்சிட்டு மரண வீட்டுக்குச் சென்று வீடு திரும்பினோம். ஆனால், போய்ச் சேருவதற்குள் மரணித்தவரை கொண்டு போய் அடக்கம் செய்து விட்டார்கள். எத்தனை கிலோ மீற்றர் ஓடி வந்த போதும் இப்படி நடந்து விட்டதே. கடைசி வரை மரணித்தவரின் முகத்தை பார்க்கவே முடியாமல் போய் விட்டதே என்ற வருத்தம் அனைவருக்கும்.



அங்கிருந்து வீடு வரும் வரை மனைவி என்னை முந்திரிக் கொட்டை போல வறுத்தெடுத்துக் கொண்டே இருந்தாள். அடிக்கடி திட்டிக் கொண்டே வந்தாள். அந்த வலியோடுதான் இப்போது இரவு உணவை சாப்பிடும் போது அந்தப் பூனையை எப்படியாவது பிடித்து எங்காவது தூரக் கொண்டு போய் விட வேண்டும் என்று மனம் பொங்கிக் கொண்டிருந்தது.

அந்த பூனையை எப்படியாவது பிடித்து விட வேண்டுமென்பதற்காக திட்டங்கள், போர்க்கால தந்திரங்கள், வேட்டைத் தந்திரங்களென, அத்தனையையும் கரைச்சுக் குடித்தவனைப் போல பூனையை பிடிப்பதற்காக திட்டங்கள் தீட்டியிருந்தேன. நிச்சயமாக இன்று இரவுதான் மனம் நிம்மதியாக உறங்கப் போகிறேன். விடியும் போது பூனையை பிடித்து விட்டேன் என்ற சந்தோசத்தில்தான் விழிப்பேன், என்ற நம்பிக்கையோடு உறங்கி காலையில் எழுந்து வந்து பார்க்கிறேன்.

ஆஹா..ஆ...ஆஹாஹா பூனையார் வசமாக சிக்கிட்டார். இனிமேதால்தான் சம்பவம் இருக்கு. பூனையை உற்றுப் பார்க்காமலேயே தெரிந்தது. அது ஒரு பெண் பூனையென்று.

ஐய்யோ...ஐய்யய்யோ..

'என்னை எதுவும் செய்திடாதிங்க என் வயிற்றில் குட்டிகள் இருக்கு. நிறைமாத கர்ப்பிணியாக இருக்கிறேன். என்று அழத் தொடங்கியது அந்த பெண் பூனை.

'இங்கபாரு உன்னை என்னால இப்போ சத்தியமா மன்னிக்க முடியாது.'

ஏன்? இப்படி இரக்கமே இல்லாமல். பேசுரிங்க?

ஓ... எனக்கு இரக்கமில்லையா?

அப்படித்தானே. அப்படியென்றால் ஏன் ஒரு நிறைமாத கர்ப்பிணியென்றும் பார்க்காமல் இப்படி குரோதமாக பேசுரீங்க.

ஏய்! என்னா செய்ரதெல்லாம் பண்ணிட்டு இப்போ ஈரமில்லை, இரக்கமில்லையென்று சீன் போடுகிறாய்.

ஐயோ.. அப்படியில்லை.

அப்போ எப்படி..?

'என்னை முதல்ல இந்த வலையில் இருந்து காப்பாற்றுங்க பேசி தீர்த்துக்கல்லாம்'

உன்னை எப்படி நம்புற..?

நம்பிக்கைதானே வாழ்க்கை ப்ரோ.

ஏய்... இங்கபாரு நான் ரொம்ப கோபக்காரன். என்னை கடுப்பேத்துனா...

'ஐயோ...இவனை நமக்கு தெரியாததது போல கதைக்கிறான் இவனே ஒரு டம்மி பீஸ்ஸு. என்னா முறைக்கிறான்'

ஏய்! பூனையே என்னா மைன்ட் வாய்ஸ்னு சத்தமா பேசிட்டு இருக்கா.?

ஆஆஆ... ஆஆ.

ஐயோ அவ்வளவு சத்தமாவா பேசிட்டேன் பாஸ்.?

இப்போ உன்னை கைமா பண்ணப்போறேன் பாரு.

எசமானே..

அப்படி மட்டும் பண்ணிடாதே எசமானே.

ஆமா இப்போ என்னா நினைச்சா.?

நானா..?

நீயேதான்.

நீங்க ரெம்ப பெரிய மனுசரு நல்லவரு வல்லவருருரு...

என்னா?

ருருரு..

அடச் சீ

சொல்லு.

எதைப்பா சொல்ல.?

நான் ஒரு டம்மி பீஸ் என்றியே..

ஐயோ அதுவா ஒரு குழப்பத்திலே

வாய்ல வந்துட்டு பாஸ், நீங்க ஒரு வீரனாச்சே..

ஏய் நீ என்ன ரெம்ப சூடாக்குறா

நான் சூடானேன்...

எசமான் கோபம் வேணாம். நான் தான் உங்க மனைவி தார எச்ச சொச்சையெல்லாம் சாப்பிடுட்டு இங்கேயேதானே பாஸ் இருக்கேன். எனக்கு தெரியாதா பாஸ். ஆனால், ஒன்று மட்டும் சொல்லனும் பாஸ் உங்க மனைவி உங்களைவிட ரெம்ப சூப்பர் பாஸ், என்று எள்ளி நகையாடிக் கொண்டிருந்தது.

என்னா... என்னாது... ரொம்ப நல்லவங்க என்று சொல்ல வந்தேன்.

ஓ... அவளே உனக்கு சாப்பாட்டை போட்டு வளர்த்து விட்டுட்டு நீ வாந்தியெடுத்த அசிங்கத்துக்காக என்னை தீட்டி தீக்கிறாளா? அவளுக்கு இன்னைக்கு இருக்கு. அவளை அப்புறமா வச்சிக்கிறேன்.

ஐயோ உண்மையை கூட சொல்ல முடியலயே.. இனி எச்சி சாப்பாடு கூட எனக்கு கிடைக்காதே... இந்த கடங்காரனாலே..

டேய் கடங்காரா...

என்னா பூனையம்மா மறுபடியும் மைன்ட் வாய்சா.

ம்ம்..ம்ம். இப்போ கேட்டு இருக்காதே நான் நினைச்சது.

'உனக்கு ரொம்ப கொழுப்புதான்'

ஐயோ வயிறு வலிக்குது

எசமானே என்னை அவுத்து விடுங்க. காலைக்கடன் கழிக்கவேணும். வந்து நம்ம ஆறுதலா பேசிக்கலாம்.

ஆஆஆஆ...ஆஆஆஆஆ.

உன்னை...உன்னை.

பாஸ்...பாஸ்...சத்தம் சத்தம் வேணாம் பாஸ், பயமா இருக்கு.

இப்போ நான் உன்னைக் கொல்லப் போறேன்.

வேணா...வேணாம்

அந்த முடிவு மட்டும் எடுக்காதிங்க பாஸ்.

'இப்போ நான் என்ன பண்ணனும் சொல்லுங்க பாஸ். நான் உங்க ஆட்டோவுலே வாந்தி எடுத்தது தப்புதான் பாஸ். அதுவும் நீங்க கஷ்டப்பட்டு போட்ட தடையெல்லாம் மீறிப்போய் படுத்து அப்புறம் வாந்தி எடுத்ததும் தப்புதான் பாஸ். அப்படி நான் செய்திருக்க கூடாதான். என்ன செய்றது... அன்று நிலைமை அப்படி பாஸ்'

என்ன நிலைமை அது.?

புதுசா ஏதோ யோசிச்சிட்டா போல.

சத்தியமா அப்படி ஒண்ணுமில்லை பாஸ்.

அப்போ.!

அதுவா.. பாஸ்?

ஏய்..!

'இல்லை பாஸ் வலையை கிழிக்கல, அரிப்பு, அதுதான் சொறிஞ்சேன்'

நீ சொறிஞ்சது போதும். நிலைமையை சொல்?. உன்னாலே நான் அன்றைக்கு முழுதுமா எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா.? அந்த ராட்சசி பற்றி உனக்குதெரிஞ்சி இருந்தும் இப்படி என்னை அவள்ட மாட்டி விட்டுட்டியே.

ஐயோ..அப்படியில்லை பாஸ்.

உண்மையிலேயே அன்றைக்கு என்ன நடந்திச்சின்னா.

ஆமா ஏன் இவ்வளவு சோகம்?

ம்ம்.. நீங்க என்னாலே பட்ட கஷ்டமெல்லாம் என் மனக் கண்ணுக்கு முன்னாலே வந்து போச்சு அதுதான் இந்த சோகம்.

ஏய் உனக்கு ரெம்ப குசும்பு. நீ உருட்னது போதும். அந்த நிலைமையை சொல்லித் தொலை.

ம்ம்.. சொல்றேன்...சொல்றேன்

கொஞ்சம் லைட்டா, இந்த வலையை எடுத்திடுங்க பாஸ்.

இங்கப்பாரு இப்போ நீ

சும்மா என் நேரத்தை வீணடிக்கிறா?

எனக்கு வாற கோபத்துக்கு, உன்னை கொன்னுட்டுத்தான் வேற வேலை பார்த்திருக்கனும்.

இல்லை எசமான் நான் சொல்லிடுறேன்

எசமான் எனக்கு ஒரு டவுட்.

ஐயோ கடவுளே...

ஐயோ பாவம் அவரே கண்பீயுஸ் ஆகிட்டார்.

ஏய்...

நோ...நோ... கூல் கூல்

எசமான் என்னன்றா அந்த மூன்றாவது தெருல நாளாவது வீட்டுக்காரன் இருக்கானே

ஆமா கபூர் - பொலிஸ் ஓய்வு பெற்றவர் தானே.?

ஆமா..ஆமா..பாஸ்

அங்கே அவர்ட மகன் ஆட்டோ ஓட்டு வாரே..

ஆமா அஜாத் ..

ஆ..ஆ..அவர்தான்.

என்னா அவர்ட ஆட்டோவுலயும் அசிங்கம் பண்ணிட்டு செமயா வாங்கி கட்டினியா..?

ஐயோ பாஸ் உங்களுக்கு இப்படியொரு ஆசை இருக்கும்னு நினைச்சிக்கூட பார்க்கல.

அப்போ என்னா அவர்ட வீட்ல.

என்ன பாஸ் ஊருக்கே தெரியும் பணக்கார வீட்டு பெண்ணொன்றை அவன் திருமணம் முடிச்சி அன்று சரியான தடல்புடல் சாப்பாடு போட்டது.

ஆமா அதுக்கு என்னப்போ.

அங்கேதான் பாஸ் செம்மையா சாப்பிட்டு விட்டு வாறன். போறேவனெல்லாம் வயிறு முட்ட சாப்பிட்டுட்டு கழிவை நிறையே விட்டுட்டானோல். ஒரு மலை போல சாப்பாடு குவிந்து கிடந்தது.

என்ன பாஸ்! உங்க ஆட்கள் இப்படி கல்யாணம் என்ற பேர்ல உணவை மோசமாக வீணடிக்கிறாங்க..அவங்க வீணடிச்ச சாப்பாட்டேதான் நானும் என் கணவரும் செம்மயா சாப்பிட்டோம் பாஸ்.

என் கணவர் கடுவன் பூனை அப்பவே சொன்னது இங்கப்பாரு செல்லம்மா கண்டபடி சாப்பிடாதே அப்புறம் பின் விளைவு ஆபத்தா இருக்கும் என்று. அதை அவர் சொன்னதற்கு கோவிச்சிட்டுதான் உங்க ஆட்டோவுல வந்து படுத்தேன் பாஸ்.

அதனாலதான் அந்த சம்பவம் நடந்துச்சு பாஸ். ஆட்டோவே விட்டு கீழே இறங்குறதுக்குள்ளேயே வாந்தி நீர் வீழ்ச்சியாய் அப்படியே சொட்டிட்டு பாஸ்.

அதனாலே அன்றிரவு நான் சாரியாகவும் தூங்கல பாஸ்..

ஏய்...ஏய்... உன்னை நான் கொல்லாம விடமாட்டேன்.

ஐயோ..ஐயோ...காப்பாத்துங்க.


டேய் உன்னை வெட்டாமல் விடமாட்டேன்டா...

என்னங்க..என்னங்க.. என்னாச்சு இந்த மனுஷனுக்கு யோவ் என்னையா இந்த காட்டு கத்து கத்துறா?

இங்கே பாருடி இங்கே பாருடி அந்த பூனையை ஒரு போடுல போட்டேன். அடப்பாவி மனுஷா... இந்த நடு ராத்திரியிலே என் தூக்கத்தை இப்படி கலைச்சிட்டியே. பேசாமல் தூங்கு.

–ஜே. பிரோஸ்கான்...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 124




திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 124
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 124

### இடமிருந்து வலம்

1. இராமாயணக் கதையில் வரும் காட்டு வாழ்க்கை
5. வீட்டின் வளர்ப்புப் பிராணி
7. சமமாக ஒப்புவித்தல்
8. மேல்மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையிலான அளவு
9. தொடக்கமே குழம்பிவிட்டது
11. அசுத்தம் (திரும்பியுள்ளது)
12. இசையுடன் இணைந்தது (திரும்பியுள்ளது)
14. ஒன்றைக் குறித்த முடிவு தொடர்பாக வெவ்வேறு கருத்துக் கூறுப வரிடையே நடக்கும் போட்டி (திரும்பியுள்ளது)
18. பயணிகள் தற்காலிகமாகத் தங்கும் இடம்
20. நீளத்தை அளவிடும்போது இதுவும் தேவைப்படும். (குழம்பியுள்ளது)
21. ஒன்றை அடைந்துவிட வேண்டும் என்கிற தீவிர விருப்பு
22. செல்வம் (குழம்பியுள்ளது)
23. பரம்பரை(குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. மருந்தாகப் பயன்படும் ஒருவகை பூண்டின் வேர்
2. தன்மதிப்பு (குழம்பியுள்ளது)
3. குரங்கு
4. ஊதியம்
5. பயன்பாட்டில் காலத்தால் முந்தியது
6. செய்வதற்கு எதுவுமே இல்லாத நிலையைக் குறிப்பது.
10. லாபம், பயன் (ஆதாயம்)
13. நெற்றித் திலகம் (குழம்பியுள்ளது)
15. எரித்தல்
16. முடிவும் குழம்பிவிட்டது.
17. வலிமை
18. புத்திசாலி
19. தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர். (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 123

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. கவரிமான்
5. சாவி
7. வரி
8. மாதவி
10. சர்ச்சை
12. வனம்
14. ஆசான்
15. வசதி
17. மயில்
19. வானம்பாடி
21. தேன்
22. தலை
23. கோப்பை
25. புனிதம்
26. சாதனை

**மேலிருந்து கீழ்**

1. கவசம்
2. வரிசை
3. மாதர்
4. மான்
6. விதம்
9. விவசாயி
11. அச்சம்
13. மன்னன்
15. வதனம்
16. பாதிப்பு
18. தேர்தல்
19. வானிலை
20. கோடி
24. பைசா

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 123

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ம. திவாகரன்** | **என்.எஸ்.ரஜீவ்,** | **ஏ.டபிள்யூ.எம். நியாஸ்** |
| விநாயக முதலியார் வீதி, | பிரதேச செயலகம், | ஏ 29/3 சமித்திய வீதி, |
| பருத்தித்துறை | முசலி, மன்னார். | மாவனல்ல. |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எம். சசாத்** மருதமுனை
2. **ஜலான் நளீப்,** துல்ஹிரிய
3. **கே.எப். மில்ஹானி** ஏறாவூர்
4. **எஸ். கிதுர்ஷா** பரக்காதுரவ
5. **அய்னா மாஸீர்** நாகொல்லாகொட
6. **எம்.எம். மாஹி** துல்ஹிரிய
7. **எம்.எச்.எம். பாஸி** ரஜவெல்ல
8. **ரஜினி சிவஞானம்** மட்டக்களப்பு
9. **எம்.ஏ.எச்.எம். வஹ்பா** குருநாகல்
10. **எஸ்.செல்வராஜா** பதுளை

# ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஏற்பாட்டில் காப்புறுதி விழிப்புணர்வூட்டும் அமர்வு

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) நிறுவனத்தினால் பூரண CAR (ஒப்பந்தக்காரர்களது அனைத்து அபாயவாய்ப்பு) காப்புறுதி விழிப்புணர்வு அமர்வு அண்மையில் கொழும்பு Courtyard by Marriott இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில், நிர்மாணத் துறையைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரி சபையைச் சேர்ந்தவர்களுக்கு நிர்மாண செயற்திட்டங்களுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைத்துக் கொள்வதற்கு CAR காப்புறுதியினால் வழங்கப்படும் முக்கிய பங்களிப்பு தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.



CAR காப்புறுதியின் பல்வேறு உள்ளம்சங்களான காப்புறுதியின் தன்மை, அனுகூலங்கள், இடர் மதிப்பாய்வுகள், காப்புறுதி உள்ளம்சங்கள், உரிமைகோரல் நிர்வகிப்பு மற்றும் எதிர்பாராத இடர்கள் மற்றும் கடப்பாடுகளிலிருந்து செயற்திட்டங்களை பாதுகாப்பதற்கான சிறந்த செயன்முறைகள் போன்றன தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

நிர்மாணத் துறையின் வளர்ச்சி மற்றும் மீட்சி தொடர்பில் SLICGL கொண்டுள்ள அர்ப்பணிப்பு குறித்தும் இந்த அமர்வின் போது வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், பங்காளர்களின் ஈடுபாடு மற்றும் முதலீடுகளை பாதுகாப்பதை உறுதி செய்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

நிர்மாணத்துறை எதிர்கொண்டுள்ள இடர் முகாமைத்துவ சவால்கள் தொடர்பில் அனைவரும் ஒன்றிணைந்து அர்த்தமுள்ள வகையில் உரையாடல்களில் ஈடுபடுவது, அறிவுப் பகிர்வு மற்றும் தொடர்பாடல் வாய்ப்புகள் ஆகியவற்றை முன்னெடுப்பதில் SLICGL கவனம் செலுத்தியிருந்தது.

# இலங்கையில் தனது பிரசன்னத்தை விஸ்தரித்துள்ள Star Garments குழுமம்



கொலன்ன மெனுபக்ஷரிங் லிமிடெட் Star Garments குழுமம் ("Star") தனது புதிய விரிவாக்க செயற்பாடான, கொலன்ன மெனுபக்ஷரிங் லிமிடெட்டின் சொத்துகளை கையகப்படுத்தும் செயற்பாடுகளை பூர்த்தி செய்திருந்தது. குழுமத்தின் பன்னிரண்டாவது தொழிற்சாலையாக இது அமைந்திருப்பதுடன், இரத்தினபுரி மாவட்டத்தில் 1000 க்கும் அதிகமான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்திருக்கும். உலகின் இதர பாகங்களுக்கு, இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளுக்கு காணப்படும் வாய்ப்புகளை விரிவாக்கம் செய்வதற்கு காணப்படும் வாய்ப்புகளை பயன்படுத்தி, செயலாற்றுவதற்கான Star'இன் நம்பிக்கைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இந்த கையகப்படுத்தல் தொடர்பில் Komar இன் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சார்ளி குமார் கருத்துத் தெரிவிக்கையில், "ஆடைகள் உற்பத்தியில் முழுமையான வளங்களையும் வெளிப்படுத்தாத நாடாக இலங்கை அமைந்துள்ளது எனும் எமது நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவும், இலங்கைக்கான எமது நீண்ட கால அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாக இந்த முதலீடு அமைந்துள்ளது. Komar ஐப் பொறுத்தமட்டில் Star தொடர்ந்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும் என்பதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் இந்தப் பிரிவின் வளர்ச்சியை தொடர்ந்தும் நாம் எதிர்பார்த்துள்ளோம்." என்றார்.

நான்கு தசாப்த காலப்பகுதிக்கு மேலான அனுபவத்துடன், இலங்கையின் ஆடைகள் உற்பத்தித் துறையின் வளர்ச்சியில் Star முக்கிய பங்காற்றியுள்ளது.

# பவரின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளராக நிஷாந்த வீரசிங்க நியமனம்



இலங்கையில் பல்வேறு துறைகளில் வியாபார ஈடுபாட்டைக் கொண்ட முன்னணி பன்முகப் படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றும், பவர் என அறியப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், தனது பிரதி முகாமைத்துவப் பணிப்பாளராக நிஷாந்த வீரசிங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. சுகாதார பராமரிப்பு பிரிவின் பணிப்பாளராக இவர் தொடர்ந்தும் இயங்குவார்.

தமது புதிய நிலையில், நிறுவனத்தை மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு அவசியமான வழிகாட்டல்களை தமது பரந்த அனுபவம் மற்றும் மூலோபாய நோக்கை பிரயோகித்து வழங்குவார். பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் விவசாய பணிப்பாளராக பணியாற்றும் ஜானக குணசேகரவுடன் இவர் இணைந்து செயலாற்றுவார். பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்களாக வீரசிங்க மற்றும் குணசேகர ஆகியோர் பவர் நிறுவனத்தின் தலைமைத்துவத்தை மேலும் வலிமைப்படுத்துவர்.

பவர் நிறுவனத்தின் சுகாதார பராமரிப்பு பிரிவை இலங்கை சந்தையில் கீர்த்தி மிக்க, துரித முன்னேற்றத்துக்கு உட்படுத்தி, தொழிற்துறையின் முன்னணி மூன்று நாமங்களில் ஒன்றாக திகழச் செய்வதில் வீரசிங்க முக்கிய பங்காற்றியிருந்தார்.

மருந்துப் பொருட்கள், மருத்துவ சாதனங்கள், இனங்காணல்கள் மற்றும் போஷாக்கு ஆகிய பிரிவுகளில் பரந்தளவு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை இந்தப் பிரிவு வழங்குகின்றது.

அவரின் தலைமைத்துவத்தின் கீழ், சர்வதேச ரீதியில் சுகாதார பராமரிப்புத் துறையில் புகழ்பெற்ற நாமங்களான GSK, Sanofi, J&J (specialty care), Takeda (vaccine), Covidien மற்றும் Fresenius Medical Care போன்றவற்றுடன் இணைந்து, இந்தப் பிரிவு பல்வேறு புத்தாக்கமான மற்றும் உயிர் காக்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வெற்றிகரமாக அறிமுகம் செய்திருந்தது.

# DSI Tyres நிறுவனம் ஏற்பாடு செய்த Hankook டயர் விற்பனை முகவர் சந்திப்பு



இலங்கை டயர் சந்தையின் நம்பிக்கை மிக்க வர்த்தக நாமமான DSI Tyres நிறுவனம் இலங்கை சந்தைக்கு வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ள Hankook ரேடியல் டயர்களை உள்நாட்டுச் சந்தையில் மேலும் உறுதியாக நிலைநிறுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. உலகப் புகழ்பெற்ற Hankook டயர் விற்பனை முகவர்களையும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் கௌரவிக்கும் வைபவமொன்றை DSI Tyres நிறுவனம் அவுங்கல்ல RIU ஹோட்டலில் வெகு விமரிசையாக நடாத்தியுள்ளது. இதன் போது DSI Tyres நிறுவனத்துடன் இணைந்து Hankook டயர்களை உள்நாட்டுச் சந்தையில் விநியோகிப்பதற்கு முதன்மை பங்களிப்பை வழங்கிய விற்பனை முகவர்களை கௌரவிக்கும் முகமாக Hankook நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் DSI Tyres நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோர் கையொப்பமிட்ட விஷேட சான்றிதழ்களும் அதிகாரம் பெற்ற விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்டன. உத்தரவாதத்துடனும் நம்பிக்கையுடனும் Hankook டயர்களை கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலான அறிவுறுத்தல்களும் விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்டன.

உள்நாட்டு டயர் சந்தையில் முதன்மையானதும் நம்பிக்கை மிக்கதுமான வர்த்தகநாமமான DSI Tyres நிறுவனத்தின் நிர்வாகத்தின் ஊடாக Hankook டயர்களை விநியோகித்தமை வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் விற்பனையையும் அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாக இங்கு கருத்து தெரிவித்த விற்பனை முகவர்கள் தெரிவித்தனர்.

# DFCC வங்கியுடனான கூட்டாண்மையை பலப்படுத்தியுள்ள John Keells Properties



ஜாஎல Viman மாதிரி தொடர்மாடிக் குடியிருப்புத் திட்டத்தைப் பார்வையிடுவதற்கு DFCC வங்கியின் வாடிக்கையாளர்களை அழைத்ததன் ஊடாக John Keells Properties நிறுவனம் DFCC வங்கியுடனான தனது கூட்டாண்மையை மேலும் பலப்படுத்தியுள்ளது. இந்த மூலோபாயக் கூட்டாண்மையின் ஊடாக Viman திட்டத்தில் தங்களுடைய கனவு இல்லத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கும் எதிர்கால வீட்டு உரிமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு கட்டாயமான வாய்ப்பை உருவாக்குவதற்கு DFCC வங்கி கவர்ச்சிகரமான வீட்டு அடமானத் தீர்வுகளை விரிவுபடுத்துகின்றது.

வொக்ஸ்ஹால் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள John Keells Properties நிறுவனத்தின் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜாஎல Viman குடியிருப்புத் திட்டத்தின் மாதிரி தொடர்மாடியில் தனித்துவமான நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது. வீட்டின் உரிமையை சுமுகமான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய தனிப்பயனாக்கப்பட்ட அடகுத் தீர்வுகள் உள்ளிட்ட இத்திட்டத்தில் காணப்படும் நன்மைகளைப் புரிந்துகொள்ளும் நோக்கில் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அனுபவம் மிக்க விற்பனைக் குழுவினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். பெறுமதிமிக்க இந்தக் கலந்துரையாடல் மூலம் வாடிக்கையாளர்கள் இத்திட்டம் குறித்து சரியான புரிதலையும், இதனால் வழங்கப்படும் தனித்துவமான வசதிகள் பற்றியும் அறிந்து கொண்டனர்.

வங்கியின் ரீடெய்ல் மற்றும் சிறிய நடுத்தர தொழில்முயற்சிப் பிரிவுக்கான தலைவரும், சிரேஷ்ட பிரதித் தலைவருமான ஆசிரி இத்தமல்கொடகுறிப்பிடுகையில், "முதலீட்டுக்கான உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பு என்பதே எதிர்காலத்தில் வீட்டில் முதலீடு செய்ய விரும்பும் வீட்டு உரிமையாளர்களின் முக்கிய விடயமாகும் என்றார்.

# புதிய தலைமைச் செயற்பாட்டு அதிகாரியாக சஞ்சய் விஜேமான்னவை நியமித்தது HNB

இலங்கையின் மிகப்பெரிய தனியார் துறை வாடிக்கையாளர் வங்கியான HNB PLC, சஞ்சய் விஜேமான்னவை வங்கியின் புதிய தலைமைச் செயற்பாட்டு அதிகாரியாக (COO) 26 ஏப்ரல் 2024 முதல் அமலுக்கு வரும் வகையில், உரிய ஒழுங்குமுறை அனுமதிகளுக்கு உட்பட்டு நியமித்தது.

14 வருடங்களுக்கும் மேலான பெருநிறுவன முகாமைத்துவ வெளிப்பாடு உட்பட 29 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள வங்கித் துறையில் அனுபவம் வாய்ந்த விஜேமன்ன இதற்கு முன்னர் HNB இன் பிரதிப் பொது முகாமையாளர் – வாடிக்கையாளர் வங்கிக் குழுமமாக பணியாற்றினார்.



நிதி ஆய்வாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கிய விஜேமான்ன, HNB இல் முகாமைத்துவப் பயிற்சியாளராக இணைந்தார், அங்கு அவர் முக்கிய வங்கியியல் செயல்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் பரந்த வெளிப்பாட்டைப் பெற்றார், மேலும் கார்ப்பரேட் வங்கிப் பிரிவில் தொடர்ந்து முன்னேறினார்.

அவர் பல சர்வதேச வங்கிகளில் முக்கிய தலைமைப் பதவிகளில் பணியாற்றினார், அங்கு அவர் கிளை வங்கி, Custody, Network Management, விற்பனை மற்றும் வணிக மேம்பாடு உள்ளிட்ட வங்கி சேவைகளில் தனது நிபுணத்துவத்தை மேலும் வளர்த்துக் கொண்டார்.

HSBC இன் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவில் இணைந்து, விஜேமன்ன பிரீமியர் வங்கி உட்பட விற்பனைத் தலைவராகவும், கிளைகளின் தலைவராகவும் பணியாற்றினார்.

# சம்பத் வங்கி, அறிமுகப்படுத்தும் பிரத்தியேக தீர்வு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறையில் டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வுகளுக்கு அதிகரித்துவருகின்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், தனது பிரத்தியேக தீர்வை அறிமுகப்படுத்துவது தொடர்பில் சம்பத் வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது. இலங்கையில் சாதனத்தை அறிமுகப்படுத்தும் முதலாவது வங்கியாக சம்பத் வங்கி மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வணிகங்கள் தமது பரிவர்த்தனைகளை சீரமைத்து, வாடிக்கையாளர்களின் அனுபவங்களை மேம்படுத்துவதற்கு அவற்றுக்கு வலுவூட்டுவதற்காக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் தனித்துவமான தேவைகளுக்கு தீர்வுகாணும் வகையில் இப்புத்தாக்கமான கட்டமைப்பு வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது.



சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் முக்கியமான வகிப்பாகம் சந்தையில் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் நிலையில், மலிவான மற்றும் பாவனைக்கு இலகுவான கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சம்பத் வங்கி இனங்கண்டுள்ளது. இலகுவாக கொண்டு செல்லக்கூடிய மற்றும் பல்வகைத் தொழிற்பாட்டுத்திறன் ஆகியவற்றுடன் இலகுவான பாவனையை சிந்தனையில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள சாதனங்கள், வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் இலகுவான வழிமுறையை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு வழங்கி, அதன் மூலமாக விற்பனை மற்றும் வருமான வளர்ச்சியை முன்னெடுக்கச் செய்கின்றன.

# புதிய தோற்றத்துடன் அறிமுகமாகிறது singhagiri.lk ஆன்லைன் ஸ்டோர்

SINGHAGIRI

இலங்கையில் முதன்மையான இலத்திரனியல் மற்றும் வீட்டுப் பாவனை மின் உபகரணங்களை வழங்கிவரும் சிங்ககிரி தனியார் நிறுவனம் தமது ஆன்லைன் விற்பனை நிலையமான www.singhagiri.lk என்ற இணையவழி ஷொப்பிங் தளத்தை பயன்படுத்துபவர்களின் வசதிக்கு ஏற்றவாறு புதிய தோற்றத்தில் மீள் ஆரம்பம் செய்துள்ளது.

www.singhagiri.lk என்ற இணையத்தளம் 10 வருடங்களுக்கும் மேலாக ஆன்லைன் ஊடகத்தின் மூலம் நம்பகமான முறையில் கொடுக்கல் வாங்கல் சலுகைகளை மிகவும் வெற்றிகரமான முறையில் மேற்கொண்டு வருகிறது. உயர் தரத்தில் உலகின் முன்னணி உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் காட்சியறை வலையமைப்பு மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவை வலையமைப்பையும் சிங்ககிரி மேற்கொண்டு வருகிறது. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நாமங்களில் 1000இற்கும் அதிகமான இலெக்ட்ரிக் தயாரிப்புகளை உள்நாட்டு சந்தையில் அறிமுகம் செய்துள்ளது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள www.singhagiri.lk இணைய விற்பனை நிலையத்திற்கு எந்தவொரு இணைய சாதனத்தின் ஊடாகவும் இலகுவாக இணைந்திட முடியும். மேலும், தேவையான செயற்பாடுகளை எவ்வித இடையூறும் இன்றி மேற்கொள்ளும் திறன் இதில் உள்ளது. டிஜிட்டல் தளத்தின் மூலம் தேவையான வேலைகளை மிகவும் இலகுவாகவும், விரைவாகவும் செய்யும் திறன் உள்ளது.

# மாதவிடாய் துவாயை கொள்வனவு செய்ய முடியாமைக்கு எதிராகப் போராடும் Femography

10,000 க்கும் மேற்பட்ட மீள்பயன்பாட்டு சுகாதாரத் துவாய்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்திற்கான அதன் அர்ப்பணிப்பை MAS இன் Femography மேலும் அதிகரித்துள்ளது. இந்த நன்கொடைகள் மாதவிடாய் சுகாதாரத் துவாய் வறுமையை ஒழிப்பதற்காகப் போராடி இந்நாட்டுப் பெண்களின் வாழ்வை வலுவடையச் செய்யும் நோக்கில் செய்யப்பட்டன. பெண்களின் விசேட தேவைகளுக்கு தீர்வு காணும் முயற்சியாக சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமானது, பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் 2000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு உதவிகளை வழங்குவதாகும். Femography 'Run for Her' வேலைத் திட்டத்துடன் இணைந்து, இந்த மீள்பயன்பாட்டு சுகாதார துவாய் நன்கொடை மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கான நிதி மற்றும் விழிப்புணர்வைத் திரட்டியது.



பெண்மையின் படைப்புத்திறன் மற்றும் பராமரிப்பு ஆற்றலால் ஈர்க்கப்பட்ட ஆடைகள் மூலம் பெண்களுக்கு நல்ல ஆரோக்கியம், பெருமை மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட Femography, பெண்களின் சுகாதாரத்திற்கான பாரம்பரிய வரம்புகளுக்கு எதிராக நிற்கும் FemTech ஆடைத் துறையில் ஒரு முன்னோடியாகவும் குறிப்பிடலாம். அதனால்தான், பெண்களின் சுகாதாரத்தில் புத்தாக்கங்கள், ஒருமுறை தூக்கி எறியக்கூடிய சுகாதாரப் பொருட்கள் முதல் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சுகாதாரப் பொருட்கள் வரை பெண்களின் நல்வாழ்வுக்கு பெரும் பங்களிப்பைச் செய்ய அவர்கள் உழைத்துள்ளனர்.

பெண்களின் மாதவிடாய் சுகாதார சவால்களை நிவர்த்தி செய்வதில் Femographyயின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் மட்டுமல்லாது, இந்த திட்டம் Femographyயின் சமூகப் பொறுப்பு மற்றும் புத்தாக்கத்தின் நோக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது எனத் தெரிவித்தார்.


Senthooram
செந்தூரம்
2024 ஜூன் 9 ஞாயிற்றுக்கிழமை
இளம் வயதில் சாதிக்க நினைக்கும்
விதுஷா விக்னராஜா

# இந்தியாவுக்கே மொட்டையடித்த நட்வர்லால்



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

இந்தியாவில் வாழ்ந்த நட்வர்லால் என்பவர் உண்மையிலேயே ஒரு பலே கில்லாடி தான். தாஜ்மாஹாலையே ஏமாற்றி விற்றிருக்கிறார் என்றால் எப்பேர்ப் பட்டவராக இருப்பார். 1912 ஆம் ஆண்டு பீஹாரில் பிறந்த உலக மகா ஏமாற்றுக்கார ரான இவர் ஒரு வழக்கறிஞர் கூட.

ஆனால் மாறுவேடம் போடுவது, போலி கையொப்பம், போலி ஆவணம் என்று இவர் ஏமாற்றாத ஆளில்லை. கடைசி யில் தாஜ்மஹால், இந்திய ஜனாதிபதியின் வாசஸ்தலமான ராஷ்டிரபதி பவன், இந்திய பாராளுமன்றம் என்று இந்தியாவின் முக்கிய கட்டடங்களைக் கூட விற்றிருக்கி றார்.

அரசு அலுவலகத்தின் அச்சுகள் தயாரித்து சுற்றுலாப் பயணிகளிடம் மூன்று முறை இந்தியாவின் புகழ்பெற்ற நினைவுச் சின்ன மான தாஜ் மஹாலை விற்றிருக்கிறார் நட் வர்லால்.

நட்வர்லால் ஒருமுறை இந்திய பாராளு மன்றத்தையே சுற்றுலா பயணிக்கு விற்றார். இதில் வியப்பு என்னவென்றால், பாராளு மன்றத்துடன் சேர்த்து அதன் உறுப்பினர்க ளையும் இவர் விற்றிருக்கிறார்.

மேலும் இவர் பல தொழில் நிறுவனங் களை லாவகமாக ஏமாற்றியுள்ளார். டாடா, பிர்லா, அம்பானி என பலரும் இதில் அடக் கம். சமூக ஆர்வலர் போல் நாடகமிட்டு பெரிய அளவிலான தொகையை இவர்களி டமிருந்து கொள்ளையடித்து சென்றிருக்கி றார்.



பிறந்தது பீகார் என்றாலும் 8 மாநில பொலிஸ் இவரை 100க்கும் மேற்பட்ட குற் றங்களுக்காக தேடியது. பிடிப்பட்டால் 113 வருட சிறைத்தண்டனை அளிக்கவும் அரசு காத்திருந்தது. பல முறை அவரை கைதும் செய்தது.ஆனால் நட்வர்லாலோ தன் வாழ்வில் வெவ்வேறு சிறைகளில் இருந்து மிக துணிச்சலாக எட்டு முறை தப்பிச் சென் றுள்ளார்.

ஒரு முறை கான்பூர் சிறையிலிருந்து பொலிஸ் ஆடையை (கடத்தி) அணிந்து கொண்டு வெளியே வந் துள்ளார். அங்கிருந்த பாது காவலர்களுக்கு பணப் பையை கொடுத்து விட்டு அவரசரமில்லாமல் டாக்ஸி யில் ஏறி தப்பித்து சென்றார்.

கடைசியாக சக்கர நாற்கா லியில் வைத்து கான்பூர் சிறை யிலிருந்து டெல்லி மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் போது காவல் அதிகாரிகளை ஏமாற்றி விட்டு டெல்லி ரயில் நிலையத்தில் காணாமல் போய் விட்டார். அதன் பின்னர் அவரை யாரும் பார்க்கவில்லை.

ஜுலை 25, 2009 ஆம் ஆண்டு நட்வர்லால் இறந்து விட்டார் எனவும் ஆகவே அவர் மீதுள்ள 100க்கும் மேலான குற்றங்களை தள்ளுபடி செய்யுமாறும் அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்துக்கு கோரிக்கை செய்தார்.

அதே சமயம் நட்வர்லாலின் சகோ தரர் கங்கா பிரசாத் ஶ்ரீவஸ்தவா 1996 லேயே தான் அவர் உடலை தகனம் செய்ததாக வாதடினார். இதனால் அவர் எப்போது மரணித்தார் என்ற மர்மம் கூட இன்றும் விடுவிக்கப்படவில்லை.

எனவே, இந்தியாவின் தலைசிறந்த ஏமாற்றுக்காரர் என்ற கௌரவப் பெயரும் நட்வர்லாலுக்கு உண்டு.

# உலகப் போரில் எல்லா பக்கமும் சண்டை போட்ட கொரிய வீரர்

இரண்டாவது உலகப் போரில் யாங் கியோங்ஜொங் என்ற கொரிய வீரர் தான் உண்மையில் சண்டை பிடித் தார். அவருக்கு எதிரி யார் நண்பர் யார் என்பது முக்கிய மில்லை. அகப்படும் எல்லா பக்கத்திற்காகவும் சண்டை போட்டிருக்கிறார்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பில் இருந்த கொரியாவில் பிறந் ததால் 1938 ஆம் ஆண்டு ஜப்பானிய இராணுவத்துடன் இரண்டாவது உலகப் போரில் குதித்த கியோங்ஜொங் கோல் சண்டையின் போது சோவியட் படையிடம் சிக்கிக் கொண்டார். இதனால் அவர் குலக் தொழில் முகாமுக்கு அனுப்பப்பட்டார்.

நாஜி ஜெர்மனிக்கு எதிராக சண்டைபோட சோவியட் படைக்கு போதிய ஆட்பலம் இல்லாததால் 1942 இல் அவர் செம்படைக்காக போர் புரிந்தார். என்றாலும் 1943 ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைனில் வைத்து நாஜிப் படையி டம் சிக்கிக்கொண்டார். பின்னர் அவர் ஹிட்லருக்காக சண் டையிட்டார்.

பிரான்ஸ் ஆக்கிரமிப்பின் போது நாஜிப்படையுடன் அங்கு சென்ற கியோங்ஜொங் 1944இல் அமெரிக்க இராணு வத்திடம் சிக்கிக்கொண்டார். பின்னர் பிரிட்டன் சிறைக்கு அனுப்பப்பட்ட அவர் தொடர்ந்து அமெரிக்க முகாம் ஒன் றுக்கு மாற்றப்பட்டார். 1947 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற அவர் அமெரிக்க குடியுரிமை பெற்று 1992 ஆம் ஆண்டு இறக்கும் வரை அங்கேயே வாழ்ந்தார்.




# தாய்க்கு வந்த சோதனை

பட்ரிசியா ஸ்டல்லிங் என்ற அமெரிக்கப் பெண் தனது மகனை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு 1989 ஆம் சிறை வைக்கப்பட்டார்.

மகனின் இரத்தத்தில் அதிக அளவில் இருந்த எத்திலீன் கிளைகோல் தன்மையே மரணத்திற்கு காரணம் என்று கண்டறியப்பட்டது.

எனவே, ஸ்டல்லின் தனது மகனுக்கு விசம் கொடுத்ததாக சந்தேகிக்கப்பட்டது. அவர் மீது கொலைக் குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் வைத்து ஸ்டல்லிங் மற்றொரு குழந்தையை பிரசவித்தார். ஆனால் அந்தக் குழந்தையிடமும் இறந்த குழந்தையின் நோய் அறிகுறிகள் இருந்தன.



ஆராய்ந்து பார்த்தால் மரபணு கோளாறு தான் எல்லாவற்றுக்கு காரணம் என்று கண்டறியப்பட்டது. ஸ்டல்லின் விடுவிக்கப் பட்டார்.



என்னோட பிறந்த நாளுக்கு நிறைய சொக்லெட், கேக், ஐஸ்கிறீம் எல்லாம் வந்தன. என்னால் தான் எதுவும் சாப்பிட முடியல்ல?
ஏன்?
எல்லாம் வட்ஸ்அப் மெசெஜில் வந்தவை அதான்

மனைவி உலகம் பூரா போய் தேடினாலும் என்ன மாதிரி மனைவி கிடைக்க மாட்டாள்.
கணவன் எனக்கென்ன பைத்திய மாடி பிடிச்சிருக்கு.... மறுபடியும் உன்ன மாதிரியே தேட.






நம்ம காதலை யாராலும் பிரிக்க முடியாது. அதுதான் என் ஒரே கவலை

படாத இடத்தில பட்டு அட்மிட்டாகி நேத்து தானே டிஸ்சார்ஜ் ஆனீங்க.. திரும்ப ஏன் வந்தீங்க?
பட்ட இடத்திலேயே பட்டிருச்சி டொக்டர்



நீ ஏதேனும் சொல்ல விரும்புறியா?
இந்த கூண்டுல நின்னு செல்பி ஒண்ணு எடுக்கலாமா எஜமான்.



மகன் அம்மா எதிர் வீட்டு என்ட்டிட பேரு என்ன?
அம்மா ராதா டா
மகன் அப்பாவுக்கு அது கூட தெரியலம்மா, அவரு டார்லிங்ன்னு கூப்பிடுறாரு.....



கணவர் அந்த கடைக்காரர் கிட்ட போய் என்ன சொன்ன?
மனைவி அவரு வீட்டில வொஷின் மெஷின் இருக்கான்னு கேட்டார்? நான் தான் ஒழுங்கா மரியாதையா இருக்காரான்னு கேளுன்னு சொன்னேன்.





மகன் அப்பா நாளைக்கு சண்டே. அம்மா மட்டன் எடுப்பாளா? சிக்கன் எடுப்பாளா?
அப்பா வீட்டு வேல சொல்லியே என் உயிர எடுப்பா?

டிரைவர், கண்டக்டர் எல்லாரும் சேர்ந்து நம்ம தலைவர்ட கொடும்பாவியை எரிக்கப்போறாங்களே ஏன்?
டீசல் விலையுயர்வு மக்களை பாதிக்காதிருக்க டிரைவர், கண்டக்டர் கூட இனி டிக்கட் எடுத்திட்டு போற மாதிரி செய்ய சட்டம் கொண்டு வரப் போறாங்களாம்



தோல்வியில் இருந்து எங்கள் தலைவரை பாடம் கற்றுக் கொள்ளச் சொல்லும் எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து ஒண்ணு கேட்கிறேன். ஒண்ணாம் வகுப்பு கூட படிக்காத எங்க தலைவர் தோல்வி தந்த பாடத்தை எப்படி படிப்பார்?



நீ அவளை மறந்துட்டு, நாங்க சொல்ற பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கனும்.
முடியாது என்னால அவளை ஒரு கணம் கூட மறக்க முடியாது. வேணும்னா நீங்க சொல்ற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறேன்.



கணவன் ஏண்டி அப்படி என்ன தலை போற அவசரம்? ஓட்டோ பிடிச்சி ஒப்சிக்கு வந்திருக்க?
மனைவி ஏங்க நம்ம வேலைக்காரியைக் காணோம்? இங்க உங்க ஒப்பிஸுக்கு வந்தாளான்னு பாக்க வந்தேன்.



# இளம் வயதில் சாதிக்க நினைக்கும் பெண்

## ஸ்மார்ட் லேனின் சென்டரின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான விதுஷா விக்னராஜா



நவீன சாதனங்களின் வருகையுடன் இன்று உலகம் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. கிராமங்கள் கூட நகரங்களைப் போன்று மும்முரமாக முன்னேற முயற்சி செய்து வருகின்றன. இதுபோன்று இன்றைய இளம் தலைமுறையும் நவீன சாதனங்களின் பாவனையுடன் தங்களை முன்னேற்றிக் கொள்ள முயன்று வருகின்றார்கள். எனவே இதற்கேற்ப இன்றைய சமூகத்தினர் எதை எதை விரும்புகின்றார்களோ அதில் ஈடுபட்டு அவர்களது தேவைகளை நிறைவேற்றும் அதேவேளை தங்களது எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். அவ்வாறு முன்னேறி வெற்றி நடைபோடத் துடிக்கும் ஒரு இளம் பெண்ணின் கதை இது.

மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலப்பரப்பான ஹப்புத்தளையை பிறப்பிடமாகக் கொண்ட இந்த இளம் பெண்ணின் வயது இருபத்திரண்டு. இந்த இருபத்திரண்டு வயதுக்குள் இவர் பல்வேறு படிகளை கடந்து வந்துள்ளார். அவர் கடந்த வந்த பாதையில் கண்ட ஏற்றங்களை காண்போம். இவர், விதுஷா விக்னராஜா. ஹப்புத்தளை தேசிய தமிழ்







கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை பயின்றவர், மீடியா துறையில் உயர் கல்வியைக் கற்றுக் கொள்வதற்காக பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் சேர்ந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தை பயின்றார். இவ்வாறு பாடசாலைக் கல்வியை முடித்த இவர், ஆங்கில மொழியில் டிப்ளோமா பட்டத்தையும் ICT துறையில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அதனுடன் நின்று விடவில்லை. Early Childhood சம்பந்தமாக டிப்ளோமா பட்டத்தையும் சட்டத்துறை சம்பந்தமான LLB Hons பட்டத்தை Buckinghamshire University UKஇல் பயின்று பெற்றுள்ளார். தற்போது இலங்கையில் IDM கெம்பஸில் LLB Hons சட்டத்தைப் பயின்று வருகிறார்.



இவ்வாறு கல்வியில் களைகட்டி வரும் இவர், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக 30 மாணவ மாணவிகளுடன் Smart Learning Centre என்ற நிலையத்தை நிறுவி கல்வி கற்பிக்கும் துறையை முன்னெடுத்தார். தற்போது இதன் ஸ்தாபகராகவும் பணிப்பாளராகவும் உள்ளார். இதனை

கடந்த நான்கு வருடங்களாக நடாத்தி வரும் இவர் வசதி குறைந்தவர்களுக்கு சமூக சேவையின் அடிப்படையில்

இலவசமாகவும் மாணவர்களை சேர்த்து கற்பித்து வருகிறார். இந்த நிறுவனத்தினால் அடிப்படை கல்விச் சேவைகளும் திறன் அபிவிருத்தி கல்விகளையும் வழங்கி வருகின்றார். இவருக்கு கீழ் நான்கு ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு கல்விப் பணிகளை மேற்கொண்டு கல்வித் துறையில் சேவையாற்றி வருகின்றவர், மொடலிங் அலங்காரத்துறையிலும் தனது கைவண்ணத்தை காட்டி வருகிறார். இதற்கமைய Modeling and Influencing ஆகிய இரண்டிலும் ஈடுபட்டு தன் வல்லமையை காட்டி வருகிறார்.

இவர், படித்துக் கொண்டிருந்தபோதே, சிறிய வயதில் இருந்தே நடிப்பிலும் கலை சார்ந்த விடயங்களிலும் கரிசனை காட்டி வந்தார். இதனால் அனைத்து நிகழ்வுகளிலும் ஆர்வமாக கலந்து கொண்டு எனது திறமையை வெளிப்படுத்தி வந்தார்.

கடந்த 3 வருடங்களாக Modeling and Influencing ஈடுபட்டு வருகின்றார். கல்வித் துறையிலும் கலைத் துறையிலும்

சமூக சேவையிலும் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். இவருக்கு தன்னுடைய திறன்களை வளர்த்துக் கொள்ள இவரது தாயாரும் தந்தையாரும் சகோதரரும் சகோதரியும் பெரும் உறுதுணையாக இருந்து உதவி ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றார்கள்.

11ஆம் பக்கம் பார்க்க..



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



# பதுளை சார்ணியா வித்தியாலயத்தில் கௌரவிப்பு







பதுளை சார்ணியா தமிழ் மகா வித்தியாலயம் ஏற்பாடு செய்து நடாத்திய" வாழும்போதே வாழ்த்துவோம்" எனும் தொனிப்பொருளில் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் சமூகத்திற்கும் அரும்பணியாற்றி சேவையாற்றிய ஓய்வு நிலை அதிபர்கள் திரு.திருமதி தேவராஜா, தம்பதியினர் மற்றும் ஆசிரியர் பெருந்தகைகளின் அர்ப்பணிப்புமிக்க சேவைகளைப் போற்றி வாழ்த்தி வணங்கி முத்தாரம் சூட்டி கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் ஏ. அருள்ஞானம் தலைமையில் கந்தேகெதர இந்து கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அத்தோடு சார்ணியா தமிழ் வித்தியாலயத்தில் சேவையாற்றிய ஓய்வுநிலை தமிழாசிரியரும் எழுத்தாளருமாகிய வெல்லாவெளி விவேகானந்தன் எழுதிய "உமிச்சட்டி " சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றதோடு, அதிபர் வை. தேவராஜா அறிவாலயம் நூலக பெயர்சூட்டு நிகழ்வும், ஆசிரியர் பெருந்தகைகளுக்கு பொன்னாடைப் போர்த்தி விருது வழங்கி கௌரவமளித்த நிகழ்வும், வித்தியாலய மாணவர்கள், பழைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றமைக் குறிப்பிடத்தக்கது. இவ்விழாவின் முதன்மை விருந்தினர்களாக இலங்கை திறந்த பல் கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் ஏ.எஸ். சந்திர போஸ், முன்னாள் ஆசிரியரும் தற்போதைய சமூர்த்தி அஸ்வெசும திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ்.சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். **(நடராஜா மலர்வேந்தன் லுணுகல நிருபர்)**







மாணவர்களுடன்



Shafina Bhanu



கலைஞர் ராமர்




வாசகர்களின் அழகான
தருணங்களில் எடுத்த செல்பி
படங்களை செந்தூர வார இதழுக்கு
077 312 454 3 என்ற Whatsapp
இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.



Mohame shiyam,
Wasim Akram,
Abdul Rahman,
Mohamed Rizan



அறிவிப்பாளர் சசாங்கன் சர்மா



அதிபர் M.I. மாஹிர்

# இலக்கியத்தில் அலாதி பிரிய கொண்ட அறிவிப்பாளர்

**வசந்தம் தொலைக்காட்சி மூலமாக நாடறிந்த அறிவிப்பாளராக இனங்காணப்பட்ட A.M. அஸ்கர், நீங்கள் இலக்கியத்திலும் பங்களிப்பு செய்து வருகிறீர்கள். அதனைப்பற்றி கூறுங்கள்?**

வாசிப்பின் மீதான ஆர்வம் என்னை படைப்பாளியாக மாற்றியது, சிறு வயதிலிருந்தே என்னூரின் நூலகத்தில் அதிகமான பொழுதுகளை கழித்திருக்கிறேன். எதற்காக வாசிக்கிறேன் என்று தெரியாமல் அங்குள்ள சஞ்சிகைகள், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், பத்திரிகைகள் என்பவற்றை வாசிப்பேன். ஏதோ ஒரு பிடிமானத்தினால் எனக்குள் ஏற்பட்ட வாசிப்பு பழக்கம் எனக்குள் பல சிந்தனைகளையும் கற்பனைகளையும் தேடல்களையும் உருவாக்கியது. அதன் பயனாகவோ என்னவோ பின்னாட்களில் தரம் 10 படிக்கும் போது கவிதை, கதை, எழுத ஆரம்பித்தேன். அன்றிலிருந்து ஒரு வாசகனாக, ரசிகனாக இருந்து ஒரு படைப்பாளியாக மாறி இத் துறையில் என்னால் முடிந்தவரை ஏதோ ஒரு வகையில் பங்களிப்பை செய்து வருகிறேன்..

**அறிவிப்புத்துறை ஒரு கலை. இத்துறையில் உங்களுக்கு ஆர்வம் ஏற்படக் காரணியாக அமைந்தவை எவை?**

வானொலியின் நல்ல ரசிகனாக இருந்தேன், வாசகனாக இருந்தவன் படைப்பளியாக மாறியதைப் போல், வானொலியின் நல்ல ரசிகனாக இருந்த நான் வானொலி அறிவிப்பாளரானேன். வானொலி, தொலைக்காட்சியில் இடம்பெறும் நிகழ்ச்சிகள், செய்திகள் நாள்தோறும் தவறாமல் கேட்பேன். பார்ப்பேன் அதன் மீது பிடிப்பு ஏற்பட்டது. சில அறிவிப்பாளர்கள் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சிகளைப் போல், நானும் தொகுத்து வழங்க வேண்டும். அவர்களைப் போல்





செய்தி வாசிக்க வேண்டும் என்ட ஆசை வந்தது. சமூக ஊடகத்தின் எந்தவிதமான தாக்கமும் இல்லாத அக் காலப் பகுதியில் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் மக்கள் மத்தியில் மிகப் பிரபலமாக இருந்தார்கள். நானும் மக்கள் மத்தியில் அறியப்பட்டவராக இருக்க வேண்டும் எனும் விருப்பமும் என்னை அறிவிப்பாளராக மாற்றியது. ஆரம்பத்தில் பாடசாலை மற்றும் ஊரில் இடம்பெறும் மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய நான் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தமிழ் ஒலிபரப்புக்காக வசந்தம் வானொலி ஆரம்பிக்கப் பட்ட போது அதன் ஆரம்ப அறிவிப்பாளர்களில் நானும் ஒருவனாக இணைந்து கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை வசந்தம் வானொலி, வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், முழு நேர செய்தி அறிவிப்பாளராகவும் பணியாற்றி வருகிறேன்.

**வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் முழுநேர செய்தி வாசிப்பாளராக இருக்கிறீர்கள். அதனைப்பற்றி கூறுங்கள்.**

ஆரம்பத்தில் வசந்தம் வானொலியின் செய்தி வாசிப்பாளராக மட்டுமே இருந்தேன். இடையிடையே தொலைக்காட்சியில் செய்தி வாசித்திருக்கிறேன். ஆனால் அது தொடராக இல்லை. 2019ஆம் ஆண்டிலிருந்து தொடராக வாசித்து வருகிறேன். செய்தி வாசிப்பது அது ஒரு தனி கலை எல்லோராலும் முடியாது. செய்தி வாசிப்பதில் ஆத்ம திருப்தி அடைகிறேன். ஒரு செய்தி வாசிப்பாளர் உலக நடப்பு விவகாரங்கள், உள் நாட்டு நடப்பு விவகாரங்கள், விளையாட்டு தொடர்பான தகவல்கள், பொது விடயங்கள் தொடர்பான அறிவு, மொழியற்றல் என்பன திறம்பட இருக்க வேண்டும்.அப்படி இருந்தால் மாத்திரமே ஒரு நல்ல செய்தி வாசிப்பாளராக வலம் வர முடியும்இஎல்லோருக்கும் இந்த வாய்ப்பு கிடைப்பதில்லைஇமக்கள் நாளாந்தம் நாட்டிலோ உலகத்திலோ அரசியல் வட்டாரத்திலோ என்ன நடக்குது என்பதை அறிய ஆவலாய் இருப்பார்கள். அதனை மக்களுக்கு அறிவிக்கும் ஒருவராய் செய்தி அறிவிப்பாளராய் இருப்பதில் பேராந்தம்..



**உங்களது அறிவிப்பு பணியுடன் இப்போதும் கவிதை, கதை எழுதி வருகிறீர்களா?**

ஆம், நேரம் கிடைக்கும் போதெல்லாம் தேர்ந்த புத்தகங்களை வாசிக்கிறேன். இணையத்தளங்களில் முக நூலில் பத்திரிகையில் கவிதை, கதை எழுதி வருகிறேன். நான் வாசித்த புத்தகங்களை பிறருக்கு



வீடியோ மூலமாக பதிவிட்டு அறிமுகப்படுத்தி வருகிறேன். ஒரு கலைஞனால், எழுத்தாளனால், அவற்றை நிறுத்த முடியாது. அது அவனுக்குள் ஊறிய ஒன்றாகவே இருக்கும். அது ஏதோ ஒரு வடிவத்தில் வெளிப்பட்டு கொண்டேயிருக்கும்.

**கவித்துவம்,கற்பனை, சமூகப் பார்வை, உணர்வுமயமான அணுகுமுறை என அனைத்தையும் கலந்து சமூகத்திற்கு எப்படிப்பட்ட கவிதைகளை தந்தால் வெற்றி பெறலாம் என நினைக்கிறீர்களா?**

பொதுவாகக் கவிதை என்பது மகிழ்ச்சி, பக்தி, ஆசை, அன்பு, காதல், சோகம், வருத்தம், ஏமாற்றம் என்ற மனித உணர்வுகளின் வெளிப்பாடாகவே கருதப் படுகிறது. மெல்லிய நுண்ணிய உணர்வுகளோ, வலிமையான கோபம், புரட்சி, போன்ற உணர்வுகளோ , கவிதையின் மூலம் சொல்லப் படும் போது அதன் தாக்கமும் சக்தியும் இ மிக அதிகமாக அமைந்துஇ படிப்பவரைக் கேட்பவரைக் கவர்ந்து இதயத்தில் இடம் பிடித்து பின் சிந்திக்க மகிழ வைக்கிறது.

ஒரு கவிஞன் முதலில் நல்ல ரசிகனாக இருக்க வேண்டும். அது எதுவாகிலும் இருக்கலாம்.

தன்னைச் சுற்றி இருப்பதோ வாழ்வில் கண்ட அனுபவமோ இயற்கையோ பறவைகளோ விலங்கினமோ மனிதர்களோ பரம்பொருளோ பருவ காலங்களோ எதுவாயினும் அவற்றைக் கவனித்து கணித்து, ரசித்து உள்வாங்கிக் கொள்ளும் மனப்பாங்கு தேவை.

இவை தான் என்றில்லை. நடக்கும் நிகழ்வுகளும் விஞ்ஞான அற்புதங்களும் கூடக் கவிதைக்குக் காரணமாய் கருப்பொருளாய் அமையலாம்.

நம் மனதில் தோன்றும் சிந்தனைகளைச் சொல்லோவியமாகப் படைப்பது தான் கவிதை. அது உலகில் எங்கோ ஒரு இடத்தில் ஒருவரின் மனதில் தாக்கம் செலுத்தினாலே போதும்.

(07ஆம் பக்கம் பார்க்க)



✍ பாத்திமா நளீரா

# கிராமத்து சூழ்நிலையை பிரதிபலிக்கும் கதைக்களத்தைக் கொண்ட "அதிரன்"









இலங்கையின் முன்னணி இயக்குனர் தினேஷ் கனகராஜின் இயக்கத்தில் "ஏட்ரியன்" திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்பில் மிக பிரமாண்டமாக உருவாகவுள்ள இலங்கையின் புதிய முழுநீள திரைப்படமான "அதிரன்" திரைப்படத்தின் பூஜை நிகழ்வும் ஊடகவியலாளர் சந்திப்பும் கடந்த சனிக்கிழமை காலை கொழும்பு 04 பம்பலப்பிட்டி, அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் திரைப்படத்தின் தயாரிப்பாளர் தீப்திகா ஞானசேகரன் மற்றும் திரைப்படத்தின் கதாநாயகனான நடிகர் சுதர்சனுடன் கதாநாயகியாக சகோதர மொழி நடிகையான மிச்சலா தில்ஹாராவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டதுடன் திரைப் படத்தில் பணியாற்றவுள்ள ஏனைய கலைஞர்களும் தொழில் நுட்பவியலார்களும் இணைந்து கலந்து கொண்டிருந்தனர். இத் திரைப்படத்துக்கான ஆரம்ப பூஜைகளை மாணிக்க விநாயகர் ஆலய பிரதான சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றதை தொடர்ந்து, திரைப்படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் பிரசாதங்களாக இனிப்பு பண்டங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இயக்குனர் தினேஷ் கனகராஜ் கருத்து தெரிவிக்கையில்... இத்திரைப்படமானது இலங்கையின் கிராமத்து சூழ்நிலையை பிரதிபலிக்கும் கதைக்களமாக அமைய இருப்பதாகவும், இலங்கையின் மிகப் பிரம்மாண்டமான ஒரு திரைப்படமாக வர இருப்பதாகவும் கூறியதுடன். இத்திரைப்படம் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் திரையிடப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். அத்தோடு அனைத்து விதமான ரசிகர்களையும் கவரும் வண்ணம் உருவாக்கப்படவுள்ளதாகவும் கூறினார். தொடர்ந்து எமது நாட்டின் திரைப்படத் துறையை முன்னேற்றுவதற்காக "ஏட்ரியன்' திரைப்பட தயாரிப்பு நிறுவனம் எடுத்துள்ள இந்த முயற்சி மிகவும் பாராட்டத் தக்கது என்றும் தமது கருத்தை தெரிவித்திருந்தார். மேலும், இத்திரைப்படத்தில் இலங்கையின் பல புகழ்பூத்த முன்னணி கலைஞர்களும், முன்னணி தொழில்நுட்பவியலாளர்களும் பணியாற்றவுள்ளதாவும் குறிப்பிட்டிருந்தார்.

## இலக்கியத்தில் அலாதி...

(06ஆம் பக்கத் தொடர்)

**தம்மை தாமே ஆளக்கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக் கவிதை என்று மொழிந்தார் மு. மேத்தா. உங்களது பார்வையில் இன்றைய புதுக் கவிதையின் நிலவரம் எப்படி உள்ளது .... அதாவது ஆரோக்கியமாக உள்ளதா?**

புது கவிதையின் தாத்தா மேத்தா சொல்வது சரிதான். மரபுக்கவிதை எல்லோராலும் எழுதவும் முடியாது. எல்லோராலும் வாசித்து புரிந்து கொள்ளவும் முடியாது. புதுக்கவிதையின் வரவுக்கு பின்னர் கவிதை எழுதுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் சாதாரண மக்களிடையும் புது கவிதை மீதான பார்வை அதிகரித்தது. கவிதை புத்தகங்களின் வரவும் அதிகரித்ததுஇபடிப்பவர்களின் எண்ணிக்கையும் கூடியது. எதுவானாலும் மக்களுக்காகத்தானே!மக்கள் விரும்பும் மொழி நடையில் விரும்பும் பாணியில் காலத்துக்கு ஏற்றாப் போல் மாறுவதுதானே வெற்றி அப்படிதான் புதுக் கவிதையும் எப்படி எழுதினாலும் யாரு எழுதினாலும் புதுக் கவிதை ஆரோக்கியமாகவே உள்ளது.

**மனப்பயிற்சிக்கு புத்தக வாசிப்பு மிக அவசியம். இன்றைய இளம் தலைமுறையினரிடையே வாசிப்பு பழக்கம் அருகி வருகிறதா..?**

இன்றைய இளம் தலைமுறையினரிடையே புத்தகம் வாங்கி வாசிக்கும் வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. ஆனால் ஏதோ ஒரு வகையில் தேடுகிறார்கள் வாசிக்கிறார்கள் அவா்கள் நாள் முழுதும் கைப்பேசி, கணினி, இணையம், சமூக ஊடகம் இவற்றிலேயே மூழ்கிக் கிடப்பத்தால் அவற்றின் மூலமாக வாசிக்கிறார்கள்.

வளர்ந்துவரும் சமூக ஊடகங்களின் வளர்ச்



சிக்கேற்ப இருந்தாலும் ஆண்டு தோறும் புத்தகங்கள் வெளி வருகிறது புத்தகக் கண்காட்சி உலகம் தோறும் நடைபெறுகிறது இலட்சக் கணக்கான புத்தகங்கள் விற்பனையாகிறது. எப்படியோ பலரும் புத்தகங்களை வாங்கிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பது சற்று ஆறுதல் தருகிறது.

புத்தகங்களை வாசித்தவா்கள்தான் வரலாற்றில் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்கள் வரலாற்றில் காணாமல் போய் விடுகிறார்கள். உலகில் சிறந்த ஆளுமையாக விளங்கியவா்கள் தலைவர்கள் எல்லோருமே புத்தகம் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களே அவர்களின் வரலாற்றை நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**உங்களது எழுத்தாற்றல்கள் பரம்பரையாக வந்த ஒரு அடையாளமா...உங்களது அடுத்த கட்ட நகர்வு எதனுடன் சம்பந்தப் பட்டதாக இருக்கும். ?**

சூபரம்பரையாக வந்தது அல்ல என்னிலிருந்தே தொடங்கியது ஆனால்இஎன் தந்தை நல்ல வாசிப்பு பழக்கமும் பேச்சாற்றாலும் உள்ளவர், என் குடும்பத்தினர் தடையாக இருந்ததில்லை நன்றாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். நிறைய புத்தகங்கள் வெளியிட வேண்டும். நாவல் எழுத வேண்டும்.

**புத்தகங்கள் ஏதேனும் வெளியிட்டிருக்கிறீர்களா...**

**உங்களுக்கு கிடைத்த விருதுகள். ?**

நான் எழுதிய கவிதைகளில் தேர்ந்தெடுத்த கவிதைகளை தொகுத்து 'இந்த காலைப் பொழுது' என்ற தலைப்பில் 2016 ஆம் ஆண்டு கொழும்பு தபால் தலைமையாக கேட்போர் கூடத்தில் வெளியிட்டேன்.



எனது கவிதை தொகுதிக்காக அந்த ஆண்டு வெளிவந்த சிறந்த கவிதை நூலுக்கான 'கொடகே சாகித்திய விருது' கிடைத்தது.

யாசகர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து ஒலிபரப்பியமைக்காக 2020 ஆம் ஆண்டு வானொலி அரச விருது விழாவில் சிறந்த செய்தி அறிக்கையிடலுக்கான விருது கிடைத்தது. தடாகம் அமைப்பினால் முத்து மீரான் விருது, லக்ஸ்டோ மீடியா அமைப்பினரால் சிறந்த ஆளுமைக்கான விருது, சுயாதீன தொலைக்காட்சியினால் நடத்தப்பட்ட கவிதை போட்டியில் எனது கவிதை முதலிடம் பெற்று விருதினை பெற்றுக்கொண்டேன். அரச விருது விழாவில் சிறந்த நிகழ்ச்சி தொக்குப்பாளர், வானொலி நிலைய குறிசை எழுதியதற்காக இரண்டு முறை பரிந்துரை செய்யப்பட்டேன்.

# கீர்த்தி சுரேஷின் 'ரகு தாத்தா' ஆகஸ்ட் 15ல் ரிலீஸ்!

கீர்த்தி சுரேஷின் 'ரகு தாத்தா' திரைப் படம் வரும் ஆகஸ்ட் 15ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'கேஜிஎஃப்', 'காந்தாரா' உள்ளிட்ட படங்களை தயாரித்த ஹோம்பாலே ஃபிலிம்ஸ் நிறுவனம் நேரடியாக தமிழில் முதன்முறையாக தயாரித்துள்ள படம் 'ரகு தாத்தா'. பெரும் வரவேற்பை பெற்ற 'தி ஃபேமிலி மேன்' வெப் தொடருக்கு கதை எழுதிய சுமன் குமார் எழுதி இயக்கியுள்ளார். இதில் நடிகை கீர்த்தி சுரேஷ் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

அவருடன் எம்.எஸ்.பாஸ்கர், தேவதர்ஷினி, ரவீந்திர விஜய், ஆனந்த்சாமி, ராஜேஷ் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஒய் யாமினி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்தப் படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைத்திருக்கிறார். இந்தி திணிப்பை மையமாக வைத்து இப்படம் உருவாகியுள்ளதை படத்தின் ட்ரெய்லர் உணர்த்தியது.



# "மூன்றாவது குழந்தை..." நடிகர் சிவகார்த்திகேயன் மகிழ்ச்சி

தனக்கு மூன்றாவது குழந்தை பிறந்துள்ளது என நடிகர் சிவகார்த்திகேயன் மகிழ்ச்சியை ரசிகர்களுடன் பகிர்ந்துள்ளார்.இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எங்களுக்கு நேற்று இரவு (ஜுன் 2) ஆண் குழந்தை பிறந்திருக்கிறான் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். ஆர்த்தியும் குழந்தையும் நலம். ஆராதனாவிற்கும், குகனிற்கும் நீங்கள் தந்த அன்பையும் ஆசியும் எங்கள் மூன்றாவது குழந்தைக்கு தர வேண்டுகிறோம். நன்றி" என பதிவிட்டுள்ளார்.

முன்னதாக கடந்த சில நாட்களுக்கு முன்பு நடிகர் சிவகார்த்திகேயன் மனைவி ஆர்த்தி மூன்றாவது முறையாக கர்ப்பமாக உள்ளார் என்று அவர் பொதுவெளியில் கலந்துகொண்ட வீடியோ ஒன்றை பகிர்ந்து ரசிகர்கள் கூறி வந்தனர். இதனை உறுதி செய்துள்ள சிவகார்த்திகேயன் மூன்றாவது குழந்தை பிறந்துள்ளதை அறிவித்துள்ளார். ரசிகர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# கார்த்திக் சுப்பராஜின் 'சூர்யா 44' முதல் ஷாட் வீடியோ வெளியீடு!

கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் புதிய திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் ஷாட் வீடியோ வெளியாகியுள்ளது. நடிகர் சூர்யா தற்போது சிறுத்தை சிவா இயக்கி வரும் 'கங்குவா' படத்தின் படப்பிடிப்பு முடித்துள்ளார். அடுத்ததாக அவர் சுதா கொங்கரா இயக்கும் 'புறநானூறு' படத்தில் நடிக்க உள்ளதாக அறிவிப்பு வெளியானது. இதையடுத்து 'புறநானூறு படத்துக்கு கூடுதல் நேரம் தேவைப்படுகிறது' என படக்குழு தெரிவித்திருந்தது.

இதையடுத்து, சூர்யாவின் 44வது படத்தை கார்த்திக் சுப்பராஜ் இயக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் படத்தை சூர்யாவின் 2டி நிறுவனமே தயாரிக்கிறது. இதில் கருணாகரன், ஜோஜு ஜார்ஜ், பூஜா ஹெக்டே, ஜெயராம் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு அந்தமானில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இப்படத்தின் அறிமுக வீடியோ ஒன்றை முதல் ஷாட் வீடியோ என்ற பெயரில் படக்குழு வெளியிட்டுள்ளது. கிளாப் அடித்து தொடங்கும் காட்சியில் ஒரு குட்டி சுவரில் அமர்ந்திருக்கும் சூர்யா, 80களின் வில்லன் போல பெரிய மீசையும், ஃபங்க் ஹேர்ஸ்டைலும் வைத்திருக்கிறார். பின்னணியில் வரும் சந்தோஷ் நாராயணின் இசை கவனம் ஈர்க்கிறது.




# 'வடக்கன்' படத்தின் தலைப்பு 'ரயில்' என மாற்றம்

எழுத்தாளரும், வசனகர்த்தாவுமான பாஸ்கர் சக்தி, இயக்குநராக அறிமுகமாகும் படத்தின் தலைப்பு மாற்றப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'வெண்ணிலா கபடி குழு', 'எம்மகன்', 'நான் மகான் அல்ல' உட்பட பல படங்களுக்கு வசனம் எழுதியிருக்கும் பாஸ்கர் சக்தி, தேசிய விருதுபெற்ற 'அழகர்சாமியின் குதிரை' படத்துக்கு கதை, வசனம் எழுதியிருந்தார். அவர் இயக்குநராக அறிமுகமாகும் படம் 'வடக்கன்'.

இதில் குங்குமராஜ், வைரமாலா ஜோடியாக நடித்துள்ளனர். ரமேஷ் வைத்யா, பர்வேஸ் மெஹ்ரூ, சமிரா என பலர் நடித்துள்ள இந்தப் படத்தை டிஸ்கவரி சினிமாஸ் சார்பில் மு.வேடியப்பன் தயாரித்துள்ளார். எஸ்.ஜே.ஜனனி இசையமைத்துள்ள இப்படத்துக்கு தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இதன் டீஸர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் வெளியிடும் இப்படத்தின் தலைப்புக்கு சென்சார் போர்டு எதிர்ப்பு தெரிவித்தது.











# பத்ரிநாத்தில் ரஜினிகாந்த்

இமயமலை சென்றுள்ள நடிகர் ரஜினிகாந்த் அங்கு பத்ரிநாத் கோயிலில் வழிபட்டார். நடிகர் ரஜினிகாந்த், 'வேட்டையன்' படத்தில் நடிக்கிறார். அவர் நடிக்கும் காட்சிகளின் படப்பிடிப்பு சில வாரங்களுக்கு முன் நிறைவு பெற்றது. இதில் அமிதாப் பச்சன், ஃபஹத் ஃபாசில், ராணா, மஞ்சுவாரியர், ரித்திகா சிங் உட்பட பலர் நடிக்கின்றனர். இதையடுத்து ஓய்வுக்காக ரஜினிகாந்த் அபுதாபி சென்றார். சுமார் இரண்டு வார கால ஓய்வுக்குப் பிறகு கடந்த 28ம் தேதி சென்னை திரும்பினார்.

ஒவ்வொரு வருடமும் தான் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததும் ஆன்மிக சுற்றுப்பயணமாக இமயமலை செல்வதை வழக்கமாக வைத்திருக்கும் ரஜினிகாந்த், கொரோனா காரணமாக சில வருடங்கள் அங்கு செல்லாமல் இருந்தார். பின்னர் கடந்த வருடம் தனது நண்பர்களுடன் மீண்டும் அங்கு சென்றார். பத்ரிநாத், கேதார்நாத், பாபாஜிகுகை உள்ளிட்ட புனித தலங்களுக்குச் சென்ற அவர், அங்கு வழிபட்டார். அந்த புகைப் படங்கள், வீடியோக்கள் இணையத்தில் வைரலாயின.இந்நிலையில் கடந்த 29ம் தேதி அவர் தனது நண்பர்கள் ஸ்ரீஹரி உள்ளிட்டோருடன் இமயமலைக்கு சென்றார். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகம் முழுவதற்கும் ஆன்மிகம் தேவை என்று கூறினார். விமானம் மூலம் டேராடூன் சென்ற அவர் அங்கிருந்து ரிஷிகேஷ் சென்றார். அங்கு, சுவாமி தயானந்த சரஸ்வதி ஆஸ்ரமத்துக்குச் சென்று வழிபட்டார். பின்னர் பத்ரிநாத் சென்ற அவர் அங்குள்ள கோயிலில் வழிபட்டார்.

அவரை அங்கு சந்தித்த பக்தர்கள் பலர் அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர் அடுத்து, கேதார்நாத், பாபாஜி குகை உள்ளிட்ட புனித தலங்களுக்குச் சென்று வழிபட இருக்கிறார். ஜூன் 3 அல்லது 4ம் தேதி சென்னை திரும்புகிறார் ரஜினிகாந்த்.பின்னர், லோகேஷ் கனகராஜ் இயக்கும் 'கூலி' படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார். இதை சன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. அனிருத் இசை அமைக்கிறார். இதில் சத்யராஜ், ரஜினியின் நண்பராக நடிக்கிறார்.



# கிருத்திகா உதயநிதி - ஜெயம் ரவியின் 'காதலிக்க நேரமில்லை' படப்பிடிப்பு நிறைவு

கிருத்திகா உதயநிதி இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் 'காதலிக்க நேரமில்லை' படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

'வணக்கம் சென்னை' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகி கவனம் பெற்றவர் கிருத்திகா உதயநிதி. இவர் இயக்கத்தில் 2022ம் ஆண்டு வெளியான 'பேப்பர் ராக்கெட்' வெப்சீரிஸ் வரவேற்பை பெற்றது. இந்நிலையில் இவரது இயக்கத்தில் அடுத்ததாக வெளியாக உள்ள திரைப்படம் 'காதலிக்க நேரமில்லை'. இந்தப் படத்தில் ஜெயம் ரவி நாயகனாக நடிக்கிறார். நித்யா மேனன், யோகி பாபு, லால், வினய், லக்ஷ்மி ராமகிருஷ்ணன், பாடகர் மனோ, TJ பானு, ஜான் கோகேன், வினோதினி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் படத்தை தயாரிக்கிறது. இந்தப் படத்தின் முதல் தோற்றம் அண்மையில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. விரைவில் டீசர், ட்ரெய்லர் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழில் இதற்கு முன் ஸ்ரீதர் இயக்கத்தில் 1964ம் ஆண்டு இதே தலைப்பில் படம் வெளியாகி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.



# சினிமாவில் ஊதிய பாகுபாடு மாறும்:

## ராஷி கன்னா நம்பிக்கை

சுந்தர். சி இயக்கத்தில் தமன்னா, ராஷி கன்னா உட்பட பலர் நடித்து தமிழில் வெற்றி பெற்ற படம், அரண்மனை 4. இந்தப் படம் இந்தியில் நேற்று வெளியாகியுள்ளது. இதன் புரமோஷன் நிகழ்ச்சி மும்பையில் நடந்தது.

இதில் ராஷி கன்னா பேசும்போது, ''தமிழில் இதற்கு முன் நான் நடித்த 'திருச்சிற்றம்பலம்', 'சர்தார்' படங்கள் வெற்றி பெற்றன. 'அரண்மனை 4' படமும் வெற்றி பெற்றுள்ளதால் இது எனக்கு ஹாட்ரிக் வெற்றி என்று ரசிகர்கள் சொல்கிறார்கள். சிறுவயதில் இருந்தே ஹாரர் படங்கள் பிடிக்கும் என்பதால் 'அரண்மனை 4' படத்தில் நடித்தது பெருமையாக இருந்தது. ஹாரர் படங்களில் நடிப்பது எளிது. ஆனால், இயக்கம் கடினமானது. இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் நடித்து வருகிறேன்.

மொழி புரிந்தால் பார்வையாளர்களுடன் நெருங்க முடியும் என்பது எனக்குத் தெரியும். இந்தி பேசி வளர்ந்ததால், அது எனக்கு சவுகரியமான மொழி என்றாலும் நடிப்புக்கு அது பிரச்சினையில்லை. என்னால், இப்போது தமிழ், தெலுங்கு மொழிகளைப் புரிந்து கொண்டு பேச முடியும்.

சில படங்கள் திரையரங்குகளில் சரியான வரவேற்பைப் பெறாவிட்டாலும் இந்தப் பயணத்தில் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன்.

சினிமாவில் ஊதிய பாகுபாடு அதிகம் இருக்கிறது. காலப் போக்கில் இது மாறும் என நினைக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

# கற்பு எனும் பண்பு



பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

விளக்கம் கற்பு என்னும் மனவுறுதி, இல்லாளிடம் உண்டாயிருந்தால், அந்தப் பெண்ணை விடப் பெருமை மிக்கவை உலகில் யாவை உள்? ஒன்றுமில்லை.

ஆணும் பெண்ணும் இணைந்தே இந்த சமூகம் ஆக்கப்பட்டுள்ளது.ஆனாலும் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கோர் நீதி. அதிலும் இந்த கற்பு என்கிற பண்பு பெண்ணுக்கு மட்டுமே காலம் காலமாக போதிக்கப் பட்டு வருகிறது. அத்துடன் அதை கடைபிடிக்க காவல் கட்டுப்பாடுகள் என் பவற்றை வெகும் ஆழமாக பெண்ணைச் சுற்றி விதைக்கிறது. தவறும் மங்கையரை தூற்றி துவம்சம் செய்க்கிறது.

ஒரு குடும்பம் அதாவது தாய், தந்தை, மகன்கள் மகள்கள், மருமக்கள், சகோதரர்கள் என்கிற சங்கிலி தொடராக இணைந்த ஒரு வீட்டிலோ அல்லது கணவன் மனைவி என்கிற தனிப்பட்ட இல்லற உறவிலோ, காதலன், காதலியாகவோ வலம் வரும் காலத்திலோ பெண் என்கிற படைப்பு மட்டுமே கற்பு, ஒழுக்கம் என்பவற்றில் உறுதியாக இருக்க கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.

இது நியாயமான விடயம் தான். ஆனால் பெண்ணுக்கு போதிக்கும் சமூகம் ஆணுக்கு மட்டும் கற்பின் நெறியை பின்பற்ற அதன் மகத்துவம் புரிந்து நடக்க போதிப்பது இல்லை என்பதே உண்மை. உலகளாவிய நிலையில் ஆண் ஆளுமைச் சமுதாய (male dominated society) அமைப்பே தொன்று தொட்டு நிலவி வருகிறது.

பெண்ணுரிமைக் குரல் என்பதுவும், சமத்துவம் என்பதுவும் பிற் காலத்தில் எழுந்தவையே. ஆண் ஆளுமைச் சமுதாயத்திலும் பெண்ணின் கற்பே வற்புறுத்தப்பட்டது; எதிர்பார்க்கப்பட்டது. முதலாளிகள் சமுதாயத்திலும் (Feudal Society). முடியாட்சியின் தொடக்கக் காலத்திலும், குறிப்பாகக் கற்பொழுக்கம் பெண்களிடம் வற்புறுத்தப்பட்டதுபோல் ஆடவரிடம் வற்புறுத்தப்படவில்லை.

வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம் எனலாம். ஆடவர் ஒழுக்கம் பற்றி வரையறை செய்யப்படாத காலம். ஆனால், வள்ளுவர் அதைப்பற்றி அப்பொழுதே சிந்தித்துள்ளார்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை. விளக்கம் இல்லறத்தில் வாழ்பவன் என்பவன், பிற அற இயல்பையுடைய முத்திறத்தார்க்கும் நல்வழியில் நிலையான துணையாவான். கற்பு என்பது இருபாலருக்கும் உரியது என்று எண்ணியுள்ளார். எனவே, வள்ளுவரின் இந்தக் கருத்தை வழிமொழிவதுபோல் பாரதியாரும், கற்புநிலை என்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் (பெண்கள் விடுதலைக்கும்மி: 1718) ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால் அப்போது பெண்மையும் கற்பு அழிந் திடாதோ? நாணற்ற வார்த்தை அன்றோ? வீட்டைச் சுட்டால் நலமான கூரையும் தான்எரிந் திடாதோ? (பாரதி அறுபத்தாறு, : 56) என்பதே பாரதியார் ஆணினத்தை நோக்கித் தொடுக்கும் கூரிய, பொருள் பொதிந்த கேள்விக்கணையாகும்.

ஒரு பெண்ணின் கற்பு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், அதற்கு அவளைச் சார்ந்த ஆணும் கற்புடையவனாக இருக்க வேண்டும்; ஆண் தனது கற்பு நெறியைக் கைவிட்டுத் தவறு செய்ய முற்பட்டால், அப்போது பெண்ணின் கற்பும் பிழைபடும். இக் கருத்தினை விளக்குவதற்குப் பாரதியார் ஓர் எளிய உவமையைக் கையாண்டுள்ளார்.

ஒரு வீடு தீப்பற்றி எரிகிறது என்றால், அதன் கூரையும் தான் அதனுடன் சேர்ந்து பற்றி எரியும்; முடிவில் அழியும். அது போல் தான் ஓர் ஆணின் ஒழுக்கக் குறைபாடு, அவனைச் சார்ந்த பெண்ணின் வாழ்விலும் இழுக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். எனவே, பாரதியாரின் கருத்தில் கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் உரிய தன்று; ஆண், பெண் இருவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்றே என்கிறார்.

இந்நிலையில், 'கற்பு' என்ற ஒற்றைச் சொல்லால் சுட்டாமல், 'கற்பு நிலை' என்ற ஒரு புதிய தொடரைக் கையாண்டுள்ளார் பாரதியார்.

இன்று நாகரீகம் அடைந்த யுகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் ஆண் சமூகத்திற்கும் கற்பொழுக்கம் என்கிற சிந்தனையில் வாழ்வதற்கு வழி சமைக்க மறுக்கிறோம். இதனாலே பல ஆண்கள் தங்கள் ஒழுக்கம் எதுவென தெரியாமல் தவறு இழைக்கிறார்கள். எனவே இனியும் தாமதிக்காமல் ஆண் குழந்தைகளுக்கும் கற்பு இருக்கிறது, ஆண்களும் அதை பின் பற்றவேண்டும் என்பதை உணர்த்த முயலுங்கள். ஒழுக்கமான ஒரு ஆண், பெண் இணைந்த சமுதாயம் மலரட்டும்.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...✍

# மனநலம்



உடல் ஆரோக்கியத்தை போலவே மன ஆரோக்கியமும் இன்றியமையாத வொன்றாக காணப்படுகின்றது. மனநலமே ஒருவர் தங்களை தாங்களே ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள கூடிய ஒரு சொத்தாக காணப்படுகின்றது.

மனநலம் என்றால் என்ன மனநலம் என்பது மன அழுத்தம் இல்லாமல் காணப்படுவதே மனநலமாகும். அதாவது உளவியல் நல்வாழ்வின் நிலையையும் மனநோய் இல்லாத நிலையினையும் சுட்டுவதாக மன நலமானது காணப்படுகின்றது. மனநலமானது மன ஆரோக்கியத்தை குறித்து நிற்கின்றது.மனநலத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மனம் விட்டு பேசுதல் ஒரு சிறந்த மனநலத்துடன் காணப்பட வேண்டுமாயின் மனம் விட்டு பேசவதென்பது மிக முக்கியமானதொன்றாகும்.

அதாவது சில பிரச்சினைகள் மற்றும் சூழல்கள் எம்மை மன ரீதியான பல சிக்கலான தன்மைக்கு கொண்டு செல்ல கூடியதாக காணப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மனம் விட்டு பேசுவதானது எமது மன ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

எப்பொழுதும் நேர்மறையான சிந்தனைகளுடன் காணப்படல் வேண்டும். இதன் மூலமாக எமது மனநலமானது ஆரோக்கியமானதாக காணப்படும்.

சிறந்த தூக்கம் என்பது மனநலத்தில் மிக முக்கிய பங்கினை வகிக்க கூடியதாக காணப்படுகின்றது. அதாவது தூக்கமின்மையானது மனநலத்தை பாதிக்கக் கூடிய ஒரு காரணியாக காணப்படுகின்றது. எனவே சிறந்த தூக்கமானது மனநலத்தை மேம்படுத்துவதற்கு துணைபுரியும்.

சிறந்த முறையில் ஓய்வினை எடுத்துக் கொள்தல் என்பது மனநலத்தில் மிக முக்கியமான ஒரு வழிமுறையாகும். அதாவது மன அழுத்தமானது ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் யோகாசனம் போன்றவற்றை பின்பற்றுவதன் மூலமாக சிறந்த மன ஆரோக்கியத்தை பெற்று கொள்ள முடியும்.

உடற்பயிற்சி செய்வதன் மூலமாக மனமும் உடலும் ஒரு ஊக்கத்தை பெறுகின்றது. அதாவது உடற்பயிற்சி செய்வதனூடாக மகிழ்ச்சியான ஹார்மோன்களை வெளிப்படுத்துகின்றது.

இது மனதிற்கும் உடலுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக ஆரோக்கியமான மனநலத்திற்கு வழிவகுக்கும்.மனநல பாதிப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் மூளையே. எனவே அது பாதிப்படைகின்ற போது மனநல பாதிப்பானது ஏற்படுகின்றது. எனவே இவ்வாறான மனநல பாதிப்பு ஏற்படுவதற்கான காரணங்களை பின்வருமாறு நோக்கலாம்.

**உடலியல் காரணிகள்**

மரபியல் காரணங்கள்

அதாவது மரபியல் ரீதியான உடலியல் சார்ந்த காரணங்களாலும் மனநல பாதிப்பானது ஏற்படுகின்றது.

மூளையில் இரசாயன மாற்றங்கள் ஏற்படுதல், மூளையில் கட்டி ஏற்படுதல், இரத்த ஓட்டத்தின் பாதிப்பு போன்றவற்றை குறிப்பிடலாம்.

இரத்தத்தில் அதிக அளவில் நச்சுப் பொருள்கள் இருப்பதன் காரணமாக ஏற்படல், ஊட்டச்சத்து குறைபாடு போன்றவை யாகும்.

**உளவியல் காரணங்கள்**

மாறுபட்ட குணாதிசயங்களை கொண்டிருத்தல். அதாவது வழக்கத்திற்கு மாற்றமான சில பண்புகளை கொண்டு காணப்படுவதாகும்.

மன அழுத்தம், குறைவான மன நோய் எதிர்ப்பு சக்தி, முறையற்ற குழந்தை வளர்ப்பு, கசப்பான குழந்தைப் பருவம் மற்றும் விடலை பருவ அனுபவங்கள்.

**சமூகவியல் காரணங்கள்**

குடும்ப ரீதியான பிரச்சினைகள் ஒருவருடைய மனநல பாதிப்பில் பாரிய தாக்கத்தினை செலுத்துகின்றது.

**குடி மற்றும் போதை பழக்கவழக்கம்.**

ஏமாற்றங்களை தாங்கி கொள்ள முடியாத மனநிலை.

மனப் போராட்டத்திற்கு விடை காண முடியாமை.இன்றைய காலகட்டத்தில் மனநலம் இன்றைய கால கட்டத்தில் மனிதனானவன் மனநலத்தோடு காணப்படுவதானது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. அதாவது மனதினை சிறப்பாக வைத்திருப்பது என்பது மிக இன்று முடியாத ஒரு செயலாகவே காணப்படுகின்றது.

ஏனெனில் ஓய்வின்றி பணம் ஈட்டுவதற்கான வழிகளிலேயே காலத்தினை கொண்டு செல்கின்றார்களே தவிர மன நிம்மதி என்பது மிகவும் அரிதாகவே இன்றைய சமூதாயத்தினரிடம் காணப்படுகின்றது.

எனவே மனநலத்தினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். இதனூடாக ஆரோக்கியமான சிறந்த வாழ்க்கையை பெற்றுக் கொள்ள முடியும்.

# வீர அபிமன்யு நாட்டுக்கூத்து பேர்த் மாநகரில் அரங்கேற்றம்







ஈழத்தின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான "வீர அபிமன்யு" என்ற நாட்டுக்கூத்து பேர்த் மாநகரில் கடந்த வார இறுதியில் சிறப்புற அரங்கேறியது.

தாயகத்தில் இந்த நாட்டுக்கூத்து பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்தாலும், புலம்பெயர் மண்ணில் மேற்கு அவுஸ்திரேலிய மண்ணில் மேடையேற்றப்பட்டது பாராட்டுக்குரியதாகும்.

போர்க்களங்களில் நாட்டுக்கூத்து வடிவம், அக்கால நிகழ்வுகளை எடுத்தியம்பும் வண்ணம் அரங்கேறின. இன்று அவுஸ்திரேலியாவில் இத்தகைய நிகழ்வை காணும்போது மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஏனெனில் இளம் கலைஞர்களின் கலை நயமும், பாரம்பரியத்தை பேணிக்காக்கும் சேவையையும் என்றும் போற்றி பாராட்ட வேண்டியது அவசியமாகும்.

ஈழத்தின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான நாட்டுக்கூத்துக் கலை அருகி வந்தாலும் பேர்த் நகர் வாழ் தமிழ் நெஞ்சங்கள் "வீர அபிமன்யு" கூத்தை குறுகிய காலத்தில் நெறிப்படுத்தி வழங்குகியுள்ளார்கள்.

இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களால் "வீர அபிமன்யு" என்ற நாட்டுக்கூத்து இருபதாண்டுகளுக்கு முன்னர் பல மேடையேற்றங்களை கண்டதாகும். வஞ்சகத்தால் வலையில் வீழ்த்தப்பட்டாலும் தரையில் தன்னந்தனியனாய் நின்று போரிட்டு வீரச்சாவை ஏற்றுக் கொண்ட "வீர அபிமன்யுவின்" இதிகாச புராணக் கதையைப் பறைசாற்றும் பாரம்பரிய நாட்டுக்கூத்தாகும்.

ஜுன் இரண்டாம் நாள் பேர்த் பாலமுருகன் ஆலய நிதி சேகரிப்பு நிகழ்ச்சியில் அலங்கேஸ் அருந்தவராஜா நெறியாள்கையில் வீர அபிமன்யு கூத்தினை மக்கள் கண்டு களித்தனர்.

குருச்சேத்திரப் போரின் பதின்மூன்றாவது நாளில் கௌரவர்கள் சக்கர வியூகம் அமைத்துப் போரிட்ட வேளையில், கடும் போர் புரிந்த அபிமன்யு சக்கர வியுகத்திலிருந்து வெளிவர முடியாமல் எதிரிகளின் வாளுக்குப் பலியான வீர வரலாற்றை பேர்த் வாழ் இளம் மாணவர்கள் கண்டு களித்தனர்.


இறுதியில் துரோணர், கிருபர், கர்ணன், அஸ்வத்தாமன், பிரஹத்பாலன், கிருதவர்மன் ஆகிய அறுவரால் தாக்கபட்டு நிலை குலையும் அபிமன்யு, பின் துச்சாதனனின் மகன் துர்முகனோடு கதாயுத்தம் புரிந்து அவனைக் கொன்று தானும் மரணத்தைத் தழுவிய காட்சி பார்வையாளர்களின் மனதை நெருடியது.

பேர்த் நகரில் அரங்கேறிய "வீர அபிமன்யுவின் கூத்துக்கலையின் சிறப்பம்சம் காட்சிகளையும், காட்சிச் சூழல்களையும் கணீரென்ற குரலில் பாடிய பாடகர்களின் பாடல்கள் சிறப்பாக வரலாற்றை விபரித்தன.

அத்துடன் மேடையில் நடனமாடிய நடிகர்களின் அபிநயமும் சேரவே காட்சி கற்பனையில் தோன்ற குருசேத்திரப் போர்க்களம் கண்முன்னே மிதக்க வைத்தது.

ஈழத்தில் பல கூத்துக்கள் ஆடப்பட்ட போதிலும் வீரஅபிமன்யுவே இன்று வரை நிலைத்து நிற்கிறது. அத்துடன் எமது பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமையும் உள்ளது. அருகிவரும் பாரம்பரியக் கலைகளை மேற்கு அவுஸ்திரேலிய பேர்த் மாநகரில் மேடையேற்ற எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுக்குரியதாகும்.







## இளம் வயதில்...

4ஆம் பக்கத் தொடர்...

இவர், இவரது தந்தையாரின் வழிக்காட்டுதல்களுக்கு இணங்க சட்டம் பயில ஆரம்பித்தார். இவரை சட்டத்தரணியாக பார்க்க வேண்டும் என்பதே இவரது தந்தையாரின் ஆத்ம ரீதியான இலட்சியமாக இருந்து வருகின்றது.

இன்று இதுவே இவரது ஆத்ம ரீதியான இலட்சியமாக மாறியுள்ளது.

சிறு வயதில் இருந்தே தனது பெற்றோர் உதவியும் ஆதரவு வழங்கி வருவதாலேயே தன்னால் தைரியமாக எல்லா விடயங்களிலும் வெற்றி பெற முடிந்தது என்று இவர் பெருமையாக கூறி வருகின்றார்.

மற்றவர்களுக்கு உதவி செய்து அதில் மகிழ்ச்சியைக் காணும் பெண்மணியாக இருப்பதையே இவர் பெருமையாக கருதுகிறார். பெருமையாக கருதுகிறார்.

இவ்வாறு உதவி புரிவதே இவரது இயல்பாக இருந்து வருகிறது.

கல்வித் துறையிலும் கலைத்துறையிலும் சமூக சேவையிலும் சட்டத் துறையிலும் ஏதாவது செய்து சாதிக்க வேண்டும் சாதனை செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் இவர் இருக்கிறார். தனது இலக்குகளை எட்டிப்பிடித்து வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கை தனக்கு இருப்பதாக பெருமையுடன் கூறி வருகிறார். இவர் யாருடைய உதவியும் இன்றி முன்னேறி வருகிறார்.








Shaamikh Ahmed, Fathima Sanbiga, Shaahir Ahamed



Harithraini



குத்தூஸ்



மகளுடன் கலைஞர் விஜே

# துபாயில் பிரமாண்டமாக நடந்த கர்நாடக இசை நிகழ்ச்சி









துபாயில் பிரமாண்டமாக நடந்த கர்நாடக இசை நிகழ்ச்சி பிரபல வயலின் மேதை இசைக் கலைஞர் பத்மஸ்ரீ கன்யாகுமாரி தலைமையில் நடைபெற்றது. தில்லான மோஹனாம்பாள் திரைப்பட புகழ் கொத்த மங்கலம் சுப்புவின் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி ராதிகா ஆனந்த்தின் டீம் மோஹனா குழுவினர் துபாயில் பல வருடங்களாக கர்னாடக இசைக் கவிஞர்களின் பாடல்களை தேர்ந்தெடுத்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியரை பயிற்றுவித்து அவர்களை ஒரே நேரத்தில் மேடையேற்றி சேர்ந்திசையாக இசை விருந்து படைத்து வருகின்றனர்.

அமீரகத்தில் இசை பாரம்பரியத்தை தொடரும் மிகப்பெரும் பணியை 2009 வருடம் முதல் செய்து வரும் இக்குழுவினர், கடந்த வருடங்களில் 2015 முதல், பாபநாசம் சிவன், முத்துசுவாமி தீக்ஷிதர், புரந்தர தாசர், சுவாதி திருநாள், மஹாகவி பாரதியார் என பல இசை மேதைகளின் பாடல் கோர்வைகளை அமீரக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பெருமுயற்சியில் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியது.

இவ்வருடம் அன்னமாச்சார்யாரின் கீர்த்தனைகளை, 58 வருட கால இசை அனுபவம் வாய்ந்த, 'கன்யாகுமாரி அம்மா' என அன்புடன் அழைக்கப்படும் இசை உலக ஜாம்பவான் பயிற்றுவிக்க, ஏறத்தாழ 365 கர்நாடக இசை மாணவ மாணவியர் ஆசிரியர்கள் பங்கு கொண்டு மேடையும் அரங்கமும் ஒருங்கே நிறைந்து, அமீரகம் காணாத அற்புத நிகழ்வாக அரங்கேறியது.

சங்கீத கலாநிதி விதூஷி கன்யாகுமாரியின் ஆறு மாத அயராத மேற்பார்வையில் திருமதி பாவனி ஸ்ரீகாந்த், ஸ்ரீ காந்த் மற்றும் துபாய் இசை ஆசிரியை திருமதி விசாலாக்ஷியின் பயிற்சியில், 45 இசை ஆசிரியைகள் தங்களது மாணவர்களுக்கு முறையே கற்றுத்தர, அன்னமாச்சார்யாரின் 10 கீர்த்தனைகளை , அனைத்து கலைஞர்களும் கடந்த மே 25 அன்று, வண்ண உடைகளில், நேர்த்தியான அலங்காரத்தில், பார்வையாளர்கள் புரவலர்கள் அனைவரையும் கவரும் வண்ணம், அரங்கம் அதிரும் கைதட்டல்களுடன் வழங்கி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து 10 வயலின் கலைஞர்கள் பங்கு கொண்ட புதுமையான வாத்திய கச்சேரியும் நடைபெற்றது. கன்யாகுமரி அம்மா இசையமைத்த சிந்து பைரவி தில்லானா மற்றும் சாருகேசி ராகத்தில் மேற்கத்திய கோர்வையாக 'மெல்டிங் ஆரா' எனும் இசைக்கோர்வை முதலான பல பாடல்களை வழங்கினர். நிகழ்ச்சியில் டீம் மோஹனா குழுவின் மாணவ மாணவியர் பங்கு பெற்ற கன்யா அம்மா இசையின் சப்தாத்ரி போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகளும், இசைக் கலைஞர்களுக்கு நினைவு பரிசும் வழங்கப்பட்டது. கன்யா அம்மாவுக்கு அமீரக கர்நாடக இசை ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து வழங்கிய பண முடிப்பு பொற்கிழியும் 'தந்த்ரி வாத்ய விஷாரதா' எனும் பட்டமும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த இசை வல்லுனரான சங்கீத கலாநிதி ராகவாச்சாரி மற்றும் பிரபல வயலின் கலைஞர் கலைமாமணி எம்பார் கண்ணன் முன்னிலையில் அளித்து கௌரவித்து மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய ஆனந்த் மற்றும் தீபா வினய் இருவரும் அடுத்து சென்னையில் ஜுலை 7,2024 அன்று நடக்க இருக்கும் குரு வந்தனம் நிகழ்ச்சி குறித்த அறிவிப்பினையும் வெளியிட்டனர்.

பக்க வாத்ய கலைஞர்களான மிருதங்கம் நந்தகோபால் மற்றும் கிருஷ்ணகுமார், வயலின் கௌஷிக், வீணை வித்யா, மோர்சிங்க் கொன்னகோல், அம்ருத், ஹார்மோனியம் சாய் ஸ்ரீவத்ஸ் என அனைவரின் பங்களிப்பையும், புரவலர்களின் பங்களிப்பு, டீம் மோஹனாவின் குழு உறுப்பினர்களான ராதா ஷங்கர், நித்யா ரங்கராஜன், அனுஷா ரமேஷ், ஷீலாரங்கா மற்றும் வித்யா மஹேஷ் இவர்களையும் பாராட்டி, டீம் மோஹனா குழுவின் இயக்குனரான திருமதி ராதிகா ஆனந்த் நன்றி தெரிவித்து நிகழ்ச்சியினை நிறைவு செய்தார்.



# வலம்புரி கவிதா வட்டத்தின் 100 ஆவது கவியரங்கு





*வலம்புரி கவிதா வட்டத்தின் 100 ஆவது கவியரங்கு இம்முறை கொழும்பு 7, ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தில் நடைபெற்றது.*

*கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் எம். எஸ். அப்துல் லதீப், வாசுகி வாசு, சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், கம்மல்துறை இக்பால், ஈழகணேஷ், பிறைக்கவி முஸம்மில், ராஜா நித்திலன், கலாபூஷணம் மஸீதா அன்சார், கஹவத்தை சுதர்ஷனி பொன்னையா, தி. ஸ்ரீதரன், வாழைத்தோட்டம் எம். வஸீர், ந. தாமரைச் செல்வி, சிந்தனைப் பிரியன் முஸம்மில், லைலா அக்ஷியா ஆகியோர் மிகவும் கலகலப்பாக கவிதை பாடி சபையைக் கவர்ந்தனர். தமிழ்த் தென்றல் அலி அக்பரின் சுவாரஸ்யமான தலைமை கவியரங்கிற்கு இரட்டிப்புச் சுவை வழங்கியது.*

# லசித் மாலிங்கவை திரும்பிப் பார்க்க வைத்த குட்டி மாலிங்க பைனாஸ்




உலகக் கிண்ண இருபதுக்கு 20 போட்டிகள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில் உலகம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் போட்டிகளை நேரிலும் தொலைக்காட்சிகளிலும் ஆர்வமாக ரசித்து வருகின்றன. ஒவ்வொரு அணி வீரர்களின் ஆட்டம் பற்றியும் வெற்றி தோல்வி பற்றியும் பேசப்பட்டுக் கொண்டிருக்கையில் சமூக ஊடகங்களில் நம் நாட்டு சுட்டி வீரர் ஒருவரின் பெயர் கடந்த சில நாட்களாக வைரலாகியுள்ளது.

நட்சத்திர பந்து வீச்சாளர் லசித் மாலிங்கவின் பாணியில் லாவகரமாக பந்து வீசும் அந்த குட்டி மாலிங்க, தன்னை விட பெரியவர்களுக்கு அபாரமாக பந்து வீசும் அந்த வீடியோ பலரையும் வியப்பில் தள்ளியது. யோக்கர் மன்னர் மாலிங்க கூட அந்த வீடியோவைப் பார்த்து தனது முகநூல்பக்கத்தில் பதிவொன்றை இட்டிருந்தார். அவரின் பதிவுடன் குட்டி மாலிங்க பைனாஸின் பெயர் மேலும் பேசுபொருளானது.

அநுராதபுரம் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலக பிரிவில் உள்ள பத்தான எனும் பகுதியிலுள்ள விளையாட்டு அணி கலந்து கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றில் இவர் பந்து வீசும் வீடியோவொன்று கடந்த வாரம் சமூக ஊடகங்களில் வைரலானது.

மாலிங்கவைப் போன்று பந்து வீசுவதால் மாத்திரம் இவர் பேசப்படவில்லை.அவரில் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் பெரிய வீரர்கள் திணறுவது தான் அனைவரினதும் கவனத்தை ஈர்ந்தது.

தற்பொழுது 14 வயதாகும் எம்.எம்.பைனாஸ் தரம் 10 இல் வீரச்சோலை முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்கிறார்.

ஐந்து பேர் கொண்ட குடும்பத்தில் மூன்றாவது மகன் தான் பைனாஸ். சிறுவயது முதல் கிரிக்கெட் மீது அலாதியான பிரியம் இவருக்கு. மகனை பற்றி அவரின் தந்தை பலீல் மௌலவியிடம் கேட்டோம்.

ஐந்தாறு வயது முதல் அக்கம்பக்கமுள்ள நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவார். அவராக துடுப்பாட்ட மட்டையொன்றை வெட்டி பக்கத்திலுள்ள சிறிய காணியில் தினமும் ஆடுவார். படிப்பிலும் அவர் திறமையானவர். அதனால் அவரை சுதந்திரமாக விளையாட விட்டோம்" என்றார் அவர்.

தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டிகளை ஆர்வமாக கண்டுகளிக்கும் பைனாஸ்,லசித் மாலிங்கவின் பந்து வீச்சு பாணியில் கவரப்பட்டு அது போன்று பந்து வீச ஆரம்பித்தார். காலப்போக்கில் அந்தப் பாணி அவருக்குக் கைகொடுத்தது. அவரின் துல்லியமான பந்து வீச்சு பெரியவர்களின் கவனத்தை ஈர்ந்துள்ள, அவரின் திறமையை கண்டு ஹமாஸ் ரோயல் பத்தாவா அணியில் அவரை தமது அணியில் இணைத்துக் கொண்டது. கடந்த 3 வருடங்களாக அந்த அணியின் பிரதான பந்து வீச்சாளராக இருக்கிறார் பைனாஸ்.



இவர்களின் அணி சார்பாக முதல் ஓவரை வீசுவது இந்த குட்டி மாலிங்க தான்.

சமூக ஊடகங்களில் வைரலான கிரிக்கெட் போட்டியில் ஹமாஸ் அணி இவரது பந்து வீச்சினால் தான் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. இவரின் வீடியோவை பார்த்து லசித் மாலிங்க இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

" இலங்கை அணிக்கு எதிர்காலத்தில் மிகவும் பெறுமதியான வீரர் இவர். 56 வருடங்களில் சிறந்த நிலையில் இவர் இருப்பார்" என்று முகநூலில் பதிவிட்டிருந்தார் மாலிங்க.

அவரைப்பற்றி லசித் மாலிங்க குறிப்பிட்டிருப்பது பற்றி பைனாஸிடம் வினவினோம்." பெருமகிழ்ச்சியாக உள்ளது. அவரை நேரில் கண்டதில்லை. அவரை சந்திக்கக் கிடைத்தால் அது என்வாழ்வில் மறக்க முடியாத நாளாக இருக்கும்" என்று எம்மிடம் பகிர்ந்தார் பைனாஸ்.

இவரின் திறமையைக் கண்டு பல அணிகள் இவரை அழைத்தாலும் தனது ஊர் அணியான ஹமாஸ் ரோயல் அணியுடன் இருப்பதையே இவர் விரும்புகிறார். தனது குறைபாடுகளை சீர்செய்து வழிகாட்டி வரும் அண்ணன்மார்களையும் அவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

படிப்பையும் விளையாட்டையும் சமமாக தொடர்ந்து முன்னெடுப்பதே தனது எதிர்கால நோக்கம் என்றும் பைனாஸ் எம்மிடம் கூறினார்.

லசித் மாலிங்கவின் பாணியில் பந்து வீசும் இருவர் இலங்கை அணியில் இடம்பிடித்துள்ளனர்.

அவரைப் போன்று பந்து வீசும் மேலும் சில இளம் வீரர்கள் அண்மைக் காலங்களில் சமூக ஊடகங்களில் வைரலானார்கள். இது போன்ற இளம் வீரர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்கி பாதுகாத்தால் எதிர்கால இலங்கை அணி உச்சத்தில் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.




தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

Whatsap: 0714901181

# மருதமுனை கரீமின் "நீண்ட இருட்டு" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு



மருதமுனையை சேர்ந்த கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் எழுதிய "நீண்ட இருட்டு" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எம்.எச்.பவுண்டேஷன் ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற வங்கியாளரும் கவிஞருமான ஏ.ஆர்.ஏ.சத்தார் தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் எஸ்.எம்.எம்.ஜெமீல் நினைவரங்கில் அண்மையில் நடைபெற்றது.

நூல் நயவுரையை இலக்கிய விமர்சகர் ஜெஸ்மி எம் மூஸா மற்றும் கவிஞர் ஏ.எம்.குர்ஷித் ஆகியோர் நிகழ்த்தினர். சட்டத்தரணியும் சமுர்த்தி வங்கி முகாமையாளருமான எம்.எம். முஹம்மட் முபீன், எழுத்தாளர் எம்.எச்.ஏ. கரீம் அவர்களின் எழுத்துலக பிரவேசம் பற்றியும் மருதமுனை கிராமத்தின் சமகால எழுத்துக்கள் பற்றி கடந்த கால அனுபவக் குறிப்புகளுடன் விளக்கி உரையாற்றினார்.முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், முன்னாள் உயர் நீதிமன்ற ஆணையாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.எம்.ஜெமீல் , உதவி பிரதேச செயலாளர் திருமதி அய்மா நிஃமத்துல்லா, கலாநிதி திருமதி மஸ்றூபா மஜீத், சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எம்.அஹமது அன்ஸார் மௌலானா, டொக்டர். முஜாஹித், டொக்டர். எஸ்.எம். தொகுத்தார்,வர்த்தகர் ஏ.ஜே.நளீர் ஆகியோர் முதன்மை பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில், அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் வை.எல். அன்சார், வெண்ணிலா சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஏ.கப்பார், கவிஞர் மருதூர் மஃஜூன், கவிஞர் ஜமீல், ஆய்வாளர் ஏயெம் அம்றிதா, கவிஞர் றாபி, கவிஞர் முனாஸ், கவிஞர் டீன் கபூர், கவிஞர் முபாறக், கவிஞர் நௌபல், கவிஞர் மருதமுனையாளன் றபீக் , கவிதாயினி கவிநுட்பம் பாயிஸா, கவிஞர் மருதமுனை ஹஸன், போன்றோருடன் கவிஞர்கள் இலக்கியவாதிகள்,ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் நிகழ்த்தியதுடன் நிகழ்வுகளை கவிஞர் விஜிலி மூசா தொகுத்து வழங்கினார்.

ஏ.எல்.எம்.ஷினாஸ்
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# எஸ் எல் எம்:என்டெ சீவியத்திலிருந்து.... எழுதியது

ஈழத்து முஸ்லிம்களின் படைப்பாளுமை எஸ்.எல்.எம். என்கிற மக்கத்துச்சால்வையர்.

மக்கத்துச்சால்வையரின் தற்போது வெளிவந்திருக்கும் நூல் 'என்டெ சீவியத்திலிருந்து...'கஸல் பதிப்பகத்தின் 2023 வெளியீடு.டிராஸ்கி மருது அட்டையில் எஸ்.எல். எம்மின் முகத்தை உணர்வு ததும்பத் தருகிறார்:ஜீவமணி உள்வடிவமைக்கிறார். தனது ஆசிரியரும்,நண்பருமான திரு அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்களுக்கு தனது சீவியசீரிய நூலைச் சமர்ப்பிக்கிறார்.



ஸபீர் ஹாபிஸ் படிக்க இனிக்கும் பத்திகளென எழுதுகிறார்.' ஆற்றொழுக்கான நடையில் அவரது நாவிலிருந்து தமிழ் மலர்ந்துதிரும்.எந்தவொரு எளிய நிகழ்வையும் மிக சுவாரசியமாக விபரிப்பதிலும், சம்பவங்களை சுவையான கோர்வையாகச் சொல்லி முடிப்பதிலும் அவர் வெளிப்படுத்தும் புலமை வியப்பை ஏற்படுத்தும்' அவர் சொல்லக் கேட்டுத் தட்டச்சுச் செய்த உறவுக்காரர் ஸபீர்.உண்மையிலும் உண்மை எஸ்.எல்.எம் எனும் கதையாடல்காரனின் சுவாரசியம்.அவரோடு உரையாடக்கி படைத்தவர்கள் அறிவர்.

எஸ்.எல்.எம் அவர்கள் எங்கள் தேசம்,எழுச்சிக்கும் ல், சரிநிகர்,மற்றும் முகநூலில் எழுதியவற்றின் தொகுப்பு இப்பனுவல். 56 பத்திகள் கொண்ட இவரது எழுத்துக்களின் அனுபவமும்,உணர்வுகளும்,கலந்த எளிய மொழியிலான இழை இது.வாசிப்பவர்களை எஸ்எல் எம் தன் எழுத்து வலையால் அகப்படுத்தும்மந்திரம் தெரிந்த மொழிக்காரர்.

மிக எளிமையான எழுத்துக்கள், ஆர்ப்பாட்டமில்லாத சின்னச்சின்னதான பத்திகள். ஆனால் அற்புதமான விடயங்கள்.மானுட உறவினடியாகத் தோன்றும் சம்பவங்களும், சம்பவங்களிலிருந்து படரும் அனுபவமுமான மொழிப் பின்னல். நூலை சமர்ப்பித்த ஆசானுக்கான இரண்டு பத்திகள்.ஆசானதும் எஸ்எஸ்எம்மினதும் ஆழமான உறவு மற்றும் பண்புக்கோலங்களை வரைகிறது. On your mark,Get Zet,Go வாகத்தான் வாழ்க்கை இருக்கிறது.நூறு மீற்றர் ஓட்டப்பந்தயத்தின் ஆரம்பக் கோட்டில் நிற்கும் ஒரு ஓட்டக்காரனாக வாழ்வை அனுபவித்த சாதாரண மனிதனின் எண்ணங்களை,சமூக உணர்வை,வீரத்தை,போலிகளுக்கெதிரான குரலை,நம்பிக்கையை,அவநம்பிக்கையை,அன்பை,அகன்ற அறிவையென இந்தப் பனுவல் பரப்பும் செய்திகள் முக்கியமானவை.

எஸ்.எல்.எம்.ஹனிபா அவர்கள் சொல்வது போல் அவர் சோலை வனங்களில் யானைக்கூட்டங்களை மோப்பம் பிடித்து அழைத்துவரும் மந்திரக்காரனின் பேரன். அவர் எண்ணியிருப்பது போல் சின்னப்பணிக்கன் கதையை எழுதித் தரவேண்டும்.அதற்கான ஆரோக்கியம் அவருக்கு வாய்க்க வேண்டும். அப்போது அவருக்கு மீண்டும் மக்கத்துச் சால்வையை தோளில் போர்த்தி கௌரவிக்க வேண்டும்.

அவரது நாவலுக்காக வாசகர் காத்திருப்பர்.




# பிறை வெளியில்: ஹஜ் பெருநாள் உரையாடலும் கவிதை வாசிப்பும்



பிறை ரீவி 'பிறை வெளி' நிகழ்ச்சியூடாக 'ஹஜ்:தியாகத்தின் பேரின்பப் பெருவெளி' கவிதை வாசிப்பும் மற்றும் ஹஜ் அனுபவங்கள்,ஊர்ப்பெருநாள் நினைவுகள்,ஹஜ் பண்பாடுகளை நினைவு மீட்டலென உரையாடலுமான ஒரு மணித்தியால நிகழ்வு பெருநாள் தினத்தன்று மாலை 5.00 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ளது. வைத்திய கலாநிதி கவிஞர் தாஸீம் அஹ்மத்,நாடறிந்த ஊடகி புர்கான் பீ இப்திகார்,மேமன் கவி,கவிஞர் கஸீர்,கவிஞர் நபீல் மற்றும் முல்லை முஸ்ரிபா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாடிக் கவிதை பாடுகின்றனர்.

பெரும்பாலும் விஷேட தினங்களுக்கான கவியரங்குகள் ஒலி ஒளி ஊடகங்களில் ஒழுங்கமைக்கப்படுவது மரபாகி விட்டது.

விஷேட தினத்தின் அல்லது நிகழ்வின் பண்பாட்டை கவிதைமொழியில் வெளிப்படுத்துவதற்கானதும் ரசித்தின்புறுவதற்குமான களமாக இது அமைந்து விடுகிறது. கவிஞர்களின் கவியெழுச்சியை இதன் வழி காணலாம்.

இந்த மரபின் புதிய பரிமாணமாக கவிஞர்களின் உரையாடல்களையும் உள்ளீர்த்ததாக பிறைவெளி நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை பிறை ரீவி பொறுப்பாளர் றிஸ்வான் ஒழுங்கமைத்துள்ளார். பிறைவெளி வழங்குநர் முல்லை முஸ்ரிபா நெறிப்படுத்துகிறார். பங்குபற்றுநர்களின் உணர்வுத்திரட்சியாக ஹஜ்:தியாகத்தின் பேரின்பப் பெருவெளி ஹஜ்ஜுப்பெருநாள் ஒளிபரப்பு அமையவுள்ளது.

கவிஞர் புர்கான் பீ இப்திகாரின் பண்படுத்தும் ஹஜ், நபீலின் தொங்கோட்டம்,கவி தாஸீம் அஹமத்தின் கஃபாவின் பேரழகு,முல்லை முஸ்ரிபாவின் ஸம்ஸம் பெருக்கு,மேமன்கவியின் அரபா எனும் ஒன்று கூடல்,கவிஞர் ஹஸீரின் குர்பான் கவிதைகள் உணர்வின் இழைகளாக பிறைவெளியில் ஒளிபரப்பாகவுள்ளது.

இந்நிகழ்வை முகநூல் மற்றும் யுரியூபிலும் காணலாம்.

# ஈரானிய சினிமா: கட்டங் கட்டமாய் கடந்த கதை

ஈரானிய சினிமா மாற்றுச் சிந்தனைத் தளத்தை உருவாக்கியிருக்கிறது.இந்த தள உருவாக்கமென்பது கட்டங் கட்டமாய் வளர்ந்து வந்தது.

இன்றைய தமிழக சினிமா உற்பத்தி பெரும் தொழில்துறையாக அல்லது ஜனரஞ்சக சினிமாக வளர்ந்துள்ளது. இந்த கலாசாரம் மாற்றுச்சினிமாவுக்கான வாய்ப்பை மிகக் குறைத்தும் விட்டது.அவ்வப்போது மாற்று சினிமா வெளிவந்தாலும் கூட அது தோல்வியைத் தழுவுவதை அம் மனோபாவம் கட்டமைத்து விட்டது.ஆனால் ஈரானில் மாற்று சினிமா தான் உச்சங் கண்டுள்ளது.

யதார்த்த வாழ்வின் மீது கமெராவைச் செலுத்துவதில் ஈரானிய இயக்குநர்கள் முன்னுதாரணிகள்.

புதிய ஈரானிய சினிமா கட்டங்கட்டமாய் நகர்ந்த கதை மிகுந்த அவதானிப்புக்குரியது.

மாற்றுக்கருத்தியலின் உட்பாய்ச்சல் 1960களில் தொடங்கிற்று.உலக சினிமாவின் தாக்கம் ஒருபுறம் மாற்றுச்சிந்தனையை வளர்த்தது.உதாரணமாக தொழுநோயின் விபரீதத்தையும் விளைவையுப் கவிநயத்துடன் பேசிய ஃபரோ பரூக் அஜாத்தின் 'இருண்ட வீடு' முக்கியமானது.1964 இல் இப்ராஹிம் குலஸ்தானின் 'செங்கல்லும் கண்ணாடியும்'1967 இல் ஃபரேயுதன் ரஹனேமா உருவாக்கிய 'ஃபர்ஸ்ஸி போலீஸில் செயவாஷ்'என்பன மாற்றுக் கருத்தியல் தளத்தில் ஈரானியை புதிய சினாமாக்கமெராவுக்கு வெளிச்சம் பாய்ச்சின.

குறிப்பாக'பசு'என்கிற ஈரானிய சினிமாதான் புதியதின் தொடக்கமாகப் பரவலாக கருதப்படுகிறது. இந்தக்கருத்தியல் தர்யூஷின் முயற்சியின் பின்னான மாற்று வளர்ச்சியை அல்லது பெருக்கத்தையொட்டியது.

1969கள் ஈரானிய மாற்று சினிமாவின் மேலெழு காலமாகும்.பஹமான்ஃபர்னமாரா உருவாக்கிய 'இளவரசன் ஏதேஜாப்'இது கான்ஸ் திரைப்படவிழாவில் 'க்ரான்ட் ப்ரிக்ஸ்'விருது வென்றது.

1970 ஈரானிய சினிமாவில் முக்கிய மாற்றம் நிகழ்ந்தது.'குழந்தைகள் உலகம்'புதிய சினிமா உலகானது.

திரைப்படத்துறையில் குழந்தை மையக்கதைக்கான மையம் அமைந்தது.

இவ்விடத்தில் தான் அப்பாஸ் கியாரோஸ்தமி மீது கமெரா பரவுகிறது. அவரது 'ரொட்டியும் தெருவும்' முக்கியமானது.

1974 இல் ஈரானிய பாரம்பரிய கலை நுணுக்கங்கள் மற்றும் புராணக் கருத்துக்கள் ,நனவில் ஆழ் மனத்தாக்கங்கள் படத்தில் பேசு பொருளாயின.




'அந்நியனும் மூடுபனியும் 'இத்தன்மை கொண்டது.பஹைராம் பேசாய் இதில் பேசப்பட்டார்.1975 இல் சோராப் சாஹித் இயக்கிய 'ஸ்டிவ் லைஃப்' மெய்மையை வெளிப்படுத்தியது.

புதிய ஈரானிய சினிமாவில் தர்யூஷ் மெஹ்ருஜுயி,பஹராம் பாமனாரா,அமித் நதேரி,அப்பாஸ் கியோஸ்தமி,பஹராம் பேசாய் ஆகியோர் முதல் தலைமுறையின் கமெரா வெளிக்கு உயிரூட்டியவர்களாவர்.

உலக சினிமா வரலாற்றில் மாற்றுச் சினிமாவை மேலெழுப்பிய ஈரான் சினிமா கட்டங்கட்டமாய் வளர்ந்தது.

*(நன்றி: புதிய ஈரானிய சினிமாசஃபி)*

# மாற்று மொழி கவிதை அம்மாவின் அடுப்பு

என் அம்மா இந்த அடுப்பில் பரம்பரைச்சொத்தைச் சமைக்கிறார் என்னிடமிருந்து என் மகளுக்கு என்று தலைமுறை தலைமுறையாகச் செல்வதற்கு

நான் குழந்தையாக
இருந்தபோது
அவருடைய புடவைகளில்
வயிற்றில்
மார்பகங்களில்
நான் தேடிய வாசனையை
அவர் சமைக்கிறார்
என் இளம்பராயத்தை
என்னுடைய மகளுக்கு
பத்திரப்படுத்துவதற்காக
இப்போது நான்
அவருடைய
அடுப்பருகே அமர்ந்து
அதே வாசனையில்
என் இதயத்தோடு மண்
ஆன்மாவோடும்
ஊறுகிறேன்
அணையப்போகும்
சுவாலையை
உயிரோடு வைத்திருக்கும்
கலையைக் கற்றுக்கொள்ள
முயற்சி செய்கிறேன்
ஒரு பிடி உமியுடன்
சுவாலை உயிர்த்தெழுகிறது
என் அம்மாவின்
கண்கள் ஒளிர்கின்றன
இறைச்சி உருண்டைகள்
மகிழ்ச்சியோடு
நடனமாடுகின்றன
அதிக உற்சாகமடைந்த
குழம்பின் துளிகள்



அடுப்பின் பக்கங்களில்
எகிறிக் குதிக்கின்றன
என் இளம் பிராயத்து
அதே வாசனை
என்னுடைய
நினைவிலிருந்து எனது
சுவையரும்புகளுக்குச்
செல்கிறது
என் மகள் என்னைக்
கட்டியணைத்துக் கொண்டு
"அம்மா! நீ நான் மாதிரி
வாசனையாய் இருக்கிறாய்!"
ஒரே நேர் கோட்டில்
என் அம்மாவும் நானும்
என்னுடைய மகளும்
அன்னையர்
தினத்தைக் கொண்டாட
எழுதப்பட்ட கவிதையிலுள்ள
கூலி கொடுக்கப்படாத
தொழிலாளிகளின்
வாசனைகள்
மௌமிதா ஆலம்

*தமிழில்:சிறீ வத்ஸலாமாற்று மொழி கவிதை*

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

மண்டேலாவுக்கு அலுவலக நண்பர்களான கோர்,சிசுலு,நேட் என்பவர்கள் கம்யூனிஸம் பற்றிய தாகத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டத் தொடங்கினார்கள். அதற்கு முதல் படிக்கல்லாக அவனை கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய கூட்டங்களுக்கு அழைத்து செல்ல முயற்சித்து அதில் வெற்றியும் கண்டார்கள். மண்டேலா ஆரம்பத்தில் தயங்கி மறுத்தான். ஆனால் அடிக்க அடிக்க அம்மியும் நகர்வது போல் நண்பர்களின் விடா முயற்சி அவனை தோற்கடித்துவிட்டது. அப்போது கூட அவன் தன் உயர் அதிகாரியான சிடெல்ஸ்கியின் அறிவுரையை மறந்து விடாமல் தன்னை தானே ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டான். “கூட்டத்தில் கலந்துகொள்வதை அரசியலில் பங்கேற்பதாக எடுத்துக் கொள்ள முடியாது. நான் கூட்டத்தை காதுகொடுத்து கேட்க போனேனே தவிர ஒரு போதும் எனக்கு அரசியலில் நாட்டம் வராது” என்று தனக்கு தானே மனதுக்குள் நினைத்துக் கொள்வான். அடிக்கடி கூட்டங்களுக்கு நண்பர்களுடன் போவதும் தனக்கு தானே சமாதானம் கூறிக்கொள்வதும் அவனுக்கு வழக்கமாகிவிட்டது. கம்யூனிஸ்ட் கூட்டங்களில் கலந்து கொள்வது அவனுக்கு ஒரு பொழுது போக்காகிவிட்டது.

ஆபிரிக்காவின் இன்னொரு பக்கத்தை மண்டேலா அந்தக் கூட்டங்களின் மூலமாக தெரிந்து கொண்டான். கம்யூனிசம் பற்றிய அடிப்படை அறிமுகம் அவனுக்கு கிடைத்தது. நிறவெறி சரித்திரமும் அவன் கண்முன்னே விரிந்தது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் பார்வையை மண்டேலாவால் முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அவர்கள் விவரித்த வர்க்க போராட்டம் தென்னாபிரிக்காவுக்கு பொருந்தாது என்று அவன் கருதினான். இது இரு நிறங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் நடக்கும் போர். வெள்ளையர்கள் நிலத்துக்காகவும் வளத்துக்காகவும் போர் தொடுக்கிறார்கள். கறுப்பர்களோ தமது உரிமைக்காக போர் தொடுக்கிறார்கள்.




இதில் வர்க்கம் எங்கிருந்து வருகின்றது என்று யோசித்தான். வர்க்க போராட்டம் என்பது ரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் வேண்டுமானால் பொருந்தலாம். ஆனால் இங்கே சூழல் வேறு, அது பொருந்தாது என்று நண்பர்களுடன் வாதிட்டான். இருந்தாலும் எந்தவொரு கூட்டத்தையும் மண்டேலா தவறவிட்டதில்லை.

ஆசையுடனும் ஆர்வத்துடனும் நண்பர்களோடு சென்று காது கொடுத்து கேட்டு வருவான். அதன் மூலம் அவனுக்கு பல்வேறு படிப்பினைகள் கிடைத்தன. தனக்கு தெரியாத பலவற்றை அவனால் அறிந்துகொள்ள முடிந்தது. உதடுகள் துடிக்க ஆங்கிலம் பேசுதல், மேற்கத்தேய பாணியில் கோட், சூட்,டை என்று உடையணிதல், பி.ஏ. எம்.ஏ. என்று அவர்களது காகிதப் பட்டங்களை வைத்துக்கொண்டு பிதற்றித் திரிதல் என்பனவற்றால் மாத்திரம் கறுப்பர்கள் வெள்ளையர்களது தரத்தில் உயர்ந்து சமத்துவம் கிடைத்துவிட்டதென்று கருதி விட இயலாது என் பதை கம்யூனிஸ்ட் கூட்டங்கள் சுட்டிக்காட்டியது. அக் கருத்து மண்டேலாவின் சிந்தனையில் ஆழப்பதிந்து மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தது. ஒவ்வொரு கூட்டங்கள் மூலமாகவும் அவன் ஒவ்வொரு புதுவித கருத்துக்களை பெற்றுக் கொண்டான்.

காலங்கள் எவரது வருகைக்காவும் காத்திருக்காமல் தன்பாட்டில் விரைந்துசென்று கொண்டிருந்தது. மண்டேலா தன் உடன்பிறவா சகோதரனும் உற்ற நண்பனுமான ஜஸ்டிஸின் நினைவுகளை சுமந்தவண்ணமே இருந்தான். நெடுநாட்களுக்கு பிறகு ஒருமுறை அவனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு மிக்க அன்புடன் நலம் விசாரித்தான். ஜஸ்டிஸோ “மண்டேலா உன்னை பார்த்து நெடுங்காலமாகிவிட்டது. உன்னை பார்க்கணும் என்று என் மனசு கலங்குதடா” என்று கூறியதும் மண்டேலா கண் கலங்கிவிட்டான். “எனக்கும் அதே நினைவுதான். என்ன செய்வது? நாம் இருவரும் ஒன்றாக ஒரே இடத்தில் பணிபுரிவது அந்த கடவுளுக்கே பிடிக்கவில்லை போல. அதனால்தான் நம் இருவரையும் இரு வேறு திசைகளில் பிரித்துவிட்டான்” என்று கவலையும் விரக்தியும் ததும்ப கூறினான். இருவரும் மாறி மாறி தமது பாசமழையை பொழிந்தார்கள். புரியாத பிரியம் பிரியும் போதுதான் புரியும் என்பது என்னவோ உண்மை தான் என்று அப்போதுதான் இருவுக்கும் புரிந்தது போலும்.

ஜஸ்டிஸோ “மண்டேலா உனக்கொரு விஷயம் சொல்லணும். இங்கே நான் பணிபுரியும் இடத்தில் ஒரு பெண்ணை உயிருக்குயிராக காதலிக்கிறேன்.

அவளோ பேரழகி. நான் அவளைத்தான் திருமணம் செய்யப் போகிறேன். அதற்கு நீதான் உதவி செய்யணும்” என்றதும் மண்டேலா சிரித்துவிட்டான். “காதல் காதல் காதல். உனக்கெங்கே போனாலும் காதலா? ஊரிலே ஒரு பெண்ணை காதலித்தாயே, அவள் என்னவானாள்?” என்று கேலி பேச “அதை விடு, நீ யாரையும் காதலிக்கிறியா? அந்த அதிர்ஷ்டசாலி பெண் யாரென்று சொல்லுடா” என்று பேச்சை திசை திருப்பினான்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# மயிலைப் போல் துள்ளிக் குதித்து நடனமாடும் சூரப்புலிகள்



கேரளாவின் சின்னஞ்சிறிய கிராமத்தில் பிறந்தவர் அவர். ஆனால் தென்னிந்திய மொழிகளில், தனித்துவத் துடன் ராஜாங்கமே நடத்தினார். யாருடன் வேண்டுமானாலும் நடிப்பார். எவருடன் நடித்தாலும் தனக்கான முத்திரையைப் பதிப்பார். ‘நடிப்பில் இவர் மாதிரி கிடையாது’ என்று இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாட்டியத்திலும்கூட அப்படித்தான் இன்னமும் புகழ்ந்துகொண்டிருக்கிறோம். நடிப்புக்கென்றே பிறந்து, நடனத்துக்கென்றே பிறந்து, தன் திறமையைக் கொடிநாட்டிய தாரகை... நாட்டியத் தாரகை. எல்லோருக்கும் அவர்... பத்மினி. நெருங்கிய வட்டாரத்திலும் திரையுலகிலும் பப்பிம்மா!

சின்னக்குழந்தைகள் காலில் சலங்கை கட்டிக்கொண்டு நடனமாடினால், உடனே எல்லோரும் உதாரணமாக பத்மினியின் பெயரைத்தான் சொல்லுவார்கள். யாராவது நடனமாடினால், ’எம் பொண்ணு பத்மினி மாதிரி பரதத்துல பேரெடுக்கணும்’ என்று விரும்புவார்கள். ‘பத்மினி மாதிரிலாம் நடனமாட முடியாதுப்பா’ என்று அவர்களே தங்களை சமாதானப்படுத்திக் கொள்வார்கள்.

பத்மினி, பப்பி, நாட்டியப் பேரொளி என்றெல்லாம் பின்னாளில் அழைக்கப்பட்ட பத்மினியை பால்யத்திலும் வாலிப வயது வரையிலும் கூட ‘திருவிதாங்கூர் சகோதரிகள்’ என்றுதான் அழைத்தார்கள். ‘லலிதா, பத்மினி, ராகினி’ என மூன்று சகோதரிகளும் நாட்டியத்தில் சிறந்தவர்கள். மயில் மாதிரி துள்ளிக்குதித்து ஆட்டம் போடுவதில் சூரப்புலிகள். மூவரில் பத்மினி தனியாக ஜொலித்தார். நடிப்பிலும் மின்னினார்.

இன்றைக்கு ஏழெட்டு தமிழ்ப்படங்களில் நடித்தால்தான் இந்திப் பட வாய்ப்பு கிடைக்கும். ஆனால் பத்மினிக்கு அப்படியே நேரெதிராக வாய்த்தது. முதலில் இந்திப் படங்களில் நடித்தார். ’கல்பனா’ எனும் இந்திப் படத்தில் நடித்தார்.

அதன் பிறகுதான் தமிழ்த் திரையுலகம் பத்மினியை இனம் கண்டுகொண்டது. இந்தியில் அறிமுகமாகி தமிழுக்கு வந்தாலும், தமிழ் மக்கள்தான் பத்மினியைக் கொண்டாடத் தொடங்கினார்கள். 17வது வயதில் தொடங்கிய திரைப்பயணம் அடுத்தடுத்து பேரொளியாக, சூரியனைப் போல பிரகாசித்துக் கொண்டே போனது.

1949ம் ஆண்டிலேயே ’வாழ்க்கை’, ‘பவளக்கொடி’, ‘சந்திரலேகா’ என வரிசையாக படங்கள் வரத் தொடங்கிவிட்டன. எம்ஜிஆர், ஜெமினி முதலான எத்தனையோ நடிகர்களுடன் ஜோடியாக நடித்திருந்தாலும் ‘சிவாஜி பத்மினி’ ஜோடியை எல்லோரும் ரசித்தார்கள். கொண்டாடினார்கள். 1950களில் அவரது ராஜ்ஜியம் தொடங்கியது!

அப்படி சிவாஜியும் பத்மினியும் இணைந்த முதல் படமாக ‘தூக்குதூக்கி’ வந்தது. ‘சிவாஜி பத்மினி’ ஜோடி போலவே ‘சிவாஜி டிஎம்எஸ்’ ஜோடியும் இதில்தான் இணைந்தது. இருவரின் நடிப்பும் பத்மினியும் நடனமும் மிகப்பெரிய அளவில் பேசப்பட்டது.

‘ராஜாராணி’யில் ராணி மாதிரியாகவே அழகு ததும்ப வந்து நடிப்பிலும் அசத்தினார். ‘தங்கப் பதுமை’ படத்தில் இவரின் நடிப்பு வெகுவாகப் பேசப்பட்டது. ‘தெய்வப்பிறவி’ படத்தில் சந்தேகப்படுகிற கணவராக சிவாஜியும் மருகித் தவிக்கும் மனைவியாக பத்மினியும் ஆகச்சிறந்த நடிப்பை வழங்கினார்கள்.

எம்ஜிஆருடன் ‘மன்னாதிமன்னன்’, ‘மதுரை வீரன்’ என்று பல படங்களில் நடித்தார். இங்கே, இருவரில் யார் அழகு என்று பட்டிமன்றமே நடத்தினார்கள் ரசிகர்கள். ஜெமினியுடன் நடித்த படங்களிலும் தன் நடிப்பால் ஒருபக்கம் கரவொலி வாங்கினார். நடனத்தால் விசில் சத்தத்தை சம்பாதித்தார்.

எழுத்தாளர் கொத்தமங்கலம் சுப்பு, வாரப் பத்திரிகையில், தொடராக கதையொன்றை எழுதினார். எழுதும்போதே, பேசப்பட்ட... புகழப்பட்ட நாவல், படமாக எடுக்க எல்லோருமே ஆசைப்பட்டார்கள். கதையைப் படித்த பலரும் அப்படித்தான் விரும்பினார்கள். அந்தக் கதை படமாக எடுக்கப்பட்டது. பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்றது. ஐம்பது வருடங்களைக் கடந்தும் இன்றைக்கும் அந்தப் படம் இன்றும் கொண்டாடப்படுகிறது. அப்படி மறக்க முடியாத அளவுக்கு, கொத்தமங்கலம் சுப்புவின் கற்பனை கேரக்டருக்கு உயிர் கொடுத்தார்கள் இரண்டு பேர். ஒருவர்... சிக்கல் சண்முகசுந்தரமாக நடித்த சிவாஜி கணேசன். இன்னொருவர் மோகனாம்பாளாக ஜொலித்த பத்மினி. படத்தில் அவருக்கு ‘தில்லானா மோகனாம்பாள்’ எனும் பட்டம் கொடுக்கப்பட்டது. நிஜத்தில், எப்போதோ... ’நாட்டியப் பேரொளி’ என்று பட்டம் கொடுத்துப் பாராட்டினார்கள் தமிழ் ரசிகர்கள்.

பத்மினியின் கண்கள் தனி அழகு. கண்களிரண்டும் நடித்துக் கொண்டிருக்கும். அதேசமயத்தில், கால்களிரண்டும் நர்த்தனமாடும்.

மலையாள தேசத்தில் பிறந்திருந்தாலும் தமிழ் உச்சரிப்பில் அதிசயிக்கவைத்தார். இவரின் வசன உச்சரிப்புக்கும் முகபாவனைகளுக்கும் மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இருந்தது. பத்மினி வசனம் பேசுகிறாரென்றால், இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் கண் ஜாடையில் பேசிக்கொள்வார்கள்.

பிறகு கேமரா லென்ஸ், குளோஸப் ஷாட்டுக்குள் நிற்கும். குளோஸப் ஷாட்டுகளில், பத்மினியின் மொத்த அழகும் மொத்தத் திறமையும் வெளிப்படும். சிவாஜியுடன் மட்டுமே 50க்கும் மேற்பட்ட படங்களில் சேர்ந்து நடித்தார். தமிழ் சினிமாவில் பொருத்தமான ஜோடிப் பட்டியலில் சிவாஜி பத்மினிக்கும் தனி இடம் கொடுத்தார்கள் ரசிகர்கள்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# "அதிரன்" முழு நீளத்திரைப்படத்தின் பூஜையும் ஊடகவியலாளர் சந்திப்பும்





**கிராமத்து சூழ்நிலையை பிரதிபலிக்கும் கதைக்களத்தைக் கொண்ட இலங்கையின் "அதிரன்"**

*இயக்கம் : தினேஷ் கனகராஜ்,*

*தயாரிப்பு: தீப்திகா ஞான சேகரன்,*



இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.